ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
Koviloor Digital Library

சங்கராச்சாரிய ஸ்வாமிகளின்

4-5

அருள் உரை

4957
R65 (...)
கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

45

விகடன்
வெளியீடு

Koviloor Digital Library

முதற்பதிப்பு: அக்டோபர், 1993

பின் அட்டை ஓவியம். சில்பி

விலை ரூ. 3

'தெய்வத்தின் குரல்' (வானதி பதிப்பகம்) மூன்றாம் பகுதியிலிருந்து தொகுக்கப் பட்டது.

ஆனந்த விகடன்,
757, அண்ணா சாலை,
சென்னை-600 002.

Koviloor Digital Library

ஸமூக, தனிவாழ்க்கை நெறிகள்

சாஸ்திரக் கட்டளை

சிவாஜி தன் ராஜ்யத்தையே ஸமர்த்த ராமதாஸின் காலடியில் குருதக்ஷிணையாகப் போட்டுவிட்டு, அவர் பெயரில்தான் ராஜ்யபாரம் பண்ணினான். அப்படியிருந்தும் ராமதாஸ் 'மாதுகரி' பிக்ஷைதான் வைத்துக் கொண்டிருந்தார் ★.

தங்கள் பொருட்டுப் பிறத்தியாரைச் சிரமப்படுத்தக் கூடாது என்ற உசந்த கொள்கைதான் இதற்குக் காரணம்.

ஆகவே வெளியிலே ஸோஷல் ஸர்வீஸ் செய்பவனாகப் பேர் வாங்கிவிட்டு, வீட்டிலே இவன் மற்றவர்களின் ஸர்வீஸை வாங்கிக் கொள்கிறானென்றால் அது 'ஹம்பக்'தான்.

ஆனால் வீட்டுக் காரியம், சொந்தக் காரியம் என்பதும் சாஸ்த்ர ஸம்மதமானதாக இருக்க வேண்டும். இப்போது ஒவ்வொருத்தனுக்கும், அவனுடைய குடும்பத்துக்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் பேராசைகளையெல்லாம் பூர்த்தி செய்வதை 'ட்யூட்டி' என்று சொல்ல முடியாதுதான். இத்தனையையும் கவனித்துவிட்டுத்தான் ஒருத்தன் பொதுத்

★ மதுகரம் என்றால் வண்டு. வண்டு பல புஷ்பங்களிலிருந்து துளித்துளியாகத் தேன் எடுத்துக் கொள்வதுபோல் எந்த ஒரு கிருஹஸ்தருக்கும் அதிகச் சிரமம் தராமல் ஒரு குடும்பத்திலிருந்து ஒரு கவளம் வீதம் பல குடும்பங்களில் பிக்ஷை வாங்கி உண்பதே 'மாதுகரி பிக்ஷை'. ஐந்தே குடும்பங்களில் மாதுகரி பிக்ஷை பெற வேண்டும் என்றும் நியமமுண்டு.

Koviloor Digital Library

தொண்டுக்குப் போகலாம் என்றால் பொதுத்தொண்டே நடக்காது. வீட்டு மனுஷ்யர்கள் அப்படி சொல்வதைக் கேட்க வேண்டுமென்பதில்லை.

ஆனாலுங்கூட மாதா பிதாக்களை இம்மாதிரி விஷயங் களில் ஒருத்தனால் சாந்தமாக எடுத்துச் சொல்லிக் 'கன்வின்ஸ் பண்ண முடியவில்லை என்றால் அப்போது அவர்களிடம் சண்டைக்குப் போகப்படாது. அவர்களை மீறியும் செய்யக் கூடாது. சாஸ்த்ரப்படி மாதா பிதா வாக்ய பரிபாலனத்துக்கு அப்புறந்தான் எந்தத் தர்மமும். அதனால் அவர்கள் தப்பாகச் சொன்னாலும் அவர்களுக்குத் தெளிவு தர வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்க வேண்டுமே தவிர, மீறிச் செய்யக் கூடாது. அதன் பாபமோ புண்யமோ அவர்களைச் சேர்ந்தது என்று விட்டுவிட வேண்டும். இப்போது இந்த நிமிஷம், இந்த மாதா – பிதாக்களின் கஷ்டத்தைப் பார்த்ததில் இப்படித்தான் கொஞ்சம் கடுமையாகவே சொல்லத் தோன்றுகிறது.

பத்னி, புத்ரர் விஷயம் வேறு. அவர்கள் நம்மைவிட ஸ்தானத்தில் சின்னவர்கள். அதனால் நியாயமாக அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பூர்த்தியாகப் பண்ணு வதற்கு மேலாக அவர்கள் நம்மைத் தங்கள் ஸமாசாரங்களி லேயே இழுத்து லோகஸேவை செய்ய வொட்டாமல் தடை பண்ணினால் அதற்குக் காது கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை மீறியும் நம்மாலான. லோகப் பணிகளைச் செய்யத்தான் வேண்டும். சாஸ்திரப்படி நம் கட்டுப்பாட்டின் கிழ் இருப்பவர்களான பத்னி, புத்ரர்களையும் நாம் பொதுத் தொண்டுகளில் ஈடுபடுத்த வேண்டும். ஆனால், எந்தப் பக்கமா னாலும் அதில் மிகையாகப் போய்விடக் கூடாது. பெண்டாட்டி, பிள்ளை குட்டிகளைக் கவனிக்காமல் பரோப காரம் என்று புறப்படக் கூடாது.

இதிலே ஸைகலாஜிகலாக ஒன்று கவனிக்க வேண்டும். ஒருத்தன் தன் வேலை, வீட்டு வேலைகளை மற்றவர்களிடம் விட்டுவிட்டுப் பொதுப்பணிக்குப் போகிறான் என்னும் பொழுது, மற்ற பேருக்கு இவனிடம் ஏற்படுகிற அதிருப்தியில் ஸமூஹத்தொண்டே பிடிக்காமல் போய்விடுகிறது. 'போதும். இவனொருத்தன் ஊர்க்காரியம் என்று உழப்பறித்துக் கொண்டு

Koviloor Digital Library

அகத்துக் காரியத்தை விட்டிருப்பது நமக்கு இந்த ஸேவையும் கீவையும் வேண்டவே வேண்டாம்' என்று அவர்களுக்கு ஒதுங்கிப் போகத் தோன்றிவிடும். அதுவே அவன் அளவறிந்து அகத்துக் காரியத்தையும் கவனித்துக் கொண்டு பொதுக் காரியமும் பண்ணினானென்றால் இப்போது வீட்டின் மற்ற மனுஷ்யர்களும் இவனோடுகூட வெளித்தொண்டுக்கு வந்து தங்களாலானதைச் செய்வார்கள். வீட்டுக் காரியத்தைக் கவனிப்பதால் இவனொருத்தன் செய்யும் ஸோஷல் சர்வீஸ் குறைந்து போகிறதென்றால், இப்போது அதைவிட ஜாஸ்தி யாக மற்றவர்களின் சர்வீஸ் சொஸைட்டிக்குக் கிடைத்துவிடும். இவன் அதியாகப் போய் வீட்டு மனுஷ்யர்களின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ளும்போதோ, தன் நோக்கத்துக்கே பாதக மாக, அவர்களால் ஏற்படக்கூடிய ஸோஷல் ஸர்வீஸைத் தடுத்து விடுகிறான்!

தொண்டுக்குப் போகிறவர்களுக்கு ஒரு 'ட்ரிக்' சொல்லித் தருகிறேன். அன்போடு, பதவிசாக நடப்பதுதான் 'ட்ரிக்'. வெளி மனுஷ்யர்களிடம் மட்டுமில்லை, அகத்துப் பேரிடமும் இப்படிப் பரிவாக, பணிவாக இருந்தானானால் அவர்களே, 'நாம்தான் வீட்டையே கட்டிக்கொண்டு அழுகிறோம். இவனா வது லோகத்துக்குப் பண்ணி, நமக்கும் சேர்த்துப் புண்யம் சம்பாதித்துத் தரட்டும்' என்று நினைத்து அவனிடம் வேலை களைக் கூடிய மட்டும் காட்டாமல் தாங்களே பண்ணுவார்கள்.

ஒருத்தன் ஸன்னியாஸாச்ரமத்துக்குப் பாத்ரமான உத்தமாதி காரியாக இருந்தால்கூட, ஏக புத்ரனானால் தாயார், தகப்பனார் ஸம்மதமில்லா விட்டால் அவனுக்கு ஆச்ரமம் தர மாட்டார்கள்; இப்படியே க்ருஹஸ்தனானால் பெண்டாட்டி பிள்ளைகுட்டிகளை நிர்கதியாக விட்டுவிட்டு வந்தவனுக்கும் எத்தனை யோக்யதை இருந்தாலும் ஸன்னியாசம் தருவதில்லை. அதாவது சொந்தக் கடமையை, குடும்பப் பொறுப்பை விட்டவனுக்குப் பாரமார்த்திகத்திலேயே மூழ்கி விடுவதற்குக் கூட 'ரைட்' இல்லை என்று வைத்திருக்கும்போது, ஆத்ம ஞானத்துக்கு முதல் 'ஸ்டெப்'மட்டுமேயான லோக ஸேவைக் காக ட்யூட்டியை, ரெஸ்பான்ஸிபிலிடியை விடுவதென்பதைக் கொஞ்சங்கூட ஆமோதிக்கிறதற்கில்லை.

Koviloor Digital Library

இதைப் பற்றி நான் இதுவரை அழுத்தமாகச் சொல்லாதது தப்புத்தான். இப்போது இதற்காக நான் மறுபடி 'லெக்சர்' அடிக்கிற வழக்கத்தை ஆரம்பிக்கிறதாகவும் இல்லை. ஆனாலும் என்னிடம் இப்போதும் வருகிறவர்கள் – போகிறவர்களிடத்தில் இதைச் சொல்லணும் என்று நினைத்துக் கொள்கிறேன். நான் எல்லாவற்றையும் விடணும் என்று நினைத்த அப்புறமும் வருகிறது, வந்து சேர்ந்து கொண்டுதானிருக்கிறது. இப்போதுதான் நான் சொல்கிறதையெல்லாம் – சொல்லாததையெல்லாம்கூட ஜாஸ்திப் பிரசாரம் பண்ணுவதாகவும் ஏற்பட்டிருக்கிறது! அப்படி இந்த அபிப்ராயமும் – சொந்தக் கார்யத்தையும் டொமஸ்டிக் ஸர்வீஸையும் விட்டு விட்டு ஸோஷல் ஸர்வீஸுக்குப் போகப்படாது என்று சொல்வதும் – பரவினால் பரவட்டும்.

இப்போது இந்தத் தம்பதி வந்து அழுததுதான் முதல் தடவை என்றில்லை. அவ்வப்பொழுது இப்படி ஏற்பட்டிருக்கிறது. கடிதாசுகளும் வந்திருக்கின்றன. ஒரு பிராமணர், அவர் வக்கீலாக ப்ராக்டீஸ் பண்ணிக் கொண்டிருந்தார். அவரை நான் என் ஸ்வய கார்யத்தில் ஒரேயடியாக இழுத்து விட்டேன். இந்தத் தேசம் பூராவும் எங்கெங்கே என்ன வேத சாகை இருக்கிறது என்று அவரை அலைந்து திரிந்து ஸ்டாடிஸ்டிக்ஸ் எடுத்துவரப் பண்ணினேன்; பாடசாலை பாடசாலையாக ஏறி இறங்க வைத்தேன். இதனால் அவருடைய பத்னியும், ஒரே பெண்ணும் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தை என்னோடு சண்டையே போட்டிருக்கிறது. சண்டை என்று சொல்வது தப்பு – உபதேசம் பண்ணிற்று என்று சொல்லணும். 'அப்பா ப்ராக்டீஸ் போயிடுத்து; உடம்பும் வீணாகப் போயிடுத்து. நாங்களும் நிராதரவாகப் போய்விட்டோம். எனக்கு அப்பா யார் என்று அடையாளமே மறந்து போய் விடுகிற அளவுக்கு இப்படி அவரைப் பிடித்து வைத்துக் கொண்டு ஊர்-ஊராக அலையப் பண்ணுகிறீர்களே!' என்று அந்தப் பெண் கேட்கும். அப்படியும் நான் பாட்டுக்கு, 'அவர்கள் விசாரம் அவர்களுடைய ஸமாசாரம்; என் கார்யம்தான் எனக்கு' என்று அந்த மனுஷ்யரை அப்படியே அல்லாட விட்டுக் கொண்டிருந்தேன். அப்புறம் அவர்களே 'இதுதான் நமக்கு விதி' என்று ஓய்ந்து போய்விட்டார்கள். ஒரு பக்கம்

Koviloor Digital Library

என்னிடம் இப்படி அவர்களுக்கு வருத்தம் இருந்த போதிலும், பக்தியும் நிரம்ப உண்டு. அதனால் தங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட அனேக நல்லதுகளுக்கு என் அனுக்ரஹம்தான் காரணம் என்று நினைத்துக் கொண்டு என்னிடம் மரியாதை விஸ்வாஸங்களோடேயே இருக்கிறார்கள்.

ஒருவன் எப்படியிருந்தாலும் பத்னி புத்ராள் ஸஹித்துக் கொள்ளத்தான் வேண்டும் என்கிற சாஸ்திரப்படி நான் இப்படிச் சும்மாவேயிருந்ததற்கு ஸமாதானம் சொல்லி விடலாம். ஆனால் இப்போது ஒரு மாதாபிதாக்கள் துக்கப்பட்டுக் கொண்ட பொழுது – மாதா, பிதாவுக்கு அப்புறந்தானே குரு என்று நான் வருகிறேன்? – நான் சொல்லிக் கொள்ள ஸமாதானம் எதுவும் இல்லை என்று நியாயம் உறைத்து, இதையெல்லாம் சொல்கிறேன்.

Koviloor Digital Library

உச்சநிலை உதாரணமாகாது

பிரஸங்கம் பண்ணின நாளில், 'ஊர்க் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்' என்று அடிக்கடி quote பண்ணித்தான் இருக்கிறேன். அதாவது உன் குழந்தை யைப் பட்டினி போட்டுவிட்டாவது போய் ஊர்க்குழந்தையை ஸவரக்ஷணை பண்ணு என்று சொல்லித்தான் வந்திருக்கிறேன். அப்படிப் பழமொழி இருப்பதும் வாஸ்தவம். ஸத்யமாக இல்லாத ஒன்று பழமொழியாக ஆகிறதில்லை. ஆனால் இந்தப் பழமொழி ரொம்ப உசந்த நிலையில், தொண்டு மனப்பான் மையில் அப்படியே ஊறிப் போனவர்களைக் குறித்து ஏற்பட்டி ருக்க வேண்டும். அவர்கள் மனஸறிந்து தன் குழந்தையைக் கதற விட்டுவிட்டு ஊர்க் குழந்தையைச் சீராட்டினார்களென்று அர்த்தமில்லை. பரோபகாரத்தில் அவர்களுக்குள்ள தீவிர உணர்ச்சி வேகம் அவர்களை இப்படி அடித்துக் கொண்டு போயிருக்கிறது. பக்தி வெறியில் ஒவ்வொரு நாயன்மார் லோக தர்மங்களுக்கு விரோதமாகக்கூடப் பண்ணவில்லையா? அப்படி இதுவும் ஒரு பரவச நிலையில் பண்ணுவது. அப்படி இவர்கள் தங்களுக்கு அதீதமான ஒரு சக்தியின் கீழ் ஊரிலே உள்ள அனாதைக் குழந்தைகளின் நலனுக்கே தங்களை அர்ப்பணம் பண்ணிக் கொண்டபோது, ஈச்வரப் பிரஸாதமாக வீட்டிலே இவர்களுடைய குழந்தைகள் கவனிப்பு இல்லாமலே (அல்லது ஈச்வரனின் கவனிப்பிலேயே) நன்றாக வளர்ந்திருக் கும். இது சாதாரணமாக லோகத்திலிருக்கப்பட்டவர்களுக்கு 'எக்ஸாம்பிள்' ஆகாது.

தன் குழந்தையைக் கவனிக்காமல் ஊர்க் குழந்தையைச் சீராட்டுவது பற்றி வேடிக்கையாக ஒருத்தர் சொன்னது கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தக் காலத்தில் ஸ்த்ரீகள் ஸோஷல் ஸர்விஸ் என்று கிளம்பியிருப்பது பற்றிக் கேலியாக அவர்

Koviloor Digital Library

சொன்னாராம்: ஒரு பணக்கார வீட்டு அம்மாள் பெட்ரோலைச் செலவழித்துக் கொண்டு ஏதோ ஒரு சேரிக்குப் போய், எந்த தேசத்திலிருந்தோ வந்திருக்கிற பவுடர் பாலைக் கரைத்து அங்கே ஒரு குழந்தைக்குப் போட்டி (புகட்டி)விட்டு வருவாளாம். இங்கே இவளுடைய வீட்டில், இவள் எந்தக் குழந்தைக்கு பால் போட்டினாளோ அதனுடைய அம்மாக் காரியே இவளுடைய குழந்தைக்கு ஆயாவாகப் பால் கரைத்துப் போட்டிக் கொண்டிருப்பாளாம்!

அதாவது ஸோஷல் ஸர்வீஸ் செய்கிறோமென்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டுவிடக் கூடாது.

இதற்கெல்லாம் basic ஆக ஒரு ஞானம் இருந்துவிட்டால் போதும். அதாவது நம்முடைய லோக சேவையால்தான் லோகம் நடக்கிறது என்ற பிரமை ஒருக்காலும் இருக்கக் கூடாது. மரம் வைத்தவன் தண்ணீர் விடுகிறான். லோகத்தைப் பண்ணின ஒருத்தன் இருக்கிறானே அவனே அதை ரக்ஷித்து விட்டுப் போவான். அதற்கு நாம் ஒரு கருவிதான். நம்முடைய பாபகர்மா கழியவே பரோபகாரமே தவிர நாமில்லாவிட்டால் அந்த உபகாரம் லோகத்துக்குக் கிடைக்காமல் போய்விடாது என்ற ஞானம் இருந்தால் அளவோடு நிற்போம். ஜீவனத்துக்கு அவச்யமான சொந்தக் கார்யங்கள், குடும்பக் கடமைகள் இவற்றைப் பண்ணிக் கொள்வதிலும் கர்மநாசம், சித்த சுத்தி ஏற்படத்தான் செய்யும். ஈச்வரானுக்ரஹத்தில் இப்படிப்பட்ட பொறுப்புகள் அதிகமில்லாதவர்கள் நிரம்பப் பரோபகாரப் பணிகளில் ஈடுபட்டே ஆத்மாவைப் பரிசுத்தி பண்ணிக் கொள்ள வேண்டும்; அப்படிப்பட்டவர்களுக்கு இதுவே ட்யூட்டி ஆகிறது. டொமஸ்டிக் ட்யூட்டிபோல ஸோஷல் ட்யூட்டியும் உண்டுதான். எத்தனை டொமெஸ்டிக் ட்யூட்டி இருந்தாலும், அதைப் பண்ணிவிட்டு, அதைப் பண்ணின அப்புறந்தான் ஸோஷல் ட்யூட்டியும் செய்ய வேண்டும். ரொம்ப அதிகம் குடும்பப் பொறுப்பு இருக்கிற ஒரு சிலரைத் தவிர மற்ற எல்லோருக்குமே நியாயமான சொந்தக் கடமைகளைப் பண்ணிவிட்டும், ஸமூஹக் கடமை பண்ண அவகாசம் இருக்கவே செய்யும். எப்படியானாலும் தன் காரியத்தைப் பிறர் கையில் விட்டுவிட்டும், அகத்து வேலையைக் கவனிக்காமலும் ஊர்க்காரியம் என்று போவதில் பிரயோஜனமில்லை.

Koviloor Digital Library

இப்படிப் போனதில் அந்தப் பையன், வீடு என்றாலே எரிச்சல் படுகிறான் என்றார்கள். இப்படிக் கோபமும் தாபமும்தான் பரோபகாரம் பண்ணினதில் ஒருத்தனுக்கு மிஞ்சினது என்று ஏற்பட்டால், அது சித்த சுத்திக்குப் பதில் சித்த அசுத்திக்குத் தான் வழி பண்ணியிருக்கிறது என்றே ஆகிறது. அதாவது பரோபகாரம் நல்ல பலன் தராதது மட்டுமில்லாமல், விபரீத பலனே உண்டாக்கியிருக்கிறது! சாஸ்த்ர ரீதியான கடமையை விட்டதற்காக இப்படி நல்லதே தண்டனையாக ஆகிறது!

இரண்டு மூன்று பழமொழி சொன்னேன். முடிவாக இன்னொன்று தோன்றுகிறது. 'தன் கையே தனக்கு உதவி' தன் கை பிறருக்கும் உதவியாகப் பரோபகாரப் பணிகளைச் செய்யத்தான் வேண்டும். ஆனால் தன் கை தன் கார்யத்துக்கு உதவியாக இல்லாமல், தன் கார்யத்துக்கு அகத்தின் மற்ற மனுஷ்யர்களின் கையை எதிர்பார்த்துக் கொண்டு அவர்கள் கையில் நம் கார்யப் பொறுப்பைப் போட்டு விட்டு, நாம் ஊருக்கு உபகாரம் பண்ணுவது என்பது தப்பு.

ஊருக்குப் பண்ணினால் நாலுபேர் நம்மைக் கொண்டாடு வார்கள். வீட்டுக்கு, நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்காக, வீட்டார் நம்மைக் கொண்டாட மாட்டார்கள் தான். வீட்டுக்குப் பண்ணாமல், தன் சொந்தக் கார்யத்தைப் பண்ணிக் கொள்ளாமல், ஊருக்கு ஒருத்தன் பண்ணுகிறான்; அதற்கு இடைஞ்சலாகச் சொல்கிறார்களே என்று வீட்டுக்காரர் களிடம் எரிந்து விழுந்து கொண்டிருக்கிறானென்றால் அவனுக்கு வாஸ்தவமான தொண்டு உள்ளமே இல்லை; பேர் வாங்குவதற்காகத்தான் ஸோஷல் ஸர்வீஸ் என்று பண்ணுகி றான் என்றே அர்த்தம்.

தொண்டு உள்ளத்துக்கு லக்ஷணம் அன்பும் அடக்கமும்தான். 'தொண்டர்தம் பெருமை' என்று அதைப் பெரியதற்கெல்லாம் பெரியதாக மற்றவர்கள் கொண்டாடலாமேயொழிய, தொண்டு செய்கிறவனுக்குத் 'தான் பெரியவன்' என்ற எண்ணம் லவலேசங்கூட இருக்கக் கூடாது. தான் ரொம்பவும் சின்னவன் என்ற எண்ணமே இருக்க வேண்டும். பேருக்கு ஆசைப்பட்டுக் கொண்டு தொண்டு செய்வதென்றால் அந்தத் தொண்டையே அழுக்குப் பண்ணினதாகத்தான் அர்த்தம்.

Koviloor Digital Library

அடக்கமும் அன்பும் இருந்தால் வீட்டிலே இருக்கிறவர்களை எதிர்த்துக் கொண்டும், அவர்களிடம் எரிந்து விழுந்து கொண்டும் எவனும் வெளியிலே தொண்டு செய்யப் போக மாட்டான்.

தான் பிறர் பாரத்தைத் தாங்குகிறவனாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, தன் பாரத்தை இன்னொருவரிடம் தள்ளினால் அது தனக்கு அவமானம்; தன் கை பிறருக்கு உதவுவதாக இருக்க வேண்டுமேயொழியத் தானே இன்னொரு கையை உதவிக்கு எதிர்பார்த்தால் அது தனக்கு ரொம்பவும் கௌரவ ஹீனம் என்ற உணர்ச்சி பரோபகாரத்தில் ஈடுபடுகிற எவனுக்கும் basic ஆக ஏற்பட்டு விட்டால் இப்போது கம்ப்ளெய்ண்ட் வந்தது போலக் கோளாறாக ஆகவே ஆகாது. லோக சேவைக்குப் போகிறவர்கள், 'என் கார்யம் பூராவையும் நானே பார்த்துக் கொண்டுதான் பொதுத் தொண்டுக்குப் போவேன்' என்று பிரதிக்ஞை பண்ணிக் கொண்டு விட்டால் எல்லாம் ஸரியாய் விடும்.

தன் கார்யம் என்பதில் தன் வீட்டுக் கார்யம், மாதா-பிதா-பத்னி-புத்ரர்-ஸஹோதரர் முதலான வீட்டு மனுஷ்யர்களின் கார்யம் அடக்கம்தான்.

'என் கடமையில் தப்பாமல், குடும்பத்துக்குச் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டே உன் குடும்பமான – வஸுதைவ குடும்பகம்: லோகமெல்லாம் ஒரு குடும்பம் என்கிறபடி ஸகல மக்களுக்கும் என்னாலான பணியைச் செய்ய அருள் பண்ணப்பா' என்று ஈச்வரனைப் பிரார்த்தனை பண்ணிக் கொண்டால், அவன் அப்படி அனுக்ரஹம் செய்வான். அது தான் நாம் பண்ணிக் கொள்ள வேண்டிய வேண்டுதல்!

Koviloor Digital Library

கண்டனமே பாராட்டு

நம் மதத்தைப் பற்றி இரண்டு 'க்ரிடிஸிஸம்' சொல்கிறார்கள். ஏகம் ஸத், ப்ரம்மம் ஒன்றுதான்; இந்த ஜீவன்கூட அதுதான் என்று ஒரு பக்கம் சொல்கிறோம். ஜீவனே ப்ரம்மம் என்பதால் ஈச்வர பூஜை, பக்தி எல்லாவற்றையுங்கூட ஞானம் உண்டாகிறபோது மூட்டை கட்டி வைத்துவிட வேண்டுமென்கிறோம். இன்னொரு பக்கம் பார்த்தால் இங்கேதான் மற்ற எந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு ஏகப்பட்ட சாமிகள், ஒன்றொன்றுக்கும் அகமுடையான், பெண்டாட்டி, பிள்ளை - குட்டிகள் என்றெல்லாம் வேறு ஒரு பட்டாளமே வைத்துக் கொண்டு நூறாயிரம் ஸன்னிதி, புராணக்கதை, ஒவ்வொன்றுக்கும் ஒரு பண்டிகை, வ்ரதம், மந்த்ரம் என்று பண்ணிக் கொண்டிருக்கிறோம்.

இதர மதஸ்தர்கள் ஒரே பரமாத்மா, அவனிடம் பக்தி, பிரார்த்தனை, தியானம் என்று தீர்மானமாக வைத்துக் கொண்டிருக்கிற மாதிரியில்லாமல், பிரமாதமாக அத்வைதத்தைச் சொல்கிற நாம்தான் ஏகப்பட்ட சாமிகள் வைத்துக்கொண்டு திண்டாடுகிறோம்! கிறிஸ்துவர்களுக்கு க்ரைஸ்ட்டும் (கிறிஸ்துவும்), துருக்கியர்களுக்கு நபியும், இப்படியே ஸிக்குகளுக்கு நானக் என்றும்! அந்தந்த மதஸ்தருக்குத் தங்கள் மதஸ்தாபக்ரிடம் மட்டும் ஈச்வரனுக்கு ஸமதையான பக்தி இருக்கிறதென்றால், அது நியாயம். தங்களை ஈச்வரனிடம் கொண்டு சேர்க்க வழி போட்டுக் கொடுத்தவர்கள் என்று குருபக்தி மாதிரி அவர்களுக்கு ஏற்பட்டிருப்பது நியாயம். பௌத்தத்திலும் ஜைனத்திலும் ஈச்வரனே கிடையாது. ஆனாலும் தத்வ ரீதியில் அவர்கள் சொல்லும் மோக்ஷ நிலையை ஸ்வயமாக அடைந்து, அப்படிப்பட்ட ஸ்திதியிலிருப்பவன் எப்படியிருப்பான் என்று பிரத்யக்ஷமாக புத்தரும், ஜினரும் காட்டுகிறார்கள் என்பதால் அவர்களைப் பக்தியோடு பூஜிக்கிறார்கள்.

Koviloor Digital Library

புத்தரை, ஜினரை ஸ்ருஷ்டிகர்த்தா, ஸ்வாமி என்று அந்த மதஸ்தர்கள் சொல்லவே மாட்டார்கள். புத்தரை அவதாரம் என்றுகூட நாம்தான் சொல்கிறோமே தவிர, பௌத்தர்கள் அப்படிச் சொல்வதில்லை. பூர்ண ஞானி என்றே புத்தரை, ஜினரை அந்த மதக்காரர்கள் பூஜை பண்ணுகிறார்கள். இந்த இரண்டு மதங்களுக்கும் ஸ்வாமி இல்லாவிட்டாலும் கர்மா-theoryயிலும், எனவே ஜன்மாந்தரத்திலும், நம்பிக்கை உண்டு. நிர்வாணம், கைவல்யம் என்கிற மோக்ஷ ஸ்திதி லபிக்கிறவரையில் லோகம் என்று ஒன்று நடக்கிறபோது அது கர்மாப்படியே பலன் தருகிறது என்கிறார்கள். இப்படி லோகம் உள்ளவரையில் தேவதைகள், கிரஹங்கள் எல்லாமும் உண்டு. அவற்றுக்கு உள்ள ஒவ்வொரு சக்தியால் ஒவ்வொரு வித அனுக்ரஹம் பண்ணுகின்றன என்று வைத்துக் கொண்டு நம் மாதிரியே பூஜை, பரிஹாரம் செய்கிறார்கள். தங்களைவிட ஜாஸ்தி ஞானம் படைத்தவர்கள் என்பதற்காகப் புத்தரை, ஜினரைப் பூஜை பண்ணுகிறதுபோலவே, தங்களுக்கு இல்லாத சில சக்திகள் படைத்தவர் என்பதால் தேவதைகளுக்குப் பூஜை செய்கிறார்கள்; ஸ்வாமி என்று நினைத்தல்ல.

ஹிந்துக்கள் மட்டும் ஸ்வாமி, ஸ்வாமி என்று நினைத்துக் கொண்டே ஏகப்பட்ட தெய்வங்களைப் பூஜை பண்ணுகிறார்கள் என்பது முதல் க்ரிடிஸிஸம்.

இன்னொன்று: 'இதாவது (மேலே சொன்ன பல தெய்வ வழிபாடாவது) தொலைகிறது! தப்பாகவோ ரைட்டாகவோ ஒன்றையோ பலவற்றையோ ஸ்வாமி என்று வைத்துக் கொண்டு விட்டால் அப்புறம் அதை பூஜை பண்ணத்தான் வேண்டும். ஆனால் இம்மாதிரிக்கூட ஸ்வாமி ஸம்பந்தமேயில்லாத அனேகக் கார்யங்களைத்தானே உங்கள் மதத்தில் (ஹிந்து மதத்தில்) அதிகம் சொல்லி அதைத்தானே பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்கிறார்கள். பித்ரு கார்யம் முதலானவற்றைத்தான் சொல்கிறார்கள்.

கிரிடிஸிஸம் வாஸ்தவமாகத்தான் தோன்றுகிறது. மற்ற மதங்களில் ஒரு ஸ்வாமியிடம் பக்தி இருந்தால் போதும்; அவரை தியானம் பிரார்த்தனை பண்ணினால் போதும் என்று இருக்க, 'அஹம் ப்ரஹ்மாஸ்மி', 'தத்வமஸி' சொல்கிற நம்

Koviloor Digital Library

மதத்தில்தான் ஸ்வாமியையோ அல்லது ஒரு தேவதையையோ கூட உத்தேசிக்காமல் பித்ருக்களை உத்தேசித்தே ரொம்பப் பெரிய கார்யங்களைப் பண்ணுகிறோம். பத்து நிமிஷம் பூஜை கூடப் பண்ணாதவனும் மணிக்கணக்காகத் திவஸம் பண்ணு கிறான். 'ஸெரிமனி' என்றாலே திவஸம் என்கிற அளவுக்கு இதற்கு முக்யத்வம் தந்திருக்கிறோம்.

லீவு போடுவதற்கு ஏதாவது காரணம் சொல்வதென்றால் கூட, 'ஸெரிமனி' என்று சொல்லி விட்டால் (காரியாலயத் தார்) ஆக்ஷேபிக்க மாட்டார்கள் என்பதால் அப்படிச் சொல் கிறதாமே! தாயார் தகப்பனார் 'போய்' விட்டால் பத்துநாள் பதின்மூன்றுநாள் ஏகப்பட்ட கார்யம். அப்புறம் மாஸா மாஸம் வேறு. இவர்களுக்கு முன் தலைமுறைகளுக்கும் சேர்த்து ஆயுள் உள்ளவரைக்கும் அமாவாஸ்யை தர்ப்பணம். இப்படியெல் லாம் வைத்திருக்கிறது. ஒருத்தர் 'போய்' எத்தனையோ வருஷம் கழித்தும் 'தாத்தா வரார்', 'பாட்டி வரா' என்று சொல்லிக் கொண்டு சிராத்தம் பண்ணும்படி வைத்திருக்கிறது. இது அனேகமாக முன் தலைமுறைக்குப் பண்ணுவது. கூடப் பிறந்தவர்கள், வயிற்றில் பிறந்தவர்கள் ஆகியவர்களுக்கு அபர கார்யாதிகள் செய்வதாக அதிகம் ஏற்படுவதில்லை.

இது தவிரத் தனக்கும், தன் பின் தலைமுறைக்கும் பண்ணுவ தாகவும் அனேகக் கார்யங்களை மதமே கொடுத்திருக்கிறது. மற்ற மதத்தில் தனக்கோ, அகத்து மனுஷ்யர்களுக்கோ பிறந்த நாள் என்றால் candle, cake என்று சுருக்கமாகக் கார்யம் முடிந்து போகிறது. கல்யாணமும் ரொம்ப ஸிம்பிள் சடங்குதான். இங்கேயோ (ஹிந்து மதத்திலோ) கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகர்மம், வித்யாப்யாஸம், உப நயனம், ஒவ்வொரு வருஷமும் ஆயுஷ்ஹோமம், கல்யாண மென்றால் நாலு நாள் ஔபாஸனம் (அதை நிறுத்தி விட்டார் களே என்று அத்வைத குரு, நான், 'கூ கூ' என்று கத்துகிறேன்!) இப்படி ரொம்பவும் elaborate ஆகக் கார்யங்களை வைத்திருக் கிறது. இதிலெல்லாம் தெய்வ ஸம்பந்தமிருக்கிறது என்றாலும் தெய்வத்துக்காக தெய்வ ஸம்பந்தமில்லை. 'நான் நன்றாக இருக்க வேண்டும், எனக்கு நல்ல பிள்ளையாகப் பிறக்க வேண் டும், பிறந்த பிறகு அந்தப் பிள்ளை நல்ல ஆயுஸோடு இருக்க வேண்டும், நன்றாகப் படிக்க வேண்டும் என்று எல்லாம் ஒரு

Koviloor Digital Library

சின்ன மனுஷ்ய ஸர்க்கிளை ஸென்டராக வைத்து அதை உத்தேசித்துச் செய்வதாகவே இருக்கிறது.

வைதிகானுஷ்டானத்துக்கே முதுகெலும்பு என்று சொல்கிற பஞ்ச மஹா யக்ஞங்களில்★ இப்படியே வேதாந்தமாகத் தியானம் செய்வதோ, ஒரே ஈச்வரனிடம் பக்தியில் உருகிப் போவதோ காணவில்லை. யாகங்கள் எல்லாமும் இப்படித்தான். மொத்தத்தில் அனேகத் தேவதைகள், ஊர்த் தேவதை மாதிரிச் சில்லுண்டி சாமிகள், பூத ப்ரேத பிராசங்கள் உள்படப் பலவற்றுக்கும் பூசை பலி இவைதானே அதிகமாயிருக்கின்றன?

இப்படி இரண்டு க்ரிடிஸிஸம்—ஒன்று, 'ஒரே பரமாத்மா என்று வைத்துக் கொண்டு அதனிடமே ஜகாக்ரிய பக்தி பண்ணாமல் நூறாயிரம் சாமியிடம் புத்தியைச் சிதற விடுகிறீர்களே!' என்பது. இன்னொன்று, 'கண் முன்னாடி இருப்பவர்களுக்குத் தொண்டு—ஸோஷல் ஸர்வீஸ்—செய்வதற்குப் பொழுது இல்லாதபடி, எப்போதோ செத்துப் போனவர்களுக்காக ஏன் இப்படி சிராத்தாதிகள்? 'நான் நன்றாயிருக்கணும். என் பிள்ளை-குட்டி நன்றாயிருக்கணும்' என்றே Selfish ஆக எதற்கு இத்தனை சடங்கு? 'எனக்கு உடம்பு ஸரியாகப் போகணும், அதற்காக நவக்ரஹ சாந்தி. பிள்ளைக்குப் படிப்பு வரணும். அதற்காகப் மேதா தக்ஷிணாமூர்த்திக்குப் பூஜை. அகத்தில் வேறு ஏதோ இடைஞ்சல் போகணும். அதற்காகக் குல தெய்வம், ஏதோ ஒரு காட்டேரிக்கோ, கருப்பண்ண சாமிக்கோ படையல். க்ரஹபீடை போகணும், ராஹுவுக்கு, கேதுவுக்கு, சனிக்கு ஹோமம்—எள்ளு, கொள்ளு, ஏதோ நைவேத்யம், எல்லாம் selfish ஆகப் பக்தியே இல்லாமல் business. அதில்கூட லஞ்சம் மாதிரி இருக்கிறதே!

இப்படியெல்லாம் கேள்வி கேட்டால் நமக்கும் நம் மதம் நம்மை இப்படி ஹீனமாக வைத்திருக்கிறதே, அந்த மதங்களிலிருக்கிறவர்களுக்கு, 'ஒரு பகவான் இருக்கிறான், அவனுக்கு

★ பிரம்ம யஜ்ஞம், தேவயஜ்ஞம், பித்ரு யஜ்ஞம், மனுஷ்ய யஜ்ஞம், பூத யஜ்ஞம் என்பன. இவை பற்றி மேலும் தெரிந்துகொள்ள அருள் உரை 6-வது புத்தகத்தில் இடம்பெற்றுள்ள எள்ளும் தண்ணீரும் எங்கே போயின? பரோபகாரம், எல்லா உயிர்களின் திருப்திக்காக ஆகிய உரைகளைப் பார்க்கவும்.

Koviloor Digital Library

ஸிம்பிளாக ஒரு பிரார்த்தனை பண்ணிக் கொள்வோம்' என்று இருக்கிற பக்வ புத்தி நமக்கு இல்லையே என்றுதானிருக்கிறது. 'காட்டேரியிலிருந்து நிர்குண நிஷ்கள நிராமயமென்கிற பரப்ரஹ்மம்வரை எல்லாவற்றையும் போட்டு அவியல் பண்ணிக் கொண்டிருக்கிறோமே!' என்று தோன்றுகிறது.

'ஸரியாக நம் மதத்தைப் புரிந்து கொண்டால் அதில் இப்படியெல்லாம் இல்லவேயில்லை' என்று நம்மிலேயே அறிவாளிகளாக, பிலாஸஃபர்களாக இருக்கிறவர்கள், சொல் கிறார்கள். 'பரமாத்மத் ' தியானம் இல்லாவிட்டால் ஸர்வ சக்தியாக இருக்கப்பட்ட ஏக வஸ்துவிடம் காரண காரியமில் லாத பக்தி–இதுதான் நம் மதக் கோட்பாடு. வயலில் களை வந்து சேர்ந்து பயிரையே நாசம் பண்ணிவிட்டு ஒரேயடியாக விருத்தியாகிறதுபோல, மற்ற விஷயங்களும் சடங்குகளும் நம் மதத்திலேயே வந்து சேர்ந்து வளர்ந்து விட்டன. முக்யமாக Priest-hoodன் vested interestனால் இப்படி ஆகிவிட்டது' என்கி றார்கள். 'பார்ப்பான் தக்ஷிணை தக்ஷிணை என்று வைத்து ஏமாற்றுகிறான்' என்பதைத்தான் இப்படி கௌரவமாக Priest-hoodன் vested interest என்கிறார்கள்!

நான் இவர்களோடு சேர்ந்து கொண்டு 'நம்முடைய ரிலிஜன் என்பது ஹைஃபிலாஸபிதான். அதில் நூறாயிரம் சாமி, பித்ரு ஸமாசாரம், சடங்கு எல்லாம் களையாக வந்து சேர்ந்து விட்டது' என்று சொல்லப் போவதில்லை.

க்ரிடிஸைஸ் பண்ணுகிறவர்களோடு சேர்ந்து கொண்டு 'ஏக பரமாத்மாவைப் பற்றிய தியானத்தைவிட, அல்லது ஈச்வரன் என்ற ஒரே ஒருத்தனிடம் ஐகாக்ரிய பக்தியைவிட, திவஸமும், தினுஸுதினுஸான ஹோமமும் பூஜையும் வேண்டுத லும்தான் நம் மதத்தில் ஜாஸ்தியாயிருக்கின்றன' என்றுதான் சொல்லப் போகிறேன்.

ஆனால் இதை கிரிடிஸிஸமாகச் சொல்லப் போவதில்லை. இப்படித்தான் இந்த மதம் இருக்கிறது. அதனால் காட்டேரிக் குப் படையல் போடுங்கள், நவக்ரஹ சாந்தி, ம்ருத்யுஞ்ஜய ஹோமம் எல்லாம் பண்ணுங்கள்; பஞ்சம மஹாயக்ஞம் பண்ணுங்கள்; திவசம் திங்கள் இப்போது நேரம் தப்பி

Koviloor Digital Library

ஸம்க்ஷேபமாக (சுருக்கி)ப் பண்ணுகிறது போல் இல்லாமல் சாஸ்த்ரோக்தமாக இன்னம் ஸாங்கோபாங்கமாகச் செய்யுங்கள், priest-hoodக்கு (இன்னம் கொஞ்சம் மட்டமாக priest-craft என்றும் சொல்லப்படுகிறவர்களுக்கு) இப்போது போல இல்லாமல் நிறைய வாரி வாரி தக்ஷிணை கொடுங்கள்' என்று தான் சொல்லப் போகிறேன்.

அவர்கள் கண்டனம் என்று நினைத்து என்ன என்னவற்றைச் சொல்கிறார்களோ அவை நம் மதத்தில் இல்லவேயில்லை என்று நான் சொல்லப் போவதில்லை. இருக்கத்தான் இருக்கின்றன என்று அழுத்தமாகச் சொல்லப் போகிறேன். இதை வருத்தத்தோடு apolegetic ஆகச் சொல்லப் போவதில்லை. 'ஆமாம்; இப்படித்தானையா எங்கள் மதத்தில் இருக்கிறது; இப்படியிருப்பதுதான் ஸரி' என்று பெருமையோடு சொல்லப் போகிறேன்.

'ஒரே ஸ்வாமியை நினைப்பதுதானே உசத்தி?'

'ஆமாம், அதுதான் உசத்தி!'

'திரும்பத் திரும்ப தான் தன் பித்ரு, புத்ராதிகள் என்றில்லாமல் humanity முழுவதற்கும் ஸர்வீஸ் பண்ணுவதேதானே உசத்தி?'

'ஆமாம், ஒப்புக்கொள்கிறேன்.'

'பின்னே எப்படி தன்னைச் சேர்ந்த இதுகளுக்காகவே பண்ணுவதை யக்ஞஹோமங்களிலிருந்து படையல்வரை எல்லாவற்றையும் ஸரியென்று சொல்லி ஆதரிக்கிறீர்கள்?'

'ஏன் ஆதரிக்கிறேன் தெரியுமா? இதுகள் எல்லாவற்றிலும் கூட ஏக பரமாத்மாவுக்கான வழிபாடுதான் உள்ளே ஓடுகிறது. இதுகளிலும் பரோபகாரம், ஆத்மோபகாரமான சித்திசுத்தி ஆகிய உயர்ந்த லக்ஷயங்களே பூர்த்தியாகின்றன.'

'அதெப்படி? கொஞ்சங்கூடப் புரியவில்லையே!'

'அப்படித்தான். ஹிந்துக்களில் ரொம்பப் பேரும் புரிந்து

Koviloor Digital Library

கொள்ளாமலேதான் இவற்றைப் பண்ணுகிறார்கள்; அல்லது புரிந்து கொள்ளாததாலேயேதான் விட்டுவிடுகிறார்கள். ஸரியாகப் புரிந்து கொண்டால் இது எல்லாவற்றிலும் ஏக பரமாத்ம சிந்தனை உள்ளூற இழையோடிக் கொண்டுதானிருக் கிறது; பரோபகாரமோ வேறெந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு இவற்றில்தான் பிரகாசிக்கிறது.'

'எப்படி?'

'இருக்கிறது ஒரு பரமாத்மாதான் என்கிறது வாஸ்தவம். அதைத் தவிர வேறேயே கிடையாது. மனுஷ்யன், மிருகம், பூச்சி, பொட்டு எல்லாம்கூட அதுதான் என்பதை ஹிந்து மதம் மாதிரிச் சொல்கிற மதம் வேறு ஒன்றும் இல்லை. ஆனாலும் அதை அனுபவத்தில் தெரிந்து கொள்வது லேசில்லை. மற்ற மதக்காரர்கள் ஒரே God அல்லது நிர்வாணம், அல்லது கைவல்யம் என்று சொன்னாலும் அவர்களைக் கேளுங்கள்: 'நீங்கள் அந்த ஒன்றைத்தான் தியானமோ பிரார்த்தனையோ பண்ணுகிறீர்கள் என்பது வாஸ்தவமானால், நீங்கள் வாஸ்தவத் திலேயே அதைத் தெரிந்து கொண்டு விட்டீர்களா? Realise பண்ணி விட்டீர்களா? (பிரத்யக்ஷமாக அனுபவித்து விட்டீர் களா)' என்று அடித்துக் கேட்டால் அவர்களில், 'Realise பண்ணிவிட்டேன்' என்று பதில் சொல்லக் கூடியவர்கள் லக்ஷத் தில் ஒருவர்தான் இருக்கலாம்!

ஆத்ம ஸம்பந்தமோ, ஈச்வர ஸம்பந்தமோ இல்லாததாகத் தோன்றும் இத்தனை காரியங்களில் மாட்டிக் கொண்டுள்ள நம் மதஸ்தர்களிலோ, நிச்சயமாக அவர்களைவிட ஜாஸ்தி அனுபூதி மான்கள்-realised souls இருந்திருக்கிறார்கள். இது நாம் சொல்வ தில்லை. அவர்களே இந்தியாவைத்தான் Land of Saints and Sages என்று சிலாகிக்கிறார்கள். இன்றைக்கும் நாம் லௌகிக ஸௌ கர்யங்களுக்காகவே அவர்களுடைய தேசங்களுக்கு ஓடுவதாக வும், அவர்கள் ஆத்மாபிவிருத்திக்காக நம் தேசத்துக்கு வந்து தங்குவதாகவும் இருப்பது யதார்த்த உண்மை!

காரணம் என்ன?

ஸ்வயநலனாக இவன் செய்து கொள்வதாகத் தோன்றுகிற பலவித ஹோமம், பூஜை முதலியவற்றிலுங்கூட ஆத்மப்

Koviloor Digital Library

பரிசுத்திக்கான மருந்தும் இருப்பதுதான். எல்லாம் பரமாத்மா வானாலும் லோகத்தின் நடைமுறையில் ஒன்றுக்கொன்று வித்யாஸமான ஜீவன்கள் என்று வைத்துத்தான் கார்யங்கள் நடந்தாக வேண்டியிருக்கிறது. நாம் எல்லோருமே ஸ்வயஞ்ஜ் யோதியான ஆத்மாதான் என்றாலும், அது நமக்கே தெரியாத படி கர்மா மேகமாக மறைக்கிறது. கர்மா மூடிய ஜீவனை அதிலிருந்து வெளியிலே கொண்டு வர வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. நம்மை லோகத்தில் வெறுமனே தனியாக விட்டு வைத்திருக்கவில்லை. பெண்டாட்டி, பிள்ளைகுட்டி என்று சேர்த்து வைத்திருக்கிறது. இதுவும் கர்மாவால் ஏற்பட்டதுதான். கர்மவாஸனை ஒரு பக்கம் நம் மனஸுக்குள் அழுக்குகளை ஏற்றி ஆத்மாவை உணர முடியாமல் பண்ணுகிற தென்றால், கர்ம பந்தம் பல உறவுகளாக வந்து ஒரு வீட்டிலே கட்டிப் போட்டுக் கடமைகளைப் பண்ண வைக்கிறது. உடம்பு என்ற வீட்டுக்குள் இருக்கும் ஜீவன், அப்புறம் அந்த ஜீவனுக்கு பந்துக்கள் என்பவர்களால் ஏற்பட்டிருக்கும் வீடு இவற்றுக்கு ஒருத்தன் பண்ண வேண்டிய கடமைகளைப் பண்ணினாலன்றி கர்மாவைத் தீர்க்க முடியாது.

இத்தனை பழைய கர்மா பாக்கியை வைத்துக் கொண்டு இப்போதே ஆத்மா தெரியணும், ஈச்வரன் தெரியணும் என்றால் தெரியாது. ஸத் கர்மாவால் பாப கர்மாவைப் போக்கிக் கொண்ட பின்தான் மேகம் விலகி ஸூர்யப் பிரகாசம் தெரியும். இந்த ஸத்கர்மா பலவிதமான கடமைகள் ரூபத்தில் இருக்கிறது. ஆத்ம ஞானம் அல்லது ஈச்வர பக்தி என்று ஒரே ஆவேசமாகப் போகிற அபூர்வமான சில பேர்க ளுக்குத்தான் ஒரே flashல் கர்மா அறுந்து விழுமே தவிர, மெஜாரிடி ஜனங்களுக்கு ட்யூட்டிகளை சுத்தமாகப் பண்ணிப் பண்ணி ரொம்பவும் gradual ஆகத்தான் கர்மாவைப் போக்கிக் கொள்ள முடியும். 'இருவினை ஒப்பு' என்று (சைவ) ஸித்தாந்தி கள் சொல்வதுபோல ஜன்ம ஜன்மாந்தரங்களாகப் பண்ணிய பாபக் கர்ம பாரத்தால் ஒரு தராசுத் தட்டு ரொம்பவும் கீழே போயிருக்கிறதென்றால் அந்த அளவுக்கு ஸத் கர்மாவைப் பண்ணியே இரண்டு தட்டுகளையும் ஸமமாகச் செய்ய வேண்டும்!

இந்த ட்யூட்டிகளில், 'சரீரமாவது வீடாவது?' என்று ஒரே

Koviloor Digital Library

வைராக்யத்தில் மனஸைக் கெட்டியாக வைத்துக் கொண்டிருக்கிற யாரோ ஒரு சிலரைத் தவிர மற்றவர்களெல்லாரும், சரீரத்திலும் வீட்டிலும் இருக்கிறபோதேதான் அவற்றுக்கான கடமைகளைப் பண்ணி அதனாலேயே கர்மா மூட்டையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இந்த ஜீவன் இந்த சரீரத்திலிருக்கிறபோதேதான் ஸத் கர்மா பண்ண வேண்டும், ட்யூட்டிகளைப் பண்ண வேண்டும் என்பதால் ஓரளவு வரைக்கும் சரீர போஷணை, வியாதி வந்தால் அதற்குச் சாந்தி, குடும்பக் கார்யங்களுக்காக ஸம்பாத்ய அபிவிருத்திக்குப் பிரார்த்தனை என்றிப்படி selfish ஆகத் தோன்றுகிறவற்றையும் செய்யத்தான் வேண்டும். அதியாக எதிலுமே போகக் கூடாது தான். ஆனால் இப்போது 'ஸெல்ஃபிஷ்' என்று தோன்றுகிற பல சாஸ்த்ரோக்தமான கார்யங்கள் ஒரு ஸாமான்ய ஜீவன் தன் கடமையைப் பண்ணுவதற்கு அங்கமாகவே செய்து கொள்ள வேண்டியவைதான். இப்படியே கர்மாவால் நமக்கு வந்து வாய்த்து, நாம் அவர்களுக்குப்பட்ட ஜன்மாந்தர (கர்மக்) கடனை இப்போது நாம் செய்யும் ட்யூட்டி ரூபமான கர்மாவால் தீர்த்துவைக்கும் தார புத்ராதிகளுக்கான பல சாஸ்திரோக்த காரியங்களைப் பண்ணுவதற்கும் 'ஸெல்ஃபிஷ்' என்று வெட்கப்பட வேண்டியதில்லை.

மந்த்ரபூர்வமாக இப்படிப்பட்ட சாஸ்திரோக்தக் காரியங்களைப் பண்ணும்போது அந்த மந்த்ரங்கள் லௌகிகமாக ஒரு பலனைத் தருவதோடு, சித்த சுத்தியையும் தருகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். வெறும் கர்மாவே சித்த சுத்தி தருவது என்றால் மந்த்ரத்தோடு சேர்ந்து வரும்போது சித்தப் பரிசுத்திகர சக்தி இன்னம் ஜாஸ்தியாகிறது.

ஒரு பிண்டத்துக்குப் பும்ஸவனம் பண்ணும்போது, ஒரு பிறந்த குழந்தைக்கு ஜாத கர்மம் பண்ணும்போது, அது வளர்ந்தவிட்டு உபநயன ஸம்ஸ்காரம் பண்ணும்போது, அந்த ஜீவனின் ஆத்மப் பரிசுத்தியை முக்கியமாக உத்தேசித்தே இந்தக் கார்யங்கள் செய்யப்படுகின்றன.

நம் பொறுப்பில் ஈச்வரன் விட்டிருக்கிற இந்த நம்முடைய சொந்த ஜீவன், அப்புறம் பெண்டாட்டி பிள்ளைகுட்டி என்கிற ஜீவர்கள் ஆகியவர்களுக்கு நியாயமாக லோகத்தில் என்ன

Koviloor Digital Library

நல்லது கிடைக்க வேண்டுமோ அதற்கும், இவர்களுடைய ஆத்மப் பரிசுத்திக்காகவும் ஒருத்தன் செய்யும் கார்யங்களும் ஒரு தினுஸில் ஜீவாத்மக் கைங்கர்யந்தானே? பரோபகாரம் தானே?

இதுவே எல்லாம் என்று வெளி லோகத்திலிருக்கிற கஷ்டங் களைப் பார்க்காமல், அதற்காக எந்தத் தொண்டும் செய் யாமலிருந்தால் அதுதான் தப்பு.

அளவறிந்து இந்தச் சொந்தக் கார்யங்களைப் பண்ணும் போது வெளிக் கார்யத்துக்கு, லோக ஸேவைக்குப் பொழுது இல்லாமல் போகவே போகாது.

நம்முடைய ஜீவன், நம் பந்துக்களின் ஜீவன்கள் ஆகியவற் றுக்கும் உபகரிக்கத்தான் வேண்டும். அதனாலேயே இந்த ஜீவனைச் சரீர பந்தத்திலிருந்தும், விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆனால் அதே ஸமயத்தில் ஈச்வரன் நம்மை ஓர் உடம்பில், ஒரு வீட்டில் மட்டுமில்லாமல், ஓர் உலகத்திலும் விட்டு வைத்திருப்பதால் அந்த உலகத்துக்கும் நாம் செய்ய வேண்டிய பரோபகார ட்யூட்டி உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்த லோகத்துக்கு மட்டுமில்லாமல் கண்ணுக்குத் தெரி யாத லோகங்களில் இருக்கிறவர்களுக்கும் நம் ட்யூட்டி இருக் கிறது. செத்துப் போனவுடன் ஜீவன் சந்த்ர லோகம், பித்ரு லோகம், நரக லோகம் என்று எங்கெங்கேயோ போகிறது என்கிறார்களே அங்கேயும், அப்புறம் அந்த ஜீவன்கள் திரும்பி இந்த லோகத்திலேயே எங்கே எந்த ரூபத்தில் புனர் ஜன்மா வாக வந்திருந்தாலும் அங்கேயும், அதற்கு வேண்டியவை போய்ச் சேருவதற்காகத்தான் அபர கார்யங்கள், திவஸம், தர்ப்பணம் எல்லாம். இதுவும் பரோபகாரத்தைச் சேர்ந்தது தான்.

பல சாமி எதற்கு என்கிறார்களே, இதுவுங்கூடப் பரோப காரம்தான் என்று நான் சொன்னால் உங்களுக்கு ஆச்சர்ய மாயிருக்கும். கண்ணுக்குத் தெரியாத லோகங்களில் மனுஷ்ய இனம் போலவே பலவித தேவஜாதிகள் இருக்கின்றன.

Koviloor Digital Library

துர்த்தேவதைகள், க்ஷுத்ர தேவதைகள் (சில்லுண்டி சாமிகள்) எல்லாம் இருக்கின்றன. எல்லாம் பரமாத்மா என்றாலும், (மனுஷ்யர்களான) நமக்கு எப்படி அது (அனுபவத்தில்) தெரியவில்லையோ அப்படியே இந்தத் தேவதைகள் பலவற்றுக்கும் தெரியாது. ஈச்வரன், விஷ்ணு, அம்பாள், பிள்ளையார், ஸுப்ரஹ்மண்யர், ஸரஸ்வதி, லக்ஷ்மி, ஸூர்யன் இம்மாதிரி தேவதாமூர்த்திகள் பரமாத்மாவாகவே தங்களைத் தெரிந்து கொண்டும், வெளியிலே தங்களுக்கென்று ஒரு தனி ரூபம், தனியான தொழில் என்றிருக்கிற மாதிரி மற்ற எல்லாத் தேவதைகளும் இல்லை.★ அவை ஈச்வரனின் ஸர்வலோக ஸர்க்காரில் இருக்கிற கோடானு கோடிச் சிப்பந்திகளாக மட்டுமேயிருக்கின்றன.

இயற்கை, இயற்கை என்று நாம் சொல்லிக் கொண்டிருப்பதன் ஏராளமான சக்திகளில் கொஞ்சம் கொஞ்சம் அவற்றின் த்வாரா நிர்வஹிக்கப்படுகிறது.

மனுஷ்ய ஜீவர்களில் கெட்டவர்கள், நல்லவர்கள் என்று இரு விதமாகவும் இருக்கிறோமோல்லியோ? மிருகங்களிலும் துஷ்ட மிருகங்கள், ஸாதுவானவை என்று இருக்கின்றனவோல்லியோ? இப்படியே நல்ல தேவதை, துர்த் தேவதை, (பெரும்பாலான ஜனங்களைப் போல) நல்லதும் – கெட்டதும் கலந்த தேவதை எல்லாமுண்டு. ஆராதித்தால் நல்லது செய்வது, ஆராதிக்காவிட்டால் நல்லது செய்யாமல் வெறுமனே இருப்பது, வெறுமனே மட்டுமில்லாமல் கெட்டதே செய்வது, ஸாத்விக ஆராதனையால் ஸந்தோஷப்படுவது, ராஜஸ – தாமஸ வழிபாடுகளாலேயே ப்ரீதியுறுவது, மந்த்ரபூர்வமாகப் பிடிபடுவது, பூசாரியின் அனுஷ்டானத்தில் பிடிபடுவது என்றெல்லாம் பலவிதமான தேவ சக்திகள் இருக்கின்றன. காத்தாயி, காட்டேரி, கருப்பண்ணசாமி, வீரன், முனி, இருளன், அய்யனார் எல்லாம் இருக்கிறது. இவற்றில் ஸாத்விக ஸ்டேஜில் இருப்பவர்களுக்கு ஸாத்விகத் தேவதையாக இருந்து கொண்டு,

---

★ஒரே பரமாத்மாவைப் பல மூர்த்திகளில் உபாஸிப்பது குறித்து அருள் உரை 10-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள இஷ்டதேவதை 32-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள தெய்வங்களுள் பேதம் ஏன்?, ஒன்றே பலவாக ஆகிய உரைகளையும், தேவதைகள் குறித்து 13-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள தேவர்கள் என்ற உரைகளையும் பார்க்கவும்.

Koviloor Digital Library

தாமஸமான ஜனங்களுக்கு தாமஸமாக இருக்கிறவையும் உண்டு. நைவேத்தியத்திலும் இவற்றின் தரத்தைப் பொறுத்து வித்யாஸம் உண்டு. பலி, கிலி முதலியவற்றாலேயே த்ருப்தி யாகிற தேவதைகளும் உண்டு.

நாம் மட்டும் நல்லது அடைவதற்காகத்தான் இவற்றை வழிபடுகிறோம் என்றால்தான் அது selfish. ஆனால் நம் கிராமம், ஊர், உலகம் எல்லாமே இவை திருப்தியாக இருந் தால்தான் நன்றாயிருக்கும் என்பதற்காக இவற்றை வழிபட் டால் அது லோக க்ஷேமார்த்தம் செய்கிற பரோபகாரத்தில் சேர்ந்ததுதான்!

இன்னம் ஒரு படி மேலே போய்ச் சொல்கிறேன். நம் சொந்த நலன், உலகத்தார் நலன் ஆகியவற்றை மட்டும் Polytheism என்று ஸரியாகவோ தப்பாகவோ சொல்லப்படுகிற, இந்த 'பல சாமி பூஜை' பூர்த்தி பண்ணுவதோடு நிற்கவில்லை. அந்தத் தேவதைகளின் நலனையும் பூர்த்தி பண்ணுகிறது. அவற்றில் பெரும்பாலானவை பூர்ணத்வம் பெறாதவையே என்று சொன்னேனல்லவா? அவையும் ஈச்வர ஸ்ருஷ்டியைச் சேர்ந்த ஜீவன்கள். நம்மைவிட அதிகச் சக்தி படைத்த ஜீவன் களானாலும் நம்மைப் போலவே அவற்றுக்கும் ஆசைகள், தேவைகள் உண்டு. அதுகளை நாம் பூர்த்தி பண்ணித் தருவதும் பரோபகாரம்தானே?

மற்ற மதங்கள் இந்த லோகத்திலேயிருக்கிற, கண்ணுக்குத் தெரிகிற மனுஷ்ய மிருகாதிகளுக்குப் பிரீதி பண்ணுவதை மட்டுமே பரோபகாரமென்று சொல்கின்றனவென்றால், நம் மதம்தான் அதற்கும் மேலே போய், இந்த லோகத்தைச் சேராத, லோகாந்தரங்களைச் சேர்ந்த, invisible ஜீவன்களுக்கும் பிரீதியாக இப்படி வைதிக ஹோமத்திலிருந்து பூசாரியின் படையல் வரையில் அனேக வழிபாடுகளை வைத்துப் பரோபகார எல்லையை இன்னமும் விஸ்தாரம் பண்ணியிருக் கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது. பஞ்ச மஹா யக்ஞங் களில் வரும் ஹோமம், பலி, மந்த்ர அத்யயனம், தர்ப்பணம் எல்லாமே பலவிதமான ஸ்ருஷ்டிகளுக்கும் உதவி பண்ணுவது தான்!

Koviloor Digital Library

ஏக பரமாத்மாதான் இத்தனை வித ஜீவராசிகளாகவும் தேவதைகளாகவும், இவற்றைப் பூஜை பண்ணும் மனுஷ்யர் களாகவும் ஆகியிருப்பதை நம் மதம் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டுதானிருக்கிறது. இந்த நினைப்பு அடியோடு துண்டித்துவிடக் கூடாதென்றுதான் எந்தத் தேவதையை வழிபட்டாலும் அதுவே ஸ்வாமி என்கிற மாதிரி ஸர்வ சக்தி, ஸச்சிதானந்த ஸ்வரூபம் என்றெல்லாம் சொல்வது. அந்தத் தேவதைக்கே 'தான் பரமாத்மா', என்பது தெரியாமலிருந் தாலும்கூட, நாம் அது பரமாத்மா என்பதை முழுக்க மறந்து போய்விடக் கூடாது என்பதே தாத்பர்யம். அதாவது 'பல சாமி' இல்லை–ஒரே ஸ்வாமியைத்தான் ஒவ்வொரு ரூபத்துக் குள்ளும் அந்தர்யாமியாக நினைக்கிற பாவமே இது. எந்தத் தேவதையும் பரமாத்மாவின் ரூபமே என்றாலும், இதை மறக் காமல் நினைப்பூட்டிக் கொண்டாலும், அதை ஒரு தனி தேவதையென்றே அதற்குரிய வழிபாட்டால்தான் உபாஸிக்க வேண்டும் என்று நம் மதம் சொல்கிறது. ஏனிப்படி என்று கேட்டால்–மனுஷ்யர்கள் மட்டும் யார்? அவர்களும் பரமாத் மாவின் ரூபங்கள்தானே? மத நம்பிக்கையில்லாத பொதுத் தொண்டுக்காரர்கள்கூட மக்களுக்குச் செய்வதே மஹேசனுக் காகும் என்கிறார்களே! இப்படி எல்லாரும் ஒரே ஈச்வரன் என்றாலும், அவர்களுக்கான சேவை அவரவர்களைத் தனி மனுஷ்யர்களென்று வைத்து, ஒவ்வொருவரின் தேவையை அனுஸரித்துத்தானே பண்ண வேண்டியதாயிருக்கிறது? வியாதி யஸ்தனுக்குச் சிகித்ஸை, அதிலும் இன்ன வியாதிக்காரனுக்கு இன்ன சிகித்ஸை, உத்யோகமில்லாதவனுக்கு வேலை, படிப் பில்லாதவனுக்கு படிப்பு, பசித்தவனுக்கு அன்னம் என்று வித்யாஸமாகத்தானே பரோபகாரம் பண்ணுகிறோம்? இவ்வாறே தேவதைகளிலும் ஒவ்வொன்றின் தனி ரூபத்துக்கும் எந்தவிதமான ஆராதனை உரியதோ அந்தப்படிதான் செய்ய வேண்டும். ஆனாலும் எல்லாம் பரமாத்மா என்பதையும் முழுக்க மறந்துவிடக் கூடாது.

எல்லாம் பரமாத்மா என்ற நினைப்பு ஒருத்தனுக்கு அனுபவமாக ஆவது பெரிய விஷயம். அப்படி ஆவதற்கு முன் அவனுக்குச் சித்தசுத்தி ஏற்பட வேண்டும். இந்தச் சுத்தி ஏற்படவே அனேகக் கார்யங்களைக் கொடுத்திருக்கிறது. இதில்

Koviloor Digital Library

H957
RGS (தங்)

ஒவ்வொரு தேவதையையும் அதற்குரியபடி பூஜிக்கிற காரியமும் அங்கம்தான். இது தவிர 'யஜ்ஞேன, தானேன, தபஸா' என்று பரமாத்மத் தத்வத்தைச் சொல்லும் உபநிஷத்தே அந்தத் தத்வத்தைப் படிப்பதற்குப் பூர்வாங்கமாகவே பலவிதமான கார்யங்களை விதித்திருக்கிறது. ★ 'தானேன' என்பது தனத்தால் செய்கிற தானம் மட்டுமில்லை. மனத்தால், வாக்கால், சரீரத்தால் செய்யும் எல்லா உபகாரமும் தானம்தான்!

இதேபோல, 'பிதாவுமில்லை; புத்ரனுமில்லை; தேவதையுமில்லை; உபாஸிக்கிறவனுமில்லை' என்ற உச்சிக் கோடிக்கு அழைத்துப் போகிற உபநிஷத்துகளே, இந்த உச்சிக்கு வழியாகவே 'தேவ பித்ரு கார்யாப்யாம் நரப்ரமதித்வயம்' என்கிறது. 'ஏகப்பட்ட தேவதைகளுக்குப் பண்ண வேண்டிய கார்யங்களை, ஏகப்பட்ட பித்ரு கார்யங்களைக் கொஞ்சங்கூட, மறந்து கிறந்து, விட்டு விடாதே' என்கிறது.

தத்வார்த்தமாக, symbolical-ஆகத் தேவதைகளில் புருஷன், பெண்டாட்டி, பிள்ளைகுட்டி என்று வைத்திருப்பது மட்டுமில்லை. வாஸ்தவமாகவே தேவஜாதியைச் சேர்ந்த பல ஸ்ருஷ்டிகள் மனுஷ்ய ஜீவன்களைப் போலவே இப்படிப்பட்ட உறவுகளில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன.

லோகத்தில் எதுவும் நமக்கு வேண்டாம், ஏக பரமாத்மா ஒன்றைத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது மாத்திரமே நம் லக்ஷ்யமாக ஆகிறபோது அந்தப் பரமாத்மாவின் தேவதா ரூபங்களை விடத்தான் செய்வோம். அதேபோல லோகத்திலிருக்கிறவர்களுக்கு சேவை பண்ண வேண்டும் என்கிற எண்ணமும் அப்போது விட்டுப் போய்விடும். இதனால் ஒருத்தன் பரோபகாரமில்லாமல் கல்லு மாதிரி ஆகிவிட்டானென்று அர்த்தமில்லை. பரமாத்ம ஞானத்தை இவன் அடைந்து விட்டானென்றால், பரமாத்மாவிடம் பக்தியினாலோ ஞானத்தினாலோ கலந்து வாழ்கிறானென்றால், அப்போது இவன் உத்தேசிக்காமல் தன்னாலேயே ஸகல

★ ப்ருஹதாரண்யகம் 4.4.2

Koviloor Digital Library

ஜீவன்களுக்கும் சாந்தி தருவதான மஹாப் பெரிய உபகாரம் இவனால் நடந்து கொண்டே தானிருக்கும்.

மற்ற மதங்கள் இப்படிப் பல தேவதைப் ப்ரீதியைச் சொல்லவில்லை. ஆதலால் அவர்களுக்கு ஒரே ஈச்வரனிடம் பிடிப்பு நன்றாக உண்டாகிறது என்பது வாதமாக மட்டும் நிற்கிறதே ஒழிய, வாஸ்தவத்தில் அப்படி அவர்களில் அதிகம் பேருக்கு ஈச்வரானுபவம் உண்டாகாமல் அவர்களும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் பிரத்யக்ஷமாகப் பார்ப்பது. அவர்களில் இருப்பதைவிட நம்மில்தான் ஜாஸ்தி மகான்கள் தோன்றியிருக்கிறார்கள், இப்போதும் இருக்கிறார்கள் என்றும் அவர்களே சொல்லவும் செய்கிறார்கள். இதனால் எனக்கு இன்னொன்றுகூட கொஞ்சம் வேடிக்கையாகத் தோன்றுகிறது.

பெரிய ஸ்வயநலம், தன்னலம் எது? தனக்கு உண்டாகக் கூடிய பெரிய நன்மை எது? பரமாத்மாவைச் சேருவதுதானே? 'எத்தனை தேவதைகளும், பித்ருக்களும் இருந்தாலும் சரி, எனக்கு அவை ஒன்றும் வேண்டாம்; நீதான் வேண்டும். அவையெல்லாமும் உன் ஸ்ருஷ்டிதானே? அவற்றுக்கு என்ன தேவை இருந்தாலும் அதைப் பூர்த்தி பண்ண வேண்டியது உன் பொறுப்புத்தான். மரம் வைத்த நீதான் தண்ணி விடணும். (தண்ணி) விடு, விடாமல் போ, அது உன் கார்யம். எனக்குத் தேவதையும் வேண்டாம், பித்ருக்களும் வேண்டாம். உன்னைத் தான் பிடித்துக் கொள்கிறேன். அதற்காக அவை கோபித்துக் கொண்டு என்னைக் கஷ்டப்படுத்தினவென்றால் அது உனக்குத் தான் அவமானம். எல்லாவற்றுக்கும் மேலேயிருக்கிற உன்னை நான் பிடித்துக் கொள்கிறேன் என்பதற்காக ஏதோ குட்டி சக்திகள் என்னை ஹிம்ஸை பண்ணி, நீ பேசாமல் இருந்தால் அது உனக்குத்தான் அபக்யாதி' - என்றிப்படி எல்லாரையும் நினைக்கச் சொல்லி நம் மதம் நம்முடைய பெரிய ஸ்வய நலத்தை மட்டும் கவனித்திருக்கலாம்; ஆனாலும் ஸ்வயநல மதம் என்று சொல்லப்படுகிற இதுதான், இவன் ஒரே பரமாத்மாவைப் பிடித்துக் கொள்வதில் உள்ள ஐகாக்ரியம் (ஒருமுக சிந்தனை) என்கிற உத்தமமான ஸ்திதி சிதறிப் போகும்படியாகப் பல தேவ-பித்ரு கர்மாக்களைக் கொடுத்து ஸ்வயநலத்தைத் தியாகம் பண்ண வைத்து, கண்ணுக்குத் தெரியாத

Koviloor Digital Library

சின்னச் சின்ன சக்திகளுக்கும் இவனைப் பரோபகாரம் பண்ண வைக்கிறது. இப்படி இவன் தியாகமும் பரோபகாரமும் செய்வதனாலேயே பகவான் இவனை மெச்சி இவனுக்கு இதர மதங்களிலிருப்பவர்களுக்கு முன்னால் ஞானத்தை அனுக்ரஹித்து விடுகிறான்; அதனால்தான் இந்த மதத்திலேயே ஜாஸ்தி மகான்களும் ஞானிகளும் பக்த சிரேஷ்டர்களும் தோன்றுகிறார்கள் என்று தோன்றுகிறது!

இன்னொரு தினுஸாகச் சொல்வதென்றால் ஹிந்து ஸமூஹத்தில் பெரும்பாலோர் இப்படிப் பரமாத்மாவைத் 'தியாகம்' பண்ணிவிட்டுக் குட்டி சாமி பூதப் படைகளைப் பிரீதி பண்ணுகிற பரோபகார புண்யத்துக்காகத்தான், இந்த மதத்திலேயே 'சிறு தெய்வம் சேரேன்' என்று அவனையே பிடித்துக் கொள்ளும் மஹான்களையும் பரமாத்மா நிறையப் படைக்கிறார்!

வேடிக்கை இருக்கட்டும். யதார்த்தமாகச் சொன்னாலும் ஈச்வரன்தான் ராஜா. தேவர்கள், பித்ருக்கள் எல்லாம் அவனுடைய ராஜாங்கத்தில் சிப்பந்திகள் என்றாலும், பிரஜைகள் சிப்பந்திகள் மூலம் நடக்க வேண்டியதற்கு அவர்களிடம் போக வேண்டுமென்றுதான் ராஜா நினைப்பானே தவிர, அவர்களை விட்டுவிட்டுத் தன்னைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று நினைப்பானா? மனுஷ்ய ராஜாக்களைப் போல இல்லாமல் எல்லா ஜனங்களுக்கான எல்லாக் காரியங்களையும் தான் ஒருத்தனாகவே கவனிப்பதற்கு ஈச்வரனுக்குச் சக்தி இருக்கத்தானிருக்கிறது என்றாலும், ஏதோ ஒரு காரணத்துக்காக, லீலைக்காக, அவர்தானே இப்படிக் கொஞ்சங் கொஞ்சம் அதிகாரம் கொடுத்து அனேகத் தேவஜாதிகள் இந்த லோக நிர்வாஹத்தை கவனித்துக் கொள்ளும்படியாக வைத்திருக்கிறார்? லோகத்தையும் நேச்சரையும் ஒருவன் தாண்டிப் போகிற வரையில், இவை ஸம்பந்தமாகவே அவர் நியமித்திருக்கிற இந்த அதிகாரிகளை அவன் ஆச்ரயிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்றுதானே அர்த்தம்? கீதையில் பகவானே இந்த விஷயத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். 'எல்லாத் தர்மத்தையும் மூட்டை கட்டிவிட்டு, என் ஒருத்தனையே பிடிச்சுக்கோ; என் கிட்டேயே சரணாகதி பண்ணு' என்று அவர் சொன்னது மட்டும் பிரஸித்தியாயிருக்

Koviloor Digital Library

கிறது. ஆனால் இப்படி சொன்னது கடைசியில்தான்★ அதற்கு முந்தி★★ "பல தினுஸான ஆசைகள் உள்ளவர்கள் அந்தந்த ஆசைகளைப் பூர்த்தி பண்ணும் அனேகத் தேவதைகளை உபாஸனை பண்ணுகிறார்கள். அப்போது அவர்களுக்கு அந்தத் தேவதைகளிடம் ஸ்திரமான ஈடுபாட்டை நானேதான் உண்டுபண்ணுகிறேன். ஆனாலும் அந்தத் தேவதைகளுடனேயே நின்றுவிடாமல், அதுகளையும் அந்தர்யாமியாக நான்தான் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறேன் என்ற தத்வத்தை மறந்து அந்தத் தேவதைகளே எல்லாம் என்று நினைத்துவிடக் கூடாது. இப்படி நினைக்கிறவன் அவை தருகிற அல்ப இச்சா பூர்த்திகளோடேயே நின்றுவிடுகிறான். என் நினைவை விடாமல், அவற்றை உபாஸிக்கிறவன் நாளாவட்டத்தில் என்னிடமே வந்து சேருகிறான்' என்று சொல்கிறார்.

கீதையின் கடைசியில் சொன்னது ரொம்பவும் பக்குவியாக இருப்பவனாலேயே முடியும். இங்கே, நடுவில் சொன்னது நடுவாந்தர ஸ்திதியிலிருக்கிறவனுக்கு. அவ்வளவுகூடப் போகாத நம் மாதிரியான பெரும்பாலாருக்கு இதற்கும் முந்தி, 'ஆரம்பத்திலேயே★★★ சொல்லும்போது அனேகத் தேவதைகள் மூலமும் தானே அந்தர்யாமியாகக் கார்யம் பண்ணுவதைகூடச் சொல்லாமலேதான் பேசுகிறார். என்ன சொல்கிறாரென்றால்: 'பூர்வத்தில் ஸ்ருஷ்டியின்போதே ப்ரம்மா தேவ ஜாதி, மனுஷ்ய ஜாதி இரண்டையும்தான் படைத்தார். இந்த இரண்டு ஜாதிகளும் ஒன்றையொன்று ஆதரித்துக் கொண்டு, ஆராதித்துக் கொண்டு ('பரஸ்பரம் பாவயந்த!' என்கிறார்), இரண்டு பேரும் அதனால் உசந்த க்ஷேமத்தை ('ச்ரேய: பரம்' என்று இருக்கிறது) அடைய வேண்டும் என்று அப்போதே பிரம்மா அவர்களுக்கு நியமனம் பண்ணி, இப்படி மனுஷ்யர்கள் தேவதைகளை உபாஸிப்பதற்கே யக்ஞங்களை ஏற்பாடு பண்ணிக் கொடுத்தார்' என்கிறார். லோக ஜீவனத்துக்கான மழை, இன்னம் அனேகப் போகங்களைத் தேவதைகள்தான் தருகிறார்கள். நாம் செய்யும்

★ கீதை பதினெட்டாவது அத்தியாயத்தில்.

★★ கீதை ஏழாவது அத்தியாயத்தில்.

★★★ கீதை மூன்றாவது அத்தியாயத்தில்.

Koviloor Digital Library

யக்ஞத்தினால் தேவதைகளின் தேவைகளைப் பூர்த்தி பண்ணி, நம்முடைய வாழ்வுக்கு வேண்டியதை அவர்களிடமிருந்து பிரதியாக வாங்கிக் கொள்ள வேண்டும். 'தேவதைகளுக்கு யக்ஞ ஆராதனை பண்ணாமல் தாங்கள் மட்டும் சாப்பிடுகிற வர்கள் திருடர்கள்தான்; அவர்கள் சாதத்தைச் சாப்பிடவில்லை, பாபத்தையே சாப்பிடுகிறார்கள்' என்றெல்லாம் 'மாம் ஏகம்' என்று முடித்த கிருஷ்ணபரமாத்மாவே ஏகப்பட்ட சாமி பூஜையை பலமாக விதிக்கிறார்!

யாரார் எந்தெந்த ஸ்டேஜில் எப்படிப்பட்ட பக்குவ ஸ்திதிகளிலிருப்பார்கள், அந்த ஸ்டேஜில் அவர்கள் என்ன பண்ணினால் நிறைவு பெறுவார்கள், ஆனால் இந்த நிறைவே நிறைந்த நிறைவு என்று நின்றுவிடாமல் மேலே போவார்கள் என்று ரொம்பவும் understanding–உடன் கவனித்து ஒரு ஜீவனைக் கொஞ்சம் கொஞ்சமாக மேலே கொண்டு போவதற் காகவே, முடிவிலே ஜீவ-ப்ரம்ம அபேதத்தைச் சொன்ன ஹிந்து மதம் அடியிலே அனேகத் தேவதைகள், பித்ருக்கள் உபாஸனையைச் சொல்லியிருக்கிறது என்று புரிந்து கொள் ளாததால் 'க்ரிடிஸைஸ்' செய்கிறார்கள். அனேக ஜன்மாந்தர வாஸனைகளோடு பிறந்திருக்கிற பெருவாரியான ஜனங்களை இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக gradual-ஆகத்தான் முன்னேற்ற முடியும். அப்படியில்லாமல் முதலிலேயே மேலே ஆரம்பித்தால் அது பிடிபடாமல் கீழே விழும்படியாகத்தான் ஆகும் என்பதற்கு 'proof'-ஆகவே மற்ற மதஸ்தர்களைவிட நம்மிலேயே வெகு அதிகமான மஹான்களும் ஸாதுக்களும் தோன்றியிருக்கிறார்கள்.

நாம் ரொம்பவும் அல்ப சக்தர்கள் என்ற அடக்கம் இருந்து விட்டால் எல்லாம் சரியாய்விடும். நம் மனஸ் எதையும் நினைக்கிறது, நம் புத்தியானது பிரமிக்கும்படியான விஷயங் களைத் தெரிந்து கொள்கிறது என்கிறதில் தலை கனத்துப் போகக் கூடாது. புத்திப் பிரகாசம் மனுஷ்ய ஜாதிக்கு நிறைய இருக்கலாம். ஆனால் புத்திக்கு மீறிய சக்திகளிடம் இந்த ஸாமர்த்தியத்தைக் காட்டி நாம் ஜயிக்க முடியாது. வேதப் பிரதிபாத்யமான, ஸாத்விகமான தெய்வ சக்திகள் மட்டுந் தானென்றில்லை. காத்து (காற்று) கருப்பு என்று அனேக ஆவி லோக சேஷ்டைகளைச் சொல்கிறார்களே, இதெல்லாம்

Koviloor Digital Library

நுழையவிடாமல் காப்பாற்றுகிற காத்தவராயன், கருப்பண்ணன் முதலானவற்றுக்குக்கூட நாம் அடங்கினவர்கள் என்பதால்தான் பிராமணர்கள்கூடப் பூசாரி பூஜை செய்யும் கிராம தேவதைகளுக்கும் வருஷத்தில் ஒரு நாளோ, தங்கள் வீட்டில் கல்யாணம், கார்த்திகை என்றாலோ வழிபாடு நடத்தும் வழக்கம் தொன்றுதொட்டு ஏற்பட்டிருக்கிறது. *ஸ்மிருதியிலேயே (தர்ம சாஸ்திரத்திலேயே) ரிஷிகள், இங்கே (சாஸ்திரத்தில்) சொன்னதோடு எல்லாம் முடிந்து விடவில்லை; பாக்கி பண்ண வேண்டியவைகளை ஸ்திரீகளிடமிருந்தும் நாலாம் வர்ணத்தவர்களிடமிருந்தும் தெரிந்து கொள்ளுங்கள்' என்று சொல்லியிருப்பது கிராம தேவதை வழிபாடும் சாஸ்திர ஸம்மதம்தான் என்பதற்கு ஆதரவாயிருக்கிறது.

ஈச்வர ஸ்ருஷ்டியில் உள்ள எல்லாவிதமான உயிர்களுக்கும் பிரீதியை உண்டுபண்ணி, அவற்றில் ஸௌம்யமானவை மேலும் ஸௌம்யமாகி லோகத்துக்கு நன்மை செய்யுமாறும், உக்ரமானவை சாந்தமாகி ஆவி சேஷ்டை, அம்மை நோய் முதலிய க்ஷாமங்களை உண்டாக்காமலிருக்குமாறும் செய்வது உத்தமமான காரியந்தான்; விஷயம் தெரியாதவர்கள் 'க்ரிடிஸைஸ்' செய்வதால் இதெல்லாம் ரொம்பத் தாழ்ந்த ஸ்திதிக்கு மதத்தை இறக்கி விடுகிறது என்று தப்பாக நினைத்து, விட்டுவிடக் கூடாது.

கிரிடிஸிஸம் என்று நினைத்து அவர்கள் சொல்வதே, பாராட்டி ஸர்ட்டிஃபிகேட் கொடுப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. அத்வைதத்தைச் சொல்கிற மதமே அனேகத் தேவ-பித்ரு கர்மாக்களைச் சொல்வதுதான் நம் மதத்தின் பெருமை. இதனால்தான் அது ஸகல விதமான லெவல்களிலிருப்பவர்களையும் ஒரே அமைப்பில் அரவணைத்துக் கொண்டு போகிறது என்பது ஒரு பெருமை. இதனால்தான் பரோபகாரம் என்பதை மனுஷ்ய லோகத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், மற்ற லோகத்து ஜீவர்களுக்குப் போஷணை தருவதாகவும் விஸ்தரித்து, அவர்களைக் கொண்டு நம் லோகத்துக்கு நல்லதைப் பெற்றுத் தர முடிகிறது என்பது இன்னொரு பெருமை!

---

* இவ்விஷயமாக அருள் உரை 33-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள தர்ம சாஸ்திரம் என்ற உரையைப் பார்க்கவும்.

Koviloor Digital Library

சிக்கனமும் பரோபகாரமும்★

சொந்த வாழ்க்கையில் சிக்கனமாக இருந்தால்தான் பிறத்தியாருக்கு உதவியாகத் திரவிய ஸகாயம் செய்ய முடியும். அனாவசியங்களையெல்லாம் அத்யாவசியமாக்கிக் கொண்டு மேல்நாடுகளைப் பார்த்து material comfort, luxury என்று மேலே மேலே போய்க் கொண்டிருந்தால் தனக்கும் ஒரு நாளும், திருப்தி இராது; பிறத்தியாருக்கும் தான தர்மம் பண்ண முடியாது. மோட்டார் சைக்கிளுக்கு மேலே கார் வேணும், அப்புறம் அந்தக் காரிலும் இன்னம் பெரிசாக வேணும், அதற்கப்புறம் அதையே ஏர்-கண்டிஷன் பண்ணணும் என்கிறது போல, ஸிமென்ட் மொசைக் ஆகணும், மொசைக் மார்பிள் ஆகணும் என்கிறது போல ஒன்றுக்கு மேல் ஒன்று ஸௌகர்யத்தைத் தேடிக் கொண்டேயிருந்தால் எப்போது பார்த்தாலும் அதிருப்தி என்ற பெரிய அஸௌகர்யத்திலேதான் ஒருத்தன் இருந்து கொண்டிருப்பான்! அது மட்டுமில்லை. எத்தனை ஸம்பாத்யம் வந்தாலும்-போதவும் போதாது. அதனால்தான் இன்றைக்கு அத்தனை பணக்காரர்களும் கடனாளிகளாக—கடன் என்கிறதையே 'ஓவர்-ட்ராஃப்ட்' என்று கௌரவமான பெயரில் சொல்லிக் கொண்டு – இருக்கிறார்கள். இவனே கடனாளியாக இருந்தால் மற்றவர்களுக்கு எங்கேயிருந்து தர்மம் பண்ணுவது?

இப்போது பொதுவாக உள்ள பரிதாப நிலை என்னவென்றால், ஒன்று, சிக்கனமாக இருப்பவன் தானும் அனுபவிக்காமல் பிறத்தியானுக்கும் உதவி பண்ணாமல் கருமியாக இருக்கிறான்; செலவாளியாக இருப்பவனோ 'ஸௌகர்யம், இன்னும்

★ சிக்கன வாழ்க்கை பற்றி அருள் உரை 7-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள சமூக விஷயங்கள் என்ற பகுதியிலுள்ள வாழ்க்கைத் தரம், எளிய வாழ்வு, கணக்காயிருக்கணும் என்ற உரைகளில் காண்க.

Koviloor Digital Library

ஸௌகர்யம்' என்று பறப்பதில் தனக்கே போதாமல் கடனாளியாக நிற்பதால் இவனாலும் பரோபகாரம் நடப்பதில்லை.

பிறருக்குச் செய்வதற்காகவே சொந்த விஷயத்தில் சிக்கனமாயிருக்க வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையை ஒவ்வொருவனும் கடைப்பிடித்தால் எவ்வளவோ புண்யத்துக்குப் புண்யம், நிம்மதிக்கு நிம்மதி, எத்தனையோ தீனர்களும் க்ஷேமமடைவார்கள்.

சிக்கனமாயிருந்தாலொழிய, இப்போது இருக்கிற போக போக்ய இழுப்பில், எவனுக்குமே மிச்சம் பிடிக்க முடியாது. அதனால் சிக்கன வாழ்க்கை நடத்தினால்தான் 'தனக்கு மிஞ்சி' தர்மம் பண்ண முடியும். அதாவது எத்தனை சிக்கனமாயிருக்க முடியுமோ அப்படியிருந்து தனக்கு மிஞ்சும்படியாகப் பண்ணிக் கொண்டு தர்மம் பண்ணணும்.

கீதை முதல் ச்லோகத்தில் வருகிற தர்ம க்ஷேத்ரம் என்பது இந்தச் சரீரம்தான். ஒரு வயல் என்றால் அதில் விளைச்சல் பண்ணுவதற்கு பூஸாரம் வேண்டும்; அப்புறம் ஒவ்வொரு தானியத்துக்குரிய பருவகாலம் பார்க்க வேண்டும். க்ஷேத்ரம் என்றால் வயல். நம்முடைய சரீர வயலுக்கு எது பூஸாரம்? புத்தி பிரஸன்னமாயிருப்பது, இந்திரியங்கள் பழுதாகாமல் சுத்தமாயிருப்பது; விஷயங்களைக் கிரஹித்துக் கொள்ளும் ஞானேந்திரியங்கள், கார்யங்கள் பண்ணும் கர்மேந்திரியங்கள் இரண்டும் தீக்ஷண்யமாயிருப்பது – இதுதான் பூஸாரம். ஓடியாடவும், தளர்ச்சியில்லாமல் ஆலோசிக்கவும் சக்தி இருப்பதுதான் பருவ காலம். இதையெல்லாம் பொறுத்து இந்தச் சரீர வயலில் தர்மப் பயிரை வளர்த்து, தர்ம க்ஷேத்ரமாக்க வேண்டும். அந்தப் பயிரை வளரவொட்டாமல் ஹானி செய்கிற களைதான் தனக்காக அவசியத்துக்கு மீறிச் செலவழிப்பது. வயல் நிறையக் களை மண்டியிருப்பதைப் பார்த்து நன்றாக விளைந்திருப்பதாகச் சந்தோஷப்படுவது போலத்தான், தனக்காகச் செலவழித்து அதில் ஏற்படும் ஸௌகர்யங்களைப் பார்த்து ஸந்தோஷிப்பது! களை பிடுங்குவதில் எத்தனை கவனமாயிருக்கிறோமோ, அத்தனை கவனமாக அத்யாவச்யத்துக்கு மேலான செலவுகளைப் பிடுங்கிப் போட வேண்டும்!

Koviloor Digital Library

சிக்கனம் தன் சேமிப்புக்காக அல்ல, பரோபகாரத்துக்காகவே என்பது போலவே, கடன் வாங்காமலிருப்பதும் உன் நன்மையைக் கருதி மட்டுமில்லாமல் பரோபகார உத்தேசத்தின் மீதே இருக்க வேண்டும். கடன் பட்டுவிட்டால் அதை அடைப்பதற்கே பாடுபடுவது; ஒரு கடன் அடைந்த பிறகு ஏற்கெனவே கடன் வாங்கின பழக்கத்தில் மறுபடி மறுபடி கடனுக்குப் போவது என்றுதான் அனர்த்தமாகப் போய்க்கொண்டிருக்கும். இப்படித் தனக்கே இல்லாத நிலையை உண்டாக்கிக் கொண்டால் பிறருக்கு எப்படிச் செய்வது?

ஆசார்யாள் 'ப்ரச்னோத்தர ரத்ன மாலிகா' என்று கேள்வியும் பதிலுமாக ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதிலே ஒரு கேள்வி, 'உலகத்தில் தீட்டாக ஆவது எது?' என்பது.

கிமிஹ ஆசௌசம் பவேத்?

சுசி என்றால் சுத்தம். அசுசி (என்றால்) அசுத்தம். அசுசியுள்ளது ஆசௌசம். தேவ கார்யங்களுக்கு உதவாதபடி ஆக்குகிற சாவுத் தீட்டு, பிரஸவத் தீட்டு முதலானவற்றையே சாஸ்திரங்களில் ஆசௌசம் என்று சொல்லியிருக்கிறது. இங்கே, சிஷ்யன் 'ஆசௌசம் எது?' என்று கேட்பதாகவும், அதற்குக் குரு பதில் சொல்வதாகவும் ஆசார்யாள் சொல்லுகிறார். அந்தப் பதில் என்ன?

ருணம் ந்ருணாம்

'ந்ருணாம்' என்றால் 'மனுஷ்யனுக்கு', 'மனுஷ்யனாகப் பிறந்த எல்லாருக்கும்' என்று அர்த்தம். 'ருணம்' என்றால் 'கடன்' மனுஷ்ய ஜன்மா எடுத்தவனுக்குப் பெரிய தீட்டு 'கடன் படுவதுதான்' என்று ஆசார்யாள் சொல்கிறார். ஏன் அப்படிச் சொன்னார்?

தீட்டு வந்தால் என்ன பண்ணுகிறோம்? இந்தக் காலத்தில் ஒன்றும் பண்ணுவதில்லை. 'தீட்டாவது, துடக்காவது? எல்லாம் ஸூப்பர்ஸ்டிஷன்' என்று ஆலய ஸன்னிதானம் உள்பட எல்லா இடத்திலும் ஆசௌசங்களைக் கலந்து கொண்டிருக்கிறோம். பலனாகத்தான் துர்பிக்ஷம், நூதன நூதன வியாதிகள், மஹா க்ஷேத்ரங்களிலேயே விபத்துகள் என்று ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் ஐம்பது வருஷத்துக்கு முன்வரை இருந்த

Koviloor Digital Library

நடைமுறையை வைத்தே, ஆசார்யாள் எழுதினதற்கு அர்த்தம் சொல்கிறேன். இரண்டாயிரம் வருஷம் முந்தி அவர் இருந்த போதும், அவருக்கும் எத்தனையோ ஆயிரம் வருஷம் முந்தியும் இதே ஆசார–ஆசௌசங்கள்தானே அனுஷ்டானத்திலிருந்திருக்கின்றன? ஒருத்தனுக்குத் தீட்டு ஸம்பவித்து விட்டால் அந்த நாளில் என்ன பண்ணுவார்கள்? மற்றவர்கள் அவன் கிட்டேயே வர மாட்டார்கள். மேலே பட்டு விடப்போகிறான் என்று தள்ளித் தள்ளியே போவார்கள். கடனாளியாக இருக்கிறவனைக் கண்டும் பயந்து, 'எங்கே நம்மைக் கேட்டுவிடுவானோ?' என்று மற்றவர்கள் ஒதுங்கித்தானே ஓடுகிறார்கள்! இவனும் கடன் கொடுத்தவன் எங்கே எதிர்ப்பட்டுவிடுவானோ என்று பயந்து கொண்டு ஜன ஸமூஹத்தின் கண்ணில் படாமல் ஒளிந்து கொண்டுதான் போவான். தலையில் துணியைப் போட்டுக் கொண்டு போவது என்பார்கள், அடையாளம் தெரியாமலிருப்பதற்கு! தன்னைத் தானே இப்படி பெரிய ஆசௌசம் ஏற்பட்டுவிட்டது போல அவன் ஸமூஹப் பிரஷ்டம் செய்து கொண்டு விடுகிறான்.

ஒருத்தன் கடன் பழக்கம் ஏற்படுத்திக் கொள்வதால் அத்தனை பேருக்கும் கஷ்டம். 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான்' என்று கம்பரே சொன்னபடி, கடன் வாங்கிவிட்டவன் கொடுத்தவனை நினைத்து எப்போதும் பயந்துகொண்டு கஷ்டப்படுகிறான்; தப்பித்துக் கொள்வதற்காகப் பொய் சொல்கிறான்; மிஞ்சினால் கடனை அடைப்பதற்காகத் திருடவும் துணிகிறான். கடன் பட்டாரைப் போல, அல்லது அதைவிடவும் 'கடன் கொடுத்தார் நெஞ்சம்' கலங்கிக் கொண்டுதான் இருக்கும். பணத்தை அழுதவன் இவன்தானே? அது திரும்பி வருமா, வராதா என்று எப்போது பார்த்தாலும் கவலைப் பட்டுக் கொண்டிருப்பான். கடன் கொடுத்தவனான இவனுக்கு எத்தனை எரிச்சலும் மனக்கொதிப்பும் உண்டாகியிருக்கிறது என்பது 'கடன்காரன், கடன்காரி' என்று வசவு ஏற்பட்டிருப்பதிலிருந்தே தெரிகிறது!

கடன்காரன் என்றால் கடன் கொடுத்தவன், வாங்கினவன் என்று இரண்டு தினுஸாகவும் அர்த்தம் பண்ணிக் கொள்ள இடமிருக்கிறது! வளர்ந்த குழந்தைகள் செத்துப்போனால், 'கடன்காரன் (கடன்காரி) போயிட்டானே (போயிட்டாளே)'

Koviloor Digital Library

என்று தாயாக இருக்கப்பட்டவள் மனஸ் நொந்து பிரலாபிப்ப துண்டு. இங்கே கடன்காரன் என்றால் பூர்வ ஜன்மத்தில் நமக்குப் பணமாகவோ, உழைப்பாகவோ கொடுத்தவன் என்று அர்த்தம். அப்படிக் கொடுத்ததை, கடனைத் திருப்பி வாங்கிக் கொள்கிற மாதிரி வாங்கிக் கொள்ளவே இப்போது பிள்ளை யாகப் பிறக்கிறான். பெற்றவர்களுக்குச் செலவு, தேஹ சிரமம் எல்லாம் வைக்கிறான். இவற்றில் தான் முன் ஜன்மாவில் கொடுத்த அளவுக்குத் திரும்ப அவர்களிடம் வாங்கிக் கொண்ட வுடன் கடன் தீர்ந்தாயிற்று என்று கண்ணை மூடிக்கொண்டு போய்விடுகிறான்.

'ஜன்மாந்தரக் கடன்காரன்' என்று சொல்கிறபோதும் பூர்வ ஜன்மத்தில் நாம் ஒருத்தனால் பெற்றதைத் திரும்ப நம்மிட மிருந்து வாங்கிக் கொள்ள அவன் வந்திருக்கிறான் என்றே அர்த்தம்.

ஒருத்தன் கடன் படுவதனால், கடன் படுகிறவன் மட்டுமில் லாமல் கடன் தருகிறவனும் கஷ்டத்துக்கு ஆளாகிறான் என்று சொல்ல வந்தேன். இப்போது நவீன 'ஐடியாலஜி' போய்க் கொண்டிருக்கிற போக்கில் கடன் கொடுத்தவர்தான் அதிகக் கஷ்டத்துக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. ஸர்க்காரே கடன் வாங்கிப் பெரிய பெரிய திட்டம் போடுவதாக இருப்பதால் போலிருக்கிறது, கடன் பட்டவர்களுக்குத்தான் இப்போது ஸர்க்காரில் எல்லா சலுகையும்! வெளி தேசங்களில் உள்ள லக்ஷுரிகள்தான் இப்போது நம் ஸர்க்காருக்கு 'டார்கெட்' (குறிக்கோள்)! வாஸ்தவத்தில் தேசத்தில் திருப்தியும் ஆத்யாத் மிகமான அபிவிருத்தியும் ஏற்பட வேண்டுமானால், ஜனங் களுக்கு இடையில் பொறாமையும் போட்டிகளும் போக வேண்டுமானால், 'வாழ்க்கைத்தரம்' என்று சொல்வதைக் குறைப்பதற்குத்தான் திட்டம் போட வேண்டும். ஆனால் வாழ்க்கைத் தரத்தை மேல்நாடுகளின் தரத்துக்கு உயர்த்தியே தீர வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு வேண்டாத வஸ்துக்களை அத்யாவசியத் தேவையாக ஆக்குவதற்கே ஸர்க்கார் திட்டம், திட்டம் என்று ஓயாமல் போட்டுக் கொண் டிருக்கிறது: இதற்காக, இந்தத் தேசத்திலுள்ள எல்லா ஜனங் களின் கடனையும் சேர்த்து வைத்து ஸர்க்காரே ஒன்றுக்கப்புறம் எத்தனையோ ஸைஃபர்கள் போடுகிற தொகை லோகம் பூரா

Koviloor Digital Library

வும் கடன் பட்டிருக்கிறது. வேண்டாத வஸ்துக்களில் ஜனங்களுக்கு அபிருசியை உண்டாக்கி விட்டு, அவர்களையும் சம்பள உயர்வுக்காக எப்போது பார்த்தாலும் சண்டை, ஸ்டிரைக் என்று இறங்குவதற்குத் தூண்டிக் கொண்டிருக்கிறது. 'திட்டம்' என்ற பெயரில் திட்டமில்லாமல் செய்கிற காரியத்தால் ஏற்பட்டிருக்கிற inflation (பணவீக்கத்தி)-ல் என்ன வந்தாலும் போத மாட்டேனென்கிறது. ஜனங்கள் கடனாளியாக வேண்டியிருக்கிறது. இதற்கு ஸர்க்காரே 'இன்ஸென்டிவ்' (ஊக்குதல்) தருவதாக இருக்கிறது! ஜனங்களைக் கடன் வாங்குவதற்கு நன்றாகப் பழக்கி வைக்கிற ரீதியில் கிராமத்துக்குக் கிராமம் பாங்குகள் திறந்து, அனேக ஜனங்களுக்கு 'லோன்' (கடன்) கொடுக்கிறது. இதனாலே எத்தனையோ, பொய், மோசடி, கரப்ஷன், பாங்கு சொல்கிற இனத்துக்காகக் கடன் வாங்குவதாகச் சொல்லிக் கொண்டு அதை வேறு காரியங்களுக்குப் பிரயோஜனப்படுத்துவது; அதற்காக inspection staff-க்கு 'அழுவது', முதலில் பலபேர் மனுப்போடும் போட்டியில் 'லோன்' வாங்குவதற்கே அதிகாரிகளுக்கு 'நைவேத்யம் பண்ணுவது' என்றெல்லாம் ரொம்பக் குழறுபடியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அப்புறம் கடனைத் திருப்பி வசூலிப்பதும் கஷ்டமாகிறது. கட்டாயப்படுத்தி வாங்கினால் 'வோட்' போய்விடப்போகிறதே என்ற பயத்தில் 'லோனை' write off பண்ணிவிடுகிறார்கள். சொந்தப் பணமா என்ன, ஜனங்கள் (வரி முதலானவைகளாகக்) கொடுத்ததுதானே என்பதால் ஸுலபமாகக் கடனை வஜா செய்துவிட்டு நல்ல பெயரும், வோட்டும் ஸம்பாதிக்கப் பார்க்கிறார்கள். அதோடு போகவில்லை. சொந்தப் பணத்தைக் கடனாகக் கொடுத்தவன் அல்லது குத்தகைப் பணம் பெற வேண்டியவன் முதலியவர்களெல்லாருங்கூடத் தங்கள் பணத்தை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும் என்பதாக அவர்களை வயிறெரிய வைத்து, 'மொரடோரியம்' என்று 'ஆர்டினன்ஸ்' போட்டு விடுகிறார்கள்.

ஏழைகளுக்கு வாஸ்தவமாக நன்மை பண்ணுவதை யாரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் பொதுவாக அடக்கப் பண்பும் எளிமையும் உள்ள நம் ஏழை ஜனங்களை வீண் டாம்பீகத்திலும், பலவிதமான பொய் பித்தலாட்டங்களிலும் தூண்டி விட்டு, 'பட்ட கடனைத் தீர்க்கத்தான் வேண்டும் என்ற பெரிய

Koviloor Digital Library

தர்மத்துக்கு விரோதமாக நாம் போனாலும் ஸர்க்கார் நமக்குத் தான் ஆதரவாக இருக்கும்' என்று துணிச்சல் கொள்ள வைப்பது நன்மை இல்லவே இல்லை; தீமைதான். 'வோட்டுப் பெட்டி பலம் நமக்குத் தானிருக்கிறது' என்று அவர்களை எண்ண வைத்து, அதற்காகத் தர்ம பலத்தையும் தெய்வ பலத்தையும் அவர்கள் இழக்கும்படிச் செய்வது அவர்களுக்குச் செய்கிற தீமைதான்.

கடன் கொடுத்தவன் எப்படியெல்லாம் கடின சித்தனாகிக் கொடுமை பண்ணுகிறான் என்பதும் எனக்குத் தெரியாமல் இல்லை. அநியாய வட்டி வாங்குவது, எத்தனை திருப்பினாலும் அசலில் கழித்துக் கொள்ளாமல் வட்டியிலேயே கழித்துக் கொள்வது என்று அவர்களும் அனேக அக்கிரமங்கள் பண்ணத்தான் பண்ணுகிறார்கள்.

கடன் வாங்குவது என்ற தப்பை ஒருவன் பண்ணுவதால் தான் இப்படி இன்னொருத்தன் (கடன் கொடுப்பவன்) பாவம் செய்பவனாக ஆகிறான். கடைசியில் சர்க்கார் அவனுக்கு நாமம் போடுகிறபோது அவனும் கஷ்டப்படுகிறான்!

ஆதலால், அடிமுதலில் எவனானாலும் கடன் என்றே போகாமல் தன் வருவாயில்தான் காலம் தள்ளுவது என்று ஆக்கிக்கொள்ள வேண்டும்!

கடன் கஸ்தியால்தான் அனேகர் திருடர்களாவது; போலி ஸன்னியாஸிகளாகி ஊரை ஏமாற்றுவது; மானஸ்தர்களில் பலர் குடும்பத்தோடு பிராணஹானி பண்ணிக் கொள்வதாகவும் அவ்வப்போது பேப்பரில் பார்க்கும்போது மனஸ் வேதனைப் படுகிறது.

முன்னேயே சொன்ன மாதிரிக் கடன் கொடுத்தவன் கடன் பட்டவன் என்ற இரண்டு பேர் மட்டுமில்லாமல் ஊரார் எல்லாருமே ஒருவன் கடனாளி என்றால் 'அவன் எங்கே நம்மை உபத்ரவம் பண்ண வருவானோ?' என்று ஓடும்படி யிருக்கிறது.

கடன் பழக்கத்தினால் இப்படி லோகம் முழுக்கச் சிரமங்கள் ஏற்படுவதால்தான், இந்த லோகத்திலேயே அதுதான் பெரிய

Koviloor Digital Library
நீட்டு என்று ஆசார்யாள் தீர்ப்புப் பண்ணி விட்டார்.

பரோபகாரம் என்பதைச் சொல்லும்போது, உபகாரம் பண்ணா விட்டாலும் பர அபகாரம் எப்படியெப்படி பண்ணாமலிருக்க வேண்டும் என்றும் சொல்ல வேண்டுமல்லவா? Ten Commandments (கிறிஸ்துவர்களின் பத்துக் கட்டளைகள்) கூட எல்லாமே negative-ஆகத்தானே (இன்னின்னவற்றைச் செய்ய வேண்டும் என்பதற்குப் பதில் கூடாது என்பதாகத்தானே) இருக்கின்றன!

வைதிகமான ஸாமான்ய தர்மங்களிலுள்ள அஸ்தேயம் (திருடாமை), யோக சாஸ்திரத்திலுள்ள அபிரிக்ரஹம் (பொருள் சேர்த்துக் கொள்ளாமை) என்பதாக 'நெகடிவ்' ஆக உள்ள இரண்டுமே பரோபகாரத்துக்கு அங்கம்தான். இந்த இரண்டையும் பின்பற்றினால் கருமித்தனம், ஊதாரித்தனம், கடன் வாங்குவது எல்லாமே போய்விடும்!

இப்போது நான் விசித்திரமாக ஒன்று சொல்லப் போகிறேன். பரோபகாரம் பண்ண வேண்டுமென்பதே நமக்கு உண்டான ஒரு 'கடன்'தான்! பிதிர்கடன் என்கிறோம். சாஸ்திரத்திலேயே 'ருண த்ரயம், என்று மூன்று கடன்களைச் சொல்லியிருக்கிறது. பிராமண ஜன்மா எடுத்தவன் ரிஷிகளிடமும், தேவர்களிடமும், பித்ருக்களிடமும் கடன்பட்டிருக்கிறானென்றும் வேதாத்யயனத்தால் ரிஷிக்கடன் தீர்கிறதென்றும், யக்ஞம் செய்வதால் தேவர் கடன் தீர்கிறதென்றும், புத்ர ஸந்ததி உண்டு பண்ணுவதால் பிதிர் கடன் தீர்கிறதென்றும் சொல்லியிருக்கிறது. வேத சாஸ்திரங்களிலேயே சொன்ன பஞ்ச மஹா யக்ஞங்களில் இந்த மூன்று பேருக்கும் செய்ய வேண்டிய யக்ஞங்களோடு 'ந்ருயஜ்ஞம்' என்பதாக மற்ற மனிதர்களுக்குப் பண்ண வேண்டியதும், 'பூத யஜ்ஞம்' என்பதாக எல்லா உயிரினங்களுக்குமே பண்ணவேண்டியதும் விதிக்கப்பட்டிருக்கிறது. அதனால், மனுஷ்யர்கள்,மிருகங்கள்,பக்ஷிகள் எல்லாவற்றுக்கும் நாம் ஆற்ற வேண்டிய உபகாரத்தையும் 'கடன்' என்றே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நாமாக ஒருத்தனுக்குத் தானம் பண்ணாமல் இருக்கலாம். எவனோ கடன் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று சொல்லலாம். 'கொடுத்தா வைத்திருக்கிறீர்? என் பணம்,

Koviloor Digital Library

கொடுப்பதும் கொடுக்காததும் என் இஷ்டம்' என்று சொல்ல லாம். ஆனால் நாம் கடன் பட்டிருக்கும்போது கடன் கொடுத்த வன் திருப்பிக் கேட்டால் இப்படிச் சொல்ல முடியுமா? முடிகிறதோ இல்லையோ எப்பாடு பட்டாவது அவனுக்குக் கொடுத்துத் தீர்க்கத்தானே வேண்டும்? இப்படித்தான் நாம் கடன் பட்டிருப்பவர்களுக்காக வேதம் பஞ்ச மஹா யஜ்ஞங் களை விதித்திருக்கிறது. கடன் என்றால் திருப்பித்தானே ஆக வேண்டும்? ஆகவே, இதைச் செய்ய மாட்டேன் என்று சொல்ல நமக்கு 'ரைட்'டே கிடையாது. நம் போன்ற மனுஷ்யர்களுக் கும், பசு பக்ஷிகளுக்கும் உபகாரம் என்ற ரூபத்தில் யஜ்ஞம் செய்து அவற்றைத் திருப்திப்படுத்த வேண்டியது நம் கடமை. 'கடன்' என்பதிலிருந்தே கடமை என்பது வந்திருக்கிறது. ஈச்வரன் இந்தப் பிரபஞ்சத்திலே ஒரு ஜீவனைப் பிறப்பித்து, அந்தப் பிரபஞ்சத்தால் அவன் பலவிதமான ஸௌக்கியங்களை அடைய வேண்டுமென்று வைத்திருக்கிறபோதே அதைச் சேர்ந்த எல்லா வகை ஜீவ இனங்களுக்கும் – பூச்சிப் பொட்டி லிருந்து ஆரம்பித்து, தேவ ரிஷிகள் வரைக்கும் – தன்னாலான தொண்டை அவன் செய்ய வேண்டும் என்று வேதத்தின் மூலம் ஆர்டர் போட்டிருக்கிறான். ஆதலால் இதைக் கடனாக, கடமை யாகச் செய்தேயாக வேண்டும். 'கடனே' என்று செய்யாமல் அன்பைக் கலந்து, உபகாரத்துக்குப் பாத்திரமாகிற எல்லாரை யும் அந்த ஈச்வர ஸ்வரூபமாகவே பாவித்து அடக்கத்தோடு பணி செய்ய வேண்டும்.

இந்த உணர்ச்சி வந்து விட்டால் – பரோபகாரம் என்பது ஈச்வரனின் கட்டளையான கடன் என்று புரிந்து கொண்டு விட்டால் – நாம் எத்தனை கஷ்ட தசையிலிருந்தாலும் பரோபகாரத்தை விட்டுவிடாமல் செய்வோம். 'தனக்கு மிஞ்சி தர்மம் என்றுதானே சொல்லியிருக்கு? நீயே சிரம தசையிலிருக் கிறபோது மற்றவர்களுக்காக வேறு ஏன் சிரமப்படுகிறாய்?' என்று கேட்கத்தான் கேட்பார்கள். அப்போது, நான் சிரம தசையில் இருக்கிறேன் என்றால் பூர்வ ஜன்மாவில் ஈச்வராக் ஞைகளை ஸரியாகப் பண்ணாததற்கு இது தண்டனை என்றே அர்த்தம். போன ஜன்மத்தில் நான் பிறத்தியாருக்கு எந்த உபகாரமும், தொண்டும் பண்ணாததால் இப்போது கஷ்டப் படுகிறேன். அதனாலேயே இப்போதுதான் நிச்சயமாக நான் பரோபகாரம் செய்தாக வேண்டும். தனக்கு மிஞ்சி – போன

Koviloor Digital Library

ஜன்மாவின் (கர்ம) பாக்கியாக, அப்போதைய உடம்பு போன பிறகும் மிஞ்சி – இப்போது வந்து சேர்ந்திருக்கும் இந்தக் கஷ்டம்தான், 'தனக்கு மிஞ்சி'. இது தீருவதற்காகவே தர்மம் செய்தாக வேண்டும். அதுதான் 'தனக்கு மிஞ்சி தர்மம்'. நீர் அதற்கு வேறேதோ தப்பர்த்தம் பண்ணிக் கொண்டிருக்கிறீர். இப்போது நான் தன்னையும் மிஞ்சி – அதாவது என் சொந்தக் கஷ்டத்தையும் மிஞ்சி – தர்மம் பண்ணினால்தான் வருங்காலத்திலாவது நன்றாயிருப்பேன்' என்று பதில் சொல்ல வேண்டும்.

எத்தனையோ கஷ்டத்திலும் இளையான்குடி மாற நாயனாரைப் போலப் பரோபகாரம் பண்ணினவர்களின் ஞாபகம் நமக்குப் போகக்கூடாது.

தான் எத்தனை கஷ்டப்பட்டாலும், அதைப் பொருட் படுத்தாமல் அதற்கு மேம்பட்டு வெளியிலே வருவதுதான் தனக்கு மிஞ்சுவது. இப்படி வந்து லோகத்துக்கு உபகரிப்பது தான் ''தனக்கு மிஞ்சி தர்மம்'' என்று வைத்துக் கொள்ள வேண்டும்.

இது ரொம்ப ஹை லெவலில் (உயர் மட்டத்தில்) லோயர் லெவலில் (அதற்கு கீழ்ப்பட்ட நிலையில்) பிறருக்கு திரவிய ஸஹாயம் செய்வதற்காகவே தான் மிச்சம் பிடிக்கும் விதத்தில் வரவுக்குள் செலவை அடக்கி, கடன் கஸ்தி இல்லாமல் சிக்கன மாக வாழவேண்டும்.

சேமிப்புக்கு வழி: சோற்றுச் செலவைவிட ஜாஸ்தியாகும் காபியை நிறுத்துவது; பட்டுத் துணி வேண்டாம் என்று விடுவது; ஸ்வயம்பாக நியமத்தால் (தன் சாப்பாட்டைத் தன் கையாலேயே சமைத்துச் சாப்பிடுவது என்ற நெறியால்) ஹோட்டல் செலவை அடியோடு குறைப்பது; ஸினிமாவுக்குப் போவதை நிறுத்துவது என்ற இந்த நாலை மட்டும் செய்து விட்டால் போதும். எவனும் கடன் கஸ்திப் படாமலிருப்ப

Koviloor Digital Library

தோடு, பிறத்தியாருக்கும் திரவிய ரூபத்தில் ஏதோ கொஞ்சமாவது உபகரிக்க முடியும். இதெல்லாம் ஒரு குடும்பத்தில் தினப்படி ஸமாசாரங்கள். இவற்றோடு ஸமூஹ ப்ரச்னையாகி விட்ட வரதக்ஷிணையையும், ஆடம்பரக் கல்யாணத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். வரதக்ஷிணை இல்லை, கல்யாணத்துக்காக ஆயிரம் பதினாயிரம் என்று செலவழிப்பதில்லை என்றால் எந்தக் குடும்பத்திலும் பணமுடை, கடன் உபத்ரவம் ஏற்படவே ஏற்படாது. பொதுப் பணிகளுக்கு உதவ ஸம்ருத்தியாகக் கிடைக்கும்.

எது இன்றியமையாதது, எதெது இல்லாவிட்டாலும் வாழ்க்கை நடத்த முடியும்; எதெது இல்லாமலும் நம் அப்பன் பாட்டனெல்லாரும் ஸந்தோஷமாகவே வாழ்ந்தார்கள் என்று ஆலோசித்துப் பார்த்துத் தேவைகளைக் குறைத்துக் கொண்டு வாழ வேண்டும். முதலில் சிரமமாக இருக்கும். சபலங்கள் இழுத்துக் கொண்டுதான் இருக்கும். இருந்தாலும் தாயான அம்பாளை வேண்டிக் கொண்டு, அனுக்ரஹ பலத்தில் தேறித் தெளிந்து ஜயிக்க வேண்டும். அப்புறம் தெரியும் – அந்த எளிய வாழ்க்கையில்தான் எத்தனை நிம்மதி இருக்கிறதென்று! போக்ய வஸ்துக்களைத் தேவை தேவை என்று சேர்த்துக் கொண்டே போனால் அப்புறம் வீடு பெரிசாகப் பார்க்க வேண்டியிருக்கிறது; அதனால் வாடகைச் செலவு ஏறுகிறது. இப்படி ஒன்றிலிருந்து ஒன்றாக நமக்கே வருமானம் போதாமல் ஆக்கிக் கொண்டால் பரோபகாரம் பண்ணி நம் கர்மாவைக் கழுவிக் கொள்வதெப்படி? அனாவசியங்களை எல்லாம் கழித்துக் கட்டிவிட்டால் நமக்கும் நிம்மதியாக, பிறருக்கும் உதவியாக ஜன்மாவை உயர்த்திக் கொள்ளலாம்.

அம்பாள் தாயாக, அந்த ஒரே தாயாருக்கு நாம் அத்தனை பேரும் குழந்தைகளாக, ஒரு குடும்பத்தில் பத்துக் குழந்தைகள் இருந்தால் அவை ஒட்டிக் கொண்டு இருக்கிறாற்போல், ஒருத்தருக்கொருத்தர் உபகாரம் பண்ணிக் கொண்டு வாழலாம். இந்த உபகாரம்தான் என்று generalise பண்ண வேண்டியதில்லை; அவாவாள் ஸ்திதியில் எது ஸாத்யமோ அந்த உபகாரத்தைச் செய்து கொண்டு ஆனந்தமாக வாழலாம்.

Koviloor Digital Library

ஆசாரம்: வஜ்ரம் பாய்ந்த விருக்ஷம்

பூர்விகர்கள் ஒழுகிய வழியில் போவதற்கே 'ஆசாரம்' என்று பெயர். ஆசார – வ்யவஹாரங்கள் என்றும் சொல்வதுண்டு. வ்யவஹாரம் என்பது நிகழ்கால நடப்பாக மட்டும் இருப்பது. ஆசாரம் என்பது பூர்வத்தில் நெடுங்காலமாக நம் முன்னோர்கள் தங்கள் நன்னடத்தைக்கு ஆதாரமாக என்ன செய்தார்களோ அது. அதற்கு நீண்ட காலம் நிலைத்து நின்றதால், நெடுங்கால மரத்தில் உண்டாகிற வஜ்ரம் போன்ற உறுதி உண்டு. அந்த உறுதியான அஸ்திவாரத்தின்மேல் நாமும் நம் வாழ்முறையை எழுப்பிக் கொண்டால்தான் நமது வாழ்க்கை ஸ்திரமாக இருக்கும்.

நம் பூர்விகர்கள் எப்படிப்பட்ட நெறிகளைக் ஸ்கக் கொண்டிருந்தார்களென்றால், நம் சாஸ்திரங்களிலும் ஸம்பிரதாயங்களிலும் என்னென்ன உண்டோ அவற்றைத்தான். அவற்றை அவர்கள் அனுஷ்டித்த சிறப்பினால்தான் நம் தேசமே தொன்று தொட்டு பாரமார்த்திகத்திலும், ஞானத்திலும், பக்தியிலும், அது மட்டுமின்றி எல்லாக் கலைகளிலும்கூட லோகத்திலேயே முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. இன்றைக்கு நாம் இவ்வளவு சீரழிந்துவிட்ட பிறகும்கூட நாம்தான் ஆத்யாத்மிகத்தில் தங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று மற்ற தேசத்தவர்கள், மற்ற மதஸ்தர்கள் இங்கே உள்ள ஆசிரமங்களுக்குக் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அது பூர்வாசாரம் 'பெடல்' பண்ணிவிட்ட வேகத்தின் எஞ்சிய பலத்தால்தான்!

இந்த ஆசாரங்களில் பெரும்பாலானவற்றை விட்டுவிட வேண்டுமென்றுதான் ஸமீப காலமாக, ஓரிரு நூற்றாண்டாக, நம் நாட்டில் சீர்த்திருத்தக்காரர்கள் சொல்லி வருகிறார்கள். ஒவ்வொரு சீர்திருத்தக்காரரும் வரும்போது, நம்முடைய மதம்

Koviloor Digital Library

என்னும் வயலில் இதுதான் களை, இதை எடுத்து விட்டால் போதும், பயிர் நன்றாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இப்படி அவரவருக்குத் தோன்றுகிறபடி ஒவ்வொன்றாக எடுத்துப் போட்டுக் கொண்டேயிருந்தால் பயிர் என்றே ஒன்றும் மிஞ்சாது! ஆனதால் நம்மைவிட அறிவிலும், அருளிலும், அனுக்ரஹ சக்தியிலும் எவ்வளவோ மேல் நிலையிலுள்ள ரிஷிகள் தர்மசாஸ்திரங்களில் என்னென்ன சொல்லியிருக்கிறார் களோ அவற்றைப் பூர்ணமாக அனுஸரிப்பதற்குத்தான் நாம் பிரயத்தனப்பட வேண்டும். அதற்கான மன உறுதியைத் தரும் படிப் பகவானிடம் பிரார்த்திக்க வேண்டும்.

இன்னொன்று யோசித்துப் பார்க்க வேண்டும். இத்தனை சீர்திருத்தத் தலைவர்கள் வந்து இவ்வளவு சீர்திருத்த இயக்கங் களை ஆரம்பித்தும் இவற்றிலிருந்து நாம் மஹானாக ஞானியாக எத்தனை பேரைப் பெற முடிந்திருக்கிறது? யாரை வேண்டு மானாலும் ரிஷி, அவதாரம், messenger of God என்று சொல்லி விடலாம். ஆனால் வாஸ்தவத்தில் ஜனங்களின் தாபத்தைச் சமனம் செய்கிற அனுக்ரஹ சக்தி இவர்களுக்கு இருக்கிறதா என்பதே கேள்வி. ஸம்பிரதாயமாக வருகிற குரு உபதேசத்தால் இப்போதும் பலபேர் பெற்று வருகிற அனுக்ரஹமும் ஸ்வானு பூதியும் இந்த reform-காரர்களிடமிருந்து வருமா? நேற்றைக்கொன்று, இன்றைக்கொன்று என்று சொல்லிக் கொண்டிருக்கும் இவர்களுக்காக tradition என்ற வயிரம் பாய்ந்த ஸம்பிரதாய விருக்ஷத்தை வெட்டி விடுவதா? இப்படி நான் கேட்கவில்லை. பத்துப் பன்னிரண்டு வெள்ளைக்காரர்களே – அவர்கள் ஆத்ம ஸம்பந்தமாக நிறையப் படித்து ரொம்பவும் ஸாதனைகளும் செய்தவர்கள் – என்னிடம் வந்து இப்படி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். Tradition என்கிற சாஸ்திர மரபு, அதன்படியே சொந்த வாழ்க்கையை நடத்தின தால் பரிசுத்தி பெற்ற குருமார்கள், அப்படிப்பட்டவர்களின் அனுபவத்தில் ஊறிப் பக்குவமாகி வருகிற உபதேசம், தீக்ஷை முதலானவை, இவை சிஷ்யனுக்குள்ளேயும் போய் அவனைச் சுத்தி பண்ணுவது – என்றிப்படியில்லாமல் ஆத்மானுபவம் எப்படி வர முடியும்? எத்தனையோ மதங்கள், reform-கள் வந்துவிட்டாலும் பூர்வாசாரத்தில் ஊறிய ஆசார்யர்களைப் பின்பற்றா விட்டால் ஆத்மாபிவிருத்தி என்பது மிகவும்

Koviloor Digital Library

துர்பலமாகத்தானே இருக்கிறது?' என்று அவர்கள் கேட்டார்கள்.

அனுபவிகளுக்குள்ளேயே வித்யாஸம் உண்டுதான். அதனால்தான் அனேகமாகப் பெரிய மத ஸ்தாபகர்கள் எல்லாரும் அனுபவிகளாயிருந்தாலும் ஸமயாசாரங்கள் வித்யாஸப்படுகின்றன. ஆனாலும் எவனொருவன் எங்கே பிறந்திருந்தாலும் அந்த மதத்துக்கான ஆசாரங்களைப் பின்பற்றினால் அவனுடைய ஆத்மா கடைத்தேறிவிடும். ஆத்மா கடைத்தேறச் சீர்திருத்தக்காரர்களை நம்பிப் பிரயோஜனம் இல்லை. அனேகமாக இதற்கு reformer-கள் ஸமத்வம், அது, இது என்று சொல்லி இந்த லோக வாழ்க்கையில் எல்லோருக்கும் பெருமையான ஸ்தானம் வாங்கித் தருபவர்களாயிருக்கிறார்களே தவிர, ஆத்ம லோகத்தில் இவர்களால் ஒன்றும் பிரயோஜனமில்லை என்பதுதான் அந்த வெள்ளைக்காரர்கள் கட்சி.

எனக்கு எந்தக் கட்சியும் கிடையாது. ஒரு ஜட்ஜை எந்தக் கட்சி என்று கேட்டால் என்ன சொல்வது? 'லா'வை (சட்டப் புத்தகத்தை)ப் பார்த்து, சொந்த அபிப்ராயமில்லாமல், அதன் பிரகாரம் சொல்லத்தான் ஜட்ஜ் இருக்கிறார். 'எடர்னல் லா' (ஸநாதன தர்மம்) என்கிற சாஸ்திரங்களைப் பார்த்து அதில் இருப்பதைச் சொல்லவும், என்னால் முடிந்தமட்டும் அப்படிச் சொல்லியிருப்பதன் பிரகாரமே நடக்கப் பிரயத்னப்படவுந்தான் நான் இருக்கிறேன். அந்த சாஸ்திரங்களில் சொல்லியுள்ள ஆசாரங்களின்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று சொல்ல வேண்டியதுதான் ஆசார்யாளின் சின்னப் பிரதிநிதியாக இருக்கிற என் பொறுப்பு. நான் சொல்வது உங்களுக்கு ஏறுவதும் ஏறாததும் நானே அந்த சாஸ்திரப்படி எவ்வளவுக்குச் செய்கிறேனோ, செய்யவில்லையோ அதைப் பொறுத்துத்தான். எனக்கு அனுஷ்டான சக்தி இருந்தால்தான் என் சொல்லுக்கு அதன்படி சாஸ்திர ரீதியாக உங்களை நடக்கப் பண்ணுவிக்கிற சக்தி இருக்கும்.

வெவ்வேறு மதங்களுக்கிடையிலேதான் ஆசாரங்களில் வித்யாஸம் இருக்கிறதென்றில்லை. ஒரே மதத்திலேயேகூடப் பல கிளை ஸம்பிரதாயங்கள் உண்டாகி மாறுபட்ட ஆசாரங்

Koviloor Digital Library

கள் இருக்கின்றன. பௌத்தத்திலேயே ஹீனயானம், மஹாயானம், zen என்றெல்லாம் வெவ்வேறு ஆசாரங்கள் இருக்கின்றன. கிறிஸ்டியானிடியில் காதலிக், ப்ராடெஸ்டென்ட், க்ரீக் சர்ச் என்று இருக்கின்றன. இஸ்லாத்தில் ஸியா, ஸன்னி, அஹமதீயா என்று மூன்று பிரிவு உண்டு. ஹிந்து மதத்திலும் சைவம், வைஷ்ணவம், வைதிகம், தாந்த்ரிகம் என்றெல்லாம் பல இருக்கின்றன.

தேச வித்யாஸத்தாலும் ஆசார வித்யாஸம் ஏற்படுவதுண்டு. நம் தேசத்திலேயே வடக்கே குளிர்காலத்தில் ஜலமெல்லாம் ஐஸாகப் போகிற ஊர்கள் இருக்கின்றன. அதனால் அங்கே பண்டா சட்டை போட்டுக் கொண்டே பூஜை பண்ணுவான். அங்கங்கே கிடைக்கும் தான்யாதிகளைப் பொறுத்து நைவேத்யம், போஜன ஆசாரம் முதலியன கொஞ்சம் மாறும்.

இதெல்லாம் எப்படியானாலும் ஸரி, எந்த இடத்தில் எந்த மதத்தில், கிளை மதத்தில் ஒருவன் பிறந்திருந்தாலும் அந்த இடத்திலிருந்த அந்த மதத்து (கிளை மதத்து)ப் பூர்விகப் பெரியவர்கள் எப்படிப்பட்ட வாழ்முறையை, வாழ்க்கை நெறியை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்களோ, அதுவே தனக்கான ஆசாரம் எனக் கொண்டு பின்பற்ற வேண்டும். இப்படி அவனவனும் தன்னுடைய மூதாதைகள் போன வழியில்தான் போக வேண்டும்; இல்லாவிட்டால் அவன் பதிதனாகி விடுகிறான் என்று சொல்லியிருக்கிறது.

சிகாம் ஸூத்ரம் ச புண்ட்ரம் ச ஸமயாசாரமேவ ச I
பூர்வை – ராசரித: குர்யாத் அந்யதா பதிதோ பவேத் II

சிகாம் = சிகை எப்படியிருக்க வேண்டும்? துருக்கர்கள் மொட்டை அடித்துக் கொள்கிறார்கள். சீக்கியர்கள் முடி, தாடி வளர்க்கிறார்கள். கிறிஸ்தவர்கள் க்ராப் பண்ணிக் கொள்கிறார்கள். ஹிந்துக்கள் குடுமி வைத்துக்கொள்வது சாஸ்திரத்தில் மந்த்ர பூர்வமாகச் சொல்லியுள்ள ஒரு சடங்கு, இதிலும் பல வித்யாஸம், சோழியன், நம்பூதிரி, சிதம்பரம் தீக்ஷிதர்கள், மற்றவர்கள் ஆகியோருக்குள் குடுமியை முடிந்து கொள்வதில் வித்யாஸங்கள் இருக்கின்றன. சிலர் ஊர்த்வ சிகை என்பதாக

Koviloor Digital Library

உச்சியில் முடிந்து கொள்கிறார்கள். சிலர் பூர்வ சிகை என்று தலைக்கு முன்பக்கமாக முடிந்து கொள்கிறார்கள். 'இவற்றில் நீ பிறந்த மரபிலே எப்படி சிகை வைத்துக் கொண்டார்களோ அப்படியே நீயும் பண்ணு' என்று சாஸ்திரம் சொல்கிறது.

சிகைக்கு அப்புறம் 'ஸூத்ரம்' என்றது பூணூலை அல்ல. ஏனென்றால், பூணூல் விஷயத்தில் அத்தனை குலாசாரங்களுக்கும் ஒரே விதிதான். என்னென்ன அனுஷ்டானம் செய்ய வேண்டுமென்று விரிவாக codify செய்து ஆச்வலாயன ஸூத்ரம், ஆபஸ்தம்ப ஸூத்ரம், போதாயன ஸூத்ரம், என்றெல்லாம்தான் வெவ்வேறு பல சாஸ்திரங்கள் இருக்கின்றன. இவற்றில் நாம் பிறந்த குடும்பத்தாருக்கு எது ஸூத்ரமோ அதில் சொல்லியிருப்பவற்றையே எடுத்துக் கொள்ள வேண்டும்.

'புண்ட்ரம்' என்று சொன்னது நெற்றிக்கு இட்டுக் கொள்வதை. விபூதி, கோபி சந்தனம், நாமம், கரிப்பொட்டு, இவற்றிலும் வெவ்வேறு வகைகள் என்று இருப்பதில் குலாசாரப்படி இட்டுக்கொள்ள வேண்டும்.

'ஸமயாசாரம்' என்பது மதானுஷ்டானம். ஹிந்து மதத்துக்குள் உள்ள அனேக ஸம்பிரதாயங்களுக்குள் நீ பிறந்திருக்கிற குடும்பம் எதைச் சேர்ந்ததோ அதற்கான ஆசாரத்தையே பின்பற்று. இந்தத் தேசத்தில், இந்த ஊரில், இந்தக் குடும்பத்தில் நீ பிறந்திருக்கிறாயென்றால் இது தற்செயலாக (accidental ஆக) நேர்ந்ததில்லை; உன் பூர்வ கர்மாவைப் பார்த்து, அதை அனுபவிக்கும்போதே நீ தர்ம ரீதியாகப் போனால் எதனால் உனக்கு ஆத்மாபிவிருத்தி ஏற்பட முடியும் என்று திட்டம் பண்ணி ஈச்வரனேதான் உன்னை இந்தக் குடும்பத்தில் பிறக்க வைத்திருக்கிறார். அதனால் அதன் ஸமயாசாரத்தையே நீ அனுஷ்டி!

பூர்வை: ஆசரித குர்யாத் – என்றால்

'உன்னுடைய பூர்விகர்கள் எப்படிப் பண்ணினார்களோ, அப்படியே நீயும் பண்ணு' என்று அர்த்தம். அதாவது முன்னே சொன்ன சிகை, ஸூத்ரம், புண்ட்ரம், ஸமயாசாரம் எல்லாவற்

Koviloor Digital Library

றிலும் உன் மூதாதைகள் கடைப்பிடித்த ஆசாரங்களையே நீயும் கைக்கொள்ளு என்று அர்த்தம்.

அந்யதா பதிதோ பவேத்

இப்படிச் செய்யாமல், அதாவது தன் குலமுன்னோர் வழக்கைப் பின்பற்றாமல், வேறு மார்க்கத்தில் போனால் வேறுவித வாழ்க்கை முறைகளையும் வெளி அடையாளங் களையும் மேற்கொண்டால், அதாவது தன் மதத்திலிருந்தும் கிளை ஸம்பிரதாயத்திலிருந்தும் வேறொன்றுக்குப் போனால் அப்படிச் செய்கிறவன் பதிதன் ஆகிவிடுவான் என்று சொல்லியிருக்கிறது!

அடுத்த புத்தகத்தில்...

ஸமூக தனி வாழ்க்கை நெறிகள் என்கிற தலைப்பின்கீழ்க் கட்டுரைகள் தொடர்கின்றன.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library



காலடி: சங்கர பகவத்பாதாள் ஆலயமும் அவரது தாயார் சமாதியும்

Kovlloor Digital Library

அருள் உரை



விகடன்
வெளியீடு

Koviloor Digital Library



Koviloor Digital Library

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய ஸ்வாமிகளின்

அருள் உரை

46

விகடன்
வெளியீடு

Koviloor Digital Library

முதற்பதிப்பு: அக்டோபர், 1993

பின் அட்டை ஓவியம். சில்பி

விலை ரூ. 3

'தெய்வத்தின் குரல்' (வானதி பதிப்பகம்) மூன்றாம் பகுதியிலிருந்து தொகுக்கப் பட்டது.

ஆனந்த விகடன்,
757, அண்ணா சாலை,
சென்னை-600 002.

Koviloor Digital Library

ஸமூக, தனிவாழ்க்கை நெறிகள்

ஆசாரம்: வஜ்ரம் பாய்ந்த விருக்ஷம்

பதனம் என்றால் விழுவது. பதிதன் என்றால் 'விழுந்தவன்' என்று அர்த்தம். அதாவது ஸன்மார்க்கத்தில் நடந்து போகாமல், அதோகதியில் விழுந்து விட்டவன் என்று அர்த்தம். பாதிவ்ரத்யத்தில் (கற்பு நெறியில்) தப்பாகப் போனவர்களைப் பதிதை என்பார்கள். அதைத்தான் சறுக்கிக் கொண்டு விழுந்தவள் என்ற அர்த்தத்தில் 'சறுக்கி' 'சிறுக்கி' என்பது. 'வழுக்கி விழுந்தவர்கள்' என்று நவீன எழுத்தாளர்கள் சொல்கிறார்கள். இவள் புருஷனுக்கு த்ரோஹம் செய்கிற மாதிரி ஈச்வரனுக்கு, பரமபுருஷனுக்கு த்ரோஹம் செய்து கீழ்லோகத்துக்கும், இப்போதைவிட ரொம்ப ஹீன ஜன்மாவுக்கும் விழுந்து விட்டவன்தான் பதிதன் ஆகிவிடுகிறான். பூர்விகர்களின் ஆசாரப்படி செய்யாதவன் இப்படிப்பட்ட பதிதன் ஆகிவிடுகிறான். லௌகிகத்திலும் பல தினுஸில் கஷ்டப்பட்டுக் கொண்டு, ஆத்மாவையும் உசத்திக் கொள்ள முடியாத கஷ்ட ஜீவனமாகவே அவனுடைய வாழ்க்கை இருக்கும்.

பகவான் நம்மை ஏதோ ஓர் இடத்தில் ஒரு ஸமூஹ தர்மத்தில், குலாசாரத்தில் பிறப்பித்திருக்கிறான். என்ன அர்த்தம்? புருஷனை அனுசரித்துப் பத்தினி கடைத்தேற வேண்டுமென்பதுபோல், ஜீவன் இவ்வாறு தனக்குப் பிறப்பால் எந்த சாஸ்திரமும் ஸம்பிரதாயமும் ஏற்பட்டிருக்கிறதோ அதை அனுசரித்து ச்ரேயஸ் அடைய வேண்டுமென்றுதான் அர்த்தம். 'மாட்டேன்; இந்த ஆசாரப்படி செய்ய முடியாது' என்றால்

Koviloor Digital Library

அது பதியைத் திரஸ்காரம் பண்ணுவது போன்ற பெரிய தோஷந்தான். 'இந்த ஸமயாசாரத்தை விட்டு இன்னொன்றுக்குப் போவேன்; வேறே மதத்தில் சேருவேன்' என்றால் இன்னம் தப்பு. அது பதியை விட்டுவிட்டுப் பரபுருஷனிடம் போகிறது போல. அதனால்தான் 'பதிதோ பவேத்' என்றது.

இப்படி ஆகாமல் தப்புவதுதான் நமக்கு முக்கியம். சீர்திருத் தவாதி ஏதோ இந்த லோகத்துக்கு, இப்போது நடத்துகிற வாழ்க்கை உயர்வுக்கானவற்றை மட்டும் பார்த்து மதுரமாகச் சொல்கிறாரென்பதால் அதன்படிச் செய்து நரக விஷத்தில் போய் விழக் கூடாது. ஆசாரம் ஒருவனை விழாமல் காப்பது மட்டுமில்லை; அவனை இப்போதைய ஸ்திதியிலிருந்து இன்னமும் தூக்கிவிட்டு ஈச்வர ஸன்னிதானத்தில் கொண்டு நிறுத்திவிடும்.

தலைமுறை தலைமுறையாக வந்த அனுபவ weight ஆசாரத் துக்குத்தான் இருக்கிறது. Tradition (மரபு) என்று ஒன்றை மதித்து அதன்படிச் செய்கிறபோதுதான் நம் மனஸை, இந்திரி யங்களை, போக்குகளை, கார்யங்களை ஒரு நெறியில் சீராகக் கட்டுப்படுத்திக் கொண்டு வருகிற discipline-ம் ஏற்படுகிறது. இதுதான் மோக்ஷ த்வாரத்துக்கு முதல் வாசலான 'சித்த சுத்தி' என்பதைத் திறந்து விடுவது. நன்றாக ஸ்திரப்பட்டுவிட்ட established tradition-ஐ (நன்கு நிலைப்பட்ட மரபை) மதிக்காமல், அதை நம்பாமல், அதில் ஏன் அது இப்படி, இது இப்படி என்று கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால், கேள்வி கேட்டுக் கொண்டேயிருப்பதோடு முடிந்து போகிறதே தவிர, இப்போது இருக்கிற ஆசாரங்களை எடுத்து விட்டதற்குப் பதிலாக 'வெயிட்', உள்ள 'டிஸிப்ளின்' எதையும் நிலைநாட்ட முடியவில்லை. காந்தி மாதிரி தன்னளவில் சுத்தராக இருந்து கொண்டு, ஈச்வர பக்தியும் பண்ணிக் கொண்டு, பழைய இந்திய வழக்கப்படியே எளிய வாழ்க்கை, தேஹ உழைப்பு இவற்றை மேற்கொண்டு இருந்தவர்களே பழைய ஆசாரங் களில் சிலவற்றை எடுத்துவிட்டு, பழசில் மீதிச் சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும், புதிதாகத் தாங்களே பண்ணின சீர்திருத்தக் கோட்பாடுகளையும் கலந்து தங்கள் ஆச்ரமங்களில் ஏற்பாடு பண்ணி, கண்குத்திப் பாம்பாக நேராகத் தாங்களே

Koviloor Digital Library

நிர்வாஹத்தைக் கவனித்து வரும்போதுகூட, ஒழுங்குத் தப்பான கார்யங்கள் நடந்து அதற்காகத் தாங்களே பஹிரங்கக் கண்டனம் பண்ணிப் பட்டினி கிடக்கும்படியாக ஆகிறது.



சீர்திருத்தத்தால் கட்டுப்பாட்டுக் குலைவு

என்ன காரணமென்றால், established-ஆக (நன்கு நிலைப் பட்டதாக) உள்ள சாஸ்திர ஆசாரங்களில் கைவைத்துக் கொஞ்சமோ நஞ்சமோ மாற்றிச் 'சீர்திருத்தம்' பண்ணலாம் என்கிற எண்ணம் வந்தவுடனேயே, ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்ற அடக்க குணம் போக ஆரம்பித்து விடுகிறது. பழையதான ஓர் ஒழுங்கு முறையை, 'இது மனுஷ்ய ஸ்வதந் திரத்தை நெரிக்கிறது' என்று சொல்லி ஒரு சீர்திருத்தத் தலைவர் மாற்றியவுடனேயே, அவரைச் சேர்ந்தவர்களுக்கு அவரே போடுகிற புது ஒழுக்க நெறிகள் உள்பட எல்லாக் கட்டுப்பாட்டையும் உடைத்துவிட்டு மனம் போனபடி ஸ்வதந் திரமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. ஒரு தலைவர் 'பழைய ஆசாரக் கெடுபிடியிலிருந்து உங்களை விடுவிக்கிறேன்' என்று ஸ்வயமாசார்யராக, தாமே தம்மை ஒரு 'ஸேவியராக' (ரக்ஷகராக) ஆக்கிக்கொண்டு உதவ வருகிறார் என்றால், அவரைச் சேர்ந்தவர்கள் கொஞ்ச நாளிலேயே, 'நீங்கள் பழைய ஆசாரக் கெடுபிடிகளிலிருந்து எங்களுக்கு விடுதலை கொடுத்தீர்களானால், இப்போது நீங்கள் புதிதாகப் போடுகிற கெடுபிடிகளிலிருந்தும் நாங்களே விடுபடுகிறோம்' என்று வெளியே கிளம்பி விடுகிறார்கள்!

அதனால்தான் எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் ஜனங்களை அவிழ்த்து விட்டிருக்கிற சீர்திருத்த இயக்கங்களைச் சேர்ந்தவர் களைப் போலவே, கட்டுப்பாடுகளை வற்புறுத்தும் சீர்திருத்தத் தலைவரைப் பின்பற்றுகிறவர்களும் கொஞ்ச காலத்திலேயே அவரவர் இஷ்டப்படி செய்பவர்களாகிறார்கள். தேசபக்தி, நேர்மை, ஸ்வதேசியம், த்யாகம் முதலியவற்றை எத்தனையோ

Koviloor Digital Library

கட்டுப்பாட்டோடு காத்து வந்த ஸ்தாபனத்துக்காரர்கள் இப்போது எப்படியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம் அல்லவா?

இதனால்தான் பகவான் (கீதையில்) பூர்வாசாரத்தில் ஏதேனும் ஒன்றிரண்டு ஸரியில்லாமலிருந்தால்கூட அதில் கை வைத்து, அறியாமை நிலையிலே இருக்கிற பெரும்பாலான ஜனங்களுக்குப் புத்திக் கலக்கத்தை உண்டு பண்ணவே கூடாது என்று அடித்துச் சொல்லியிருக்கிறார். 'சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறபடிதான் ஸமூஹத் தலைவர்களாக இருக்கப்பட்ட அறிவாளிகள் எல்லாக் காரியமும் செய்ய வேண்டும். தங்களுக்கு அந்தக் கார்யங்கள் தேவையில்லை, அதற்குமேல் ஸ்திதிக்குப் போயாச்சு என்றால்கூட, இப்படித் தாங்கள் சாஸ்திரத்தை மீறிப் பண்ணினால் மற்றவர்களும் கட்டுப் பாட்டை இழந்து புத்தி மாறாட்டத்தில் குழறுபடியாகச் செய்ய ஆரம்பிப்பார்களே என்பதால், தாங்களும் வழிகாட்டி களாக சாஸ்திர கர்மாக்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும்' என்கிறார்.

ந புத்திபேதம் ஜனயேத் அஜ்ஞானாம் கர்மஸங்கிநாம் I
ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வான் யுக்தஸ் ஸமாசரன் II

'கீதை கீதை' என்று இப்போது எல்லோரும் சொன்னாலும் இது மாதிரியான ச்லோகங்களை முழுங்கி விடுகிறார்கள்! இப்படியேதான் இன்னோரிடத்திலும், 'எது செய்யலாம் எது செய்யக் கூடாது என்று வியவஸ்தை பண்ணுவதற்கு உனக்குச் சொந்தமாக அதிகாரம் கிடையாது. சாஸ்திரத்தைப் பார். அதுதான் 'அதாரிடி'. அதில் செய் என்று சொன்னதைச் செய்; செய்யாதே என்பதைச் செய்யாதே' என்று ஓர் அத்யாயத்தில் முடிந்த முடிவாகச் சொல்லியிருக்கிறார்.

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யாகார்ய வ்யவஸ்திதௌ I (16.24)

'ரிஃபார்ம்' செய்பவர்களுக்குக் கீதை வேண்டியிருக்கிறது. ஆனால் இம்மாதிரி விஷயங்களை அப்படியே மறைத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அல்லது இன்னம் ஒரு படி மேலே போய் இதெல்லாம் interpolation (இடைச் செருகல்) என்று சொல்லி விடுவார்கள்!

Koviloor Digital Library



சீர்திருத்தத் தலைவர்கள்

ரிஃபார்ம், ரிஃபார்ம் என்று சொல்வதெல்லாம் கடைசியில் அவரவரும் மனஸ் போனபடி, ஒரு டிஸிப்ளினும் இல்லாமல் இருக்கலாம் என்று அவிழ்த்து விடுவதில்தான் முடிந்திருக்கிறது. ரிஃபார்ம்களை ஆரம்பித்து வைத்திருக்கிற எல்லா லீடர்களை யும் ஒழுங்கு தப்பினவர்கள் என்று சொல்வதற்கில்லைதான். சாஸ்த்ர, ஸம்ப்ரதாய விதிகளாகிற ஒழுங்குகளில் பலதை இவர்களும் விட்டவர்கள்தான் என்பதால் இவர்களை ஸனாதன தர்ம பீடங்களான மட ஸ்தாபனங்களிலிருக்கிற நாங்கள் ஒப்புக்கொள்ளத்தான் இல்லை. என்றாலும், இவர்கள் Personal life-ல் (தனி வாழ்க்கையில்) ஸத்யம், நேர்மை, ஒழுக்கம், தியாகம், அன்பு போன்ற பலவற்றைக் கடைப்பிடித்த வர்கள் என்பதை ஆக்ஷேபிப்பதற்கில்லை. ஓரளவுக்குப் படிப்பு, விஷய ஞானம் எல்லாம் உள்ளவர்களாகவும், ஜனங்களை நல்லதில் கொண்டு போக வேண்டும் என்பதில் நிஜமான அக்கறை கொண்டவர்களாகவுமே இந்தச் சீர்திருத்தத் தலைவர் களில் பலர் இருந்திருக்கிறார்கள் என்றும் சொல்லலாம். ஆனாலும் இவர்கள் பண்ணுகிற பெரிய தப்பு என்னவென் றால் தங்கள் புத்திக்கு ஸரியாகத் தோன்றுவதுதான் ஸரி, பாக்கி எல்லாம் தப்பு என்று நினைப்பதுதான். தாங்கள் சுத்தர் கள்தான், விஷயம் தெரிந்தவர்கள்தான் என்றாலும் தர்ம சாஸ்திரங்களை வேத வழிப்பிரகாரம் பண்ணி வைத்த ரிஷிகளும், மனு முதலிய பெரியவர்களும் தங்களைவிடவும் எவ்வளவோ சுத்தர்கள், எவ்வளவோ விஷயம் தெரிந்தவர்கள் என்று உணர்கிற மரியாதை இவர்களுக்கு இல்லை. இன்னொன்று, 'அத்ருஷ்டபலன்' என்பதாகச் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறதை நம்பாமல் வெள்ளைக்காரர்கள் எண்ணப் போக்குப்படி இவர்களும் practical result என்று உடனுக்குடனே லோகத்தில் வெளிப்படையாகத் தெரியும் பலன்களை

Koviloor Digital Library

மட்டுமே கருதிக் கார்யம் செய்வதுதான். யதார்த்தத்துக்கு மேல், யதார்த்தத்துக்குப் பிடிபடாத தெய்வ சக்தி ஒன்று இருக்கிறது. அது அப்போதைக்கப்போது கண்ணுக்குத் தெரியும்படியாக மட்டும் ரிஸல்ட்டைக் காட்டி விடுவதில்லை. நம் கார்யங்கள், எண்ணங்கள் இவற்றின் பலன் உடனே இங்கேயே தெரியாமல், ஏதோ காலத்தில், ஏதோ ஜன்மாந்தரத்தில் ஏதோ லோகாந்தரத்தில்கூட விளையும்படியாகத்தான் விஸ்தாரமான அளவிலே லீலை பண்ணிக் கொண்டிருக்கிறது. இப்படி உடனுக்குடனே பலன் தெரியாமல் எப்போதோ விளைய இருப்பதைத்தான் 'அத்ருஷ்ட பலன்' என்பது. இதிலே இந்த ரிஃபார்மர்களுக்கு அனேகமாக நம்பிக்கையே கிடையாது. அவர்களுடைய படிப்பு, பார்வை எல்லாம் வெள்ளைக்காரர்களின் வழியிலேதான் இருக்கிறது. அதனால் தான், லோகத்தில் அனேக வித்யாஸங்கள் இருப்பதெல்லாம் ஜன்மாந்தரக் கர்மாப்படி அவரவரும் ஆத்மாபிவிருத்தி அடைவதற்காக ஏற்பட்டது என்பதை ஒப்புக்கொள்ளாமல், ஸமத்வம், அபேதவாதம் என்று எதையோ சொல்லிக் கொண்டு எல்லாவற்றையும் பலபட்டடையாகப் போட்டுக் குழப்ப வேண்டும் என்கிறார்கள். இப்படியே லோகாந்தரங்களிலும் அத்ருஷ்ட பலன் ஏற்படுவதைப் புரிந்து கொள்ளாததால் தேவதைகளுக்கான யக்ஞாதி கர்மாக்கள், பித்ருக்களுக்கான திவஸ தர்ப்பணாதிகள் ஆகியவற்றை வீண்கார்யம், 'ஸூபர்ஸ்டிஷன்' என்று கேலி செய்கிறார்கள். லோகாந்தர, ஜன்மாந்தரங்களில் பலனைத் தருபவனாக ஈச்வரனொருவன் இருக்கிறானென்பதை மறந்து, தாங்களே அதிகாரி, தாங்களே கர்த்தா என்று நினைத்துக் கொண்டு, இவர்கள் விரும்புகிற சீர்திருத்தம், முன்னேற்றம் எல்லாம் தங்கள் வாழ்நாளிலேயே நடந்து பார்த்தாக வேண்டும் – in my life time – என்கிறார்கள். இவர்களில் சிலர் கொஞ்சம்கூட அடக்கமில்லாமலிருக்கும் போது தம்ப-மான-மதான்விதா என்று (கீதையில்) சொல்லியிருப்பது போலத்[1] தாங்களே எதையும் ஸாதித்துவிட முடியும் என்று தற்பெருமையில் மதம் பிடித்து டம்பமாகத் திட்டங்களைப் போட்டு, 'லோகத்தையே மாற்றிவிடப் போகிறேனாக்கும்' என்று கிளம்புகிறார்கள். இவர்களைப்

---

1. 16.10

Koviloor Digital Library

படம் பிடித்துக் காட்டுவதுபோல பகவான் (கீதையில்),

இதமத்ய மயா லப்தம் இமம் ப்ராப்ஸ்யே மநோரதம் –

'இன்றைக்கு இதை ஸாதித்து விட்டேனாக்கும்! இன்னமும் பெரிசாக நாளைக்கு ஸாதிப்பேன்' என்று வெறும் லௌகிக மாகவே எதையெதையோ பண்ணிப் பூரித்துப் போகிறார்கள் என்கிறார்[2]. இப்படியெல்லாம் செய்கிறவர்களிடத்தில் சாஸ் திரப்படி சொல்லப்படும் சௌசம் (தூய்மை, மடி-விழுப்பு பார்ப்பது) இருக்காது, எந்த ஆசாரமுமே இருக்காது,

ந சௌசம் ந அபி ச (ஆ)சார

என்கிறார்[3].

உபநிஷத்திலும், 'ஸ்வயம் தீரா: பண்டிதம் மன்யமானா:' என்று 'நானே மஹா புத்திசாலி, மஹா பண்டிதன்' என்று பரலோக விஷயங்களைப் புரிந்து கொள்ளாமல் கிளம்புகிறவர் களையும், அவர்களை வழி காட்டியாகக் கொண்டு பின்னே போகிறவர்களையும் சொல்லி, இவர்கள் எல்லாரும் குருடர் களால் வழிகாட்டப்பட்ட குருடர்கள் மாதிரி சுற்றிச் சுற்றித் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறது[4].

---

2. 16.13
3. 16.7
4. கடோபநிஷத் 1.2.5; முண்டகோபநிஷத் 1.2.8.

Koviloor Digital Library

தலைவர்களும் பின்பற்றுகிறவர்களும்

ரிஃபார்ம் லீடர்களுக்கும் ஃபாலோயர்களுக்கும் (அவர்களைப் பின்பற்றுவோருக்கும்) இடையே ஒரு வித்யாஸம். இதைக் கொஞ்சம் பார்க்கலாம்.

இந்த நாளில் மதம் விதிக்கிற சீலங்கள் (religious virtues), மத ஸம்பந்தமில்லாத வெறும் (நன்னெறிப் பண்புகள்) ethical excellences என்று ஒரு விசித்ரமான ·பாகுபாடு பண்ணுவது வழக்கமாயிருக்கிறது. மத ஸம்பந்தம், அதாவது ஈச்வரப் பிரேரணையான (மத) சாஸ்திர ஸம்பந்தம் என்பது இல்லாமல் நன்னெறி, ethics, morality என்று எதுவுமே இல்லை. ஆனாலும் இப்படி 'சாஸ்திரம்' என்று பூர்விகக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கிறோம் என்றால் அது இந்தக் காலத்தவருக்கு அவமானமாக, தங்கள் கௌரவத்தைக் குறைத்துக் கொள்வதாக இருக்கிறது. சாஸ்திரங்களில் கண்ணுக்குத் தெரியாத 'அத்ருஷ்ட' தத்வங்களை base பண்ணியே அனேகத் தர்மங்களையும், அந்தத் தர்மங்களை நடைமுறையில் காட்டுவதற்கான கர்மங்களையும் சொல்லியிருப்பதெல்லாம் 'ஸூபர்ஸ்டிஷன்' என்று மேல்நாட்டுக்காரர்கள் சொல்வதால் இதையெல்லாம் நாம் ஏன் அனுஸரிக்க. வேண்டும் என்று அவமானமாயிருக்கிறது. நம் சாஸ்திரத்தை நாம் ஸரியாகப் புரிந்து கொண்டு அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றில்லாமல், அவர்கள் தங்களுடைய பார்வையில் பட்டபடி இதைப்பற்றித் தப்பாகச் சொல்வதையெல்லாம் நம்மவர்களே எடுத்துக் கொண்டு ஃபாஷனாக ரிஃபார்ம் பண்ணிவிட வேண்டுமென்று ஆரம்பிக்கிறார்கள்.

கொஞ்ச காலமாக, நாம் எடுத்துச் சொல்லாமலே, வெள்ளைக்காரர்கள் தாங்களாக ஆராய்ச்சிகளும் பரிசோதனைகளும் பண்ணி ஏற்கெனவே தாங்கள் பரிஹாஸம் பண்ணின

Koviloor Digital Library

அனேக ஸமாசாரங்களைப் பெரிசாகக் கொண்டாட ஆரம்பித்தி ருக்கிறார்கள். ஹோமம் பண்ணுவதில் பலன் இருக்கிறது, மந்திரத்தில் பலன் இருக்கிறது, லோகாந்தரங்கள் இருக்கின்றன என்றெல்லாம் அவர்களே ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் ஸர்ட்டிஃபிகேட்டின் மீது நம்மவர்களும் இவற்றைக் கொஞ்சம் . ஒப்புக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

ரிஃபார்ம் லீடர்கள் மதசீலம், நெறிக் கோட்பாடு என்று இரண்டாகப் பிரித்ததில் முதலாவதில் பலவற்றை ஆக்ஷேபித்தா லும் பின்னதில் (நெறிகளில்) பலவற்றைப் பின்பற்றுவதால் தங்களைப் பொறுத்தமட்டில் ஏதோ ஓர் ஒழுங்குக்குக் கட்டுப் பட்டவர்களாயிருக்கிறார்கள். இந்த ஒழுங்குகளையும், பழைய ஆசாரங்களை மாற்றிச் சீர்திருத்தம் என்ற பெயரில் இவர்கள் செய்கிற புது விதிகளையும் சேர்த்து இவர்களே புது மதங் களை (அப்படி கொள்ளாவிட்டாலும்) ஸ்ருஷ்டிக்கிறார்கள். Leader-கள் விஷயம் இப்படியிருக்கட்டும். இவர்களுடைய follower-கள் (பின்பற்றுகிறவர்கள்) விஷயம் என்ன? பழைய கட்டுப்பாட்டிலிருந்து அவிழ்த்து விடுகிறார்களே, இப்போதே லௌகிகமாக நமக்குப் பலன் தருகிற ஏற்பாடுகளைச் சொல்கி றார்களே என்றுதான் இவர்களை follow பண்ண ஆள் சேர் கிறது. ஸ்வாதந்திரியமாக இஷ்டப்படிப் பண்ணலாம் என்பதற் காகத்தான் பிராசீனமான ஸமயாசாரத்தை விட்டு இதற்கு வருகிறார்கள். லீடர்களுக்கு ஏதோ ஒரு பக்வம், படிப்பு, அனுபவம், கொள்கைப் பிடிமானம் எல்லாம் இருப்பதால் இவர்கள் மதாசாரங்களை விட்டாலும் தாங்களாகச் சில ஒழுக்க நெறிகளுக்காவது கட்டுப்பட்டிருக்கிறார்களென்றால் ஃபாலோ பண்ணும் பொது ஜனங்களுக்கு இந்த யோக்யதாம் சங்கள் எப்படி விசேஷமாக இருக்க முடியும்? அதனால், இவர் கள் (லீடர்கள்) religious virtus-ஐ (மதசீலங்களை) மட்டும் விட்டார்களென்றால் தாங்களோ எந்தக் கட்டுப்பாடுமே வேண்டாம் என்று ethical virtues-ஐயும் (நன்னெறிகளையும்) விட்டுவிட ஆரம்பிக்கிறார்கள்.

'ஸமயாசார வேலியை நீ உடைக்கலாம்' என்று சீர்திருத்தத் தலைவர் முதலில் சொல்லிக் கொடுத்தால் அப்படி உடைத்து ஸ்வதந்த்ரத்தில் ருசி கண்ட ஜனங்கள், 'நீ போட்டிருக்கும்

Koviloor Digital Library

'மாரல்' வேலியையும் உடைப்பேன்' என்று பிற்பாடு அவ ரிடமே திருப்பிக் கொள்கிறார்கள்! பார்க்கவில்லையா – சடங் கும் ஆலய பூஜையும் ஸம்ஸ்கிருதத்தில் மட்டும் ஏன் பண்ண வேண்டும் என்று கேட்பதற்கு தேசத் தலைவர்கள் முதலில் ஜனங்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள்; அப்புறம் ஜனங்கள் அவர்களிடமே திருப்பிக்கொண்டு ஹிந்தி மாத்திரம் ஏன் நேஷனல் லாங்க்வேஜாக இருக்க வேண்டும் என்று கேட்டுப் பெரிய கலஹமாகவே ரயிலைக் கவிழ்த்தும் பஸ்ஸைக் கொளுத்தியும் எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். ஸத்யாக்ர ஹம், 'ஸிவில்டிஸ் – ஒபீடியன்ஸ்', மறியல் என்று எதையெல் லாம் அன்னிய ராஜாங்கத்தை எதிர்த்து ரொம்ப முக்யமான விஷயங்களுக்காக ஆதியில் சொல்லிக் கொடுத்தார்களோ, அவற்றையே இப்போது உப்புப் போதாத விஷயங்களுக்காக இவர்களை எதிர்த்தே ஜனங்கள் செய்கிறார்கள். ஸாதாரண ஜனங்களைக் கிளப்பி விடும்போது எத்தனை முன் யோசனை வேண்டும் என்று நினைக்காததன் பலனை அனுபவிக்கிறோம்.

கதை சொல்வார்கள்: பிரதிவாதி கடனைத் திருப்பித் தர வில்லை என்று வாதி பிராது போட்டானாம். பிரதிவாதியின் வக்கீல் தன் கட்சிக்காரனிடம், 'நீ (கோர்ட்டில்) பைத்தியக் காரன் மாதிரி நடி; என்ன கேள்வி கேட்டாலும் 'பெப்பே' 'பெப்பே' என்று பேத்திக் கொண்டிரு. 'சித்தப்பிரமம் பிடித்த வன்; இவன்மேல் கேஸ் போட்டது தப்பு' என்று ஜட்ஜ் தள்ளுபடி பண்ணி விடுவார்' என்று சொல்லிக் கொடுத் தாராம். பிரதிவாதியும் அதே மாதிரிப் பண்ணி வியாஜம் தோற்றுப் போகும்படிச் செய்து விட்டானாம். கோர்ட்டுக்கு வெளியிலே வந்தவுடன் வக்கீல் அவனிடம் ஃபீஸ் கேட்டாராம். உடனே அவன் அவரிடமும் அவர் சொல்லிக் கொடுத்த தந்த்ரத் தையே திருப்பினானாம். 'பெப்பே பெப்பே' என்றானாம்! 'என்ன? என்கிட்டேயுமா இப்படிப் பண்ணுகிறாய்?' என்று வக்கீல் கேட்க, 'உன்கிட்டே மட்டுமென்ன? உன் அப்பன், பாட்டன் வந்தாலும் இதேதான் நடக்கும்' என்று அர்த்தம் தொனிக்க 'உனக்கும் பெப்பே! உங்க அப்பனுக்கும் பெப்பே!' என்றானாம்.

இப்படித்தான் ரிஃபார்மர்கள் 'சாஸ்திரம் சொல்கிற ஒழுங் குகள் வேண்டாம். நாங்கள் சொல்கிற ஒழுங்குகளைக் கடைப்

Koviloor Digital Library

பிடியுங்கள்' என்றால், ஃபாலோயர்கள் முதலில் பிரதிவாதி வக்கீல் துணையில் கேஸை ஸாதகமாக்கிக் கொண்டது போல, இந்த லீடர்களின் ஸஹாயத்தில் தங்களுக்கு ஸமூஹத்தில் அனேக ஆதாயங்களை அடைந்து விட்டு, கொஞ்ச·நாள் ஆன அப்புறம், 'சாஸ்த்ர ரூலுக்கும் பெப்பே; உன் ரூலுக்கும் பெப்பே' என்று, எந்த ஒழுங்குமில்லாமல் போக ஆரம்பிக்கிறார்கள். இம்மாதிரி ஸந்தர்ப்பத்தில் தன்னளவில் ஓரளவு நன்றாகவே சுத்தராகவுள்ள லீடர்கள் தங்களைச் சேர்ந்தவர்களையே கண்டித்துவிட்டுத் தாங்களும் பட்டினி கிடப்பது போல ஏதாவது பிராயச்சித்தம் பண்ணிக் கொள்கிறார்கள். மற்ற தலைவர்களுக்குத் தங்களைச் சேர்ந்தவர்கள் விட்டு விட்டுப் போகிறார்கள் என்றால் அவமானமாயிருக்கிறது. அதனால் கண்டும் காணாமலும் ஏதோ தட்டிக் கொடுத்துக் கொண்டு போகிறார்கள். ரொம்பவும் மிஞ்சிப் போனால்தான் 'எக்ஸ்பெல்' பண்ணுகிறார்கள் (ஸ்தாபனத்திலிருந்து வெளியேற்றி விடுகிறார்கள்). அனேகமாக அந்தத் துணிச்சல் இவர்களுக்கு வருவதற்குள், இவர்களிடம் அபிப்பிராய பேதப்பட்டவர்களே பலமடைந்து தாங்கள் மட்டும் சேர்ந்து இன்னொரு சீர்திருத்த இயக்கம் ஆரம்பிக்கிற ஸ்திதிக்கு வந்துவிடுகிறார்கள். அதனால், 'நீங்கள் என்ன 'எக்ஸ்பெல்' பண்ணுவது? நாங்களே ழுழுக்குப் போட்டுவிட்டு வெளியில் வந்துவிட்டோம்' என்கிறார்கள்.

இந்த நூற்றாண்டில் பிரத்யக்ஷமாகத் திரும்பத் திரும்பப் பார்த்த விஷயம் சொல்கிறேன். தர்மசாஸ்திர ஆசாரங்கள் எத்தனையோ ஆயிரம் வருஷங்களாகப் பிளவு படாமலே இருந்திருக்கின்றன. அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்றெல்லாம் பிரிந்த போதுங்கூட இவர்கள் புதுப்புது தர்ம சாஸ்திரங்களை எழுதி வைத்துக் கொண்டு விடவில்லை. பழைய சாஸ்திரங்களின்படியேதான் பெரும்பாலான ஆசாரங்கள் இருந்தன. ஆதியிலிருந்த ஆபஸ்தம்ப, ஆச்வலாயனாதி ஸூத்ரங்களும், மனுதர்ம சாஸ்திரம், நிபந்தன க்ரந்தங்கள் முதலியனவுந்தான் எல்லா ஸித்தாந்திகளுக்கும் பொதுவாகத் தொடர்ந்து இருக்கின்றன. இவற்றுக்குள்ளேயேதான் சில ஸித்தாந்திகள் சிலதை விட்டும் சிலதைச் சேர்த்தும், சிலதைக் கூட்டியும், சிலதைக் குறைத்தும் பண்ணுகிறார்கள். இப்படி

Koviloor Digital Library

வைதிகாசாரமானது ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஒரே மாதிரியாக இருந்து வந்திருக்க, ஒரு நூற்றாண்டுக்குள்ளேயே அனேகமாக ஹிந்துமதச் சீர்திருத்த இயக்கங்களாகத் தோன்றிய எல்லாவற்றிலும் பிளவுகள் ஏற்பட்டு வெவ்வேறு 'க்ரூப்'கள் தோன்றிவிட்டன!

மதச் சீர்திருத்த அம்சங்களையே நிறையக் கொண்ட அரசியல் கட்சிகளிலும் இப்படி ஒவ்வொன்றும் இரண்டாக, மூன்றாக உடைந்து போயிருக்கின்றன. இப்படி இதுகளுக்கு stability (ஸ்திரத்தன்மை) போதாததே, இவற்றிலே ஸத்ய பலம் குறைச்சல், இவற்றை ஆரம்பித்தவர்களுக்கு (அவர்கள் நல்ல வர்களாகவும், நல்ல நோக்கமுள்ளவர்களாகவும் இருந்தாலும்) தபோ பலம் குறைச்சல் என்பதற்கு அழுத்தமான proofஆக இருக்கிறது. கொள்கைகளின் ஸத்யமும், அவற்றைச் சொன்ன ரிஷிகளின் தபோ பலமும்தான் வைதிக ஸமயாசாரத்தை யுகயுகாந்தரங்களாகக் காப்பாற்றியிருக்கிறது. இன்றைக்கு இத்தனை சீர்திருத்த மத இயக்கங்கள் ஏற்பட்ட பின்னும் முக்கால்வாசிக்கு மேலான ஜனங்கள் இவற்றில் சேராமல் மூல மான ஹிந்து மதத்தில்தான் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

வெளியிலே ஆசாரத்துக்கு மாறாக சொல்கிறவர்கள்கூட உள்ளூற (அதற்கு)க் கொஞ்சம் பயப்படத்தான் செய்கிறார்கள். தங்கள் சொந்த விஷயத்தில் ரஹஸ்யமாக அனேக 'ஸூபர்ஸ்டி ஷன்'களை அனுசரித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்! இப்படி அனேகம் என்னிடம் அற்றுபடியாகிக் கொண்டிருக்கின்றன. எலெக்ஷனுக்கு டெபாசிட் கட்டுவதென்றால் எத்தனை ரேஷன லிஸ்டானாலும் நாள், நக்ஷத்ரம் பார்த்துத்தான் செய்கிறார்கள் என்று கேள்வி!

பழைய ஆசாரம் வேணுமா, சீர்திருத்தம் வேணுமா என்பதற்கு ஒரு 'டெஸ்ட்' போதும். ஒழுங்கீனம், லஞ்சம், திருட்டுப்புரட்டு, மோசடி, கொலை வியபசாரம் இத்யாதிகள் நாம் 'ஸூபர்ஸ்டிஷியஸ்'ஸாக இருந்தபோது ஜாஸ்தியா யிருந்ததா, இப்போது 'என்லைடன்' ஆகிவிட்ட பிறகு ('அறிவுப் பிரகாசம்' அடைந்த பிறகு) ஜாஸ்தியாகியிருக்கிறதா என்று பார்த்து விட்டால் போதும்! இத்தனை அனர்த்தப் பரம்

Koviloor Digital Library

பரையோடுதான் நாம் 'சீர்திருத்தி'யிருக்க முடியுமென்றால், இதைவிட மூட நம்பிக்கைகளைக் கட்டிக்கொண்டு அழுவதே மேல் என்றுதான் தோன்றுகிறது!

மனத்தூய்மையும் வெளிக்காரியமும்

அனேக ஸமயாசாரங்களை, சடங்குகளைச் சீர்திருத்தக்காரர்கள் ஒதுக்குவதற்கு ஈஸியாக ஒரு காரணம் சொல்லி விடுகிறார்கள்: 'மனஸு சுத்தமாக இருக்க வேண்டியதுதானே முக்யம்? 'ரிட்சுவல்' எதற்கு? இந்த 'ஃபார்மாலிடீஸ்' எதற்கு?' என்கிறார்கள்.

மனஸைத் தனியாக விட்டால் அது கட்டுப்படாமல் கெட்ட வழிகளில்தான் போய்க் கொண்டிருக்கும். எவனாவது ஆயிரம், பதினாயிரத்தில் ஒருத்தனுக்குத்தான் காரியத்தில் போகாத போதும் மனஸ் கட்டுப்பட்டு நல்லதிலேயே போய்க் கொண்டிருக்கும். மற்றவர்களுக்கு ஒரு காரியத்தைக் கொடுத்து, 'கார்யத் வாரா' மனஸை பகவானிடமோ, ஜனஸேவையிலோ திருப்பி விட்டால்தான் உண்டு. இதைக் கவனித்துத்தான் ஆசார அனுஷ்டானங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

மனஸைத் தனியாக விட்டால் என்று மட்டுமில்லை; அதை நாம ஜபம், ஸ்தோத்ரம் என்று வாக்குடன் சேர்த்து விட்டாலுங்கூடக் கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் அது பிய்த்துக் கொள்கிறது. அதனால் மனோ-வாக்-காயம் என்றபடி மனஸை வாக்கு மட்டுமின்றி, சரீர கார்யத்தோடும் பிணைத்தே சடங்குகளைக் கொடுத்திருக்கிறது. மந்திரங்களை வாக்கால் சொன்னபடியே ஹோமம் என்ற காரியத்தைப் பண்ணுவது; ஸஹஸ்ர நாமத்தை வாக்கால் சொன்னபடியே அர்ச்சனை என்ற கார்யத்தைப் பண்ணுவது – என்று வைத்திருக்கிறது.

Koviloor Digital Library

கேசவ, நாராயண, த்ரிவிக்ரம என்று வாயால் சொன்னால்கூட பகவான் மஹிமையில் மனஸ் நன்றாக ஈடுபடமாட்டேன் என்கிறதே! அதற்காக, 'அந்தப் பன்னிரண்டு நாமங்களைச் சொல்லிக் கொண்டே உடம்பில் பன்னிரண்டு நாமங்களைத் திருமண்ணால் போட்டுக் கொள்ளு' என்று பெரியவர்கள் வைத்திருக்கிறார்கள். த்ரிவிக்ரமன்தான் உலகளந்தான். உலகத்தை அளந்தவனே அதை ச்வேத வராஹமாக அவதாரம் பண்ணி வெள்ளை வெளேரென்ற தெற்றிப் பல்லிலே தூக்கி நிறுத்தினான். பல்பட்ட இடத்தில்தான் 'ச்வேத ம்ருத்திகை' என்ற வெளுப்பு மண்கட்டி கிடைக்கிறது. 'திருமண்' என்பது அதுதான். துளஸிக்கு அடிமண்ணும் இப்படி விசேஷமானது. இப்படிப்பட்ட மண்ணைக் குழைத்து ஒரு காரியமாக்கி உடம்பிலே போட்டுக் கொண்டால், அப்போதுதான் 'த்ரிவிக்ரம' என்கிறபோது, 'அப்பா, உன் ஸ்பரிசம் பெற்ற மண்ணை என் சரீரத்திலும் தாரணம் பண்ணிக் கொள்கிறேன்' என்கிற மனக்குழைவு உண்டாகும்.

ஆத்மாபிவிருத்தியில் ஓரளவுக்கு மேலே போகப் போக மனஸின் ஒருமுகத் தியானத்துக்கு வாக்கு, கார்யம் ஆகியவையே இடைஞ்சலாகத்தான் ஆகும். கார்யம், ஸ்தோத்ரம், மந்திரம் எல்லாமே அப்போது நின்று போய் விடும். ஆனால் இது தானாகவே விட்டுப்போகிற ஸமாசாரம். தவளையை உதாரணமாகச் சொல்வது வழக்கம். தவளை ஜலத்தில்தான் முட்டைபோடும். அப்புறம் முட்டையிலிருந்து வெளியே வந்த விட்டும் சிலகாலம் மீன் மாதிரி ஜலத்தில் மட்டும்தான் இருக்கும். அந்த ஸ்டேஜில் அதற்கு நிலத்திலே சுவாஸிப்பதற்கு வேண்டிய லங்ஸ் கிடையாது. மீன் மாதிரி ஜலத்தில் கரைந்திருக்கிற ஆக்ஸிஜனைத் தனக்குள்ளே இழுத்துக் கொள்ளும் gills என்ற உறுப்பு மட்டும்தான் அப்போது தவளைக்கு உண்டு. அப்புறம்தான் அது வளர வளர, இந்த உறுப்பு எப்படி மறைந்தது என்றே தெரியாமல் தானாக மறைந்து, அதற்கு நிலத்திலே இருந்து கொண்டு, காற்றிலேயுள்ள ஆக்ஸிஜனை ச்வாஸிக்கக் கூடிய லங்ஸ் உண்டாகிறது. இப்படி ஹையர் ஸ்டேஜுக்குப் போகும்போது தானாகச் சடங்கு, மந்த்ரம் எல்லாம் நின்று போகும். அதற்காக ஆரம்பத்திலேயே இதெல்லாம் வேண்டாம், மனஸ் சுத்தம் போதுமென்றால், அது தவளை முதலில்

Koviloor Digital Library

ஜலத்திலிருக்கும்போதே லங்ஸ்தான் வேண்டும் என்று தனக்கு இருக்கிற ச்வாஸ அவயவத்தையும் விட்டுவிட்டு... விட்டால் என்ன ஆகும்? உயிரையும் விடவேண்டியதுதான்!

வெளிச்சின்னங்கள், வெளிக்கார்யங்கள், வெளி வித்யாஸங்கள் இவற்றின் மூலம்தான் உள்ளே ஓர் அடையாளமும், காரியமும், பேதமும் இல்லாமல் ஆகிற நிலைமையை அடைய முடியும்★. முதலிலேயே கார்யத்தைக் கொடுக்காமல் மனஸை மட்டும் வைத்துக் கொண்டு தியானம் பண்ணு என்றால் மனஸ் ரொம்ப நேரம் கண்டபடி ஓடிவிட்டு, அப்புறம் எழுந்துவிடத்தான் வைக்கும்; அல்லது களைத்துத் தூக்கத்தில் கொண்டு விடும்.

மனஸ் சுத்தம் டிஸிப்ளின் இல்லாமல் வராது. உள் டிஸிப்ளின் வெளி டிஸிப்ளின் இல்லாமல் வராது. ரூல்களும் ஃபார்மாலிடிகளும், வெளிக்கார்யங்களும், அந்தக் கார்யங்களைப் பொறுத்த அனேக வித்தியாஸங்களுமில்லாமல் வெளி டிஸிப்ளின் இல்லைவேயில்லை.

'மனஸ் சுத்தத்தை மட்டுந்தான் கவனிப்போம்' என்று நவீனர்கள் சொன்னாலும், இதில் யாரோ ஒன்று இரண்டு தலைவர்கள் மட்டும் வேண்டுமானால் அப்படியிருக்கக் கூடுமே தவிர மற்றவர்கள், 'மனம் போனபடிதான் இருப்போம்' என்று ஆவதாகவே முடிந்திருக்கிறது! இதற்கு நான் தொண்டைத் தண்ணீர் போக இத்தனை சொல்ல வேண்டியதே இல்லை. ரிஃபார்ம், ரிஃபார்ம் என்று ஆரம்பித்தபின் தேசத்தில் டிஸிப்ளினே இல்லை என்பது எல்லாருக்கும் பட்டவர்த்தனமாகத் தெரிகிற விஷயம். ஆனாலும் அதனால்தான் இது (சீர்திருத்தம் என்ற காரணத்தால்தான் கட்டுப்பாட்டுக் குலைவு என்ற விளைவு) என்பதை ஒப்புக்கொள்ள யாருக்கும் மனஸு வரவில்லை.

நாஸ்திகர்கள் என்று போகிறவர்களை விட்டு விடலாம். அவர்கள் ரொம்பக் கொஞ்சம் பேர்தான். 'ரிலிஜன்' என்று

★ இவ்விஷயம் அருள் உரை 8,9,10 புத்தகங்களில் இடம்பெற்றுள்ள கர்ம மார்க்கம் என்ற பிரிவிலுள்ள பல உரைகளிலும், அருள் உரையின் முதல் 39 புத்தகங்களின் பல பகுதிகளிலும் வர்ண தர்மம் பற்றியுள்ள அனேக உரைகளிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

போற்றிச் சொல்லி, 'நாங்கள்தான் வேதத்தின் ஸ்பிரிட்டை ஸரியாகப் புரிந்து கொண்டு இன்டர்ப்ரெட் பண்ணுகிறோம்', 'அதை 'ஆர்த்தடாக்ஸி'யின் ஆதிக்யத்திலிருந்து மீட்டு உள்ளபடி ப்ரகாசம் பண்ணுகிறோம்' என்று சொல்லிக் கொண்டே ரிஃபார்ம்காரர்கள் அனாதிகாலமாய் ஒழுங்காயிருந்து வந்த ஸமுதாயத்தைக் கட்டுப்பாடேயில்லாமல் 'டிஃபார்ம்' பண்ணுகிறார்களே என்பதுதான் துக்கமாயிருக்கிறது. ஆயிரலக்ஷம் ஆசாபாசங்கள், அழுக்குகள் இருக்கிறவர்களை எடுத்த எடுப்பில் உச்சாணிக் கொம்பிலுள்ள மனஸ் சுத்தத்துக்கு ஏறுங்கள் என்று சொல்லி, தாங்கள் இங்கேயுமில்லாமல் அங்கேயுமில்லாமல் திரிசங்கு லோகத்தில் தொங்குவது போதாது என்று, மற்றவர்களையும் அவர்கள் ஏற்கெனவே இருந்த இடத்துக்கும் கீழே உருட்டி விடுகிறார்களேயென்று துக்கம் துக்கமாக வருகிறது. வேறே ஒன்றும் தெரியாவிட்டாலும் ஈச்வரன் என்று ஒருத்தனுக்குப் பயந்து தர்ம நியாயமாக நடக்க வேண்டும்; பெரியவர்கள், முன்னோர்கள் காட்டும் வழியில் போக வேண்டும் என்பதால் இதுவரை ஜனங்களுக்கு இருந்த ஒழுக்கத்தையும் பணிவையும்கூட இந்தச் சீர்திருத்தங்கள் போகப் பண்ணிவிட்டன. ஸ்வதந்திரம், ஸ்வதந்திரம் என்று சொல்லி எல்லோரையும் – ஸ்வபாவமாக, வினயகுணம் உள்ள நம்முடைய நல்ல பொது ஜனங்களை – மமதையில் கொண்டு தள்ளியிருப்பதுதான் சீர்திருத்தவாதிகள் செய்திருக்கிற கைங்கர்யம். யாரும் யாருக்கும் அடங்கமாட்டோம் என்று ஆக்கியிருக்கிறார்கள். எல்லாருக்கும் ஸ்வயநலம்தான் – 'ரைட், ரைட்' என்ற பெயரில் ஸகலமுமாகி விட்டது.

ஆனபடியால், 'நாங்கள் ஹிந்து மத அபிமானிகள்தான்; நாங்கள்தான் நிஜமான ஹிந்துமதத்தின் அபிமானிகள்; 'we are for religion' என்று சொல்லிக் கொண்டே, இவர்கள் 'கார்யத்தில் சாஸ்திர விரோதமாக எதை வேண்டுமானாலும் செய்வோம்' என்று போகிற வரையில் இவர்கள் பிரசாரம் செய்வது irreligion (மத விரோதம்)தான். 'சாஸ்திரம் வேண்டாம், சடங்கு வேண்டாம், மனஸ்தான்' என்று இருக்கிறவன் ஒன்றுக்கும் உதவாதவன்தான்!

Koviloor Digital Library

நவீன 'ஸூபர்ஸ்டிஷன்'கள்

அத்ருஷ்ட பலனை நம்பாமல் பிரத்யக்ஷ பலனை மட்டும் பார்த்து அனேக விஷயங்களை ஸூபர்ஸ்டிஷன் என்று தள்ளுகிறார்கள் என்றாலும், இவர்களுடைய பகுத்தறிவு – 'ரீஸன்'படி பதில் சொல்ல முடியாத அனேக ஸூபர்ஸ்டிஷனை இவர்களே உண்டாக்கிக் கொண்டும், பின்பற்றிக் கொண்டும்தான் இருக்கிறார்கள்! 'ஜெய் ஹிந்த்' என்று சத்தம்போட்டு விட்டால் அதில் என்ன பிரத்யக்ஷ பலன்? இப்படிக் கத்துவதால் தேசம் ஸுபிக்ஷமாய்விடுமா என்ன? ஆனாலும் 'மந்த்ராஸ்' என்று கேலி பண்ணுகிற பிரதம மந்திரியே★ பிரஸங்கம் பண்ணி முடித்தவுடன் 'ஜெய் ஹிந்த் கோஷிக்க வேண்டும்; இன்னும் பலமாக கோஷிக்கணும்; இது கூடப்போதாது' என்று மூன்று நாலு தரம் ஜனங்கள் தொண்டை கொண்ட மட்டும் கத்தச் சொல்கிறாராம்!

நம் தேசத்தில் மட்டுந்தான் என்றில்லை. Faith-ஐ (நம்பிக்கையை)க் குலைத்து அதனிடத்தில் reason-ஐ (பகுத்தறிவு என்கிற வெறும் புத்தித் தர்க்கத்தை) வைத்து, நம்மையும் இப்படியிழுத்து விட்டிருக்கிற எல்லா தேசத்திலுமே இப்படியிருக்கிறது. Rational-ஆகப் பார்த்தால் flag (கொடி) என்பது என்ன? ஏதோ ஒரு துணிதானே! அதன்மீது துப்பினால் அது தேசத் துரோகம் என்றால் இது த்ருஷ்ட பலனா என்ன? ஆனாலும் இப்படிப் பண்ணுகிறவனுக்கு த்ருஷ்ட பலனாகவே ஜெயில் தண்டனை கொடுக்கிறார்கள்! மந்த்ரபூர்வமாய் ஒரு ப்ரதிமையில் தெய்வத்தை ஆவாஹனம் பண்ணிப் பூஜை பண்ணுவதைக் கேலி செய்து விட்டு, ஒரு துணிதான் தேசத்துக்கு ஸிம்பல் என்றால் அது எப்படி? புண்யகாலமாவது, புண்ய க்ஷேத்ரமாவது என்று சொல்லிவிட்டு நாஸ்திகப் பிரசார

★ ஸ்ரீ ஜவஹர்லால் நேரு

Koviloor Digital Library

விழாக்களைக்கூட புத்தர், அம்பேத்கர் பிறந்த நாளில் பண்ணு கிறார்கள்! ஈரோட்டில், காஞ்சிபுரத்தில்தான் ஆரம்ப விழா என்கிறார்கள்! அதாவது அவர்களும் ஏதோ ஒரு 'புண்ய' – இப்படிச் சொல்வது எனக்கே வேடிக்கையாகத்தான் இருக்கிறது – புண்யகாலம், க்ஷேத்ரம் இவற்றில் நம்பிக்கை வைத்துத்தான் இருக்கிறார்கள்! ரொம்ப விசித்ரம், ஸமாதி 'ஸமாதி' என்கிற பேர் வைத்து (நாம் ஏதோ வருஷத்தில் ஒருநாள் திருவையாறு, நெரூர் மாதிரி இடங்களில்* ஆராதனை நடத்துகிறோம் என்றால்) அவர்களோ நித்தியப்படி ஆராதனையே பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! ஆஸ்திகர்களாயிருக்கிற சட்டசபைக் காரர்கள் பதவிப் பிரமாணத்துக்கு முந்திக் கோயிலுக்குப் போகாமலிருந்தாலும் இருப்பார்கள்; போய்விட்டு வந்தாலுங் கூடச் சொல்வதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு இருந்தாலும் இருப்பார்கள்; ஆனால் இவர்கள் 'ஸமாதி' என்கிறார்களே, அதற்கு ஊர்வலமாகப் போய் மரியாதை பண்ணிவிட்டு வராமல் swearing-in செய்வதே இல்லை.

வெறும் ரீஸன் என்று மட்டும் எடுத்துக் கொண்டால் அதற்குப் பொருந்தாத அனேக விஷயங்களை எவருமே பண்ணத்தான் வேண்டியிருக்கிறது; அப்போதுதான் நம் முடைய லக்ஷ்யத்தில் நமக்கு ஓர் ஆர்வத்தை, ஈடுபாட்டை எழுப்பி அதற்கு மற்றவர்களின் ஆதரவையும் திரட்ட முடி கிறது. இதற்குச் சின்னங்களும் காரியமும் இருந்தேயாக வேண்டியிருக்கிறது. இப்படிக் கறுப்பு–சிவப்பு அல்லது கதர் போட்டுக் கொண்டு கொடியையும் ஸ்லோகன் அட்டையை யும் தூக்கிக் கொண்டு பாத யாத்திரை, ஸைகிள் ஊர்வலம், மாட்டு வண்டி ஊர்வலம் என்று நடத்தும்போது இதில் பகுத்தறிவுக்குச் சேராத எத்தனை விஷயம் இருக்கிறது என்று பார்ப்பதில்லை. அதுவே பஞ்சகச்சம், பரிவட்டம், ஜால்ரா, நாமகீர்த்தனம் என்று பஜனை கோஷ்டி போனால் பரிஹாச மாகிறது. பொலிடிகல் இன்டரஸ்ட் (அரசியல் ஈடுபாடு) லேபர் இன்டரஸ்ட் என்பதுபோல இந்த லோகத்தை மட்டுமே சேர்ந்த விஷயங்களுக்காக இப்படி ரீஸனை விட்டு விட்டு, மண்ணெண்ணையை கொட்டிக் கொளுத்திக் கொண்டு உயிரை

---

* திருவையாற்றில் தியாகப்பிரம்மத்தின் ஸமாதியும், நெரூரில் ஸதாசிவ பிரம்மேந்திரர்களின் சமாதியும் உள்ளன.

Koviloor Digital Library

விடுகிற அளவுக்குப் போனால் martyr (தியாகிப்) பட்டம் கொடுக்கிறார்கள்! அதுவே சாச்வதமான தர்மத்துக்காக, மதத்துக்காக விட்டால் 'ஸூபர்ஸ்டீஷியஸ் அசடு' என்று மட்டம் தட்டுகிறார்கள்!

'நாமே பெரியவர்கள்; நமக்கு status வேண்டும்; நாம் எதற்கும் கட்டுப்படக் கூடாது; இஷ்டப்படி பண்ண வேண்டும். நம் புத்திக்குப் புரிவதற்கு மேலே எதுவும் கிடையாது; எதையும் ஒப்புக் கொள்ள முடியாது. புத்திக்குப் பொருந் தாமலே நாமேகூட அனேகம் பண்ணினாலும் பண்ணுவோம் – ஆனாலும் சாஸ்த்ரக்காரர்கள் சொல்கிறார்களென்றால் அப்போது மாட்டோம்' என்று இந்த ரீதியில் பலபேரையும் நினைக்கும்படியாக்கி இந்த லோகத்தில் நடைமுறை வாழ்க்கை யிலும் ஒழுங்கு இல்லாமல், பரலோகத்துக்கும் வழியில்லாமல் ஒரேயடியாகக் குளறி வைத்திருப்பதுதான் ஆசாரங்களைக் கைவிட்டிருப்பதன் பலன்.

Awake– awake என்று இவர்கள் (சீர்திருத்தக்காரர்கள்) ஜனங் களை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். 'அசட்டு சாஸ்திரத்தை நம்பி அறியாமையில் தூங்கிக் கொண்டிருக்கிறீர்களே முழித்துக் கொள்ளுங்கள்!' என்கிறார்கள். எனக்கோ இப்படி விழித்துக்கொண்டு தேசத்தில் நடக்கிற வெறியாட்டத்தைப் பார்க்கிறபோது மறுபடி நம் அசட்டு சாஸ்திரத்தை தூக்க மருந்து மாதிரி இவர்களுக்கு எப்படியாவது கொடுத்துத் தூங்கப் பண்ண மாட்டோமோ என்று இருக்கிறது.

சீர்திருத்தம் என்று சொல்லிச் சீராக இருந்ததை ஒழுங் கில்லாமல் ஆக்கியிருக்கிறார்களே; தாங்களாகத் திருந்தியிருந் தவர்களைத் தப்புக்களில் இழுத்துவிட்டிருக்கிறார்களே என்று நினைக்கிறபோது ஏற்கெனவே விழித்துக் கொண்டிருந்தவர் களை இப்போதுதான் தூங்கப் பண்ணியிருக்கிறார்கள் என்றும் தோன்றுகிறது. வாஸ்தவத்தில் ரிலிஜன் ஒபியமேயில்லை★, அதுதான் 'லோகமே நிஜம்; இங்கே நாம் பார்க்கிறதற்கும்

★ 'Religion is the opium of the people' என்பது கார்ல்மார்க்ஸ் கூற்று. மதமானது அபினைப்போல் மக்களை மயக்கிவிடுவது எனப் பொருள்.

Koviloor Digital Library

அனுபவிப்பதற்கும் மேலே எதுவுமே இல்லை' என்று இந்த்ரிய மயக்கத்தில் தூங்கிக் கொண்டிருப்பவர்களை மயக்கம் தெளிவித்து எழுப்புகிற மருந்து; சீர்திருத்தம் என்று சொல்லிக் கொண்டு இயக்கங்கள் ஆரம்பித்த நாளாகத்தான், கொஞ்ச நஞ்சம் இப்படித் தெய்வ ஸம்பந்தமாக விழித்துக் கொண்டிருந் தவர்களுக்கும் அபேதவாத அபினைக் கொடுத்து மயங்கப் பண்ணியிருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது.

தெய்வமும் மதமும் தர்மமும்

தெய்வ ஸம்பந்தம் போச்சோ இல்லையோ தர்ம ஸம்பந்த மும் போய்விட்டது. 'நாங்களும் தெய்வத்தை நம்புகிறவர்கள் தான், ஆத்மாவை நம்புகிறவர்கள்தான் என்று மதச் சீர்திருத்தக் காரர்கள் சொல்லிப் பிரயோஜனமில்லை. தெய்வமானாலும், ஆத்மாவானாலும், எதுவானாலும் நேராக அந்தத் தெய்வ சக்தியினாலேயே inspiration பெற்று (உள் உந்துதல் பெற்று)ப் பரமத்தியாகிகளான ரிஷிகள், அல்லது மதாந்தரங்களின் மூல புருஷர்களாகயிருக்கப்பட்ட Prophet-கள் ஒரு சாஸ்திரம் அல்லது பைபிள் அல்லது குரான் என்று கொடுத்து அதுவும் அனுபவிகளான பல பூர்விகர்களால் அனுஷ்டிக்கப்பட்டு ஒரு tradition என்கிற Weight-ஐப் பெற்றிருந்தால் அப்போது அதன்படியே நடந்தால்தான் தர்மமும், ஒழுக்கமும் இருக்கிறது. அந்தந்த தேசத்திலிருக்கிறவர்கள் 'இதுதான் ஈச்வரன் நமக்கே யென்று கொடுத்திருக்கிற மார்க்கம். எந்த மார்க்கத்தில் போனாலும், ஒரு மார்க்கத்திலுமே போகாவிட்டாலும்கூட அவனைப் பிடித்து விடலாம் என்பது நிஜம் என்றே வைத்துக் கொண்டாலும், அவன் எப்போது எத்தனையோ ப்ளானோடு, ஆர்டரோடு பிரபஞ்ச வியவஹாரங்களை நடத்துவதில் நம்மை இன்ன இடத்தில் இன்ன ஸமயாசாரத்தில் பிறக்கப் பண்ணி யிருக்கிறோனோ, அப்போது இங்கே அவன் கட்டளையாக எந்த சாஸ்திரம் இருக்கிறதோ, அதை நாம் அனுஷ்டானம்

Koviloor Digital Library

செய்ய வேண்டுமென்பதுதான் அவன் சித்தம்' என்று புரிந்து கொண்டு (இப்படிப் புரிந்து கொள்வதுதான் நிஜமான விழிப்பு) அந்தப்படியே பண்ண வேண்டும். இப்படி அவரவருடைய பூர்விகர் போன ஆசார வழியில் போவதைத் தான், 'ஸமயாசாரமேவ பூர்வை: ஆசரித: குர்யாத்' என்று சொன்னது. இவ்வாறு பண்ணாமற்போனால் – 'அந்யதா' அதாவது வேறே வழியில் போனால் – 'பதிதோ பவேத்:' விழுந்து விடுகிறான்!

விழுகிறான் என்றால் எப்படி? ஏணியின் நடுவில் ஏதோ ஒரு கட்டையில் நின்று கொண்டிருக்கிறான். படிப்படியாக மேலே கொண்டு போவதற்கு சாஸ்திரம் இருக்கிறது. ரிஃபார்ம்காரர், 'இப்படி இன்ச் இன்ச்சாக நீ ஏறுவதென்றால் ரொம்பநாள் ஹீனஸ்திதியில் இருந்து கொண்டிருக்கணும், ஒரே தாவாக மேலே தாவு' என்று கிளப்பிவிட்டு இவன் நிற்கிற கட்டையை உடைத்து விடுகிறார். இவனுக்கோ மேலே தாவுகிற சக்தி இல்லை. என்ன ஆகும்? இருக்கிற ஸ்திதியிலிருந்து இன்னம் கீழே விழவேண்டியதாகவே ஆகிறது. அந்யதா பதிதோ பவேத்: பதிதனாக, விழுந்தவனாக ஆகிறான்.

தலைவர் கடமை: கீதை உபதேசம்

பகவான் கீதையில் நன்றாக எச்சரிக்கை பண்ணியிருக்கிறார். 'லோகாசாரங்களுக்கு, உலக வழக்குகளுக்கு வித்யாஸமாக நீ போனாயானால் (உன்னளவில் நீ அவற்றை விட்டு விடலாமென்றாலுங்கூட) நீ ஜனங்களுக்குத் தப்பான வழிகாட்டியாகி விடுவாய். உன்னைப் பார்த்து அவர்களும் அவற்றை விட்டு விடுவார்கள். ஆனால் நீ உன்னுடைய பக்வ விசேஷத்தால் இப்போது விட்டதைவிட உசந்த வழிக்குப் போகக்கூடுமென்றாலும், ஸாதாரண ஜனங்கள் தற்போது இருக்கிற ஸ்தானத்தை விட்டதோடு மட்டும் இருக்குமே தவிர, விட்டபின் இதைவிட உசத்தியான ஒன்றைப் பிடித்துக் கொள்ள

Koviloor Digital Library

அவர்களுக்குச் சக்தியும், ஸம்ஸ்காரமும் போதாது. இருக்கிற பிடிப்பையும் விட்டு விட்டு இன்னங் கீழே விழுந்து விடுவார்கள்' என்கிற இவ்வளவு அபிப்ராயங்களையும் அடக்கித்தான், அடைத்து வைத்துத்தான்:

ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத I
குர்யாத்-வித்வாம்-ஸ்ததா(அ)ஸக்த-சிகீர்ஷுர்
லோகஸங்க்ரஹம்II
ந புத்தி பேதம் ஜநயேத் அஜ்ஞானாம் கர்ம ஸங்கிநாம் I

என்றார். (3.25-26)

ஜனங்கள் பொதுவாக 'கர்மஸங்கி'களே. அதாவது காரியத்தில்தான் கட்டுப்பட்டிருப்பவர்கள். அவர்களிடம் வெறுமனே ஆத்மா, த்யானம் என்று ஐடியல் நிலையைச் சொல்லிப் பிரயோஜனமில்லை. சாஸ்திரங்களில் அவர்களுக்கு அனேகக் காரியங்களைக் கொடுத்து அதற்கு த்ருஷ்டமாகவோ அத்ருஷ்டமாகவோ இன்னின்ன பலன் என்று சொல்லியிருக்கிறது. வேதத்தில் சொல்லியிருக்கப்பட்ட அனேக யாக யஜ்ஞங்களுக்கு இப்படிப்பட்ட பலன்களைத்தான் சொல்லியிருக்கிறது. இந்த லோகத்திலேயே மழை பெய்து தான்யஸம்ருத்தி உண்டாகும்; அல்லது மேதாவிலாஸம், ஸதஸில் வாக் விலாஸம் உண்டாகும்; அல்லது முடிவாக ஸ்வர்க்க வாஸம் கிடைக்கும் என்றே சொல்லியிருக்கும். இந்திரியங்களால் இன்பங்களை அடையும் ஸவர்க்க வாஸத்தைத்தான் சொல்லியிருக்குமே தவிர, இந்திரிய பந்தமெல்லாம் தெறித்துப்போன மோக்ஷமான ஜீவ-பிரம்ம ஐக்கியத்தைக் கர்மாவுக்குப் பலனாகச் சொல்லியிருக்கவில்லை. ஏனென்றால் முதலிலேயே மோக்ஷம் என்றால் யாரும் அதை நாட மாட்டார்கள் என்று அதற்குக் கீழ்ப்பட்ட ஸ்வர்காதி ஸௌக்கியங்களுக்காகவே கர்மாவைக் கொடுத்து அந்தக் கர்மாவினால் இவனுக்கு உண்டாகிற கட்டுப்பாட்டிலிருந்து, இவனறியாமலும், உத்தேசிக்காமலும், விரும்பாமலுமேகூட இவனுக்குச் சித்தசுத்தி தந்து இவனைப் பாரமார்த்திகமாகத் திருப்பத்தான் இப்படிச் செய்திருக்கிறது. பிற்காலத்தில் மதம் என்பதில் யஜ்ஞகர்மா குறைந்து விட்டது. ஆனாலும் லௌகிக லாபங்களுக்காகவே வேறுவித அனுஷ்டானங்களைக் காரியமாகக் கொடுப்பது தொடர்ந்திருக்

Koviloor Digital Library

கிறது. 'ராமேச்வரத்துக்குப் போ, அரச மரத்தைச் சுற்று, பிள்ளை பிறக்கும். ஸூர்ய நமஸ்காரம் பண்ணு, நேத்ர ரோகம் ஸரியாகப் போகும். கனகதாரா ஸ்தவம் சொல்லு, ரூபாய் வரும்' என்றெல்லாம் லௌகிக பலன்களுக்காகவே பல காரியங்களை சாஸ்த்ரம் சொல்கிறது. இந்தப் பலனில் உள்ள பற்றினாலேயே பெரும்பாலான ஜனங்கள் இதுகளைப் பண்ணு கிறார்கள். இவர்கள் வாஸ்தவத்தில் உயர்ந்த அறிவு பெறாத 'அவித்வான்'கள்தான். இவர்களைத்தான் 'ஸக்தா: கர்மண்ய வித்வாம்ஸோ' என்கிறார். இவர்களிடம் 'இப்படி அல்பப் பலனையெல்லாம் நினைக்காதீர்கள், ஈச்வரானுபவம் என்ற உசந்த லக்ஷ்யத்தையே நினையுங்கள்' என்று உபதேசம் பண்ணினால் எடுபடாது. அவர்களுடைய ஸம்ஸ்காரக் குறைவு காரணமாக, அவர்களை இப்போது இருக்கிற இடத்திலிருந்தே, அவர்களுடைய மனஸை அனுஸரித்துக் கொஞ்சம் கொஞ்ச மாகத்தான் மேலே கொண்டு போக வேண்டும். இதற்கு அவர்களைப் பக்குவப்படுத்துவதற்காகத்தான் சாஸ்திரங்களே அவர்களுக்கு இப்படிப்பட்ட ஆத்ம ஸம்பந்தமில்லாத காரியங் களையும் கொடுக்கிறது. பலனுக்காகத்தான் அவர்கள் இவற்றைப் பண்ணுகிறார்கள். பண்ணிவிட்டுப் போகட்டும். ஆனால் இப்படிக் காரியம் பண்ணுவதால் என்ன ஏற்படுகிற தென்றால் இவர்கள் உத்தேசித்த பலன் உண்டாவதோடுகூட, இவர்கள் உத்தேசிக்காமலே கொஞ்சங் கொஞ்சமாகச் சித்த சுத்தி என்ற பெரிய பலனும் உண்டாக ஆரம்பிக்கிறது.

லௌகிக பலனை நினைத்தே கார்யம் பண்ணினாலும் சித்த சுத்தி உண்டாகிறது என்று இப்போது சொல்லுகிறேன். இத்தனை நாழி என்ன சொன்னேன்? இம்மாதிரி லௌகிக மான ஸமத்துவம், 'ரைட்' இவற்றுக்காகவே மதத்தை மாற்ற முயல்வது சித்தத்தை மேலும் அசுத்தம்தான் செய்திருக்கிறது என்று சொன்னேன். இது ஒன்றுக்கொன்று மாறாக இருக்கிறது. கொஞ்சம் ஆலோசித்துப் பார்க்கலாம்.

Koviloor Digital Library

மூன்று விதமான கொள்கைகள்

மூன்று கட்சிகள். ஒன்று, மதமே ஒரு ஸ்டேஜ் வரையில் உலக ஸம்பந்தமான சௌக்யங்களையும் ஆதரித்துக் காரியங்களைக் கொடுப்பது. இன்னொன்று: மதம் ரொம்ப உசந்த லக்ஷ்யத்துக்காக, ஸ்வச்சமான ஆத்மா என்கிற ஹை லெவலை மட்டுமே சேர்ந்ததாக இருக்க வேண்டும்; ஆதலால் அதிலிருந்து சடங்கு, சின்னம், கர்மா எல்லாவற்றையும் அப்படியே உருவி விட்டு அதைச் சீர்திருத்த வேண்டுமென்பது. மூன்றாவது; லௌகிகமான அபிவிருத்திகள், ஸ்வய மரியாதை, ஸயன்டிஃபிக் அவுட்லுக் (இதை 'ரீஸன்' என்றும் சொல்கிறார்கள்; அதாவது புத்தியின் தர்க்கத்துக்குப் புரிபடுவதாக இருக்க வேண்டும் என்பது அபிப்பிராயம்) இவற்றுக்கு மதாசாரங்கள் ஹானி செய்வதால் அப்படிப்பட் அம்சங்களை மாற்றிச் சீர்திருத்த வேண்டுமென்பது. அதாவது சீர்திருத்தத்திலேயே இரண்டு கட்சி. ஒன்று, இது அனேகமாகப் பொலிடிகலாக இருப்பது–ஆத்ம ஸம்பந்தமே அடியோடு இல்லாமல் லோக வாழ்க்கைக்காகவே சீர்திருத்தம் பண்ண வேண்டுமென்பது. இன்னொன்று ரொம்ப உயர்ந்த ஆத்மானுபவங்களை எல்லோருக்கும் பொதுவாக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்திலேயே மதத்தைச் சீர்படுத்தச் சொல்வது. லௌகிகமாக மனுஷனுக்கு மனுஷன் வித்யாஸம் இருக்கப்படாது என்ற சமத்வத்தைச் சொல்வதில் இரண்டு தினுசான சீர்திருத்தவாதிகளும் ஒத்துப் போகிறார்கள்.

இதுவரை நான் சீர்திருத்தக்காரரர்கள் என்றபோது இரண்டு கோஷ்டிகளையும் கலந்து கலந்து சொல்லிக் கொண்டு வந்து விட்டேன். அதனால் கொஞ்சம் குளறிப்போயிருக்கும். இப்போது, என்னமோ இப்படிப் பேச ஆரம்பித்ததில் எனக்கே துளித்துளி புரிந்து கொண்டு வருவதால் உங்களுக்கும் கொஞ்சம் தெளிவு பண்ணப் பார்க்கிறேன்.

Koviloor Digital Library

இரண்டு கோஷ்டிகளும் மதச் சீர்திருத்த வேண்டும் என்று சொன்னாலும், இரண்டு பேரும் social equality-ஐ (ஸமூக ஸமத்வத்தை)ச் சொன்னாலும், ஒரு கோஷ்டி ஆத்ம லக்ஷியத்துக்காகவே ஆசாரத்தை மாற்றச் சொல்கிறது; அதாவது ஆசாரங்களை விடச் சொல்கிறது; இன்னொரு கோஷ்டி லௌகிக லக்ஷியம் ஒன்றுக்காக மாத்திரம் ஆசாரத்தை விடச் சொல்கிறது.

பின்னாடி சொன்னவர்கள் பொலிடிகல் லீடர்களாக இருக்கிறார்கள். லேபர், ஸ்டூடன்ட் மூவ்மெண்ட், ஸ்திரி ஸ்வதந்திரம் என்றெல்லாம் சொன்னாலும் இதெல்லாமும் ஒரு மாதிரிப் பொலிடிகலாகவேதான் இருக்கின்றன. ஸோஷல், பொலிடிகல் என்று வார்த்தை வித்தியாஸத்துக்காகப் பிரித்துப் பேசுகிறார்களென்றாலுங்கூட நம் தேசத்தில் எல்லாமே தெரிந்தும் தெரியாமலும் பொலிடிகலாகத்தான் ஆகியிருப்பது நம்முடைய துர்த்தசை. ரிலிஜனில்கூட பாலிடிக்ஸ்தான்! இது இருக்கட்டும். இந்த ஸோஷல் ரிஃபார்மர்கள் பூர்வாசாரங்களை, பரம்பரையாக ஜனங்களுக்கு ஏற்பட்ட காரியங்களை எடுத்துவிட்டு, அவர்களை வெறும் வாழ்க்கை முன்னேற்றத்தில் மட்டும் வெறிப்படுத்தி அதற்கான காரியங்களில் ஈடுபடுத்துகிறார்கள். இதன் அங்கமாகவே ஸ்ட்ரைக், டெமான்ஸ்ட்ரேஷன், அடிதடி ரகளை எல்லாமும் நிறையக் கிளறி விடப்பட்டிருக்கின்றன.

இதெல்லாமும் காரியம், சாஸ்திரத்தில் பிள்ளை பிறப்பதற்கும் பண ஸம்பாதனைக்கும் சொன்னதும் காரியம்தான் என்றாலும் இரண்டையும் செய்வதிலே எத்தனை வித்தியாசமிருக்கிறது? இரண்டுக்கும் லக்ஷ்யம் லௌகிகம்தான். இருக்கட்டும். ஆனாலும் மதத்திலே ஒரு காரியத்தைச் சொல்லியிருக்கும்போது அதைத் தெய்வபரமான லக்ஷ்யமாக இல்லாமல் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவே பண்ணும்போதுகூட தெய்வத்தின் நினைப்பு இருக்கிற விதத்திலேயே செய்திருக்கிறது. ஈச்வரனுக்கு, தேவதைகளுக்கு, சாஸ்திரங்களுக்கு, பெரியவர்களுக்கு அடங்கிப் பக்தியுடனே, 'நாம் வேண்டுகிற வாழ்க்கை நலத்தை நம்மைவிடப் பெரிய ஒரு சக்திதான் தருகிறது' என்ற நம்பிக்கையில்தான் இந்தக் காரியங்களைப்

Koviloor Digital Library

பண்ணுகிறோம். அதாவது... கொஞ்சம் விசித்திரமாகத்தான் இருக்கிறது... உலக ஸம்பந்தமான உபாயங்களைக் கொண்டே உலகுக்கு அப்பாற்பட்ட சக்தியைப் பிடிப்பதற்குத்தான் மதாசாரம் என்பது ஒரு பக்கம் உண்மையென்றால், இங்கேயோ ஒருவிதத்தில் அந்த ஈச்வர சக்தியை உபாயமாக வைத்துக் கொண்டு, உலக வாழ்க்கையிலே நன்மை பெறக் காரியங்களைப் பண்ணுகிறோம்! 'இப்படிப்பட்ட கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டுப் பண்ணு' என்று சாஸ்திரம் சொல்கிறபடி கட்டுப்பட்டு ஒழுங்கோடு பண்ணுகிறோம். இப்படி இதிலே தொக்கி நிற்கிற தெய்வ பக்தி, நம்பிக்கை ஆகியவற்றாலும், side effect ஆக உண்டாகிற அடக்கம், ஒழுங்குமுறை இவற்றினாலும், நாம் கேட்காமலே நமக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்த சுத்தியும் உண்டாக ஆரம்பிக் கிறது. அதிலே மேலே மேலே தேறிப் போகிறபோதுதான் தன்னாலே இதுபோன்ற அல்ப பலன்களுக்காக இல்லாமல் ஈச்வரனுக்காகவே மதானுஷ்டானங்கள் பண்ண வேண்டும் என்ற பக்குவம் உண்டாகிறது.

இப்படி ஏதோ ஒரு விதத்தில் தெய்வ சிந்தனை, பூர்விக ஆசாரத்தில் ஒரு சிரத்தை இவற்றோடு காரியம் பண்ணு வதற்கும், அடிமுதல் நுனிவரை எங்கேயுமே தெய்வத்திற்கோ, tradition-கோ கட்டுப்படாமல், முழுக்க லௌகிகமாகவே தற்குறியாக, தறிகெட்டுக் காரியம் பண்ணுவதற்கும் ரொம்ப வித்தியாஸமிருக்கிறது. அதனால்தான் லோக வாழ்க்கைக் கானதையே பண்ணும்போதுகூட, மத ஸம்பந்தமானவை ஒருத்தனுக்குச் சித்த சுத்தியைக் கொடுக்க ஆரம்பிக்கிற தென்றால், வேறு விதமாகச் செய்வது சித்தத்தில் மேலும் அழுக்கையேற்றி அஹங்காரத் தடிப்பை ஜாஸ்தி பண்ணுகிறது!

ஒரு சின்ன த்ருஷ்டாந்தம் சொல்கிறேன். பலனை உத்தேசித்துத்தான் அனேகச் சடங்குகள் பண்ணுகிறோம். ஆனால் உத்தேசித்தபடி பணம் வரவில்லை, பிள்ளை பிறக்க வில்லை. என்ன பண்ணுகிறோம்? அப்போதைக்கு ஓர் ஏமாற்றம் உண்டாகத்தான் செய்கிறது. ஆனால் அது ஆழமாகப் போய்விடுவதில்லை. என்ன இருந்தாலும் சாஸ் திரத்தை நம்பித்தானே செய்தோம்? அந்த சாஸ்திரத்தின் ஆணி வேரான கொள்கை என்ன? கர்மாப்படி நடக்கும்

Koviloor Digital Library

என்பதுதானே? ஈச்வரானுக்ரஹ பலத்தால் அந்தக் கர்மாவை நமக்குக் கொஞ்சம் சாதகமாக்கிக் கொள்ளலாமென்றுதான் சாஸ்திரம் சொன்ன ஏதோ ஒன்றைப் பண்ணினோம், பலிக்க வில்லை. பலிக்காவிட்டாலும் அந்த சாஸ்திரமே நம்மை, 'கர்மா! அனுபவித்துத் தானாகணும்' என்று தேற்றிக் கொள்ளும்படிப் பண்ணுகிறது. நாம் எதையோ உத்தேசித்து தெய்வ ஸம்பந்தமான ஒன்றைச் செய்தோமென்றாலும், உத்தேசம் ஃபெயில் ஆன பிற்பாடும் அந்தத் தெய்வ ஸம்பந்தத் தையும், சாஸ்திர ஆசரணையையும் அதோடு விட்டு விடு வதற்கு மனஸு வருவதில்லை. இப்படிக் கொஞ்சங் கொஞ்ச மாக நல்ல வழியிலேயே திருப்பிவிடப் படுகிறோம். நெருங்கின பந்துக்களின் ஆயுஸுக்காக எத்தனையோ பிரார்த்தனை, ஹோமங்கள் செய்து அது பலிக்காமல் பெரிய சோகம் ஏற்பட்டு விட்டது என்பதில்கூட frustrate ஆகி (ஏமாற்றத்தில் மனம் சிதைந்து) நாஸ்திகர்களாகப் போனவர் கள் அபூர்வமாகவே இருப்பார்கள்!

ஆனால், இதுவே சோஷல் அல்லது பொலிடிகல் ரீதியில் ஒரு காரியத்தைப் பண்ணி (காரியம் என்றாலே இந்த நாளில் 'போராட்டம்'தான்!) அது தோற்றுப் போனால் என்ன நடக்கிறது? 'நம் கர்மா' என்று சொல்லிக் கொண்டு எவராவது பேசாமல் இருப்பார்களா? உடனே இன்னம் பெரிய போராட் டம், கிளர்ச்சி என்று ஊரை இரண்டாக்குகிறார்கள். த்வேஷம் நாளுக்கு நாள் ஜாஸ்திதான் ஆகிறது. இது சித்தத்துக்கு அழுக்கு தானே?

காரியம் தோற்றுப் போகாமல் ஜயித்தாலும் இதே வித்தி யாசத்தைப் பார்க்கலாம். சாஸ்திரப்படி பண்ணி ஒரு லாபத்தை அடைந்துவிட்டால், மறுபடி அதே லாபத்துக்காகப் பகவானிடம் போவதற்குத் தன்னாலேயே ஒரு லஜ்ஜை உண்டாகிறது. 'அவன் இத்தனை பண்ணினதே பெரிசு' என்று அவனைச் சும்மா சும்மா வேண்டிக்கொண்டு தொந்தரவு பண்ணாமல் 'அன்பாகப் பக்தி பண்ணணும், நாம் இப்படிப் பட்ட ஆசைகளைக் குறைத்துக் கொள்ளணும்' என்ற அறிவு துளித் துளியாவது வருகிறது. அந்த அளவுக்கு அது சித்த சுத்தி. 'போராட்டம்' நடத்திக் காரியத்தை சாதித்துக் கொள்ளும் போது என்ன ஆகிறது? 'நாம் சக்தியைக் காட்டினால் பயப்

Koviloor Digital Library

பட்டுக் கொண்டு, கேட்டதைப் பண்ணுகிறார்களல்லவா? இன்னம் கொஞ்சம் மிரட்டிப் பார்ப்போம்' என்று புதுப்புது ரைட்கள் கொண்டாடிக் கொண்டு, மேலே மேலே டிமாண்ட் செய்வதையே பார்க்கிறோம். தோற்றால் த்வேஷம் ஜாஸ்தி யாகிறது என்றால், ஜயித்தாலோ ஆசையும் அஹங்காரமும் ஜாஸ்தியாகிறது. இதுவும் அழுக்குத்தான்!

ஆத்மிக லக்ஷியச் சீர்திருத்தம்

இதுவரை ஸோஷல் ரிஃபார்ம் மட்டும் சொன்னேன். ஆத்ம ஸம்பந்தமாக ஜனங்களை உயர்த்த வேண்டும் என்கிற லக்ஷியத்தில் ஏற்பட்டுள்ள ரிலிஜியஸ் ரிஃபார்ம் மூவ்மெண்ட்கள் விஷயம் என்ன? இவையும் equality (ஸமத்வம்) என்ற பெயரில் யாரும் எதையும் செய்யலாம் என்கிற ஸ்வதந்திரத்தையும், அதனாலேயே ஓரளவு வினயக் குறைவையும் உண்டாக்கி விடுகின்றன. ஆர்த்தடாக்ஸி, ஸூபர்ஸ்டிஷன் என்று ஏதாவது பேரைச் சொல்லி ட்ரெடிஷனை break பண்ணலாம் என்று இந்தத் தலைவர்கள் சொல்வது, எதையுமே break பண்ணும் துணிச்சலை ஃபாலோயர்களுக்குக் கொடுத்து விடுகிறது. அந்தந்த மூவ்மெண்டுக்கு என்று புதிதாகப் பண்ணியிருக்கிற ஒழுங்கு விதிகளையும், புதிதாக ஏற்படுத்தியிருக்கிற 'சடங்கு' களையும் organised ஆகச் சில சில இடங்களில் அதன் ஃபாலோயர்கள் நன்றாகவே அனுஸரித்து வருகிறார் களென்பது உண்மைதான். ஆனாலுங்கூட இப்படி ஒரு காலனி யாக இல்லாமல் தனித்தனியாக இருக்கப்பட்டவர்கள் அந்தப் புது ஒழுங்கிலும் வராமல் வீணாகத்தான் போகிறார்கள். இன்னொரு வேடிக்கை: இப்படிப்பட்ட மூவ்மெண்ட்களின் – தலைவர்கள் அல்லது மூலபுருஷர்களின் பிறந்த தினம், நூற்றாண்டு என்று கொண்டாடும்போது ராஜாங்கத் தலைவர்கள், அறிவாளிகள், பத்திரிகைகள் எல்லாம் அவர்களைப் பற்றி ஏராளமாக எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். ஸ்டாம்ப் போடு

Koviloor Digital Library

வது, 'ஸ்டாச்சு' வைப்பது எல்லாம் பெரிய சடங்காய் நடக்கின்றன. ஆனாலும் இந்த இயக்கங்களுக்கே . dedicate பண்ணிக்கொண்ட மெம்பர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், காலத்துக்கு ஒவ்வாத அசட்டு, முரட்டு ஒரிஜினல் ஹிந்து மதத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்களென்று பார்த்தால், நூற்றுக்கு தொண்ணூறு பேர் புதிய புத்திசாலி கோஷ்டிகளுக்குப் போவதற்கு எதனாலோ தயங்கிக் கொண்டு பழைய பத்தாம்பசலி மதத்தில்தான் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

இப்படி நான் பெருமையடித்துக் கொள்ளும்போதே இதுதான் வருத்தப்பட வேண்டிய விஷயம், அவமானப்பட வேண்டிய விஷயமென்றும் தெரிகிறது. ட்ரெடிஷனலான ஹிந்து மதத்தில் இருந்து கொண்டே புதிய ரிஃபார்ம்களை ஆதரித்து அதற்கும் 'ஜே' போடுகிறார்கள்; இதில் இருந்து கொண்டேதான் ரிஃபார்ம்காரர்களையும் ஸ்தோத்ரம் பண்ணுகிறார்களென்றால் என்ன அர்த்தம்? இப்படி இருக்கவும் மனப்பூர்வமான பிடிமானம் இல்லை; அப்படிப் போகவும் தைரியம் இல்லை; மொத்தத்தில் ஒருவிதக் கன்விக்ஷனுமில்லை என்றுதானே ஆகிறது? ட்ரெடிஷனலான மதத்தில் இருக்கிற மாதிரி இருந்து கொண்டே அதிலே புல்லுருவி மாதிரித் தோன்றும் ஆசார ஹீனப்போக்குகளைப் போஷிக்கிறதென்றால் அது தாய் மதத்துக்குச் செய்கிற ஹானிதானே?

இந்தத் தப்பைப் பொதுஜனங்கள் மட்டும்தான் பண்ணுகிறார்கள் என்றில்லை. மஹான், தெய்வாம்சமே இருக்கிறவர் என்று நினைத்துக் கொண்டு ஜனங்கள் போகிற நவீனகால மதத் தலைவர்கள் – லீடர்கள் சிலரும் தெரிந்தோ தெரியாமலோ இதற்குக் காரணமாயிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

தனிப் பிரிவாகாத நவீன மதத் தலைவர்கள்

ஸனாதனமான ஆசாரிய பீடமொன்றில் நான் இருப்பதால் நான் இந்த விஷயத்தைச் சொன்னால் உடனே vested interest (ஸ்வய நல நோக்கம்) என்ற கண்டனம் வரும். வந்தாலும் வரட்டும் என்றுதான், மனஸில் படுவதைச் சொல்லாவிட்டால் தோஷம் என்பதால் சொல்கிறேன். இப்போது அனேக ஸ்வாமியார்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்கள் ஹிந்துமதம் என்ற parent bodyயி (மூலஸ்தானத்தி)லிருந்து தாங்கள் பிரிந்து போய்ச் சீர்திருத்த மதம் தனியாக ஆரம்பித்திருப்ப தாகக் காட்டிக் கொள்வதில்லை. அதாவது இவர்கள் பெயரி லும் ஸ்தாபனம், மிஷன் ஏதாவது இருந்தாலும் அதை ஹிந்து மதத்தின் main stream-கு வெளியாக பிரம்ம ஸமாஜ், ஆர்ய ஸமாஜ், தியஸாஃபிகல் ஸொஸைட்டி என்று அனேகச் சீர் திருத்த இயக்கங்கள் தனியாக இருப்பதுபோலக் காட்டிக்கொள் வதில்லை. ஸம்ப்ரதாயமாக வந்துள்ளதும் இன்றும் பெரும் பாலான ஜனங்கள் விட்டுப் போகத் தைரியமில்லாமல் ஒட்டிக் கொண்டிருக்கிற மாதிரி இருப்பதுமான traditional ஹிந்து மதத்தின் பிரதிநிதிகளாகவே தங்களை இந்த ஸ்வாமிஜிகள் சொல்லிக் கொள்கிறார்கள். நம்முடைய வேதாந்தம் இதிஹாஸம் இவற்றைப் பற்றி நன்றாகப் பிரசங்கம் செய்தும் புஸ்தகம் போட்டும் பிரசாரம் பண்ணுகிறார்கள். நம்முடைய பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். பஜனையிலிருந்து யோகம் வரையில் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கிறபோது traditional ஆக வந்துள்ள எங்களைப் போன்ற தர்மபீடங்களை விடக்கூட இவர்கள்தான் மதப் பிரசாரத்துக்காக நிறையப் பண்ணி, 'மறுமலர்ச்சி' என்கிறார்களே அப்படி ஸமய விஷயத்தில் ஜனங்களைச் சக்தியோடு திருப்பி வருகிறார்கள் என்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட கூட்டம் இவர்களிடம் சேருகிறது. இவர்களில் சிலருக்கு விசேஷ வாக்கு வன்மை இருக்கிறது. ஆத்மார்த்த

Koviloor Digital Library

மான விஷயங்களைப் பொதுஜனங்கள் ரஸித்துக் கேட்கும் விதத்தில் அழகாகவும் மனஸில் பதியும்படியும் எடுத்துச் சொல்கிறார்கள். இன்னம் சில பேருக்கு வியாதி, வக்கை, வேறே ஏதோ கஷ்டம், ஆபத்து என்றால் அதைத் தீர்த்து வைக்கிற சக்தி இருக்கிறதென்று போகிறார்கள். ஸித்திகள் உள்ளவர்களாக இப்படிச் சிலர் இருக்கிறார்கள். அவர்களிடம் போகிறவர்கள் இம்மாதிரி லாபங்களைப் பெறுவது மட்டு மில்லாமல் சில ஸமயானுஷ்டானங்களையும் பின்பற்ற ஆரம்பிக்கிறார்கள்.

KOVILOOR MADALAYAM

ஆகையால் பிராசீனமான தர்ம பீடங்களில் இல்லாமல் தனியாகத் தோன்றியிருக்கிற ஸ்வாமியார்களாலும் மதத்துக்கு நல்லது நடந்துதான் வருகிறது. மனஸ் விட்டுச் சொன்னேனானால், எங்களைப் போன்ற ஸனாதன ஆசார பீடங் களைக் கட்டுப்பெட்டி என்று படிப்பாளிகளும், தேசத்தலைவர் களும் திருப்பித் திருப்பிச் சொல்லி, புது ஜெனரேஷன்களுக்கு ஒரு பிரெஜுடிஸே உண்டாக்கியிருந்த ஸந்தர்ப்பத்தில், ஜனங் கள் அடி நாஸ்திகமாகப் போகாமல் ஏதோ கொஞ்சமாவது மத விச்வாஸம் பெற்றதற்குக் காரணமே இந்தத் தனி ஸ்வாமிஜிகள் தான் என்றுகூடச் சொல்லலாம். சித்தாகத்தான் இருக்கட்டும், வேறு ஏதோ சக்தியாகத்தான் இருக்கட்டும். நாலுபேருக்குக் கஷ்டத்தைப் போக்குகிறார்கள், அதோடு அவர்களைக் கொஞ் சம் பயபக்தியில் தூண்டிவிடுகிறார்கள். ஆத்ம விஷயங்களைப் பேசியும், எழுதியும் பிரசாரம் பண்ணுகிறார்களென்பதற்காக வும் இவர்களைப் பற்றி நல்லதாகத்தான் நினைக்க வேண்டும்.

இது ஒரு நல்ல தொழிலாயிருக்கிறதே என்று போலிகளும் கிளம்பியிருக்கலாம்; ஜனங்கள் அவர்களிடம் ஏமாந்தும் போகலாம். தடுக்கி விழுந்த இடமெல்லாம் ஒரு Divine messenger (திவ்ய தூதர்), Messiah (இறைவன் அனுப்பி வைத்த லோக ரக்ஷகர்), தெய்வாம்சமே பெற்றவர் என்று ஏதாவதொன்று சொல்லிக் கொண்டு பல பேர் இருந்தால் genuine ஆக இருக்க முடியுமா என்று ஜனங்களுக்கும் கலக்கம். ஆனாலும் 'எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்' என்று பாவம் அங்கேயும் ஓடுகிறார்கள். இப்படியே ஒரு பக்கம் வெளி தேசத்தவர்களும் Gurudom, Swamidom என்று கேலி பண்ணிக் கொண்டே, இன்னொரு பக்கம் கூட்டம் கூட்டமாக இவர்

Koviloor Digital Library
களிடம் வந்து சிஷ்யர்களாகிறார்கள்.

போலி இருக்கலாம் என்பதற்காக, எல்லாம் போலி என்று சொல்லிவிட முடியாது. வேறே எது போலியோ இல்லையோ, ஒரு ஸ்வாமிஜியிடம் போகிறான். ஏதோ ஒரு கஷ்டம் தீர்கிறது என்றால், வாஸ்தவத்தில் அவர் அதைத் தீர்த்து வைக்கா விட்டால்கூட, இவனுக்கு ஒரு தாப சாந்தி உண்டாவது போலியில்லையே? நிஜந்தானே? பிரஸங்கம் பண்ணுகிறபடி அவர் (சொந்த வாழ்க்கையில்) இல்லாவிட்டாலும் போகட்டும். அதைக் கேட்டதில் இவனுக்கு ஒரு தெளிவு வந்தது நிஜந் தானே? அவர் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும் – இவன் நல்லது என்று நினைத்துப் போனான், தன் அஹங்கார–மமகாரங்களை விட்டு நமஸ்காரம் பண்ணி னான். ஏதோ நல்லதையும் அடைந்தான். முடிவில் கொஞ்ச மாவது தெய்வ பக்தி பெற்று ஏதோ கொஞ்சம் மதானுஷ் டானத்தையும் எடுத்துக் கொள்கிறான். இந்தமட்டில் நல்லது தான்!

ஆனாலும் 'ஸமயாசாரம்' என்று பார்க்கும்போது என்ன ஆகிறது? இந்த ஸ்வாமிஜிகள் அனேகமாகச் சாஸ்திர ஆசாரங் களில் பெரும்பாலானவற்றைக் கழித்துக்கட்டி விடுகிறார்கள். இவர்களில் முக்காலே மூணுவீசம் பேரும் அதிகார பேதத்தை★ ஆதரிக்காதவர்கள்தான். வேறு பல ஆசார அனுஷ்டானங்களையும் காலத்துக்குப் பொருந்தாது என்று எடுத்துப் போட்டுவிட்டார்கள்தான். சாறு – சக்கை, தானியம் – உமி என்று சொல்லிக் கொண்டு, ஸமயாசார அனுஷ்டானங் களில் அவரவருக்கு எது ஸரியென்று தோன்றுகிறதோ, எது இஷ்டமாயிருக்கிறதோ, செளகரியமாயிருக்கிறதோ அது மட்டுமே சாறு, அதுதான் தானியம் என்று வைத்துக் கொண்டு பாக்கியெல்லாமே சக்கை, உமி என்று விட்டுவிடுகிறார்கள். எங்களைப்போன்ற ஸனாதனிகள் ஆசாரம், ஆசாரம் என்று சொல்லிக் கொண்டு, ஸ்பிரிட்டை (உயிரை) விட்டுவிட்டு ஸ்கெலிடனை (எலும்புக் கூட்டை) மட்டும் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று இவர்கள் சொல்லி, ட்ரெடிஷனல்

★ வர்ண – ஆச்ரமங்களைப் பொறுத்து எவரெவர் என்னென்ன செய்ய லாம், செய்யக் கூடாது என்னும் சாஸ்திரப் பாகுபாடு.

Koviloor Digital Library

மதத்தில் தொண்ணூறு பெர்சன்ட்டாக இருக்கும் ஆசார அனுஷ்டானாதிகளை விட்டுவிட்டிருக்கிறார்கள். ஆனாலும் ஹிந்துமத Parent body-யிலிருந்து வெளியேறித் தனியான சீர்திருத்த இயக்கமாகவும் இல்லாமல் இதிலேயே இருந்து கொண்டு, இவர்கள் அனுஷ்டிப்பதுதான் ஸரியான ஹிந்துமதம் என்று ஜனங்கள் பிரமை கொள்ளும்படிப் பண்ணுகிறார்கள்.

இந்த இடத்திலேதான் நான் பிரிந்து போகிற சீர்திருத்த இயக்கங்களே தேவலையென்று நினைக்கிறேன். அபிப்ராய பேதமிருந்தால் நன்றாக ஆலோசித்து பேதத்தைப் போக்கிக் கொண்டு வெளியே போகாமலிருப்பது உத்தமம். அப்படிப் போக்கிக் கொள்ள முடியவில்லையானால் மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமில்லாமல் தனியாகப் போவதுதான் ஸரி. அபிப்ராய பேதத்தையும் வைத்துக் கொண்டு, மூலஸ்தானத்தை விட்டும் போகாமல் அதிலேயே தங்கள் இஷ்டப்படியான கொள்கை களை இன்ஜெக்ட் பண்ணி, மூலஸ்தானமே தங்களுடையது தான், ட்ரெடிஷனலாக வந்தவர்கள் அதிலிருந்து வெளியே போய்விட வேண்டும் என்று பண்ணுவது கொஞ்சங்கூட ஸரி யில்லை. நாங்கள் வெளியே போவதைப் பற்றிக் கவலை யில்லை. எங்களை ரக்ஷித்துக் கொள்வதற்காகவும் இதை நான் சொல்லவில்லை. ட்ரெடிஷனல் ரிலிஜன் போச்சே என்றுகூட அழவில்லை. ஆனால் ஜனங்களின் சாச்வதமான நன்மை, சீரான அபிவிருத்தி போகிறதே என்றுதான் துக்கப்படுகிறேன்!

முன்னேயே சொன்னதுபோல வம்சாவளியாக அனுஷ் டானங்களின் அனுபவ பலம் வஜ்ரம் பாய்ந்திருக்கிற சாஸ்திர ஸம்பிரதாயங்களுக்கு நமக்கான சாச்வதக்ஷேமத்தைக் கொடுப் பதில் இருக்கிற 'வெயிட்' தனி மனுஷ்யர்கள் புதிதாகப் பண்ணிக் கொடுக்கிற ஒழுங்கு முறைகளில் இருக்கவே இருக் காது. அவர் மஹானாகவே இருக்கலாம். அனுக்ரஹ சக்தி உள்ளவராகவே இருக்கலாம். அப்படியானாலும் அவரிடம் சரணாகதி பண்ணியிருக்கிற ஏதோ சில பேரைத்தான் அவருடைய சக்தி பரிசுத்தி செய்ய முடியுமே தவிர, எல்லா ஜனங்களுக்கும் ப்ராசீன ஆசாரங்கள் காலக்ரமேண, slow and steady என்கிறபடி நிதானமாயிருந்தாலும் தளர்ச்சியில்லாமல் நிச்சயமாகச் சித்தசுத்தி தருவதுபோல் தர முடியாது. தனி

Koviloor Digital Library

மனுஷ்யர் எத்தனை நாள் சாச்வதம்? அவருக்கு அப்புறம் ஜனங்களுக்கு வழிகாட்ட அவர் ஸ்தானத்திலேயே அவருடைய சக்தியெல்லாம் இருக்கிறவராக இன்னொருத்தர் எப்படி வர முடியும்?

வழி வழியாக வந்திருக்கிற தர்மபீடங்களில் பீடாதிபதி முக்கியமில்லை. எந்தப் பீடாதிபதி வந்தாலும் போனாலும் மாறாமல் நிலையாயிருக்கிற ஸம்பிரதாயிகமான ஆசார அனுஷ்டானங்களும் தத்வங்களும் ஸித்தாந்தங்களும்தான் இங்கே முக்கியம். இவற்றைத் தாமே வழுவறப் பண்ணுவது தான் பீடாதிபதிக்குப் பெருமை தருவது. ஸாதாரண ஜீவன் ஒன்று எவ்வளவு கர்மா மூட்டையுடன், அழுக்கு மூட்டையுடன் பிறந்திருக்கிறது என்று கவனித்து அத்தனையையும் அடித்துத் துவைத்துச் சுத்தம் பண்ணவே இந்தப் பீடங்கள் சாஸ்திரங்கள் கூறும் ஏராளமான ஆசார அனுஷ்டானங்களைச் சொல் கின்றன. அது கடுமையான நெறியாகத்தானிருக்கும். வியாதி யைப் பொறுத்துத்தானே டோஸேஜ் இருக்கும்? எத்தனை டோஸும் போதாது என்றால் 'ஸர்ஜரி' என்று சஸ்திரத்தைப் போட்டு அறுக்கக்கூடத்தான் வேண்டும்! ஜனங்களின் க்ஷேமத்தை உத்தேசித்து சாஸ்திரம் இந்த சஸ்திர சிகித்ஸை கூடப் பண்ணத்தான் செய்கிறது. எத்தனையோ கர்மாக்களில் ஆசாரங்களில் போட்டுக் கட்டினாலொழிய சித்தசுத்தி வராது. அறுத்துக் கொண்டு ஓட்டம் பிடிப்பதே குறியாயிருக்கிற சித்தத் தைக் கட்டுக்குமேல் கட்டாகப் போட்டுத்தான் நிறுத்த வேண்டும்.

நவீன ஸ்வாமியார்கள், 'அதெல்லாம் வேண்டாம்; உபவாஸம் வேண்டாம்; எல்லாம் ஈச்வரப் பிரஸாதம்தான்; எதை வேணுமானாலும் தின்னுங்கள்; ட்ரெஸ்ஸில் என்ன இருக்கு? குடுமியில் என்ன இருக்கு? ஈச்வரன் மனஸைப் பார்க்கிறானே தவிர, இதுகளையா பார்க்கிறான்?' என்று சொல்லி ஏதோ கொஞ்சம் பஜனை, ஜபம், தியானம் பண்ணி னால் போதும் என்று ஒரேயடியாக 'டைல்யூட்' (நீர்க்கச்) செய்துவிடுகிறார்கள். இவர்களுடைய அன்போ, ஆதரவோ, அனுக்ரஹ சக்தியோ அல்லது நேரிலே இவர்களைப் பார்க்கிற

Koviloor Digital Library

வர்கள் இவர்களிடம் வைக்கும் பக்தி விச்வாஸமோ ஓரளவுக்கு இப்போதிருக்கிறவர்களைக் கைதூக்கி விடுகிறது என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் அவனவன் ஏகமாகக் கர்ம சேஷத்தை வைத்துக் கொண்டிருக்கும்போது இது எவ்வளவுக் குக் காப்பாற்றும்? தற்கால சாந்தியாகவோ அதற்குக் கொஞ்சம் மேலே போவதாகவோதான் முடிந்துவிடும். இவர்கள் காலத் திற்கு அப்புறம் வருகிறவர்கள், இம்மாதிரி அனுஷ்டானங்களை யெல்லாம் அழித்துவிட்ட மதம்தான் ஹிந்துமதம் என்று நினைத்து, எல்லாவற்றிலும் easy-going என்பதுபோல் மதத்திலும் மேம்போக்காக ஏதோ சில ஸாதனைகளைப் பண்ணுவதோடு நின்றுவிட்டால் நிலையான பிரயோஜனம் எதுவும் இருக்காது. ஒரு தரம் 'ராமா' என்று சொன்னால் போதும், 'ஸுகாராத்யா', 'ஸுலபாகதி:' ★, 'பகவான் ப்ரம ஸௌலப்யன்' என்று சொல்வதெல்லாம் ஜனங்கள் தமக்கு விமோசனமே இல்லையென்று விழுந்துவிடாமல் உத்ஸாஹப் படுத்துவதற்காகச் சொல்வதுதான். பகவான் மனஸ் வைத்தால் ஒரு தரம் நாமோச்சாரணம் பண்ணினால்கூடப் பரமானுக்ரஹம் பண்ண முடியுந்தான். அவன்தான் ஸகலமும் என்ற ஆழமான நம்பிக்கை வந்துவிட்டால், ஸுலபத்தில் பிடித்து விடலாம் தான். ஆனாலும் இப்படிப்பட்ட நம்பிக்கை எங்கே வருகிறது? அவனாக ஒரு க்ஷணத்தில் தூக்கிவிடுவதைக் கோடியில் ஒன்றாகத்தானே பார்க்கிறோம்? பாப கர்மா எவ்வளவு பண்ணியிருக்கிறோமோ அவ்வளவு சாஸ்திர கர்மா பண்ணித் தான் அதைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான் ஜெனரல் ரூல். அதுவும் அவன் போட்டதுதான். விதிக்கு விலக்காக எப்போதாவதுதான் நடக்கும். எல்லாருக்கும் நடக்கும், நடக்க வேண்டும் என்று விதிகளை விடுவது தப்பு!

விதிகளில் பெரும்பாலானவற்றை விட்ட பின்பும் தங்களையே ஒரிஜினல் மதஸ்தர்கள், அதன் ஸ்பிரிட்டை உள்ள படி புரிந்து கொண்டவர்கள் என்று நினைக்கப் பண்ணி ஜனங்களையும் விதி மீறிப் போகப் பண்ணுவது எத்தனை

★ லலிதா ஸஹஸ்ர நாமத்தில் வரும் பெயர்கள். ஸுகாராத்யா – (கஷ்டப் படுத்திக் கொள்ளாமல்) ஸௌக்கியமாகவே ஆராதிக்கக் கூடியவள். 'ஸுலபாகதி:' – எளிதில் அடையக் கூடியவள்.

Koviloor Digital Library

நல்ல உத்தேசத்தில் செய்தானாலும் கெடுதியைத்தான் உண்டாக்கும். 'கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?' என்கிறபடி, இவ்வாறு ஆசாரங்களை டைல்யூட் பண்ணினதில், ஜனங்கள் ஒரே நாஸ்திகர்களாகப் போகாவிட்டாலும் மேலே யும் போகாமல், மொத்தத்தில் லோகம் கீழே போய்க் கொண்டிருப்பதைத்தானே பார்க்கிறோம்? அடியோடு நாஸ்திகர்களான சிலபேரையும், ஸனாதன ஆசாரங்களிலேயே பரிபூர்ண அபிமானமுள்ளவர்களான சில பேரையும் தவிரப் பாக்கி எல்லோரும் யாராவது ஒரு ஸ்வாமிஜியை ஆச்ரயிக்கிற வர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனாலும் லோகத்தில் நல்ல தற்கில்லாதவைகள்தான் ஜாஸ்தியாயிருக்கின்றன என்றால் என்ன அர்த்தம்?

பூர்வாசாரத்தின்படிச் சிலது, ஸொந்த அபிப்ராயப்படிச் சிலது என்று கலவங்கீரை செய்கிறவர்கள் தற்காலிகமாக என்ன நன்மை பண்ணினாலும், முடிவிலே ஜனங்களுக்குக் கெடுதல் தான் உண்டாகிறது. என்ன கெடுதல்? பூர்வாசாரத்தை விட் டால் 'பதிதோ பவேத்' என்றல்லவா சொல்லியிருக்கிறது? பதிதனாகப் போவதைவிடப் பெரிய கெடுதல் என்ன இருக்கி றது?

'கதாலிஸிடி' வேண்டாமா என்கிறார்கள். எல்லாவற்றை யும் தழுவும் பரந்த மனப்பான்மை வேண்டுந்தான். ஆனால் அது முழுக்க மனஸின் விஷயமல்லவா? காரியத்தில் ஒன்றொன் றும் அதன் அமைப்பில் இல்லாவிட்டால் எப்படி நடக்கும்? ஒழுங்கு எங்கே இருக்கும்? கிரிக்கெட்டில் ஃபுட்பால் ரூலைச் சேர்ப்பார்களா? ஆசாரங்களில் குழப்பம் பண்ண மட்டும் 'கதாலிஸிடி' என்கிறார்கள்.

ட்ரெடிஷனை ஏற்றுக் கொண்டால் பூராவும் ஏற்றுக் கொள்ளணும்; விட்டால் பூராவும் விடணும். தங்களுக்குப் பிடித்ததை எடுத்துக் கொண்டு பிடிக்காததை விடுவது, அப்படியும் தாங்களே ட்ரெடிஷனல் ரிலிஜன் என்ற பிரமையை ஏற்படுத்துவது என்றால் ஸரியேயில்லை. குருவிடம் சிஷ்யன் அல்லது பதியிடம் பத்னி சிலவற்றில் சரணாகதி செய்வது, மற்றவற்றில் இஷ்டப்படி செய்வது என்றால் சிரிக்க மாட்டார்களா? அது பாபமல்லவா? குருவி

Koviloor Digital Library

டம், பதியிடம் தப்பேயிருந்தாலும் குறையேயிருந்தாலும் சிஷ்யனும் பத்தினியும் செய்கிற சரணாகதி குறையில்லாமல் இருந்தால் இவர்கள் கடைத்தேறி விடுகிறார்கள். இதேமாதிரி ஒரு ட்ரெடிஷனில் சில தோஷமான அம்சங்களே சேர்ந்து விட்டதாக வைத்துக் கொண்டாலும் அதை நம்பிச் சரணாகதி பண்ணித் 'தான்' என்பதைக் கரைத்துக் கொண்டுவிட்டால் கரையேறி விடலாம். சொந்த அபிப்பிராயத்தின் பேரில் புராதன ஏற்பாட்டை மாற்றுவது என்கிறபோது, கரைக்கப்பட வேண்டிய 'தான்'தான் தலையை நீட்டித் தன்னை ஸ்திரப் படுத்திக் கொள்கிறது! ஒவ்வொரு ஸ்வாமிஜிக்கு ஒவ்வொரு விஷயத்தில் அபிப்ராய மாறுதல் என்றால் எது ஸரி, எது தப்பு? இவற்றில் எதை எடுத்துக் கொள்வது?

நாங்களும் யஜ்ஞம் பண்ணுகிறோம் என்கிறார்கள். வேத பாராயணம் பண்ணுகிறோம் என்கிறார்கள். பண்ணாம லிருந்தால் தேவலையே என்று எனக்கு இருக்கிறது. இதெல் லாம் பண்ணுவதால்தான் ஜனங்களுக்கு இதுவே ட்ரெடிஷனல் ரிலிஜன் என்ற பிரமை ஏற்படுகிறது. இல்லாவிட்டால் இதுவும் பிரிந்துபோன ஒரு மதம் என்று விலகியிருந்து விடுவார்கள் – ஒரிஜினல் மதத்தை விட்டுப் போகப்படாது என்று உள்ளூற ஒரு பயம் இருப்பதால் யாகம் பண்ணுகிறார்கள், மணி யடித்துப் பூஜை பண்ணுகிறார்கள், அகண்ட பாராயணம் பண்ணுகிறார்களென்றால், 'அடாடா, இவர்கள் ஸனாதன ஹிந்து தர்மத்தையே நன்றாக அபிமானித்திருக்கிறவர்கள், நாமும் இதில் கலந்து கொள்ளலாம்' என்று ஜனங்களுக்குத் தைரியம் உண்டாகிறது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக நவீன ஸ்வாமிஜிகள் நல்ல ஆசாரமுள்ள வைதிகர்களையே கூப்பிட்டு ஸதஸ் நடத்தி ஸம்பாவனையும் செய்யும்போது, 'இவர்கள் நிச்சயமாக பிராசீன வழியை ரக்ஷிக்கிறவர்கள்தான்; இவர்கள் தான் அதை ரக்ஷிக்கிறவர்கள்!' என்று தோன்றிவிடுகிறது.

கிட்டே போனால் எப்படியிருக்கிறது? யஜ்ஞம், பூஜை, பாராயணம் நடத்துவது வாஸ்தவம். எங்களால்கூட முடியாத அளவுக்குப் பெரிய ஸ்கேலில் நடத்துகிறார்கள். ஆனால் இவற்றை எப்படியெப்படிப் பண்ண வேண்டும் என்று சாஸ் திரத்தில் சொல்லியிருக்கிறதோ, அந்த விதிகளுக்கெல்லாம் ரொம்பவும் மாறுதலாகப் பண்ணுகிறார்கள். முக்யமாக

Koviloor Digital Library

ஸமத்வம் என்ற பெயரில் ஸம்ஸ்காரத்தைக் கவனிக்காமல் குழப்புவதாகவும், கடுமையான கட்டுப்பாடுகளை எடுத்து விட்டு ஸௌகர்யப்படுத்திக் கொடுப்பதாகவும் மாற்றுகிறார்கள். சாஸ்திரம் சொன்ன சடங்கையே செய்கிறார்களென்றாலும் அது சொன்ன ஒழுங்கில் செய்வதில்லை. லாபரட்டரியில் போய் எக்ஸ்பெரிமெண்ட் செய்வதானால் 'இன்னின்ன மாதிரி தான் செய்ய வேண்டும்; கருவிகள் இப்படி இருக்க வேண்டும்; டெம்பரேச்சர் இப்படி இருக்க வேண்டும்; பண்ணுகிறவன் இந்த மாதிரி உடுப்புப் போட்டுக் கொள்ள வேண்டும்; லோஹம் (உலோகம்) கூடாது; ரப்பர் போட்டுக் கொள்ள வேண்டும்' என்று அதற்காக உள்ள விதிகளை அனுஸரித்தால் தானே பலன் கிடைக்கும்? இதிலே சொந்த அபிப்ராயப்படி மாற்றுவது உண்டா? சாஸ்திர கர்மாக்களும் அப்படித்தான்!

லாபரட்டரியில் கார்யம் செய்கிறவன் விதிக்குப் பயப்படுகிறான். மாறிப் பண்ணினால், கருவியே உடைகிறது; அல்லது இவன் கையை, காலைப் பதம் பார்த்து விடுகிறது. சாஸ்திர கார்யத்தை மாற்றிப் பண்ணினால் விபரீதப் பலன், இப்படி உடனே தெரியாததால் எப்படி வேண்டுமானாலும் செய்யலாமென்று துணிச்சல் உண்டாகிறது. ஸயன்ஸுக்கும் சாஸ்திரத்துக்கும் இதுதான் வித்யாஸம். ஸயன்ஸ் திருஷ்ட பலனை அது விபரீதமாகப் போவதையும் உடனே கொடுத்து விடுகிறது. சாஸ்திரம் சொல்லும் அதிருஷ்ட பலனையும், அது எதிர் மாறாகப் போவதையும் பின்னால்தான் ஊகித்து மட்டும் புரிந்து கொள்ளும்படி இருக்கிறது. ஈச்வரன் மறைந்தே விளையாடுகிற மாயன் என்றுதானே? சொல்கிறார்கள்? இத்தனை யஜ்ஞங்களும், பாராயணங்களும், லக்ஷார்ச்சனை கோடியர்ச்சனை என்று mass – பூஜைகளும் நடந்தும் லோகத்தில் உத்பாதங்களும் கலஹங்களுந்தான் பெருகிக்கொண்டு வருகின்றன என்பதிலிருந்தே நாம் ஊகித்துக்கொள்ள வேண்டியது தான். ஆசார விருத்தமாகப் பண்ணினால் பலன் கிடைக்காது என்பதற்குத்தான் இது proof.

Koviloor Digital Library

‘நவீன வேதாந்தி’கள்

ரிஃபார்ம் ரிலிஜன் என்று தனியாகப் போகாமல் நம்முடைய மதத்தினுடைய ‘நிஜ ஸ்வரூப’த்தின் custodians (காவலர்) தாங்கள்தான் என்கிறவர்களில் இன்னொரு வகையினர் ‘வேதாந்தா, வேதாந்தா’ என்று சொல்லிக் கொண்டு, பிலாஸஃபியைத் தவிரக் கர்மாக்களாக இருக்கிற எல்லாமே நம் மதத்தின் சக்கைதான் என்று தூக்கிப் போடச் சொல்கிறார்கள். வாஸ்தவத்தில் ஸாமானிய மனுஷ்யனின் தரத்தை உயர்த்தக் கர்மா இல்லாமல் முடியவே முடியாது. அதனால்தான் வைதிகானுஷ்டானங்களை விலக்கி விட்டவர்களும் ராட்டையைச் சுற்ற வேண்டும், handicrafts செய்ய வேண்டும் என்று ஓயாமல் ஏதாவது வேலை வாங்கினார்கள். திருப்பித் திருப்பிச் சொன்னதையே, எத்தனை தரம் சொன்னாலும் போதாது என்று மறுபடியும் சொல்கிறேன்: காரியம், ஓயாத உழைப்பு இல்லாமல் சித்தசுத்தி ஸாத்யமேயில்லை!

சாஸ்திரத்தில் முதலில் இவன் மனஸை அனுஸரித்து இஹலோக – ஸ்வர்க்க லோக லாபங்களுக்காகவே அதாவது இந்திரிய ஸௌக்யங்களுக்காகவே கர்மாவைக் கொடுத்திருக்கிறது: ஆனால் இந்தக் கர்மாக்களைச் செய்வதாலேயே இந்திரியங்களின் இழுப்பு கொஞ்சங் கொஞ்சமாகக் குறைகிறது. சித்தம் சுத்தமாகி மனஸானது (கார்யமில்லாமலே) தியானம் செய்யப் பழக்கப்படுத்தப்படுகிறது. கார்யமே வேண்டாம், ‘வேதாந்தா’ ‘த்யானா’ என்றால் என்ன ஆகிறது? இதை நான் சொல்வதைவிடக் கிருஷ்ண பரமாத்மாவின் வாக்கில் சொல்கிறேன்:

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மநஸா ஸ்மரந் I
இந்த்ரியார்தான் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே II

(கீதை: 3.6)

Koviloor Digital Library

அதாவது: 'காரியத்திலா ஞானம் இருக்கிறது? அதெல்லாம் வேண்டாம்' என்று கை, கால் முதலான கர்மேந்திரியங்களுக்கு வேலை கொடுக்காமல் நிறுத்திவிட்டு நேராக மனஸை சுத்த மான தியானத்தில் நிறுத்துவதற்கு ஆரம்பித்தால் என்ன ஆகிறது? அந்த மனஸ் பரமாத்மாவையா நினைக்கிறது? இல்லை.

இந்த்ரியார்தான் மநஸா ஸ்மரந்

இந்திரியங்களுக்கு வேண்டிய அல்ப ஸுகங்களைத்தான் மனஸு நினைக்கிறது. கர்மாவால் கர்மேந்திரியங்களை அழுக்கெடுத்துச் சுத்தப்படுத்திக் கொள்ளாதபோது மனஸும் அழுக்கைவிட்டு மேலே போகாதுதான். வெளியிலே இவன் பெரிய பிலாஸஃபர், தத்வஞானி, ரிஷி என்றேகூட (இப்போது பத்திரிகைகள் நிறைய ஏற்பட்டபின் எல்லாவற்றுக் கும் அதிசயோக்திதான்!) பெத்தப் பெயர் இருந்தாலும், லெக்சரிலும் புஸ்தகத்திலும் இவன் எவ்வளவு சோபித்தாலும், இப்படி மனஸிலே அழுக்கை வைத்துக் கொண்டிருப்பவனை பகவான் விமூடாத்மா – 'மஹா மூடன்' என்றுதான் சொல் கிறார். 'மூளையில்லாமல் காரியங்களைக் கட்டிக் கொண்டு அழச் சொல்கிறவர்களிடமிருந்து நம்மையும் நம் மதத்தையுமே ரக்ஷிக்கிற இவர்தான் மஹா புத்திமான்' என்று லோகத்தார் எவரைக் கொண்டாடுகிறார்களோ, அவரையே பகவான் 'விமூடாத்மா' என்கிறார். அதற்கும் மேலே இன்னொரு வார்த்தை சொல்கிறார்.

மித்யாசார:

மித்யா என்றால் நிஜம் போல இருந்து கொண்டே பொய்யாகப் போகிற வேஷம் என்று அர்த்தம். ஆசாரமே வேண்டாமென்று இருக்கிற வாய் வேதாந்தியை 'மித்யாசாரன்' என்கிறார். இவன் கர்மாவை விட்டுவிட்டான். 'மனஸ் சுத்தம் தானே எல்லாம்?' என்கிறான். ஆனாலும் இவன் மனஸ் அழுக்கிலேயே கிடக்கிறது. வெளியே வேதாந்தி போல வேஷம் போடுகிறான். இப்படி வெளியே ஒன்றாகவும் உள்ளே வேறாகவும், உயர்ந்த லக்ஷ்யத்தைப் பேசிக் கொண்டும், கீழான ஒழுக்கத்தில் போய்க் கொண்டும் இருப்பதால் 'மித்யாசாரன்'

Koviloor Digital Library

என்கிறார். 'மித்யாசாரன்' என்பதற்கு ஸரியான வார்த்தை Hypocrite. காரியம் பண்ணப் பிடிக்காத சோம்பேறித்தனம், ஓர் ஒழுக்கத்தில் கட்டுப்பட்டிருக்க பிரியமில்லாமை – இதற்காகவேதான் 'Vedanta, Vedanta' என்று சாஸ்திர கர்மாவிலிருந்து பிரித்துப் பேசுகிறார்கள். உள்ளே பார்த்தால் – இதைச் சொல்ல ரொம்ப வருத்தமாயிருக்கிறது – எந்தக் கட்டுப்பாட்டிலும் இல்லாமலும் இவர்கள் போயிருப்பதால் அனேக lapses★ இருப்பது தெரிகிறது. ஆசாரக்காரர்கள் மூடர்களாயிருக்கட்டும், ஸ்வயநலக் கும்பலாயிருக்கட்டும், இரக்கமேயில்லாத துஷ்டர்களாகத்தான் இருக்கட்டும். ஆனால், அவர்களிடம் இப்படிப்பட்ட lapses இருப்பதில்லையல்லவா? அதுதான் நெறி (discipline) என்பதன் சக்தி.

ஆகக்கூடி பலவிதமான ஆசாரச் சீர்திருத்தங்களைப் பற்றிச் சுருக்கமாகப் பார்த்தோமேயானால் பழைய ஒழுக்கத்தையும் காரியங்களையும் எடுத்துவிட்டுப் புதியதை வைத்தால், பழசை மீறிய பழக்கத்தில் புதிசையும் மீறிக் கட்டுப்பாடில்லாமல் போகிறார்கள். இவர்கள் காரியம் என்று பண்ணுவதெல்லாம் ஸ்வயலாபம், 'தான்' என்கிறதை வளர்த்துக் கொள்வது என்பதற்காகத்தான் ஆகிறது. ஆசாரங்கள் கடுமையாக இருக்கிறதென்று இளக்கி, ஃபாஷன் பண்ணினால் பலனும் இளகி ஓடியே விடுகிறது; சித்த சுத்தி ஏற்பட மாட்டேன் என்கிறது. 'காரியத்தில் ஒன்றுமில்லை; வேதாந்தா' என்றால் வெறும் சோம்பேறியாகப் போகிறான்; அப்போது மனஸ் சுத்தமாகாமல் போகிறது என்பது மட்டுமின்றி, இருக்கிற சுத்தமும் போய் அழுக்கைச் சேர்த்துக் கொள்கிறது. ஆசாரமில்லாமலிருக்கிற அனாசாரம்; ஆசாரக் கட்டுப்பாடு போனதால் கண்டதைத் தின்பது, குடிப்பது, கலஹம் செய்வது, இன்னும் மஹா பாவங்களைப் பண்ணுவது என்கிற துராசாரம்; உள்ளொன்றும் புறமொன்றுமாக ஹிபாக்ரிஸி செய்யும் மித்யாசாரம் என்பவைதான் மொத்தத்தில் விருத்தியாகி வருகின்றன.

★ தமிழில் சொன்னால் கடுமையாய் தொனிக்குமென்றே ஸ்ரீ பெரியவாள் 'lapses' என்று சொன்னதாகத் தோன்றுவதால் தமிழ்ப்படுத்தவில்லை.

Koviloor Digital Library

அறிந்தவனும், அறியாதாரும்

இப்படி எல்லா ஜனங்களையும் அதர்மப் பிரவாஹத்தில் அவிழ்த்துவிடக் கூடாது என்றுதான் பகவான் அர்ஜுனனை 'வார்ன்' பண்ணுகிறான். அதில்தான் ஆரம்பித்தேன். அப்புறம் 'ஸப்ஜெக்ட்' எங்கெங்கேயோ – ஆனால் எல்லாமும் சமயாசார ஸம்பந்தமுள்ளதாகவே – போய்விட்டது. ஜனங்கள் 'கர்ம ஸங்கிகள்'தான் – பலனில் ஆசைவைத்து கர்மாக்களைப் பண்ணுவதில் ஈடுபாடு கொண்டவர்கள்தான் நிஷ்காம்யம், நைஷ்காம்யம், த்யானம், ஞானம் என்றால், அவர்கள் இருக்கிற நிலையில் எடுபடாது என்று பகவான் சொன்னதைச் சொன்னேன். இவர்களை நல்லறிவு பெறாத 'அவித்வாம்ஸ:' என்றே சொல்லியிருப்பதையும் சொன்னேன்.

ஸரி, நல்லறிவு பெற்ற 'வித்வான்' என்ன பண்ண வேண்டும்? இப்போது சீர்திருத்தக்காரர்கள் பண்ணுகிற மாதிரி காரியங்களைக் குறைத்து ஈஸியாக்கித் தர வேண்டுமா? 'கர்மா எல்லாம் யூஸ்லெஸ்; மனஸின் Purityதான் முக்கியம்; அதனால் ஞானத்துக்கு வாருங்கள்' என்று உபதேசிக்க வேண்டுமா? முடிவிலே பகவான் இப்படித்தான் கர்மஸன்னியாஸத்தை உபதேசித்து, ஞானத்தில் எல்லாக் கர்மாவையும் பஸ்மீகரமாக்கச் சொல்கிறார். ஆனால் முடிவிலேதான்; ஆரம்பத்திலே அல்ல. ஆரம்பத்தில் வித்வான் என்ன பண்ண வேண்டுமென்கிறார்?

> ... அவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத குர்யாத்
> வித்வாம் – ஸ்ததா...

'பாரதா!' என்று அர்ஜுனனைக் கூப்பிட்டு, 'யதா அவித்வாம்ஸ: குர்வந்தி ததா வித்வான் குர்யாத்' என்கிறார். ரொம்ப விசித்ரமாகச் சொல்கிறார். வித்வான் – அதாவது,

Koviloor Digital Library

விஷயம் தெரிந்த ஞானி – எப்படிப் பண்ணுகிறானோ அந்த வழியிலேயே அவித்வானான அஞ்ஞானியும் பண்ணிப் பார்க்க வேண்டுமென்றுதான் பொதுவாக லோகமெல்லாம் சொல்வது. ஆனால், பகவான் சொல்வதற்கு அர்த்தமோ இதற்கு அப்படியே நேர்மாறாக இருக்கிறது. யதா – எவ்வாறு, அவித்வாம்ஸ: – அஞ்ஞானிகளான பொதுஜனங்கள், குர்வந்தி – செய்கிறார்களோ, ததா – அவ்வாறே, வித்வான் – ஞானியும், குர்யாத் – செய்ய வேண்டும்.

அஞ்ஞானி பண்ணுகிற மாதிரிதான் ஞானியும் பண்ண வேண்டும் என்று ஸ்பஷ்டமாகச் சொல்கிறார்!

அஞ்ஞானிக்கு இச்சா லாபத்திலேயே பற்று; அதற்காகவே சாஸ்திர கர்மாக்களைச் செய்கிறான். 'அந்த சாஸ்திர கர்மங்களையே ஞானியும் பண்ணணுமப்பா' என்கிறார். 'ஞானிக்கு இப்படிப்பட்ட இச்சை, ஆசைப்பற்று இருக்கலாமா? அதுதானே நரக த்வாரத்துக்கு வழி?' என்று கேட்டால், 'நான் அப்படிச் சொன்னேனா? ஞானியும் கர்மா பண்ணணும் என்றேனே தவிர, தன்னுடைய இச்சா பூர்த்திக்காகப் பண்ணணும் என்று சொல்லவில்லையே! ஸந்தேஹமிருந்தால் இப்போதே qualifying clause போட்டு விடுகிறேன்.

குர்யாத் வித்வான் ததா அஸக்த:

என்று 'அஸக்த:'வைச் சேர்க்கிறார். 'அஸக்த:' 'பற்றில்லாதவனாக' என்று அர்த்தம். முதலில் அஞ்ஞானியைச் சொல்லும்போது முதல் வார்த்தையாகவே 'ஸக்தா:' என்றார். 'பற்றுள்ளவர்களான' என்று ஆரம்பித்தார். சிறியதான இந்திரிய இன்பப் பயன்களில் பற்றுக்கொண்டவர்களாக அவித்வான்கள் எந்தெந்தக் கர்மாக்களைச் செய்கிறார்களோ அவற்றையே வித்வானும் இப்படிப்பட்ட பற்று இல்லாமல் செய்ய வேண்டும் என்கிறார்.

எதற்காக? ஞானி என்றால் ஞானம் அடைந்து விட்டவன் என்று அர்த்தம். ஞானத்துக்கு அப்புறம் அவன் அடைய வேண்டியது எதுவுமில்லை. அவனுக்கு எந்தப் பலனும் தேவைப்படாதபோது இந்தக் கர்மாக்கள் எதற்காக?

Koviloor Digital Library

'அதுவா? அவன் தனக்காக இப்படிச் செய்ய வேண்டும் என்று நான் சொன்னேனா, என்ன? பின்னே ஏன் செய்ய வேண்டுமென்றால் –

சிகீர்ஷு லோக ஸங்க்ரஹம்

'ஸங்க்ரஹம்' என்றால் நன்றாகப் பிடித்துக் கொள்வது; அதாவது கட்டிப் பிடித்துக் காப்பாற்றுவது. 'லோக ஸங்க்ரஹம்' என்றால் லோகத்தை இப்படிப் பரம அன்போடு கட்டிக் காப்பது – நல்வழிப்படுத்துவது. லோகம் என்றால் அஞ்ஞானிகள்தான். ஞானி லோகத்துக்கு மேலே போனவன்.

சிகீர்ஷு: – விரும்பி, 'லோகஸங்க்ரஹம் சிகீர்ஷு:' – உலகத்தை உயர்ந்த மார்க்கத்தில் கொண்டு போக வேண்டுமென்று விரும்பி.

ஞானிக்கு ஆசை இருக்கக் கூடாதுதான் என்றாலும் பகவானே அவன் மனஸு கருணை சுரக்கும்படிப் பண்ணி, 'ஐயோ, லோகம் இப்படிக் கெட்டுப்போய் கஷ்டப்படுகிறதே; இதை ஸங்க்ரஹம் பண்ண வேண்டும்' என்று ஆசைப்பட வைக்கிறான்.

அதாவது ஜனங்களை மேலே கொண்டு போவதற்காகவே தான் ஞானியும் இவர்களைப் போல சாஸ்திர கர்மாக்களைப் பண்ணிக் காட்ட வேண்டும். தன்னுடைய உச்ச நிலைக்கு அவர்களை அழைத்துக் கொண்டு போவதற்காகவே அவர்கள் இருக்கிற ஏணிப்படிக்கு இறங்கி வந்து, அவர்களுடைய கையைப் பிடித்துக் கொண்டு, 'ஸம்–க்ரஹம்' என்றபடி நன்றாக இறுக்கிப் பிடித்து மேலே ஏற்றிக்கொண்டு போக வேண்டும்.

சாஸ்திரோக்தமாக ஸாதாரண ஜனங்கள் என்னென்ன கர்மா செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் ஞானியே மாடலாக இருந்து பண்ணிக் காட்டி, அவர்களையும் பண்ண வைக்க வேண்டும். அவனுடைய ஞானத்தையும் பக்தியையும் அப்புறந்தான் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இப்போது அவர்களுக்கு அதில் ருசி வராது. அதனால் முதலில் அவர்கள் சாஸ்திரோக்த கர்மாக்களைப் பண்ணுவதற்கே, தன்னளவில் அவற்றைக் கடந்துவிட்ட ஞானியும் (ஞானி என்றால் பக்தி

Koviloor Digital Library
மானும்தான்) இவற்றைச் செய்து ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் இவன் மாதிரி ஆவதற்காகவே முதலில் அவர்கள் மாதிரி இவன் ஆகவேண்டும். மேல்நிலையில் இருக்கிற அவன் வாஸ்தவத்தில் கர்மாவில் ஒட்டாவிட்டாலும் அப்படி நடிக்க வேண்டும். (இதற்கு நேர்மாறாகத்தான் இப்போது நிஜமாக வேதாந்தத்தில் ஒட்டிக் கொண்டிருக்காதவர்களும் அப்படி நடிக்கிறார்கள்!)

அப்படியானால் ஞானிக்கு மட்டும் உள்ளொன்றும் புற மொன்றுமாக இருக்கிற 'மித்யாசார தோஷம்' ஒட்டாதா?

ஒட்டாது. வாஸ்தவத்தில்தான் அவனுக்கு உள்-புறம் என்ற பேதமேயில்லையே! எதிலும் ஒட்டாத நிலைதானே ஞானம்? அதில் தோஷம் மட்டும் எப்படி ஒட்டும்? இன்னொரு எக்ஸ்ப்ள னேஷன்: இவன் வேதாந்தி வேஷம் போடுகிறவனைப் போலத் தன்னைப் பற்றி லோகம் உசத்தியாக நினைக்க வேண்டு மென்றா துராசையில் இப்படிச் செய்கிறான்? கர்மாவைச் செய்யப் பிடிக்காத அடங்காக் குணத்தாலே அவன் ஞானி வேஷம் போடுகிறானென்றால், இவனோ நிச்சிந்தையான நிஷ்க்ரிய ஞான நிலையின் நிம்மதியிலேயே தான் பாட்டுக்குக் கிடக்கலாம் என்றில்லாமல் பாமர ஜனங்களிடம் பரம கருணை யாலல்லவா கர்மி மாதிரித் தன்னைக் குறைத்துக் காட்டிக் கொண்டு, தனக்கு வேண்டியேயில்லாத காரியங்களை இழுத் துப் போட்டுக் கொள்கிறான்? இது தியாகமே தவிர, மித்யா சாரமாக எப்படி ஆகும்?

ஸரி, இவன் எதற்காக இந்த சாஸ்திர கர்மாக்களைச் செய்ய வேண்டும்?

இவனை லோகம் ச்ரேஷ்டன் என்று நினைக்கிறது. இவ னைப் போல உயர்ந்த ஸ்தானத்திலிருக்கிறவர்கள் எப்படி நடக் கிறார்களோ, அப்படி நடந்து பார்க்க வேண்டுமென்று ஜனங் களுக்கு உள்ளூற ஓர் ஆசையுண்டு.

யத் யத் ஆசரதி ச்ரேஷ்ட: தத் தத் ஏவ இதரோ ஜந:
(3.21)

Koviloor Digital Library

ஆசை உண்டே தவிர, ச்ரேஷ்டர்கள் நடப்பது ரொம்பவும் உயர்ந்த மாதிரி இருந்தால், இவர்களால் பின்பற்ற முடியாமல், அதை அனுஸரிக்க முடியாமல் தோற்றுப் போவார்கள்; தோற்றுப் போவது தெரியக் கூடாது என்று போலியாக வேஷம் போடுவார்கள். அதனால் ச்ரேஷ்டனாயிருக்கப்பட்டவனே ஸாதாரண ஜனங்கள் இருக்க வேண்டிய, இருக்கக் கூடிய கீழ் லெவலுக்கு வந்து, அந்த லெவலின் ஒழுங்குகளை நடத்திக் காட்டுகிறான். ஞானிக்கு அது கீழ் லெவல் என்றாலும் ஸாதாரண மனுஷ்யனுக்கு அவனால் முடியக் கூடியதான சற்று உயர்ந்த லெவல்தான். சாஸ்த்ரோக்தக் கர்மா என்ற இந்த லெவலை விட்டால்தான் அவன் இன்னம் கீழ் லெவலில் பாழாய் விடுவான். இந்திரியம் இழுத்தபடிச் சிற்றின்பக் காரியங்களை மட்டுமே செய்தால் பாமர ஜனங்கள் அந்தச் சேற்றிலேயே புதைந்து போய், அப்புறம் ச்ரேஷ்டனாலுங்கூட அவர்களைத் தூக்கிவிட முடியாமல் போய்விடும். அதனால் சின்ன லாபங்களையே ஒரு நிலையில் தருவதாயிருந்தாலும், இதற்காக இந்திரியங்களை நெறி கெட்டுப் போகவிடாமல் அவற்றுக்கு இஷ்டமான பலன்களை ஒரு பக்கம் தருகிற மாதிரித் தந்துகொண்டே அவற்றை இன்னொரு பக்கம் கட்டுப்படுத்தி சுத்தி பண்ணிக் கொண்டுமிருப்பதான சாஸ்திர கர்மாக்களை ச்ரேஷ்டன் பற்றில்லாமல் பட்டுக் கொள்ளாமல் அனுஷ்டித்துக் காட்ட வேண்டும். இவனைப் பார்த்து இவன் மாதிரியே பண்ண விரும்பும் ஜனங்களாலும் இவற்றை அனுஸரிக்க முடியும். த்யானம், ஆத்மவிசாரணை பண்ண முடியாது என்கிற மாதிரிக் கர்மாக்களைப் பண்ண முடியாது என்று இல்லை!.

அடுத்த புத்தகத்தில்...

ஸமூக தனி வாழ்க்கை நெறிகள் என்கிற தலைப்பின்கீழ் கட்டுரைகள் தொடர்கின்றன.

Koviloor Digital Library

Koviloor Digital Library



சோளிங்கபுரம் கலியபெருமாள் கோயில்

Koviloor Digital Library



விகடன்
வெளியீடு

அருள் உரை

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி

சங்கராச்சாரிய ஸ்வாமிகளின்

அருள் உரை

47

விகடன்
வெளியீடு

Koviloor Digital Library

முதற்பதிப்பு: அக்டோபர், 1993

பின் அட்டை ஓவியம். சில்பி

விலை ரூ. 3

'தெய்வத்தின் குரல்' (வானதி பதிப்பகம்) மூன்றாம் பகுதியிலிருந்து தொகுக்கப் பட்டது.

ஆனந்த விகடன்,
757, அண்ணா சாலை,
சென்னை-600 002.

Koviloor Digital Library

ஸமூக, தனிவாழ்க்கை நெறிகள்

அறிந்தவனும், அறியாதாரும்

எல்லாரும் கர்மாக்களைப் பண்ணுவார்கள். அதற்கு goal மோக்ஷம், ஸம்ஸார நிவிருத்தி என்பது போல் அவர்களுக்கு அப்பீலாகாத ஏதோ ஒன்றாயில்லாமல், அவர்கள் ஆசைப் படும் லாபங்களாகவே இருப்பதால் இந்தக் கர்மாக்களைப் பண்ணுவதில் சிரமங்கள் நியமங்கள் இருந்தாலுங்கூடப் பொறுத்துக் கொண்டு பண்ணுவார்கள். இப்படிச் சிரமப் பட்டும், நியமத்துக்குக் கட்டுப்பட்டும் பண்ணுவதாலேயே கர்மாவானது இவர்கள் உத்தேசித்த பலனைத் தருவதோடு, உத்தேசிக்காத பலனாக இவர்களுடைய உள்ளத்தின் அழுக்கு களை அலம்பி, இவர்களுடைய ஆசைப் பற்றுக்களையும் குறைக்க ஆரம்பிக்கும். அப்புறம் ஐஹிகமான (இஹலோகத் துப்) பலனுக்காக இல்லாமல், ஸமூஹம் ஓர் ஒழுங்கில் நடக்க வேண்டும், குடும்பம் ஓர் ஒழுங்கில் நடக்க வேண்டும், தனி ஆள் ஒரு கட்டுப்பாட்டில் சீராக அபிவிருத்தியாக வேண்டும் என்பதற்காகவே சாஸ்திர கர்மாக்களைத் தொடர்ந்து பண்ணிக் கொண்டிருப்பார்கள். நிஷ்காம்ய கர்மா என்பது இதுதான். அதற்குப் போவதற்கு வழி காம்யமாக சாஸ்திர கர்மா பண்ணு வதுதான். பலனில் ஆசையோடு பண்ணுவதே காம்யம்.

மேல்நிலையில் உள்ளவன் – 'ச்ரேஷ்டன்' என்று சொல்லப் பட்டவன் – ஸாதாரண ஜீவனைக் காம்யமாகவாவது சாஸ்திர ஆசாரங்களுக்குக் கட்டுப்பட்டு கர்மா பண்ண வைப்பதற்காகத் தான் அவற்றைத் தானும் நிஷ்காம்யமாகப் பண்ணி வழிகாட்ட வேண்டும் என்று பகவான் உத்தரவு போடுகிறார். பாமர

Koviloor Digital Library

ஜனங்கள் 'ஸக்தர்'களாகப் பண்ணுவது என்று அவர் சொன்னதே காம்யம்; அதை வித்வான் 'அஸக்த'னாகப் பண்ண வேண்டுமென்பதே நிஷ்காம்யம்.

வித்வான் பண்ணிக் காட்டா விட்டாலும் பொதுஜனங்கள் ஏதாவது கர்மா பண்ணிக்கொண்டேதான் இருப்பார்கள் - காம்யமாக, 'அது வேணும், இது வேணும்' என்று எதையாவது காரியத்தைப் பண்ணிக் கொண்டிருக்காமல் எவனும் க்ஷணங்கூடச் சும்மா இருப்பதில்லை; ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத் - யகர்மக்ருத். ஏனென்றால், பிரகிருதி என்ற மாயை இப்படித்தான் ஸத்வ - ரஜோ-தமோ குணங்களால் ஜீவனைக் கட்டி அவனறியாமலே எதையாவது பண்ணிக் கொண்டிருக்கும்படி ஆட்டி வைக்கிறது:

காார்யதே ஹ்யவச: கர்ம: ஸர்வ-ப்ரக்ருதிஜைர் குணை:
(3.5)

ஆதலால் வித்வான் என்கிற ச்ரேஷ்டன் முன்னுதாரணமாகச் செய்து காட்டாவிட்டாலுங்கூட ஸாதாரண ஜனங்கள் தாங்களாகவே ஆசைப் பூர்த்திக்காக எதையாவது செய்து கொண்டுதானிருப்பார்கள். இதையேதான் இவர்கள் சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டுச் செய்யுமாறு வித்வான் தன் எக்ஸாம்பிளால் தூண்டுதல் தருகிறான். காம்ய கர்மாதான் 'ஆப்ஜெக்டிவ்'. அதாவது லக்ஷ்யம் என்றாலும்கூட, அதற்குப் போகிற வழி, means, தன்னிஷ்டப்படியில்லாமல் சாஸ்திரோக்தமாக மாற்றி அமைக்கப்படும்போது அதன் தன்மையே அடியோடு மாறிப் போகிறது! மட்டமாக இருப்பதே உத்தமமாக மாற்றப்படுகிறது. இச்சா பூர்த்திக்காகவே பண்ணுவதென்கிற போதும் சாஸ்திர கர்மா என்றால், 'இத்தனை மணிக்கு எழுந்திருக்க வேண்டும், ஸ்நானம் பண்ண வேண்டும், ஸத்வமாக இன்ன ஆஹாரந்தான் இத்தனை மணிக்கு அப்புறம் சாப்பிட வேண்டும், வேர்க்க விறுவிறுக்க ஹோமம் பண்ண வேண்டும், மணியடிக்க வேண்டும்' என்றெல்லாம் எத்தனை கட்டுப்பாடுகள் இருக்கின்றன? இதெல்லாம் சாஸ்திரோக்தமாக இல்லாமல் தன்னிஷ்டப்படிச் செய்யும்போது இல்லையல்லவா? நெறியில்லாமல் செய்வதாலேயே ஆசையும் அழுக்கும் அதிகமாகின்றன. அதையே நெறியோடு செய்தால் சாந்தியும், சுத்தியும் ஏற்பட

Koviloor Digital Library
ஆரம்பிக்கின்றன. தன்னிஷ்டப்படியே செய்யும்போது அஹங்காரம்தான் அதிகமாகிறது. பயபக்திக்கு அங்கே இடமேயில்லை. சாஸ்திர கர்மாவினால் இஷ்ட பலனைத் தருபவனும் ஓர் ஈச்வரன்தான் என்று காட்டி, அவனைப் பிரார்த்தித்து, அவனுக்கு அடங்கியே காம்யமானதைக் கேட்டுப் பெறச் சொல்லும்போது பயபக்தி உண்டாகி இவனைச் சுத்தி செய்கிறது.

சர்க்கரை பூசிய மாத்திரை

காம்ய பலனுக்காகவே சாஸ்திர கர்மாவைக் காட்டி ஜீவனை நல்ல வழியில் 'தாஜா' பண்ணிக் கொண்டு வருவதற்கு sugar-coated pills-ஐ (சர்க்கரை தடவிய மாத்திரையை) உதாரணமாகச் சொல்லலாம். இஷ்ட பலன்தான் சர்க்கரை மாதிரி ஜீவனுக்குத் தித்திக்கிறது. அவன் குழந்தையைப் போல அறியாதவனாயிருக்கிறான். சர்க்கரை உடம்புக்குச் சூடு என்று குழந்தைக்குத் தெரியாதது போல, இந்த ஐஹிக ஸௌக்யங்கள் ஆத்மாவுக்குக் கெடுதி என்று அவனுக்குத் தெரியவில்லை. சாஸ்திரக்காரர்களான ரிஷிகளுக்கு இந்தக் குழந்தையிடமும் கருணை. அதனால் அது கேட்கிற பெப்பர்மின்டைக் கொடுக்க நினைக்கிறார்கள். குழந்தை பெப்பர்மின்ட் என்றே நினைத்தாலும் அது உள்ளுக்குள்ளே மருந்து. உள்ளே மருந்தை வைத்து மேலே சர்க்கரையைப் பூசியிருக்கிறது. சூட்டைத் தணிக்கிற மருந்துச் சரக்கு உள்ளே நிறைய இருக்கிறது; மேலே மட்டும் கொஞ்சூண்டு சூடு பண்ணும் சர்க்கரை தடவியிருக்கிறது. இதுதான் சாஸ்திரோக்த கர்மா. இஷ்ட பூர்த்தி என்று வெளியிலே தித்திப்பாகத் தெரிகிறது, உள்ளே இந்த இஷ்டமெல்லாம் கஷ்டம்தான் என்று புரிய வைத்து, இஷ்டப்படிச் செய்யாமல் நல்ல நெறியில் கட்டுப்படுத்துகிற விவேக மருந்து இருக்கிறது. மருந்து இருப்பது தெரியாமலேதான் குழந்தை சாப்பிடுகிறது.

Koviloor Digital Library
அதனால் அது பலிக்காமல் போய்விடுமா என்ன?

இன்னொன்று: காம்ய கர்மாவைத்தான் பகவான் இங்கே சொல்கிறாரென்றாலும், சாஸ்த்ரோக்தமாகப் பண்ண ஆரம்பிக்கும்போதே, காம்ய கர்மாக்களோடு நிஷ்காம்யமாகவும் சில காரியங்களைக் கொடுத்துத் தானிருக்கிறது. ஸந்த்யாவந்தனம் போன்றவற்றைப் பண்ணுவதால் காம்யமாக இன்ன லாபம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கவில்லை; இவற்றைப் பண்ணாமல் விட்டால் பாவம், தோஷம் என்று சொல்லி, அதற்குப் பயந்துதான் பண்ண வைத்திருக்கிறது. காம்யபலன் வேண்டும் என்ற ஆசையினால், அதற்கான சாஸ்த்ரோக்த கர்மாக்களைச் செய்யும் ஜீவன் அதோடுகூடச் சொன்ன இம்மாதிரி நிஷ்காம்யமான கர்மாக்கள் ஒன்றிரண்டையும் செய்கிறான். இது இவன் சித்த சுத்தியில் பக்வப் படுவதற்கு மேலும் ஸஹாயம் செய்கிறது.

அன்று கண்ட
அபிவிருத்தியும்
இன்று காணும்
சீரழிவும்

இப்போது சில சீர்திருத்தக்காரர்கள் சொல்வது பாமர ஜனங்கள் உள்பட எவருமே சாஸ்திரோக்த கர்மாக்களைப் பண்ணாமல் ஞானி மாதிரி தத்வ விசாரம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டுமென்பது; பகவானும் சாஸ்திரங்களும் சொல்வதோ, ஞானிகூடப் பாமரன் மாதிரி சாஸ்திர கர்மாவைப் பண்ணி ஆசார—அனுஷ்டானாதிகளை நடத்திக் காட்ட வேண்டுமென்பது.

எது ஸரி என்பதற்கு ஹிஸ்டரியையும், யதார்த்தத்தையும் பார்த்தால் போதும். பகவான் சொன்னபடி செய்து கொண்டிருந்த வரையில் நம் தேசம் லோகத்துக்கே மாடலாக ஸத்ய தர்மங்களிலும், பக்தியிலும், ஞானத்திலும், கலாசார நாகரிகத்திலும், ஸமூகம் பூராவின் சீரான ஒழுங்கிலும் தலைசிறந்து இருந்திருப்பதை ஹிஸ்டரி காட்டுகிறது. இப்போது ரிஃபார்மர்

Koviloor Digital Library

கள் அபிப்ராயப்படி செய்ய ஆரம்பித்தபின் எப்படியிருக்கிறோம் என்பது தெரிந்ததே. கீதை சொன்னபடி மேலேயிருந்தவனும் கீழேயிருக்கிறவனைப் போலச் செய்து காட்டிக் கொண்டிருந்தவரையில் எல்லாரும் மேலே போனார்கள்; இப்போது கீழேயிருக்கிறவனும் மேலே போய்விட்ட மாதிரி பாவித்துக் கொண்டிருப்பதில் எல்லாரும் அதல பாதாளத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்! கட்டெல்லாம்விட்ட பரம ஸ்வதந்த்ர நிலையிலிருந்த ஞானியும் சாஸ்திரக் கட்டுப்பாட்டுப்படிச் செய்து மற்றவர்களையும் அதே போலச் செய்வித்துக் கொண்டிருந்தபோதோ தேசம் ஆத்மிகமாக மட்டுமில்லாமல், இப்போது 'ஸயன்ஸ்' என்பதில் வரும் அனேக வித்யைகள், வியாபாரம் (கடல் கடந்தெல்லாம்கூடப் போய் வாணிபம் பண்ணியிருக்கிறார்கள்) எல்லாவற்றிலும் உன்னதமாயிருந்திருக்கிறது. 'லோகம் பொய்: ஆத்மா, ஆத்மா' என்று சொல்லிக் கொண்டு ஸயன்ஸிலும், பொருளாதாரத்திலும் நாம் பிற்பட்டு நின்றதாகச் சொல்வதற்குக் கொஞ்சங்கூட ஆதாரமில்லை. துருக்கர்கள், பிரிட்டிஷ்காரர்கள் ஆகியவர்களுடைய ஆதிக்கத்தில்தான் ஹிந்து ஸமுதாயம் ஒடுங்கி இவற்றில் backward state வந்ததே தவிர, அதனுடைய மதாசாரத்தாலும் பிலாஸஃபியாலும் அல்ல★. கட்டுப்பட்டிருந்தாலே சுத்தியாகக் கூடிய ஸாமானிய ஜனங்களையும் ஸ்வதந்திரம் என்று அவிழ்த்து விட்டிருக்கும் இப்போதோ எல்லாவற்றிலும் கீழேதான் போய்க் கொண்டிருக்கிறோம். 'பாரமார்த்திகமாகக் கீழே போகிறோம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்; ஸயன்ஸில், காமர்ஸில் அபிவிருத்திதான் ஆகியிருக்கிறோம். Atom research, electronics எல்லாங்கூட கரைத்துக் குடித்து விட்டோமாக்கும்' என்று சொல்லலாம். ஆனால் நம்முடைய moral standard கீழே போய் விட்டதென்று மற்ற தேசத்தார் – இதுவரை நம் தேசத்தை தர்மபூமி என்று கொண்டாடிக் கொண்டிருந்தவர்கள் – அபிப்ராயப்பட ஆரம்பித்தபின் இவற்றில் நாம் முன்னேறி என்ன பிரயோஜனம்? 'காமர்ஸ்' ஜாஸ்தியாச்சு என்று நாம் பெருமைப்பட்டாலும் இறக்குமதி செய்கிற

★இவ்விஷயமாக அருள் உரை 37, 38 ஆகிய புத்தகங்களில் இடம் பெற்றுள்ள 'வித்யாஸ்தானம்; என்ற உரையையும், இனிவரவிருக்கும் அருள் உரை புத்தகங்களில் இடம்பெறும் 'வையம் பரவிய வைதிக மதம்' என்ற உரையையும் பார்க்கவும்.

Koviloor Digital Library

அன்னியர்கள் சொல்வதைக் கேட்டால் அவமானமாயிருக்கிறது. 'இந்த இந்தியர்கள் முதலில் காட்டுகிற 'ஸாம்பிள்' ஒன்றாயிருக்கிறது; அப்புறம் அனுப்பி வைக்கிற சரக்கு வேறாயிருக்கிறதே! நாணயமில்லாமல் நடக்கிறார்களே!' என்கிறார்கள். ஸயன்ஸ் அபிவிருத்தியில் பரஸ்பரம் தெரியாததைத் தெரிந்து கொண்டு, கூடச்சேர்ந்து ஆராய்ச்சி பண்ணுவதற்கும் நம்மை அவ்வளவாக நம்ப மாட்டேனென்கிறார்கள் என்று கேள்வி. முன் நாளில் கட்டுப்பாட்டால் ஏற்பட்ட தர்மபலம் என்கிற அஸ்திவாரத்தின் மேலேயே விஞ்ஞான வித்யைகள், வியாபாரம் எல்லாம் நல்ல பெயரோடு விருத்தியாயின. அஸ்திவார பலம் இல்லாமல் இப்போது இவற்றில் ஏற்படுவதாகச் சொல்லப்படும் முன்னேற்றம் (நிலைத்து) நிற்காது.

பூர்வாசாரங்கள் வேண்டியதில்லை என்று ஸுலபமாகச் சொல்லி, ஜனங்கள் இதை வேத வாக்காக (வேத வழி வேண்டாம் என்பதையே வேத வாக்காக) நம்பச் செய்து விட்டார்களே என்று மிகவும் துக்கமாக இருக்கிறது. வேணுமா, வேண்டாமா என்பதற்கு அதிகமாக வாதப் பிரதிவாதம் எதுவும் செய்ய வேண்டியதில்லை. நான் இத்தனை நேரம் சொன்னதெல்லாங்கூட அவசியமில்லைதான். ஒரு சின்ன விஷயத்தைக் கொண்டே முடிவு செய்து விடலாம். வியாதியஸ்தன் மருந்து சாப்பிட வேண்டுமா, வேண்டாமா என்பதற்கு விவாதம் பெரிசாகப் பண்ண வேண்டுமா? மருந்தைக் கொடுத்துப் பார்த்தால் என்ன நடக்கிறது, கொடுக்காவிட்டால் என்ன நடக்கிறது என்று பார்த்தால் போதாதா? மருந்து கொடுக்கிற மட்டில் வியாதி குறைகிறது, விட்டு விட்டால் ஜாஸ்தியாகிறது என்று பிரத்யக்ஷத்தில் தெரிகிறது. அப்போது மருந்து வேண்டத்தான் வேண்டும் என்றுதானே அர்த்தம்? பூர்வாசாரங்கள் இருந்த வரையில் தேசத்தில் எல்லாத் துறையிலும் அபிவிருத்தி இருந்தது. இதற்கு மேலாக ஒழுக்கமும் ஒற்றுமையும் இருந்தன. அவற்றை ஒழிக்க ஆரம்பத்திலிருந்து இவற்றையெல்லாமும் விரட்டியாகிறது என்பதிலிருந்தே அந்த மருந்து இல்லாவிட்டால் ஆத்மாவுக்கு வியாதிதான் என்று தெரியத்தானே வேண்டும்? ஒரு வேளை சாப்பாட்டை நிறுத்தினால், உடனே ஒய்ச்சலாக வந்தால் சாப்பிட வேண்டும் என்று தெரிகிறதோ

Koviloor Digital Library

இல்லையோ? சாஸ்திரத்தை விட்டபின் தனி வாழ்க்கை, ஸமுதாய வாழ்க்கை இரண்டிலும் நிம்மதி போன பிற்பாடும் பூர்வாசாரம் வேண்டும் என்று தெரிந்து கொள்ளமாட்டோமென்றால் என்ன பண்ணுவது? தலைவர்களாயிருக்கப் பட்டவர்கள் மாட்டேனென்கிறார்கள்!

தப்புப் பண்ணிவிட்டோமென்று ஒப்புக்கொள்வது கஷ்டந்தான் என்றாலும் ஒரேயடியாக முழுகிப் போகிற நிலை வந்த போதாவது, ஒப்புக் கொண்டு வெளியே வரவும் மற்றவர்களை வெளியில் இழுத்துப் போடவும் முயலத்தானே வேண்டும்? இன்னம் முழுகியே போய் விடவில்லை. அதனால்தான் இதை நான் சொல்லி, நீங்கள் கேட்டுக் கொண்டாவது உட்கார்ந்திருப்பது! கேட்டது போதாது. புயல் வருகிறது என்று weather forecast கேட்டால் மட்டும் பிரயோஜனமில்லை. அது நம்மைப் பாதிக்காமலிருக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். Weather-proof ஆக, தர்ம ரக்ஷையாக, கவசமாக இருப்பது பூர்விகர்களின் ஸமயாசாரம்தான். ஆகையால் இதைக் கேட்டதற்கு லக்ஷணம் இனிமேலாவது கேட்டபடிப் போவதற்குப் பிரயத்தனப்படுவதுதான்.

சிகாம் ஸூத்ரம் ச புண்ட்ரம் ச ஸமயாசாரமேவ ச ।
பூர்வை: ஆசரித: குர்யாத் அந்யதா பதிதோ பவேத் ॥

பதிதபாவனன் என்று பகவானைச் சொல்கிறோம். 'பதிதபாவன் ஸீதாராம்' என்பதாவது காந்தியால் நின்றிருக்கிறது (தேசத்தில் நிலவுகிறது). அந்த ராமன் ஸகல கார்யமும் சாஸ்திரத்தைப் பார்த்துப் பார்த்தேதான் செய்தான். அந்த வழியிலிருந்து நாம் அடியோடு வழுக்கி விழுந்து பதிதர்களான பின் அவன் நம்மை பாவனப்படுத்துவது என்றில்லாமல், அவனை நாம் அவ்வளவு வேலை வாங்காமல், இப்போதிலிருந்தே நம்மை முன்னோர்களின் நெறியில் அவன் தூக்கி விட்டு ரக்ஷிக்கும்படியாகப் பிரார்த்தனை செய்வோம்.

Koviloor Digital Library

ஒற்றையடிப் பாதை

இன்னார், இன்ன காலத்தில் ஏற்படுத்தினார்கள் என்றே தெரியாமல் நம்முடைய ஆசாரங்கள் வந்திருக்கின்றன. ராமானுஜர், மத்வர், சைதன்யர் என்று நமக்குப் பெயர் தெரிந்தவர்கள் ஒரொரு காலத்தில் ஏற்படுத்தின ஸம்பிரதாயத்திலிருப்பவர்களும் பின்பற்றுகிற ஆசாரங்களில் பெரும்பாலானவை இப்படிக் காலம் தெரியாததாக, கர்த்தா தெரியாததாகத்தான் இருக்கின்றன. மற்ற மதங்களைப் பற்றித் திட்டவட்டமாக இன்னார், இன்ன காலத்தில் ஏற்படுத்தின ஆசாரம் என்று தெரிவது போல நமக்கு இல்லை.

அந்த மதங்கள், இந்த இன்ஜினீயர் இந்த வருஷத்திலே போட்டார் என்று சொல்லக்கூடிய தார் ரோடுகள் மாதிரியிருக்கின்றன வென்றால், நம் மதம்?

இது ஒற்றையடிப் பாதை மாதிரியிருக்கிறது? ஒற்றையடிப் பாதையை யார் எப்போது போட்டார்கள்? சொல்லத் தெரியவில்லை. மேல் பார்வைக்குத் தார் ரோட் உசத்தியாயிருக்கிறது. ஆனால் யோசனை பண்ணிப் பார்த்தால் தார் ரோட்டைவிட ஒற்றையடிப்பாதைதான் பல விஷயங்களில் மேல் என்று தெரிகிறது. தார் ரோடும் கொண்டுவிடாத இடத்துக்கு, இந்த ஒற்றையடிப்பாதைதானே கொண்டு சேர்க்கிறது? ஜனங்கள் நடக்க நடக்கத் தார் ரோட் ரிப்பேராகி வருஷா வருஷம் மராமத்து பண்ண வேண்டியிருக்கிறது. ஒற்றையடிப் பாதையோ நடக்க நடக்கத்தான் இன்னும் நன்றாக ஆகிறது. ரிப்பேர் என்ற பேச்சே கிடையாது. அதேபோல ஆக்ஸிடென்டும் தார் ரோட்டில் தானேயன்றி, ஒற்றையடிப் பாதையில்

Koviloor Digital Library

உண்டோ? மேலே வழியில்லை என்று blind alley-யாகச் சில தார் ரோட் மொட்டையாக முடிகிற மாதிரி எந்த ஒற்றையடிப் பாதையாவது முடியுமா? நன்றாகத் திறந்து விட்ட மார்க்கம், கூட்டங் கூட்டமாகப் பூர்விகர்கள் போயே புல் பூண்டு இல்லாமல் பாலிஷ் ஆன மார்க்கம், ஆக்ஸிடென்டே இல்லாத மார்க்கம், தார் ரோட் மாதிரிப் பார்க்கப் பகட்டு இல்லா விட்டாலும், பரம ஸௌகர்யமாக, நிதானமாகக் கால் நடையிலேயே பரமாத்மாவிடம் கொண்டு விடுகிற மார்க்கம் – இப்படிப் பட்ட ஒற்றையடிப் பாதைதான் நம்முடைய பூர்வாசாரம். 'தார் ரோடானால் கார் ஸவாரி பண்ணிச் சுருக்கப் (விரைவில்) போய்ச் சேர்ந்து விடலாமே' என்றால், ஒற்றையடிப் பாதையிலோ அப்படிச் சுற்றிக் கொண்டு போகாததால், குறுக்கு வழியில் நடந்தே, அதே நேரத்தில் ஆக்ஸிடன்ட் ஹேதுவுமில்லாமல் போய்ச் சேர்ந்து விடலாம். ரோடே போட முடியாத இடங்களில் – காட்டிலே, மலையிலேகூட – இதுதான் மார்க்கமாக இருக்கிறது.

ஆசாரத்தால்தான் டிஸிப்ளின் எனும் மனநெறி ஏற்படுகிறது. ஆசாரம் வெளிவிஷயம் என்பது சுத்தப்பிசகு. அதனால்தான் மனஸில் உத்தமமான பண்பும், உயர்ந்த கட்டுப்பாடும் உண்டாகிறது. மனுஷ்யனின் மனநெறி நன்றாயிருந்து விட்டால் அதன் சக்தி ஸாமான்யமானதில்லை. அது இவனுடைய 'நேச்சர்' என்னும் இந்திரிய வேகங்களை அடக்கியாள்வது மட்டுமில்லை; வெளி 'நேச்சரை'யே அடக்கியாண்டு விடுகிறது. பிராமணன் அத்யயன ஆசாரத்தை அனுஷ்டித்தால் அதற்காகவே மும்மாரிகளில் ஒன்று பெய்கிறது என்பது தமிழ் மூதுரை: வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை.

இப்படியே பதிவ்ரதைகளின் கற்பு நெறியினால் இயற்கை இன்னொரு மழையைப் பெய்கிறது என்று சொல்கிறது; மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழை

இதையே இப்போது பகுத்தறிவாளர்களும் கொண்டாடும் திருக்குறளும் சொல்கிறது:

தெய்வம் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

Koviloor Digital Library

ராஜா நீதி நெறிப்படி ஆட்சி பண்ணுவதும் ஒரு மழையை வரவழைத்து விடும்:

நீதி மன்னர் நெறியினுக்கோர் மழை

இதற்கு மறுநிசையில், இவர்கள் நெறி தப்பினால் இயற்கையும் கன்னா பின்னா என்று பண்ண ஆரம்பிக்கும்.

வள்ளுவரே சொல்கிறார்: ராஜா நீதிமுறை தப்பினால் பிராமணனும் தன் ஆசாரமான அத்யயனத்தை மறந்து விடுவான்: அறுதொழிலோர் நூல் மறப்பர். ஒருத்தன் முறை தப்பினால் மற்றவர்களும் முறை தப்பிப் போய்விடுவார்களென்று எச்சரிக்கிறார். இப்படி மனுஷ்யனுக்கு மனுஷ்யன் மனநெறி கெட்டுப்போவதால் பாதகமான பலன் தொடர்ந்து போவது மட்டுமில்லை. ராஜா தன் ஆசாரத்தை விட்டால் பால் வளமும் குன்றி விடும்; ஆ பயன் குன்றும் என்று 'தெய்வப்புலவர்' என்னும் திருவள்ளுவர் சொல்கிறார். இதற்குப் பகுத்தறிவு பதில் சொல்ல முடியாது.

மாற்ற முடியாதவை என்கிற Natural Forces-ம் (இயற்கைச் சக்திகளும்) மனுஷ்யனின் மனநெறிக்கு அடங்கியவைதான்.

ஒரே ஈச்வரனின் தர்ம ஸ்வரூபம்தான் (வெளி) இயற்கையில் இருக்கிற மஹத்தான ஒழுங்குக் கட்டுப்பாடு, மனுஷ்ய மனஸின் தர்மக் 'கட்டுப்பாடு இரண்டாகவும் ஆகியிருப்பது. இதிலே மனுஷ்யன்தான் மனமறிந்து மனஸின் தர்மத்தை உண்டாக்கிக் கொண்டு, அதில் ஈச்வர ஸான்னித்யத்தை வரவழைத்துக் கொள்ள முடியும். அந்தத் திவ்ய சக்தியால்தான் (வெளி) இயற்கையையும் இவன் கட்டியாள முடிவது.

நெறிதான் ஸூர்யனை, சந்திரனை, வாயுவை, gravity-ஐ ஆர்டரில் நிறுத்தி வைத்திருக்கிறது; 'ஃபிஸிக்ஸ்' மட்டுமில்லை. மனஸ் நன்றாயிருந்தால்தான் இவை லோகானுகூலமாக நன்றாயிருக்கும். ஜனங்கள் மனஸ் கெட்டுப் போனால் இயற்கையிலும் உத்பாதங்கள் ஜாஸ்தியாகும் என்று 'சரக ஸம்ஹிதை' என்ற ஆயுர்வேத சாஸ்திரம் சொல்கிறது.

நெறியில் சிறந்தவர்கள் என்னென்ன அற்புதங்கள் பண்ணி

Koviloor Digital Library

னார்கள் என்று கதை புராணங்களில் எத்தனையோ பார்க்கி றோம். 'பெய்யெனப் பெய்யும் மழை' என்கிற மாதிரியே 'பாய் எனப் பாயும் அக்கினி'யைப் பற்றிக் கண்ணகி கதை சொல்கிறது. அதே மதுரையில் ஞானஸம்பந்தரும், அவர் தங்கி யிருந்த மடத்திற்குச் சமணர்கள் வைத்த நெருப்பு, அவர்களை ஆதரித்த பாண்டிய ராஜாவையே (இறுதியில் அவன் நல்வழிப் படுவதற்கு ஆரம்ப தண்டனையாக) தாக்க வேண்டும் என்று ஈச்வரனைப் பிரார்த்தித்தவுடன் அவனிடம் வெப்பு நோய் உருவில் போய்ச் சேர்ந்தது.

Action and reaction are equal and opposite (செயலும் பிரதிச் செயலும் ஸமசக்தி வாய்ந்ததாகவும் எதிரிடையானதாகவுமிருக் கும்) என்ற 'ந்யூடன் லா' எல்லாக் கார்யங்களையும் பற்றின 'கர்மா தியரி'யை அடிப்படையாகக் கொண்டது என்பது மட்டுமில்லை; எண்ணத்தின் பிரதி பலனையும், மன நெறியின் சக்தி மற்ற மனங்களின் மீதும் மட்டுமின்றி 'நேச்சுரல் ஃபோர்ஸஸ்' மீது பிரதி விளைவுகளை உண்டாக்குவதையும் அடிப்படையாகக் கொண்டதுதான். Mental plane, metaphysical plane, physical plane (மன மட்டம், பௌதிகாதீதமான ஆத்மிய மட்டம், பௌதிக மட்டம்) மூன்றையும் கோத்து நம் மதத்தில் சொன்னதை physical plane-ல் (பௌதிக மட்டத்தில்) மட்டும் சொல்வதே ந்யூடன் லா. 'ரியாக்ஷன் ஆப்போஸிட்டானது, (பிரதிச் செயல் எதிரிடையானது) என்று அவர் சொன்னது நல்லதற்கு எதிர்விளைவாக, கெட்டதும், புண்யத்துக்குப் பிரதி யாகப் பாபமும் உண்டாகும் என்று அர்த்தம் கொடுக்காது. பின்னே 'ஆப்போஸிட்' என்று என் சொன்னாரென்றால், ஒரு பந்தைச் சுவர் மேல் எறிந்தால், அது அதே விசையுடன் 'ஆப்போஸிட் டைரக்ஷ'னில் (எதிர்திசையில்) திரும்பி வருகி றாற்போலத்தான் physical plane-ல் எல்லா ரியாக்ஷனும் இருப்ப தாலேயே! நாம் செய்த நல்லது (புண்யம்) எப்படி வெளியிலே பரவுகிறதோ அப்படியே வெளியிலிருந்து நமக்கு நல்லது (புண்யம்) திரும்புகிறது; கெட்டதும் (பாபமும்) இப்படியே என்றுதான் அதற்கு அர்த்தம்.

வெறும் physical plane-லேயே ஜட இயற்கை என்கிற வெளி நேச்சர் அடங்கியிருந்ததானால் ஸூர்யன் எப்போதோ குளிர்ந்து போயிருக்கும் என்று ஸயன்டிஸ்டுகளே சொல்கிறார்

Koviloor Digital Library

கள். எப்படியோ அதில் உஷ்ண சக்தி ஊறிக் கொண்டேயிருக்கிறது என்று சொல்லி இதன் காரணத்தைப் பலவிதமாக ஊஹம் செய்கிறார்கள். ஆதிகாரணம் ஈச்வர சக்திதான். அது தான் இந்தப் பிரபஞ்ச தர்மத்துக்காக (லோகங்களின் நெறியான போக்குக்காகவும் வாழ்க்கைக்காகவும்) ஸூர்யனில் குறையாத உஷ்ண சக்தியை ஊட்டிக் கொண்டேயிருக்கிறது. ஸயன்டிஸ்ட்கள் ஒன்றொன்றாகக் கேள்வி கேட்டுக் கொண்டு காரணங்களைக் கண்டுபிடித்துக்கொண்டே போனாலும் கடைசியில் ஸயன்ஸினால் காரணம் சொல்ல முடியாத ஓர் 'ஆரிஜினி'ல் (தோற்றுவாயில்) தான் போய் முட்டிக்கொண்டு நிற்கிறார்கள். ஐன்ஸ்டைன் மாதிரி ரொம்பப் பெரியவர்கள் அதுதான் ஈச்வர சக்தி என்று நமஸ்காரம் பண்ணுகிறார்கள். மனுஷ்ய மனநெறி, மனித வாழ்வின் ஒழுங்கு ஆகியனவும் அதே சக்தியுடைய தர்மத்துக்கு இன்னொரு ரூபம்தானாகையால், மனநெறியே இயற்கையையும் ஸாதகமாகவோ பாதகமாகவோ ஆக்குகிறது.

விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் 'பலச்ருதி'யில் பகவானை நேச்சர் என்கிற ஜடப் பிரபஞ்ச தர்மம், மனுஷ்ய மனநெறியை உண்டாக்கும் மதாசார தர்மம் இரண்டுக்கும் மூலமாக ரொம்ப அழகாகச் சொல்லியிருக்கிறது. தரிப்பது (தாங்குவது) தர்மம். வெட்ட வெளியிலே விழாமல் தொங்கிக் கொண்டிருக்கிற நக்ஷத்ரங்களையும், திக்குகளையும் பூமியையும், உருண்டையான பூமியிலிருந்து வழியாமல் கொட்டாமல் ஸமுத்ரத்தையும் ஸூக்ஷ்மமாகத் தரிக்கும் தர்ம ஸ்வரூபம் பகவானே என்று அதில் ஒரு ச்லோகத்தில் சொல்லியிருக்கிறது:

த்யௌ: ஸ சந்த்ரார்க-நக்ஷத்ரா கம் திசோ பூர்-மஹோததி: ।
வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந: ॥

வாஸுதேவனுடைய வீர்யம்தான் அண்ட கோளத்தையும், பூகோளத்து ஸமுத்ரத்தையும் தாங்கித் தரிக்கிறது என்று இங்கே சொல்லிவிட்டு, அப்புறம் மனுஷ்யன் என்ற சைதன்யப் பிரபஞ்சத்தைச் சேர்ந்த இந்த்ரியம், மனஸ், புத்தி, பிரத்யேக குணம், தேஜஸ், பலம், தைர்யம், க்ஷேத்ரம் என்ற சரீரம், அதிலே அறிவாயிருக்கிற க்ஷேத்ரக்ஞன் என்ற ஆத்மா எல்லாமே வாஸுதேவ மயமானது என்று வர்ணிக்கப்படுகிறது.

Koviloor Digital Library

இந்த்ரியாணி மநோ புத்தி: ஸத்-த்வம் தேஜோ பலம் த்ருதி: ।
வாஸுதேவாத்மகான்-யாஹு: க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞ ஏவ ச ॥

ஜடப் பிரபஞ்ச வஸ்துக்களை பகவானே நேராகச் சேர்த்துப் பிடித்து ஸம்பந்தப்படுத்தி தர்ம நெறியில் வைத்திருக்கிறான். சைதன்யமான ஜீவப் பிரபஞ்சத்திலோ மனஸ் என்று ஒன்றைத் தந்து, அதற்கு ஸ்வதந்திரம் தந்து ஆட்டம் போட விட்டு, ஜீவன் தானாகவே அதை நெறிப் படுத்திக்கொள்கிற ரீதியில் சாஸ்திரங்களையும் கொடுத்து அதில் ஆசாரத்தை முதலாவதாக வைத்திருக்கிறான் என்பதை அடுத்த ச்லோகம் உணர்த்துகிறது. இத்தனை நாழி நான் சொன்ன 'ஆசாரம்' என்ற விஷயத்துக்கு முத்தாய்ப்பு வைப்பதாக அந்த ச்லோகம் இருக்கிறது:

ஸர்வாகமாநாம் ஆசார: ப்ரதமம் பரிகல்பதே ।
ஆசார-ப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபு-ரச்யுத: ॥

'ஸர்வ ஆகமங்கள்' என்கிற ஸகல சாஸ்திரத்துக்கும் ஆசாரமே முதலானதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; ஆசாரத்திலிருந்து உண்டாவதே தர்மம்; அந்தத் தர்மத்துக்குப் பிரபு அச்யுதனான 'பகவான்' என்று அர்த்தம். அச்யுதன் என்றால் அசங்காமல் 'ஸ்டெடி'யாக இருக்கிறவன். தர்மம் என்ற அறநெறி ஸ்டெடியாக இருக்க வேண்டியதல்லவா?

ஜீவப் பிரபஞ்சத்தின் ஆசார வழியாய் உண்டாகும் தர்ம நெறியையும், ஜடப் பிரபஞ்சத்தின் சீரான ஒழுங்கையும் இப்படி இணைத்துக் கொடுத்திருக்கிறது. அதாவது நம்முடைய ஆசாரத்தால்தான் நம் சொந்த வாழ்க்கை, நம் ஸமூஹ வாழ்க்கை இவை மட்டுமின்றி லோக வாழ்க்கையே நல்ல முறையில் அமையும். இதை நவீன மனப்பான்மையுள்ளவர்கள் எல்லாரும் புரிந்துகொள்ளும்படி அந்த பகவான், வாஸுதேவன், அச்யுதன் அருள் செய்ய வேண்டும். ஆசாரங்களிலேயே தர்மம் பிறப்பதால் தர்மத்தின் பிரபுவான பகவான் ஸதாசாரம் தழைக்கும்படியாக அனுக்ரஹிக்க வேண்டும்!

Koviloor Digital Library

மதாசாரத்தின் உட்பிரிவுகள்*

'சிகாம், புண்ட்ரம், ஸூத்ரம்' என்று சொன்ன* மூன்று விஷயங்களும் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவைதான். மதாந்தரங்களில் இவையில்லை. ஆனதால் ஹிந்து மதத்துக்குள்ளேயே வெவ்வேறாயுள்ள பிரிவுகளை ஒப்புக்கொண்டு, இவற்றில் பிறந்தவர்கள் தங்கள் தங்கள் முன்னோரின் பிரிவுக்குரிய ஆசாரத்தையே பின்பற்ற வேண்டும் என்று ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது.

அப்போது ஒரு கேள்வி வருகிறது. ஹிந்து மதம் வேதமதம் தான். அதற்கு முதல் ஆதாரம் ச்ருதி என்ற வேதம்; அடுத்தபடியான ஆதாரம் அந்த வேதத்தை ஆதாரமாகக் கொண்டே அதில் சுருக்கமாகவும், மறைமுகமாகவும், குறிப்பாகவும் (hint ஆகவும்) சொல்லியுள்ளவற்றை விளக்கி வைக்கிற ஸ்ம்ருதி என்ற தர்ம சாஸ்திரம். ஆக, வேதம்தான் (இந்த மதத்துக்கு) மூச்சு. இந்த வேதத்தின் பரம தாத்பரியம் என்ன என்பதிலே ஏற்பட்ட வித்யாஸத்தால்தான் இதற்குள் பல பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. த்வைதம் என்று ஒருத்தர் நிர்தாரணம் பண்ணுகிறார்; அத்வைதம் என்று இன்னொருத்தர், இரண்டுமில்லை விசிஷ்டாத்வைதம், சுத்தாத்வைதம், த்வைதாத்வைதம் என்றெல்லாம் பலபேர் பலவிதமாக முடிவு பண்ணுகிறார்கள்.

★ இது முந்தைய உரையோடு தொடர்ந்து பெரியவர்கள் அருளியது. அனைவரும் முன்னோர் வழி செல்ல இறைவனைப் பிரார்த்தித்தவுடன் அதோடு உரை பூர்த்தியானது போல நிறுத்திவிட்டு, மீண்டும் ஏதோ தோன்றியது போலவே தொடர்ந்தார்கள்.

* அருள் உரை 45-46-ஆம் புத்தகங்களில் இடம்பெற்றுள்ள பிறந்த குலாசாரமே உய்நெறி என்கிற உரை.

Koviloor Digital Library

வைதிக மதத்தில் எல்லா தெய்வமும் ஒரே பரமாத்மாதான் என்று ஒருத்தர் சொல்கிறார். இன்னொருத்தர் விஷ்ணுதான் பரமாத்மா, மற்ற தெய்வங்களில்லை என்கிறார். வேறொருவர் இதேமாதிரி சிவனைச் சொல்கிறார். எல்லாரும் தாங்கள் சொல்வதுதான் வேதத்தின் ஸரியான அபிப்ராயமென்கிறார்கள். 'த்வைதம், அத்வைதம் என்றெல்லாம் பெயர் கொடுத்தாலும், இது sub-titleதான். நாங்கள் வேதமதம் என்பதுதான் title' என்று அவரவரும் சொல்கிறார்கள்.

இதிலிருந்துதான் கேள்வி வருகிறது. வேதமதத்தை விட்டு வேறு மதத்துக்குப் போனால்தான் தப்பா? பதிதனாகிறானா? அல்லது ஒரே வேத மதத்திலேயே இருக்கிற ஒரு பிரிவிலிருந்து அதிலே பிறந்தவன் இன்னொரு பிரிவுக்குப் போனாலும் பதிதனாகிற தோஷம் வருமா?

ச்லோகத்தில் வைதிக ஸமயத்தில் மட்டுமேயுள்ள சிகை, புண்ட்ரம், ஸூத்ரம் இவற்றைச் சொல்லி, அப்புறம் ஸமயாசாரத்தையும் சொல்லி, இவையெல்லாவற்றிலும் ஒருவன் பூர்விகரின் ஆசாரத்தைத்தான் கடைப்பிடிக்க வேண்டும்; இல்லாவிட்டால் பதிதனாகிறான் என்று ஸ்பஷ்டமாக இருக்கிற போது, ஹிந்து மதத்திலேயே ஒரு பிரிவிலிருந்து இன்னொன்றுக்குப் போகலாமா என்பது ஸரியில்லைதான். ஆனாலும் இப்படிக் கேட்பது அடியோடு தப்பான விதண்டாவாதம் என்று தள்ளிவிட முடியாது. கேட்பவர்களின் ஆர்க்யுமென்டிலும் நியாயமிருக்கிற மாதிரித் தோன்றுகிறது. அதனால் அதைக் கேட்டு, தீர்க்கமாக ஆலோசனை செய்துதான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆர்க்யுமெண்ட் என்ன? 'மதாந்தரங்கள் என்றால் அவை வேதத்தை ஆதாரமாக, ப்ரமாண நூலாகக் கொள்ளாதவை. பைபிள், குரான், த்ரிபிடகம், ஃஜென்டோவஸ்தா, க்ரந்த ஸாஹேப், ஓல்ட் டெஸ்ட்மெண்ட்* என்று ஏதோ ஒன்றைத்தான் அவை ஆதார க்ரந்தமாகக் கொண்டிருக்கின்றன. ஆகையால் வேதமதம் என்பதில் பிறந்துள்ள நாம் அவற்றிலொன்றுக்குப் போவது தப்பு. ஆனால், நாம் இந்த வேத மதத்தை

* முறையே கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம், பார்ஸி மதம், ஸீக்கிய மதம், யூத மதம் முதலியவற்றின் ஆதார சாஸ்திரங்கள்.

Koviloor Digital Library

விடாமலே இதில் ஒரு பிரிவிலிருந்து இன்னொன்றுக்குப் போனால் எப்படித் தப்பு? இந்தப் பிரிவுகள் தோன்றுவதற்கு முந்தி எப்படியிருந்தது? நீங்களே இதைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறீர்கள்? 'மாறுபட்ட எல்லா ஹிந்துமத ஸித்தாந்தங்களின் அபிப்ராயத்துக்கும் வேதம் ஒவ்வொரு ஸ்டேஜில் இடம் கொடுக்கிறது. த்வைதம்-விசிஷ்டாத்வைதம்-அத்வைதம், சைவம்-வைஷ்ணவம் என்றெல்லாம் தனித்தனி ஸம்ப்ரதாயங்களாகப் பிரிவதற்கு முன்னாலும் தன்னுடைய பக்குவ ஸ்திதியில் ஒருவர் எந்த ஸ்டேஜில் இருந்தாரோ, அதைப் பொறுத்துத் தத்வரீதியில் த்வைதியாகவோ, அத்வைதியாகவோ, இன்னொன்றாகவோ, இதே மாதிரித் தெய்வ உபாஸனை என்று வரும்போது சிவ பக்தராகவோ, விஷ்ணு பக்தராகவோ, அம்பாள் பக்தராகவோ தம் பாட்டுக்கு இருந்துகொண்டுதான் இருந்தார். ச்ருதி, ஸ்ம்ருதிகளைப் பார்த்தால் இது ஒன்றுதான் தத்வம், இது ஒன்றுதான் தெய்வம் என்று முடிவுகட்டி எல்லாருக்கும் பொதுவாக எதையும் சொல்லியிருக்கவில்லை. ஆதலால் பிரிந்து போகாமலே தமக்குக் 'கன்விக்ஷன்' உள்ள தத்வத்தை அனுஸரித்துக் கொண்டும், தமக்கு அப்பீலாகிற தெய்வத்தை உபாஸித்துக் கொண்டும் ஒரே ஸம்பிரதாயமாகத் தான் ஹிந்துக்கள் எல்லோரும் இருந்திருக்கிறார்கள். ஸம்ஸ்காரங்களிலும், ஆசாரங்களிலும் எல்லாரும் தர்ம சாஸ்திரப் படி ஒரே மாதிரிதான் அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள். ஒரே குடும்பத்திலேயே இருந்தவர்கள்கூட வெவ்வேறு தத்வ ஸித்தாந்தத்தை அனுஸரித்துக் கொண்டும், அவர்களில் ஒருவர் சிவபூஜை பண்ணுகிறவராகவும், இன்னொருவர் விஷ்ணு பூஜை பண்ணுகிறவராகவும் இருந்திருக்கிறார்கள். ச்ரௌத ஸ்மார்த்த★ கர்மாக்களான பஞ்ச மஹாயக்ஞங்கள், நாற்பது ஸம்ஸ்காரங்கள், ஸந்த்யாவந்தனம் முதலியவற்றில் வித்யாஸமில்லாமல் எல்லாரும் ஒரே போலப் பண்ணி வந்தார்கள். பிற்காலத்தில்தான் ஸித்தாந்தம், தெய்வம் என்பதாக வேறு வேறு பிரிவுகளானது' என்றெல்லாம் நீங்களே சொல்லியிருக்கிறீர்களே! ஆகையால் இப்போது த்வைதியாகப் பிறந்திருக்கிற ஒருத்தனுக்கு அத்வைதத்தில்தான் 'கன்விக்ஷன்' என்றால் அவன் அப்படி மாறக் கூடாதா? சிவபூஜையே பண்ணி வருகிற

★ ச்ருதியைத் தழுவுவது ச்ரௌதம்; ஸ்ம்ருதியைத் தழுவுவது ஸ்மார்த்தம்.

Koviloor Digital Library

ஒரு குடும்பத்தில் பிறந்த ஒருவனுக்கு விஷ்ணுவிடம்தான் பக்தியிருக்கிறதென்றால் அவன் அகத்துப் பூஜையை விட்டு விட்டு விஷ்ணுவைப் பூஜை பண்ணினால் தப்பா? இந்தப் பிரிவுகள் பிற்காலத்தில் ஏற்படுவதற்கு முன் ஒருவனுக்கு இப் படிப்பட்ட ஸ்வதந்திரம் இருந்தது என்பதால் இப்போதும் இப்படி வேத மதத்துக்கு விரோதமாகப் போகாமல், அதற் குள்ளேயே மனஸ்ஸாக்ஷிப்படி குலாசாரத்தை விட்டு வேறுவித மாகச் செய்தால் அது எப்படித் தப்பாகும்?'

இதற்கு மேலேயும் கேள்வி போகிறது; நானே சொன்னதை வைத்தே என்னை மடக்குகிறார்கள்! 'சங்கராச்சாரியார் தம் ஸித்தாந்தப்படிப் போகிறவர்களை வேத ஸம்பிரதாயத்தில் புதுப் பிரிவு என்றே நினைக்கவுமில்லை, வைக்கவுமில்லை. இதற்கு அத்தாட்சியாக அதுவரை ஹிந்துக்களுக்கு இருந்து வந் திருக்கிற பொதுப் பெயரான 'ஸ்மார்த்தர்' என்பதேதான் இன்றுவரை அவரை ஆசார்யராகக் கொண்டிருக்கிறவர்களுக் கும் பெயராக இருக்கிறது. ராமானுஜரைச் சேர்ந்தவருக்கு ஸ்ரீவைஷ்ணவர் என்றும், மத்வரைச் சேர்ந்தவர்களுக்கு மாத்வர் என்றும், இப்படியே மற்ற ஸம்பிரதாயத்தவர்களுக்கு ஒவ்வொரு தனிப்பெயரும் ஏற்பட்டிருப்பதுபோல் சங்கரரைச் சேர்ந்தவர்களுக்கு இல்லாமல், 'ஹிந்துவாகப் பிறந்த எல்லோ ருக்கும் பொதுவான தர்ம சாஸ்திரங்களைப் பின்பற்றுகிறவன்' என்ற அர்த்தம் கொண்ட 'ஸ்மார்த்தர்' என்பதுதான் பெயரா யிருக்கிறது. அவர் அவருக்கு முற்பட்ட சாஸ்திரங்களில் சொல்லியுள்ள ஆசார, அனுஷ்டான, ஸம்ஸ்காரங்களையே தான் அவலம்பித்தாரே (நிலைநாட்டினாரே) தவிர, அவற்றில் மாறுதல் எதுவும் செய்யவில்லை. பிற்பாடு மற்ற ஆசார்யர்கள் வந்தபோதுதான் தங்கள் தங்கள் ஸம்பிரதாயத்துக்குத் தனிப் பெயர் தந்தது; இவர்களும் ஆசார, அனுஷ்டான, ஸம்ஸ்காரங் களில் பூர்விகமான தர்ம சாஸ்திரங்களைத்தான் பெரும்பாலும் பின்பற்றினார்களென்றாலும், அவற்றோடு தங்களுடைய புதிய பிரிவைத் தழுவுவதற்கு அடையாளமாக அதிகப்படியான சிலவற்றையும் (ஸமாச்ரயணம், முத்ராதாரணம் முதலியவற் றைப் போன்றவை) சேர்த்தார்கள். ச்ரௌத ஸ்மார்த்த கர்மா வுக்குக் கொஞ்சம் முக்யத்தைக் குறைத்து புராணாதிகளுக்கு அதிக முக்யம் தருவது போன்ற சில மாறுபாடுகளையும் செய் தார்கள். புண்ட்ரத்திலும் (நெற்றிக்கு இடுவதிலும்) புதுவித

Koviloor Digital Library

மாக வைத்தார்கள்' என்றெல்லாம் நான் சொல்லியிருக்கிறே னல்லவா?★ இதை வைத்தே கேட்கிறார்கள்: 'நீங்கள் சொல்லி யிருப்பதிலிருந்தே, பிற்கால ஆசார்ய புருஷர்களாக இருக்கப் பட்டவர்களே அதுவரை இருந்து வந்த அவர்களுடைய குலா சாரத்துக்கு வித்யாஸமாகப் பண்ணியிருக்கிறார்களென்று ஆகிறதே! அப்படியானால் இப்போதும் அப்படியே ஒருத்தன் ஹிந்துவாகவே இருந்துகொண்டு ஸ்மார்த்தத்திலிருந்து வைஷ்ணவத்துக்கோ, மத்வ மதத்திலிருந்து ஸ்மார்த்தத்துக்கோ போனால் என்ன?' - இப்படி ஆர்க்யுமெண்ட் போகிறது.

இதில் நியாயம் இருப்பதாகப் பட்டாலும் சாஸ்திர அபிப்ராயத்தைத்தான் நான் சொல்ல வேண்டும், பூர்விகர் வழி தான் போகவேண்டும் என்று உங்களுக்கெல்லாம் உபதேசித்து விட்டு நானே பூர்விகர் அபிப்ராயத்துக்கு மாறாகச் சொல்லக் கூடாது என்பதால், அவரவரும் தாங்கள் பிறந்திருக்கிற குலா சாரப்படிதான் நடக்க வேண்டும் என்றே சொல்கிறேன். சாஸ் திரத்தை நம்ப வேண்டுமென்றால் அப்புறம் ஆர்க்யுமெண்டுக்கு வால்யூ இல்லை. ஆர்க்யுமெண்டில் எத்தனை நியாயம் தெரிந் தாலும் ஸரி, சாஸ்திரம் சொல்கிறதென்றால் அதில்தான் நமக் குத் தெரியாத, புரியாத நியாயம் இருக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டு அதன்படிதான் செய்ய வேண்டும். நம்பிக்கை (faith) என்னும்போதே அது புத்தியால் மட்டும் புரிந்து கொள்ளக்கூடியதல்ல என்றுதானே அர்த்தம்? புத்திக்குப் புரிவ தைத் தீர்மானமாக நாமே தெரிந்து கொண்டு விடுவோமாத லால், இதிலே 'நம்ப' என்ன இருக்கிறது? தெரியாததைத்தான் நம்ப வேண்டும். இதோ எதிரே 'மைக்' இருக்கிறது என்று கண் ணுக்குத் தெரிவதைச் சொன்னால் அதிலே 'நம்புவதற்கு' என்ன இருக்கிறது? ஆனபடியால் மத நம்பிக்கை, சாஸ்திர நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை என்றெல்லாம் வார்த்தைகள் இருப்பதா லேயே - மதத்துக்குப் பேரே Faith என்று வைத்திருப்பதா லேயே - அதில் எல்லாவற்றையும் புத்தி தர்க்கத்தால் விளக்கிக் கொள்ள முடியாது என்றுதான் அர்த்தம்.

ஆனாலும் இப்படிச் சொல்லி அடியோடு விட்டுவிடாமல் (ஹிந்து மதப் பிரிவுகளுக்குள்ளும் பிறப்பின் படியமைந்த

★ அருள் உரை 19, 20-வது புத்தகங்களில் இடம்பெற்றுள்ள 'சங்கர சம்பிர தாய'த்தில் இவ்விஷயங்கள் பலவற்றைக் காணலாம்.

Koviloor Digital Library

பூர்வாசாரப்படிதான் பண்ண வேண்டும் என்பதற்குக்) கொஞ்சம் காரணமும் சொல்கிறேன்.

முதல் கேள்வி: தத்வத்தில் 'கன்விக்ஷன்' (உண்மை என்ற உறுதிப்பாடு) என்பதற்காக த்வைதத்திலிருந்து அத்வைதத் துக்கு அல்லது அத்வைதத்திலிருந்து விசிஷ்டாத்வைதத்துக்கு மாறலாமா, இதற்காகக் குலாசாரத்தை விடலாமா என்பது.

தத்வத்தில் கன்விக்ஷன் என்பது முழுக்க ஒருத்தனின் உள் விஷயம். மனம் போனபடி ஏதோ ஒன்றைப் பிடித்துக் கொள் ளாமல், நன்றாகக் கற்றறிந்து ஆலோசித்து ஏற்பட்டதாகவோ, அல்லது நல்ல உள்ளனுபவத்தில் ஏற்பட்டதாகவோயிருந்தால் அதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். (கன்விக்ஷன்) மேம் போக்காக இருக்கக் கூடாது. ஆழமாகப் போயிருக்க வேண் டும். ஏன் அந்த ஸித்தாந்தத்திலே பற்று என்பதற்குக் காரணம் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். காரணமில்லாமலே ஆழ்ந்த பற்று என்றால், அப்போது ஸம்ஸ்கார விசேஷத்தால் அப்படி ஏற்பட்டிருக்கும்; அறிவால் சொல்லத் தெரியாதது அனுபவத் தில் பேச ஆரம்பிக்கும். எப்படியானாலும் ஒரு தத்வத்திலே, ஸித்தாந்தத்திலே ஒருவனுக்குப் பற்று மேலெழுந்த வாரியாயில் லாமல் உறுதியாக இருக்கிறது என்றால் அந்த உள்விஷயத்தை யாரும் ஆக்ஷேபிப்பதற்கும் இப்படி மாறக்கூடாது என்று சொல்வதற்கும் இல்லை. ஆனால் – இப்போது நான் சொல் லப்போகிறது ரொம்ப முக்கியமான பாயின்ட் – ஒருத்தனுக் குப் பூர்விகர்களின் ஸித்தாந்தத்துக்கு வித்யாஸமாக இன் னொன்றில்தான் ஆழமான விச்வாஸமிருக்கிறது என்கிறதற்காக அவன் குலாசார அனுஷ்டானங்களை மாற்றிக் கொள்ள வேண்டியதேயில்லை.

'இதென்ன? தத்வத்தில் வேறேயாகப் போவதை ஒப்புக் கொள்ளலாம், ஆனால் ஸமயாசாரத்தை மாற்றிக் கொள்ளக் கூடாது என்றால் குழப்பமாயிருக்கிறதே' என்று தோன்றும். இதை நன்றாக அலசி, ஆலோசித்துப் பார்ப்போம். பார்த்தால் தத்வத்தைப் பற்றின உள்ளனுபவத்துக்கும் ஆசார அனுஷ்டா னம் என்பதான வெளிக் கார்யம், வெளிச் சின்னங்களுக்கும் நேர் ஸம்பந்தம் இருக்கவில்லை என்று தெரியும். நேர் ஸம்பந்தம் இல்லாவிட்டாலும் சுற்றி வளைத்து நிச்சயமாய்

Koviloor Digital Library

ஸம்பந்தம் இருக்கிறது. அடியோடு ஸம்பந்தமேயில்லாமலில்லை. 'ஸித்தாந்தம் அனுபவ விஷயம்; அதற்கு வெளி ஸமாசாரமான ரிட்சுவல் எதற்கு, ஆசாரம் எதற்கு' என்று கேட்கிற ரிஃபார்ம்காரர்களோடு நான் சேர்ந்து கொள்ளவில்லை. அவர்கள் வெளிக் கார்யம், சின்னத்துக்கும் உள்ளே அனுபவம் உண்டாவதற்கும் அடியோடு ஸம்பந்தமில்லை என்று தப்பாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் நினைப்பதில் தப்பு என்ன என்பதைத்தான் இவ்வளவு நேரம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

இப்போது என்ன சொல்கிறேனென்றால் ஆசார அனுஷ்டானங்களில் பெரும்பாலானவற்றுக்கும் ஸித்தாந்தத்துக்கும் நேர் ஸம்பந்தம் அதிகம் கிடையாது என்கிறேன். ஸமயாசாரங்களும் கர்மாக்களும் எதற்காக என்று திருப்பித் திருப்பிச் சொன்னேன்? ஒரு ஜீவனுடைய சித்த சுத்திக்காக என்றுதானே சொன்னேன்? ஒரு ஜீவன் முடிவான லக்ஷியமாக ஏதோ ஒரு தத்துவத்தின், ஸித்தாந்தத்தின் ஸத்யத்தைப் பிரத்யக்ஷ அனுபவமாக்கிக் கொள்வதற்கு நேர் உபாயமாகவே சாஸ்திர கர்மாவைப் பண்ண வேண்டும் என்று சொல்லவில்லையே? கிருஷ்ண பரமாத்மாவும் ஸரி, சங்கர ராமானுஜ – மத்வாதி ஆசார்யர்களும் ஸரி, கர்மாக்கள் ரூபத்திலும் வெளிச் சின்னங்களாகவும் இருக்கிற ஆசார அனுஷ்டானங்களைச் சொன்னதெல்லாம் சித்த சுத்திக்காகத்தானேயொழிய முடிவான லக்ஷ்யமான தத்வ ஞான ஸ்வானுபூதிக்காக அல்ல. (ஞானம் என்று இங்கே நான் சொல்வது பக்தி ஸித்தாந்தங்களில் பக்தி என்ற தத்வத்தை உள்ளபடி அறிந்து கொள்வதையும் குறிக்கும்.) எந்த ஸித்தாந்தமானாலும் அதன் ஸத்யத்வத்தை ஒருவன் தெரிந்து கொள்கிற பக்குவம் வரவேண்டுமானால் அவனுடைய மனஸு அழுக்கில்லாமலிருந்தால்தான் முடியும். சித்தம் என்ற கண்ணாடி அழுக்காகவும் ஆடிக்கொண்டும் இருக்கிற வரையில் அதில் எந்த ஸித்தாந்தத்தின் உண்மையும் தெளிவாகவோ, ஸ்திரமாகவோ பிரதிபலிக்காது. ஆகையால் ஸித்தாந்தம் வேறே வேறேயானாலும் அதைப் பெறுவதற்கு முந்தி எல்லாரும் Common ஆகப் பெற வேண்டியது சித்த சுத்தி. இப்படிச் சுத்தி ஏற்படவே ஆசார அனுஷ்டானம் என்பதே மறுபடி மறுபடி சொன்ன விஷயம். அதாவது ஸித்தாந்தத்தில் ஸித்தி என்ற முடிவான லக்ஷியத்

Koviloor Digital Library

துக்கு நேர் உபாயமான சித்த சுத்தி என்ற பூர்வாங்கமான லக்ஷ்யம் ஸித்திப்பதற்கு உபாயமாகத்தான் ஆசார அனுஷ்டான ரூபமான கர்மாக்களை வைத்திருக்கிறது. ஸித்தாந்தத் துக்கும் கார்யத்துக்கும் டைரக்ட் ஸம்பந்தம் கிடையாது.

ஆலோசனை பண்ணிப் பார்த்தால் தெரியும். லோகத்தில் எத்தனையோ ஸித்தாந்தங்களிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் ஏற்பட்டிருக்கிற கார்யங்களோ ஏறக்குறைய ஒரே மாதிரிதான் இருக்கின்றன. நாம் தீபாராதனை பண்ணினால் இன்னொ ருத்தன் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கிறான்; நாம் சாந்த்ராயண விரதம் என்றால் வேறே ஒருத்தன் ரம்ஜான் fasting என்கிறான். நம்முடைய தேவாலயங்களில் எப்படி பூஜை நடக்கிறதோ அப்படியேதான் பௌத்த, ஜைன ஆலயங்களிலும் நடக்கிறது. நமக்குள்ளேயே எடுத்துக் கொண்டால் ஒரேபோல தப்த சின் னங்களை தரித்துக் கொள்கிறதில் (சூடு போட்டு முத்திரை பதித்துக்கொள்கிறதில்) த்வைத அனுபவம், விசிஷ்டாத்வைத அனுபவம் என்று வேறே வேறேயாக வருகின்றனவா என்ன? அத்வைதத்துக்கு, இப்போது 'வேதாந்தா' லெக்சர் பண்ணுப வர்கள் சொல்கிறபடி, எந்த ஆசார அனுஷ்டானமுமே இருக்கக் கூடாதுதான். ஆனால் அத்வைத ஆசார்யாளும், மடங்களும் விதித்திருக்கிறபடி இந்த ஸித்தாந்திகளும் மற்றவர்களைப் போலவே ஸ்நான பானம், பூஜை, தீர்த்த யாத்திரை, திவஸ தர்ப்பணம் என்றுதானே பண்ணுகிறார்கள்? சைவன் எப்படி அபிஷேகம், அர்ச்சனை, கந்த, புஷ்ப உபசாரங்கள் செய்கி றானோ அப்படியேதான் வைஷ்ணவனும் செய்கிறான். ஸாளக்ராமமும் லிங்கமும் வேறேயாக இருக்கட்டும். இவன் போடுகிற துளசியும் அவன் போடுகிற வில்வமும் வேறேயாக இருக்கட்டும். புளியோதரையும் சம்பாப் பட்டையும் வேறாக இருக்கட்டும். அவன் வைகுண்ட ஏகாதசிக்குக் கண்விழித்துப் பட்டினி கிடக்கிறானென்றால் இவன் சிவராத்திரிக்குத்தான் அப்படிச் செய்வது என்றே இருக்கட்டும். ஆகக்கூடி கார்யம் ஒன்றுதானே? இப்படியே சின்னங்களும்; சாந்துப் பொட்டு, திருமண், விபூதி ஏதோ ஒன்று, ஆக நெற்றியில் சின்னம் இருந் தாக வேண்டும். மடிசார்ப் புடவை வலது பக்கம், இடது பக்கம், வெளியிலே கச்சம் தெரிவது, தெரியாதது – எதுவா னாலும் கச்சம் என்ற சின்னம் பொது. ஸன்னியாசியாகிவிட்

Koviloor Digital Library

டால்கூட ஏக தண்டம், த்ரி தண்டம் என்று ஏதோ ரூபத்தில் தண்டம் என்ற சின்னம் இருந்தாகணும்.

ஒரே மாதிரி ஸந்தியாவந்தனம், ஒரே மாதிரி பூஜை, பஜனை, விரத உபவாஸங்கள், க்ஷேத்ராடன தீர்த்தாடனங்கள், திவஸம் முதலியன பண்ணிக் கொண்டே வெவ்வேறே ஸித்தாந் தங்களில் ஸித்திக்காக முயற்சி பண்ணுவது என்றால் என்ன அர்த்தம்? ஒன்று, எந்த ஸித்தாந்தமானாலும் இவை வேண்டத் தான் வேண்டும் என்பது. இன்னொன்று வேறு, வேறு மாதிரி யான ஸித்தாந்தங்களுக்கும் ஒரே மாதிரியான ஆசரணை என்ப தால் ஆசாரமும் ஸித்தாந்தமும் நேராக ஸம்பந்தப்பட்டவை யல்ல என்பது. ஆசாரமில்லாமல் தத்வ ஞானமோ ஏதோ ஒரு ஸித்தாந்தத்தில் ஸித்தியோ வராது. ஒரு ஜீவனின் பழைய மூட்டை★யெல்லாம் தீர்கிற அளவுக்கு அவனுக்கு ஓயாமல் நிறையக் கர்மாக்களைக் கொடுத்து அழுக்கு மூட்டையைச் சுத்தம் பண்ணுகிறதாகவே எல்லா ஸம்பிரதாயத்து ஸமயாசார மும் இருக்கிறபடியால், அதில் இதைத்தான் பண்ண வேண்டும் என்றில்லாமல், எதைப் பண்ணினாலும், ஆனால் நிச்சயமாகப் பண்ணத்தான் வேண்டும் என்று வழுவறப் பண்ணினால் இவ னுக்குப் பிடிமானமுள்ள ஸித்தாந்தத்திலேயே ஸ்வானுபூதி அடைய அதுவே இவனுக்கு ஸஹாயம் செய்துவிடும். ஆகை யால் ஒருத்தன் தத்வத்தில் தான் பிறந்த குடும்பத்துக்கு வேறா கக் கன்விக்ஷன் இருக்கிறது என்பதற்காக அதன் ஸமயா சாரத்தைவிட வேண்டியதில்லை. 'பூர்வைராசரித: குர்யாத்' என்ற உத்தரவை மீறிப் பதிதனாகப் போக வேண்டியதில்லை.

அப்படியானால் பூர்விகர்களின் ஸித்தாந்தத்துக்கு வேறாக ஒன்றில் மட்டும் பற்று வைக்கலாமா, அப்போது மாத்திரம் பதிதனாகிவிட மாட்டானா என்றால், இப்படிப் பண்ணுவது தப்பு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எப்படிச் சொல் லலாம் என்றால் நான் சொன்ன ச்லோகமே சிகாம், புண்ட்ரம் என்று வெளிச் சின்னங்களையும் ஸூத்ரம் என்று கர்மாக் களைச் சொல்லும் ச்ரௌத, ஸ்மார்த்த ஸூத்ரங்களையும் ஸமயாசாரமேவ என்று, ஒரு ஸமயத்துக்கு அனுகூலமானது என்று வெளி நடத்தையாக வைத்த ஆசாரங்களையும்தான்,

★ பூர்வகர்ம வாஸனைச் சுமையான சித்தமலம்.

Koviloor Digital Library

பூர்வை: ஆசரித்: குர்யாத் முன்னோர்களின் ஆசரணைப்படியே பண்ண வேண்டும் என்கிறதே தவிர, தத்வ நம்பிக்கை பற்றிச் சொல்லவில்லை.

தத்வம் அனுபவத்தில் ஸித்திக்க வேண்டுமென்றால் முதல் படியாகமனஸ் கன்னாபின்னா என்று போகாமல், அதை நன்றாக ஏதோ ஒரு நெறியால் கட்டுப்படுத்தத்தான் வேண்டும். உனக்கு ஜன்மா வாய்த்தபடி எந்தக் குலாசாரம் வந்திருக் கிறதோ அதுவே இதைப் பண்ணிவிடும். அதனால் இதை விடாதே; பதிதனாய்ப் போகாதே.

சில ஸமயாசாரங்களே கொஞ்சம் 'லீனியண்ட்'டாக இருந்துகொண்டு, மனஸைக் கட்டுப்படுத்துவதற்கு அவசிய மான ஆசார அனுஷ்டானங்களைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்து விடுகின்றனவே! காயக் காய உபவாஸமிருந்தால் தான் கர்மா போகும்; வயிற்றிலே ஆஹாரமில்லாமலிருந்தால் தான் நன்றாகப் பிராணாயாமம்; த்யானம் பண்ண முடிகிறது என்று ப்பார்த்தால் கோயிலிலேயே 'திருப்பக்ஷி' ('திருப்பள்ளி யெழுச்சி' என்பதுதான் இப்படியாகியிருக்கிறது!) என்று அக்கார அடிசிலும் புளியோதரையும், ததியோரையும் போடு கிறார்களே! ப்ரஸாதமானதால் 'வேண்டாம்' என்றாலும் தோஷமாகுமே, என்றால்... பரவாயில்லையப்பா! அதைச் சாப்பிடு, உன் மனஸு பகவானுக்குத் தெரியும். உனக்குச் சாப்பாட்டில் ஆசையில்லாவிட்டாலுங்கூட, அது வேண்டாம் என்றே இருந்தாலுங்கூட, பகவான் பிறப்பித்தபடி நமக்கென்று ஏற்பட்ட பெரியோர்கள் பண்ணி வைத்த வழிக்கு அடங்கி நடக்க வேண்டுமென்றுதான் பிரஸாதத்தைச் சாப்பிடுகிறாய் என்பது ஸ்வாமிக்குத் தெரியும். அந்த மனப்பான்மையை மெச்சியே அவன் வெறும் வயிற்றில் செய்யும் த்யானத்தினால் ஏற்படுகிற பலனைக் கொடுத்து விடுவான். ப்ராணாயாமம் என்று நீயாகப் பண்ணுவதை பகவானின் கிருபை பண்ணி விடும். அல்லது ப்ரஸாதத்தை வாங்கிக்கொள்; ஆனால் உடனேயே சாப்பிட்டாமல், வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய் உன் தியானம் முடிந்த பின் சாப்பிடு. பூர்வாசாரத்தை விடப்படாது என்ற உறுதியிருந்தால் எப்படியாவது 'அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டு விடலாம்.

நீ உன் பூர்விகர்களின் ஸித்தாந்தத்தை விட்டு விட்டாய் என்றுகூட வெளியில் தெரிய வேண்டியதில்லை. நீ பாட்டுக்கு

Koviloor Digital Library

ஸம்ஸ்கார பலத்தால், படிப்பால், அனுபவத்தால், பகவதனுக்ரஹத்தால் அந்த உன் உள் விஷயத்தில் போய்க்கொண்டிரு. வெளியிலே குலாசாரப்படியே பண்ணு. அதனால் சித்தத்தை சுத்திப்படுத்திக் கொண்டு ஸித்தாந்தத்தின் அந்தத்துக்குப் போ. அப்புறமும்கூடப் பூர்வாசாரத்தை விடாதே. சித்த சுத்தி ஸித்தித்து, ஸித்தாந்தமும் அனுபவமாகிவிட்ட பின் உன்னளவில் பூர்வாசாரமோ, பிற ஆசாரமோ எதுவுமே வேண்டாந்தான் என்றாலும் லோகத்திலுள்ள மற்றவர்களுக்கு வழி காட்டுவதற்காக முன்னோர் கைக்கொண்ட ஆசார, அனுஷ்டானங்களை விடாமல் பண்ணிக் கொண்டிரு. இதுதான் பகவான் போட்டிருக்கும் (கீதைக்)கட்டளை.

ஜன்மாப்படி வாய்த்த ஒரு ஸமயாசாரத்தில் இருந்து கொண்டே வேறொரு ஸித்தாந்தத்தில் முன்னேற முடியும் என்பது வெறும் possibility தானா? யதார்த்தத்தில் அப்படிக் காட்ட முடியுமா? காட்டினால்தானே நம்பிக்கை வரும்? காட்ட முடியும். ஏ.வி. கோபாலாசாரியார் என்று இருக்கிறார்.★ வைஷ்ணவ ஸம்ப்ரதாயப்படிதான் எல்லாம் செய்து வருகிறார். வைஷ்ணவ ஸித்தாந்தத்துக்கும்கூட நிறையத் தொண்டு செய்து வருகிறார். நல்ல பாண்டித்யம் உள்ளவர். வித்வத் ஸதஸுகள் நடத்துகிறார். ஆனாலும் நம்முடைய (சங்கர) ஆசார்ய பாஷ்யங்களிலும் அத்வைதத்திலும் அபாரமான பற்று வைத்திருக்கிறார். ராமகிருஷ்ணா மிஷனோடு நெருங்கி ஸம்பந்தப்பட்டிருந்தாலும் 'அண்ணா' என்கிறவர் வைதிகாசாரங்களின் படியே அனுஷ்டானம் செய்து வருகிறார். இங்கே வர ஆரம்பித்திருக்கிற வெள்ளைக்காரர்களையே பார்த்தால், சர்ச்சுக்குப் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். க்றைஸ்டிடம் நிறைந்த பக்தி வைத்திருக்கிறார்கள். ஆனாலும் (அத்வைத) வேதாந்தத்திலேயே விச்வாஸ முடையவர்களாக இருக்கிறார்கள். converse-ஆக, இந்த ஸ்மார்த்த மடத்தில் விதிக்கப்பட்டிருக்கிறபடி ஆசார, அனுஷ்டானங்களை நன்றாகச் செய்துகொண்டே, என்னிடம் அபிமானமும், மரியாதையும், ஆசார்யாளிடம் பக்தியும் செலுத்திக் கொண்டே, ஆனாலும் என்னிடமே 'நீங்கள் என்னதான் சொன்னாலும் எங்களுக்கு அத்வைதத்தை

★ தற்போது மறைந்துவிட்டார்.

Koviloor Digital Library

விடப் பக்திதான் பிடிச்சிருக்கு; அம்பாள் பூஜைதான் பிடிச்சிருக்கு; அவளே (அத்வைதமாக) 'ஐக்யம் பண்ணிக் கொண்டு விடுகிறேன்' என்று சொன்னால்கூட, 'வேண்டாம், உன் பக்திதான் வேண்டும்' என்று சொல்ல வேண்டும் போலிருக்கிறது' என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். இதுவும் எந்த ஒரு ஸமயாசாரமும் ஒரு தனி மனுஷ்யரின் ஸித்தாந்தத்துக்கு பாதகமாகச் செய்து விடவில்லை என்பதற்கு நிரூபணமாகிறது.

இன்னொரு கேள்விக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். இதுவரையில் நான் தத்வம் என்பதை தனிப்பட்ட தெய்வ உபாஸனையோடு சேர்க்காமல் பிரித்தே பேசி வந்திருக்கிறேன். நம்முடைய மதத்திலோ philosophical-ஆக இருக்கிற தத்வ ஸித்தாந்தத்தோடேயே theological-ஆக வருகிற விஷயமான மூர்த்தி உபாஸனையும் சேர்ந்திருக்கிறது. இங்கேயும் பூர்வாசாரப்படியே ஒருவன் ஜன்மாவை பொறுத்துச் செய்ய வேண்டுமென்றால் ஜாஸ்தி மோதல் ஏற்படும் போலிருக்கிறது. அதாவது: விசிஷ்டாத்வைதி என்கிறவன் வெறும் பிலாஸஃபியாக, 'எல்லாருக்கும் பொதுவான ஒரு பரமாத்மாதான் ஜீவாத்மாவின் அந்தர் யாமியாக உள்ளே புகுந்து ஆட்டிக் கொண்டும், ஈச்வரனாக வெளியே இருந்து கொண்டு ஆட்டிக்கொண்டும் இருக்கிறது. ஜீவனானவன் முக்தியிலுங்கூட அதோடு ஒன்றாகப் போய்விடாமல் தான் அதன் ஒரு அம்சமே என்பதைப் புரிந்துகொண்டு, பக்தியோடு அதன் ஆளுகைக்குக் கீழே தனியாகத்தானிருக்க வேண்டும்' என்று சொல்லிப் பொதுப்படையான ஒரு பரமாத்மாவோடு நிறுத்தி விடவில்லை. 'அந்தப் பரமாத்மா விஷ்ணுதான்; சிவன் இல்லை. அவனுக்கு இன்ன நிறம், இத்தனை கை, அவனுக்கு நிறைய அலங்காரம் பண்ணி ஆராதிக்க வேண்டும்' என்றெல்லாமும் சொல்கிறான். இப்படியே சைவ ஸித்தாந்தியும் இன்னொரு தத்வ சாஸ்திரத்தைச் சொல்கிறான். அது விசிஷ்டாத்வைதத்தைவிட அத்வைதத்துக்குக் கிட்டே போகிறது. என்றாலும் இதிலும் அத்வைத ஐக்யம் இல்லை. இவனும், பெயரே சைவ ஸித்தாந்தம் என்றிருப்பதற்கேற்ப, பொதுவாக் ஏதோ ஒரு பரமாத்மா என்று சொல்லாமல் 'அவர் சிவன் என்ற மூர்த்திதான்; விஷ்ணு இல்லை. அவர் இப்படியிப்படி இருக்கிறார். அவருக்கு ஆராதனையாக ஓயாமல் அபிஷேகம் செய்ய வேண்டும்' என்றெல்லாம் சொல்கிறான். அத்வைதி அந்தப் பரமாத்மாவை

Koviloor Digital Library

வித்யாஸமில்லாமல் எல்லா மூர்த்திகளிலும் உபாஸிக்க வேண்டுமென்றிருந்தாலும், நடைமுறையில் (அத்வைதிகளான) ஸ்மார்த்தர் குடும்பங்களில் எத்தனையோ தலைமுறையாக சிவபூஜைதான் பண்ணுவது, (விஷ்ணுவுக்கான) ஸாளக்ராம பூஜைதான் பண்ணுவது, (அம்பாளுக்கான) ஸ்ரீ வித்யா பூஜை தான் பண்ணுவது என்றெல்லாம் வந்திருக்கிறது.

இப்போது நான் பதில் சொல்ல வேண்டிய கேள்வி என்ன வென்றால்: 'எந்த ஸித்தாந்தமானாலும் உன் நம்பிக்கைப்படி வைத்துக் கொள்ளு, அதற்காகக் குலாசாரத்தை மாற்றாதே என்று சொன்னீர்கள். ஸரி. ஆனால், நமக்கு மூர்த்தி உபாஸனை, இஷ்ட தெய்வம் என்பதும் முக்கியமாயிருக்கிறதே! நம்முடைய மதத்தில் இத்தனை தெய்வங்களைச் சொல்லி, ஒவ்வொன்றுக் கும் புராணம், ஸ்தோத்ரம், க்ஷேத்ரம் என்று வைத்திருப்பதால் அவற்றில் ஒவ்வொருவனுக்கும் ஏதாவது ஒன்றில் விசேஷப் பிடிப்பு ஏற்படுகிறதே! இப்படியிருப்பதில், நான் விசிஷ் டாத்வைத வைஷ்ணவனாகப் பிறந்தாலும் எனக்கு அத்வைதத் திலும் சிவனிடத்திலுமே பிடிப்பு இருக்கிற தென்றால், உங்கள் உபதேசப்படி அத்வைதத்துக்காக விசிஷ்டாத்வைத பூர்வா சாரத்தை விட வேண்டியதில்லைதான் என்று பார்த்தால், இதுவே என் பக்தி உபாஸனையில் குறுக்கே வந்து மோது கிறதே! எனக்கு சிவனிடம்தான் ஸ்வாபாவிகமாக பக்தி என்றாலும் விஷ்ணுவை அல்லவா பூஜை பண்ணியாக வேண் டியிருக்கிறது? எந்தக் கர்மாவானாலும் ஸித்தாந்த அனுபவத் துக்குப் பூர்வாங்கமான சித்த சுத்திக்குப் பிரயோஜனமாகிறது என்று மனஸை ஸரிப்படுத்திக் கொண்டு செய்கிறது போல, விஷ்ணுவை வைத்துப் பூஜை பண்ணினால் அது சிவ பூஜை தான் என்று மனஸை எப்படி ஸமாதானப்படுத்திக் கொள் வது?' என்று கேட்டால் என்ன பதில்?

அல்லது சைவராகப் பிறந்த ஒருவருக்கு விஷ்ணுவிடம்தான் பக்தி என்று அவர் இதே போலக் கேட்டால் என்ன சொல்வது? ஸ்மார்த்தர் ஒருவர், 'சிவ பூஜைதான் அகத்தில் இருந்து வந்திருக்கிறது. எனக்கு (அம்பாளின்) ஸ்ரீசக்ர பூஜையில்தான் ஈடுபாடு இருக்கிறது; அல்லது முருகனிடந்தான் தன்னால் பக்தி வருகிறது. நான் என்ன பண்ண?' என்று கேட்டால் என்ன செய்வது?

Koviloor Digital Library

பூர்விகர் ஆசாரப்படிதான் செய்ய வேண்டும் என்பதை மாற்றிச் சொல்லலாமா? இல்லாவிட்டால் இவர்கள் ரொம்பவும் மனஸு நொந்து கஷ்டப்படுவார்கள் போலிருக்கிறதே! இவர்கள் நாஸ்திகர்களாகப் போகவில்லை. பூஜை பண்ணமாட்டோமென்று சொல்லவில்லை. நம் மதத்திலேயே சொல்லியிருக்கிற ஸ்வாமிகளில் ஒன்றைத்தான் பூஜிக்க ஆசைப்படுவதாகச் சொல்கிறார்கள். இவர்களை இன்ன குலத்தில் ஈச்வரன் பிறப்பித்ததால் இவர்கள் அதில் முன்னே இருந்தவர்கள் எப்படிச் செய்தார்களோ அப்படித்தான் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்திச் சொல்லலாமென்றால், அதே ஈச்வரன் தானே இவர்களுக்குத் தன்னுடைய வேறு ஒரு மூர்த்தியில் விசேஷ பக்தியை உண்டு பண்ணியிருக்கிறான்? ஆகையால், 'கர்மா – பக்தி – ஞானம் என்று வருகிற மூன்றில் மற்ற சாஸ்திர கர்மாக்களைப் பூர்வாசாரப்படிப் பண்ணு! பக்தி மட்டும், பக்தி கர்மாவான பூஜையை மட்டும் உன் இஷ்ட தேவதைக்கே பண்ணப்பா! ஞானம் என்ற ஸித்தாந்த ஸமாசாரத்தைத்தான் முன்னேயே சொல்லியாச்சு' என்று பதில் சொல்லி விடலாமா?

இதுவும் ஸமாதானப்பட மாட்டேன் என்கிறது. மற்ற சாஸ்திர கர்மா, பக்தி கர்மா என்று பிரிக்க முடியாமல் சேர்த்துப் பிசைந்தல்லவா வைத்திருக்கிறது? எல்லாருக்கும் பொதுவான ஸந்தியாவந்தனத்தில்கூட ஒருவர் 'பரமேச்வர ப்ரீத்யர்த்தம்' என்றால் இன்னொருத்தர் 'ஈச்வர' சப்தம் சிவனை ஞாபகமூட்டுகிறதே யென்பதால் ('ஈச்வரன்', 'பகவான்' என்ற இரண்டும் ஒரே பரமாத்மாவைத்தான் சொல்கிற தென்றாலும்), மஹா விஷ்ணுவின் ப்ரீதிக்காகவே என்று ஸங்கல்பம் செய்து கொள்ள வேண்டுமென்று நினைத்து 'ஈச்வர' என்கிற இடத்தில் 'பகவத்' என்கிறார்! சைவனாகப் பிறந்து விஷ்ணு பக்தி பண்ண வேண்டுமென்றிருக்கிற ஒருவனுக்குக் கேசவ நாராயண என்று சொல்லிக் கொண்டு நாமத்தைக் குழைத்துப் போட்டுக் கொண்டால்தான் மன நிறைவு இருக்கலாம். இவன் விபூதிதான் இட்டுக் கொள்ள வேண்டுமென்றால் (சிவ) பஞ்சாக்ஷரம் சொல்லித்தானே அதைக் குழைத்து இட்டுக் கொள்ள வேண்டியிருக்கும்? சிகை, ஸூத்ரம் ஆகியவற்றோடு 'புண்ட்ரம்' என்று நெற்றிக்கிட்டுக் கொள்வதிலும் பூர்வாசாரப்படிதான் பண்ண வேண்டுமென்றிருப்பதால்,

Koviloor Digital Library

தெய்வத்தையும் மாற்றிக் கொள்ளக் கூடாது என்று வைத்துக் கொண்டால், அது ஸ்வாபாவமான பக்திக்கு இடையூறாக ஆகிறதே! இப்படியாக வெளிச் சின்னம், நேராக பக்தி பூஜையா யில்லாத வைதிக கார்யம் இவற்றிலெல்லாங்கூட பூர்விகர்களின் ஸம்பிரதாயத்தில் நிலை நாட்டப்பட்டுள்ள ஏதோ ஒரு தெய்வத்தை ஸம்பந்தப்படுத்தியிருக்கிறதே!

அதனால், 'நான் இவ்வளவு நேரம் சொன்னதை வாபஸ் பண்ணி விடுகிறேன். பூர்வாசாரமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். நீ எப்படியும் பகவானை நம்புகிறாய், அவனை மனஸார ஒரு ரூபத்தில் உபாஸிக்க வேண்டும் என்று தாபப்படு கிறாய். அதனால் உன்னை அவனே பார்த்துக் கொள்வான். பூர்விகர் ஆசாரத்தைப் பற்றிக் கவலைப்படாதேயப்பா' என்று சொல்லி விடலாமா?

இதுவும் நிம்மதிப்பட மாட்டேனென்கிறது. எங்கே கட்டறுத்துக் கொண்டு போகலாமென்று ஜனங்கள் ஒரே இந்திரிய ஆட்டத்திலும் நாஸ்திகத்திலும் போய்க் கொண்டிருக் கிற இந்த ஸமயத்திலே ஏதோ கொஞ்சம் தர்மம், பக்தி, ஆத்மார்த்தமான தத்வம் என்று நாட்டம் உள்ளவர்களையும் குல வழக்கத்திலிருந்து அவிழ்த்து ஸ்வதந்திரமாக விடுவதென் றால், இப்போது நல்ல லக்ஷ்யத்துக்காகவே இவர்கள் ஸ்வதந் திரம் கேட்டாலும், அப்புறம் இதன் பழக்கத்தாலேயே மற்ற வற்றிலும் ஸ்வதந்த்ரமாகத் தெறிகெட்டுப் போக ஆரம்பித்து விட்டால் என்ன பண்ணுவது என்று இருக்கிறது.

அனேக இடங்களில் இப்படி நடந்துமிருக்கிறது. பக்தி, தர்மம், தத்வம் என்ற அபிலாஷைகளிருக்கும் மற்ற ஜனங்களும் இவர்களைப் பார்த்து இவர்கள் குலாசாரத்தை விடுகிறார்க ளென்பதால் தாங்களும் விடலாம் என்பதற்குத்தானே ஊக்கம் பெறுவார்கள்? இதையெல்லாம் பார்த்தால், பகவானே என்ன சொன்னார், ரொம்ப நிர்தாக்ஷிண்யமாகத்தானே சொன்னார், அப்படித்தான் நாமும் குலாசாரத்தை ஒரு நாளும் விடப்படாது என்று சொல்லி விடுவோமென்று தோன்றுகிறது.

குலதர்மம் என்பதற்காக யுத்தம் பண்ணிப் பிதாமஹர், பந்து, மித்ரர்களையெல்லாம் கொல்லுவதாவது என்று

Koviloor Digital Library

வில்லைப் போட்டுவிட்டு உட்கார்ந்த அர்ஜுனனிடம் பகவான் இப்படித்தானே சொன்னார்: 'உனக்கு சாஸ்திரம் இந்த ஸ்வதர்மத்தைத்தானே கொடுத்திருக்கிறது? ஒரு பிராமணனிடம் போய் நான் 'சண்டை போடு' என்று சொல்வேனா? உன்னை ஈச்வரன் க்ஷத்திரியனாகப் படைத்திருக்கிறானோ இல்லையோ? அப்படியானல் அந்தக் குலசாரப்படிதான் நீ பண்ண வேண்டு மென்ற அர்த்தம். 'அதன்படி பண்ணினால் குலமே போயிடும்; குலஸ்த்ரீகள் பாழாய்ப் போவார்கள்' என்றெல்லாம் நீ அழுது அடம் பண்ணிப் பிரயோஜனமில்லை. பலனைப் பார்க்காதே. ஈச்வரன் இப்படி ஜன்மா கொடுத்தானென்றால் அதற்கு சாஸ்திரம் எந்த வழியைக் காட்டுகிறதோ அப்படித்தான் போக ணும். மற்றவர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்குகிறோமே என்று பார்க்காதே. அல்லது உனக்கே இதனால் எத்தனை கஷ்டம், மனவேதனை, guilty conscience இருந்தாலும் இதுகளை யும் பார்க்காதே' என்று இப்படிச் சொல்லிக்கொண்டே போய், 'இதற்கெல்லாம் மேலாக உன் பிராணனே போகிறதா? போகட்டும்! ஸ்வதர்மத்தின்படியே இருந்து கொண்டிருந்தால் அதற்காகச் செத்தாலும் மேல்;

ஸ்வதர்மே நிதநம் ச்ரேய:

என்று ஒரே முடிவாகச் சொல்லிவிட்டார்.

'உன்னுடைய ஸ்வதர்மம், அதாவது பிறப்பாலேற்பட்ட குல தர்மம் குணமில்லாததாக, நல்ல அம்சங்களில்லாததாக இருந்து, இன்னொரு குலதர்மம் உசத்தியான அனுஷ்டானங் களுள்ளதாக இருந்தாலுங்கூட, நீ அதை எடுத்துக் கொள்ளப் படாது. ஸ்வதர்மந்தான் ச்ரேயஸ்' என்று பகவான் தீர்மானிக் கச் சொல்லி,

ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்
என்று அடித்துச் சொல்லி, அதற்கும் மேலே கடுமையாக
ஸ்வதர்மே நிதநம் ச்ரேய
'தன் குலதர்மத்திலே யிருந்து கொண்டு சாவே ஏற்பட்டாலும் சிரேயஸ்'

பரதர்மோ பயாவஹ:

Koviloor Digital Library

'பிறத்தியான் தர்மம் மஹா பயங்கரமாய் முடியும்' என்கிறார்.★

ஸரி, பகவானே சொன்ன இந்த முடிவை அது எத்தனை கடுமையாய்த் தோன்றினாலும் பகவான் சொன்னதென்பதால் அதற்கு மேல் க்ஷேமமில்லையென்று நாமும் முடிவாகச் சொல்லிவிடலாமென்றால், முடியவில்லை.

ஏன்? பூர்வாசாரத்தை விடலாமா என்று கேட்கிறவர்களின் இன்னொரு கேள்விக்குப் பதில் சொல்லியாக வேண்டியிருப் பதால் முடியவில்லை. இதுவும் நானே சொல்லிக் கொடுத்ததை வைத்துக் கொண்டு என்னையே வளைக்கிற கேள்விதான்!

நம்முடைய பூர்விகர்கள் என்று எட்டு, பத்து, இருபது தலைமுறைகளாகச் செய்து வருவதை இப்போது நாம் பூர்வா சாரமென்று சொல்லி அதைத்தான் அனுஸரிக்க வேண்டுமென் கிறோம். அவர்களுக்கு முந்தி இன்னம் அனேகத் தலைமுறை களுக்கு முன்னாலிருந்த 'பூர்விகப் பூர்விகர்'கள் செய்து வந்த தையும் இவர்கள் செய்து வந்ததையும் பார்த்தாலோ அதற்கு இது கொஞ்சம் மாறுதலாகவும், சிலதைக் கூட்டியும் குறைத் தும் காணப்படுகிறது. நானே சொன்ன விஷயந்தான்: அதாவது ஆயிரம் வருஷத்துக்கு முந்தி வரையில் ஸ்மார்த்த ஆசாரம் என்பதுதான் பொதுவாயிருந்து வந்திருக்கிறது. அப்புறம்தான் பல ஸம்ப்ரதாயங்கள் ஏற்பட்டு, ஆசார அனுஷ்டானங்களில் மாறுதல், கூடுதல், குறைதல் பண்ணியிருக் கிறது. அதற்கு அப்புறம் இந்தப் பிரிவுகளுக்கென்று அதனதன் ஆசார்ய புருஷர்கள் செய்த இந்தப் புதிய ஆசாரங்கள் (புதுசு என்றால் முழுக்கப் புதுசு இல்லை. முக்கால்வாசி பழைய வைதி காசாரமாக இருப்பதுதான்; கால்வாசி வித்யாஸமாயிருக்கும் – 'இப்படிப்பட்ட ஆசாரங்கள்) தலைமுறை தலைமுறையாக வந்து இதுகளும் உறுதிப்பட்டுவிட்ட ஸமயாசாரங்களாக இப்போது ஆகிவிட்டிருக்கின்றன. 'இப்போது இந்த ஸமயாசாரங்களையும் யாரும் மீறக் கூடாது என்கிறீர்கள். அது ஸரி. ஆனால், பொதுவான ஸ்மார்த்த ஸம்பிரதாயத் திலிருந்து ஒரு பிரிவாக ஒன்றை வைத்தபோது அந்தந்த

★ கீதை 3.35

Koviloor Digital Library

ஆசார்ய புருஷர்களே அதுவரையிருந்த பூர்வாசாரத்தில் மாறுதல்கள் பண்ணித்தானேயிருக்கிறார்கள்? அப்போது அவர் களே பூர்வாசாரப்படி 'ஸ்ட்ரிக்ட்'டாகப் பண்ணவில்லை என்று தானே ஆகிறது?' இதற்கு மேலே இன்னொன்று என்னை நன்றாக, மடக்குகிறதாகக் கேட்கலாம்: 'நாங்கள் பூர்விகர் ஆசாரத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று எதற்காகச் சொல்கிறோம்? இஷ்ட தேவதா உபாஸனைக்காகத்தான். நாங்கள் நாஸ்திகமாகப் போகவில்லை. ஸித்தாந்தத்துக் காகவோ இஷ்ட தெய்வத்துக்காகவோ மாறலாமா என்றுதான் கேட்டோம். ஸித்தாந்தத்துக்காக ஆசாரத்தை மாற்ற வேண்டா மென்று காரணம் சொல்லி விட்டீர்கள். இப்போது இஷ்ட தெய்வ விஷயம் மட்டும் நிற்கிறது. இதிலும் பூர்வாசாரப்படி தான் போக வேண்டும் என்று சொல்லி விடலாமென்று நீங்கள் பார்க்கிறீர்கள். ஆனால், நமக்கு நேராகப் பூர்விகர்களாக இருக் கிறவர்கள், அவர்களுக்கும் பூர்விகர்களாக இருக்கிறவர்கள் என்று பாகுபாடு செய்து ஆராய்ந்து பார்த்தால், நம் நேர் பூர்விகர்களே ஆதி பூர்விகர்களுக்கு வித்யாஸமாகப் போயிருக் கிறார்களென்றும், இந்த இஷ்ட தெய்வ ஸமாசாரத்தில் வேத காலத்திலிருந்து ஆயிரம் வருஷத்துக்கு முன்வரை வந்த நெடுங்காலப் பூர்வாசாரம் எங்களுக்கு ஆதரவாகத்தானிருக் கிறதென்றும் தெளிவாகத் தெரிகிறது. வேதத்திலோ, ஸ்மிருதி களிலோ, இந்த ஸ்வாமிதான் உசத்தி என்று எந்த ஒன்றையும் பரதெய்வம் என்று நிர்த்தாரணம் பண்ணி வைத்திருக்க வில்லை. எல்லாவற்றையும் ஒரே பரமாத்மாவாகச் சொல்லி ஆனாலும் எவரெவருக்கு எந்த மூர்த்தியில் அபிருசியோ, மனஸு லயிக்கிறதோ அதை இஷ்ட தெய்வமென்று வழிபட இடம் கொடுத்திருக்கிறது; தனக்கு ஒன்றில்தான் கவர்ச்சியிருக் கிறது என்பதற்காக அதைப் பக்தி செய்தாலும், மற்ற தெய்வங் களை நிந்திக்கக் கூடாது என்று வைத்திருக்கிறது; இதற்காகவே பஞ்சாயதன பூஜை * என்று ஏற்படுத்தி, இஷ்ட தெய்வத்தை அதில் பிரதானமாக வைத்தாலும் மற்றவற்றையும் பரிவாரங் களாக வைத்துப் பூஜை செய்து ஸமரஸ பாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறது – இதையெல் லாம் நீங்களே உபன்யாஸம் செய்திருக்கிறீர்கள். ஆகையால்

---

* அருள் உரை 6-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள 'பொதுவான தர்மங் கள்' என்ற பிரிவிலுள்ள 'பூஜை' என்ற உரையைப் பார்க்கவும்.

Koviloor Digital Library

அதற்கப்புறம் நடுவாந்தரத்தில் வந்த ஆசார்ய புருஷர்கள் சிவன்தான் உசத்தி, விஷ்ணுதான் உசத்தி என்று ஏதோ ஒன்றை வைத்து அது எங்கள் குலாசாரமாக வந்திருக்கிறபோது, பிராசீனமான வைதிகத் தர்மத்துக்கு வித்யாஸமாகப் போய் விட்ட இந்தக் குலாசாரத்தை நாங்கள் மாற்றி, பிராசீன வழிப் படியே உபாஸனா விஷயத்தில் போனால் அது எப்படித் தப்பு? நாங்கள் சீர்திருத்தக்காரர்களைப் போல வேதத்தின் கர்ம காண்டம், ச்ரௌத ஸ்மார்த்த ஸூத்ரங்கள், தர்ம சாஸ் திரங்கள் இவற்றையெல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு, வேதாந் தம்தான் ஸாரம், பாக்கியெல்லாம் சக்கை என்று சொன்னால் தப்பு. இவை எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டே, 'இஷ்ட தெய்வ உபாஸனை இவற்றுக்கு ஸம்மதமானதுதான். இன்னும் சொல்லப் போனால் ஒரு தெய்வத்துக்கு மட்டுமே பரத்வம் சொல்வதுதான் ஒரிஜினலான சாஸ்திரங்களுக்கு சம்மத மாயிருக்காது' என்றே இப்போது, கட்டாயமாக ஏதோ ஒரு ஸ்வாமியிடம்தான் பக்தியாக இருக்க வேண்டும் என்கிற குலாசார ஏற்பாட்டிலிருந்து ஸ்வதந்திரம் கேட்கிறோம். கொஞ் சங்கூட வைதிகச் சாஸ்திரத்துக்கு விரோதமாக இல்லாத இந்த ஆசையை எப்படி நிராகரிக்கலாம்?' என்று கேட்கலாம்.

'ஸ்வதர்மே நிதனம் ச்ரேய;' என்றால், 'ஸ்வதர்மம் என்று இப்போது வந்திருக்கிற குலதர்மமே ஆதியிலிருந்த ஸ்வதர்மத் துக்குக் கொஞ்சம் வித்யாஸமானதாகத்தானே இருக்கிறது? ஆகையால் அதைப் பழையபடியே – அதாவது ஒரிஜினலான ஸ்வதர்மமாக – மாற்றிக் கொண்டால் இது எப்படித் தோஷ மாகும்? க்ஷத்ரியன் தர்மத்துக்காக யுத்தம் பண்ணத்தான் வேண்டுமென்று ஆதியிலிருந்து அன்றைக்கு வரையிலிருந்த ஸ்வதர்மத்தைப் பற்றிப் பகவான் சொன்னதை, ஆதியிலிருந்து ஒரு விதமாகவும் பிற்பாடு வேறுவிதமாகவும் குலாசாரம் மாறி யிருக்கிற நிலையில் எப்படிப் பொருத்தலாம்?' என்று கேட்டு விட்டால் என்ன பண்ணுவேன்? பகவான் சொன்ன பதிலை (மரணமே ஸம்பவித்தாலும் குலாசாரத்தைத்தான் பின்பற்ற வேண்டும் என்ற பதிலை) வற்புறுத்த முடியாமல் என் வாயைக் கட்டித்தான் போடுகிறது.

ஏற்கெனவே கட்டுவிட்டுக் கெட்டுப்போனது போதாது என்று புதிதாக எந்தக் கட்டுப்பாட்டையும் தளர்த்திவிடக்

Koviloor Digital Library

கூடாது என்கிற நியாயமும் இன்னொரு பக்கம் என்னைக் கட்டுப்படுத்துகிறது.

அதனால் ஒரு 'காம்ப்ரமைஸ்' பண்ணி வைக்கத் தோன்று கிறது. இதைவிட்டால் வழியில்லையென்று, இரண்டையும் ராஜி பண்ணி ஒரு யோசனை சொல்கிறேன்.

இப்போது குலாசாரமாக எது வந்திருக்கிறதோ அதன்படியே பண்ணு; அதோடுகூட உனக்கு இஷ்டமானதாக வும், ஆதி வைதிகாசாரத்துக்கு விரோதமில்லாமலும் எது இருக்கிறதோ அதையும் சேர்த்துக் கொள். அப்பா, தாத்தா பண்ணின மாதிரியே சிவ பூஜையோ, விஷ்ணு பூஜையோ பண்ணு. அதோடுகூட உன் இஷ்டதேவதை எதுவோ அதையும் சேர்த்துக்கொள்ளு. முடியுமானால் பஞ்சாயதன பூஜையாகவே பண்ணு. உன் இஷ்ட தேவதைக்குக் கொஞ்சம் ஜாஸ்தி அர்ச்சனை, அபிஷேகம், அலங்காரம் வேண்டுமானால் பண்ணிக் கொண்டு போ. எப்படியானாலும் இப்போது உனக்கு வாய்த்திருக்கிற குலாசாரத்தை விடாதேயப்பா! அதற் குக் கௌரவம் கொடுத்து ரக்ஷிக்காமலிருக்காதேயப்பா! இந்த ஸம்பிரதாயத்துக்கு ஆசார்ய புருஷர்களாக வந்தவர்கள் தங்களுக்கு முன்னேயிருந்த பதினாயிரங்கால ஏற்பாட்டில் வித்யாஸங்களைக் கொண்டு வந்திருக்கிறார்களேயென்று அவர்களைக் கண்டனம் செய்யாதே: மரியாதைக் குறைச்சலா கப் பேசாதே; அவர்களை இந்தக்கால ரிஃபார்மர்களோடு சேர்த்து வைத்துவிடாதே. புதுச் சீர்திருத்தக்காரர்கள் பழசில் நூற்றுக்குத் தொண்ணூறைத் தூக்கிப் போட்டுவிட வேண்டும் என்கிறார்கள்; ஆனால் ஸமீப நூற்றாண்டுகளுக்கு முன் வந்த வெவ்வேறு ஸம்பிரதாய ஆசார்யர்களும் கொஞ்சம் மாறுபாடாகப் போயிருந்தாலும் ஆதியிலிருந்ததில் நூற்றுக்குத் தொண்ணூறை ஒப்புக் கொண்டு, தங்களை அனுஸரிப்பவர்கள் தொடர்ந்து அனுஷ்டிக்கும்படிச் செய்திருக்கிறார்கள். முக்கிய மாக, வைதிகமான நித்ய கர்மானுஷ்டானங்களை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஸனாதன தர்மத்துக்கு முதுகெலும்பாக உள்ள வர்ணாச்ரம விபாகங்களை, அதனால் ஏற்பட்ட அதிகார பேதத்தை இவர்களெல்லாரும் ஒப்புக் கொண்டேயிருக்கிறார்கள். இதிலேகூடச் சிலபேர் சற்று 'ரிஃபார்ம்' மனப்போக்கு காட்டியிருக்கிறார்களென்றாலுங்கூட,

Koviloor Digital Library

தனி மனுஷ்யன் ஒருத்தன் பிரேமையினாலும் நைச்யத்தாலும் ஸம பாவனையாலும், வித்யாஸம் பார்க்காமலிருப்பதைத் தான் ஆதரித்திருக்கிறார்களே தவிர, ஸமூஹத்திலேயே இப்படிப்பட்ட பிரிவுகள் இருக்கக் கூடாது என்று எடுத்துப் போட்டு விடவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். தங்களுக்கு முற்பட்ட சாஸ்திரத்தில் ஏன் கூடுதல் – குறைச்சல் பண்ணினார்களென்றால், அந்தந்தக் காலத்தில் வேறே சிலபேர் இதற்கு எதிர்த்திசையில் ரொம்பத் தூரம் பூர்வ சாஸ்திரத்துக்கு விரோதமாக இன்னொரு விதமாகப் போயிருக்கலாம். அந்தச் சூழ்நிலையில் மறுதிசையில் கொஞ்சம் கூடுதலாகவே போனால்தான் தாக்குப் பிடித்து நிற்க முடியும் என்று (இந்த ஆசார்யர்கள்) இப்படிச் செய்திருக்கலாம். விஷ்ணுதான் நிஜமான ஸ்வாமி என்று ஒருத்தர் ஸித்தாந்தம் செய்தாரென்றால், அந்தக் காலத்தில் வேறே யாரோ விஷ்ணுவை ரொம்ப மட்டம் தட்டியிருக்கலாம். அப்பய்ய தீக்ஷிதர் இருந்திருக்கிறார். பரம அத்வைதி, அதாவது அத்வைத லெக்சர் மட்டும் பண்ணுபவரில்லை; அனுபூதிமான். ஈச்வரன், அம்பாள், மஹாவிஷ்ணு ஒவ்வொருவருமே ஸாக்ஷாத் பரமாத்ம ஸ்வரூபம் தான் – இவர்கள் ரத்ன த்ரயம் மும்மணிகள் – என்று எழுதி யிருப்பவர். அப்படிப்பட்டவரே பரமேச்வரனைப் பற்றி மற்ற தெய்வங்களைவிட ரொம்ப அதிகமாக எழுதி, சிவ மஹிமையையே விசேஷமாக நிலை நாட்டியிருக்கிறார். காரணம் என்னவென்றால் அந்தக் காலத்தில் வீர வைஷ்ணவர் களின் செல்வாக்கு மிதமிஞ்சிப் போயிருந்தது. Counteract பண்ணுவதற்காகவே இவர் சிவபரமாக அதிகம் செய்ய வேண்டியிருந்தது. இப்படி ஒவ்வொரு ஆசாரியரின் காலத்தில் பூர்வாசாரத்துக்கு ரொம்பவும் விரோதமாக ஒரு போக்கு ஏற்பட்டிருந்தது என்பதாலேயே அதற்கு Opposite direction-ல் இவர்களும் அதற்குக் கொஞ்சம் வித்யாஸமாகப் போகும்படி ஏற்பட்டிருக்கலாம். தன் தெய்வம் உசந்தது என்பதனால் அவர்கள் இன்னொன்றை மட்டம் தட்டினார்கள், நிந்தித்தார் கள் என்பதற்காக நீ அப்படிப் பண்ணாதே. நிந்திக்கிறார்களே என்று அவர்களையும் நிந்திக்காதேயப்பா! பயமோ வினயமோ இல்லாமல் சாஸ்திரக் கட்டுப்பாடுகளை மீறுகிற நம் காலத்தவரைப் போலில்லாமல், பழைய ஏற்பாடுகளில் நிரம்ப ச்ரத்தா பக்திகளுடன் ஜனங்கள் அடங்கியேயிருந்த

Koviloor Digital Library

அந்த நாளிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சற்று வித்யாஸ மாகப் போன இந்த ஆசார்ய புருஷர்களை அனுஸரித்துப் போயிருக்கிறார்கள் என்பதிலிருந்தே அவர்களிடத்திலே ஒரு ஸத்யத்தின் சக்தி இருந்திருக்கிறதென்று தெரிகிறது. இப்போதைய ரிஃபார்மர்களைவிட நிச்சயமாக ஸொந்த வாழ்க்கையில் அவர்கள் ரொம்பப் பெரியவர்களாகவும் சீலமுடையவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அது மட்டு மில்லை. இப்போது சில ரிஃபார்ம்களின் காரண புருஷர்கள் சீலமுள்ளவர்களாகயிருந்தாலும், அப்புறம் அந்த மூவ்மெண் டில் அப்படிப்பட்டவர்களை அபூர்வமாகத்தான் பார்க்க முடிகிறது. நம் மதத்துக்குப் பெருமையே ஆதியிலிருந்து இங்கேதான் கூட்டங் கூட்டமாக மஹான்களும், ஸாதுக்களும் தோன்றி வந்திருக்கிறார்கள் என்பதுதான். லோகத்தில் வேறெங் கும் இல்லாதவிதத்தில் நம் தேசத்தில்தான் ஆசார அனுஷ்டா னங்கள் வெகு கட்டுப்பாட்டுடன் அனுஷ்டிக்கப்பட்டிருக்கின் றன; இங்கேயேதான் லோகத்தில் வேறெங்கேயும் பார்க்க முடியாத அளவுக்கு மஹான்களும் தோன்றியிருக்கிறார்கள் என்பதிலிருந்தே இந்த ஆசார அனுஷ்டானம்தான் சீலத்தின் உயர்வுக்குக் காரணம் என்று தெளிவாகத் தெரிகிறது. இந்த அபிப்பிராயத்துக்கு பலமூட்டுவதாகவே பூர்வாசாரங்களை விட்டுவிட்ட சீர்திருத்த இயக்கங்களில் உத்தமர்கள் பெருவாரி யாக வரவில்லை என்றும் பார்க்கிறோம். வைதிக சாஸ்திரங் களில் பெரும்பாலானவற்றை அனுசரித்து, மற்றவற்றை மட்டும் மாற்றியிருக்கிற சம்பிரதாயங்களைப் பார்த்தாலோ இவற்றில், முதல் ஆசார்ய புருஷருக்குப் பிற்பாடும் ஏகப்பட்ட பெரியவர்கள், நிரம்ப யோக்யதையுள்ளவர்களாகவும், பகவா னின் அனுக்ரஹத்தைப் பிரத்யக்ஷமாகப் பெற்றவர்களாகவும், தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு அனுக்ரஹம் செய்யச் சக்தி வாய்ந்தவர்களாகவும் தோன்றியிருப்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கும் அவற்றில் நிறைய அனுஷ்டாதாக்கள் இருப்பதை யும் பார்க்கிறோம். வாய்ப் பேச்சு என்றில்லாமல் நல்ல கண்டிப்பான அனுஷ்டானம் செய்த ஆயிரக்கணக்கானவர் களின் அனுபவபலம் என்பது, ஒவ்வொரு சம்பிரதாயத்திலும் அதன் ஆசாரியரின் நாளிலிருந்து இன்றுவரை தலைமுறை தலைமுறையாக வந்து அவை ஒவ்வொன்றுக்கும் உரமூட்டி இருக்கின்றன. தாய்மரத்திலிருந்து கொஞ்சம் பிரிந்தே வந்த

Koviloor Digital Library

விழுதும் அப்புறம் [illegible] பாய்ந்து உறுதிப்பட்டு விட்டதைப்போல, இப்போது இந்த சம்பிரதாயங்கள் எல்லா வற்றிலுமே அதற்கான ஸமயாசாரமென்பது நன்றாக ஸாரத் துடன் கெட்டிப்பட்டிருக்கிறது. சொந்த கன்விக்ஷன் இருக் கிறதா இல்லையா என்பதையே நினைக்காமல், 'அப்படி நினைக்கிறதே பாபம்; நமக்கென்று ஏற்பட்ட சமயாசாரம் இதுதான்; ஓர் அப்பா – அம்மாவுக்குப் பிறந்தோமென்றால் அவர்கள் எப்படியிருந்தாலும் அவர்களையே தெய்வமாகக் கொள்வதுபோல, நாம் இந்த ஸம்பிரதாயத்தில் பிறந்து விட்ட தால் இதுதான் நமக்குத் தெய்வம் மாதிரி, என்கிற விச்வாசத் துடன், தியாக புத்தியுடன் இவ்வழிகளைப் பின்பற்றினால் முன்னோர்களின் அனுஷ்டான பலம் இன்றைக்கும் இவற்றில் போகிறவர்களைக் காப்பாற்றும்.

ஆனபடியால் ஸமீபத்தில் ஏற்பட்டிருக்கிற சீர்திருத்த மதங்க ளோடு இவற்றைச் சேர்த்து விடாமல், சீர்திருத்த மதங்கள் மாதிரியில்லாமல் ச்ருதி, ஸ்ம்ருதி, புராணம் எல்லாவற்றையும் ஒப்புக் கொள்ளும் ஸம்பிரதாயங்களில் பிறந்தவர்கள் அவற் றின் ஆசரணைகளை விடுவது விரும்பத் தக்கதல்ல. அவற்றுக்கு அதிகமாக, ஆதி வைதிக மரபுக்கு ஸம்மதமானதாகத் தாங்கள் இஷ்டப்படுகின்றவைகளையும் சேர்த்துக் கொண்டு செய்ய வேண்டும். இதில் முடிந்த மட்டும் ஸொந்த இஷ்டத்தை விட்டுக் கொடுத்து, தியாகம் பண்ணி, அந்தந்த ஸமயாசாரத் தையே பின்பற்ற வேண்டும். இந்தத் தியாக பலனாகவே ஈச்வரன் நாம் விரும்புகிற நிறைவை அனுக்ரஹித்து விடுவான். 'என்ன கர்மா பண்ணினோமோ, அதனாலேயே பகவான் இப்படி மனஸ் பூர்ணமாக ஏற்றுக் கொள்ள முடியாத குலாசாரத்திலே பிறக்கப் பண்ணியிருக்கிறான்; ஆனதால் அப்படியே அனுபவித்துத் தீர்த்து விடுவோம்' என்ற புத்தியை முடிந்த மட்டும் வளர்த்துக் கொள்ள வேண்டும். கட்டு விட்டுப் போன பிறகு தேசத்தில் ஏற்பட்டிருக்கிற அனர்த்தத்தைப் பார்த்து, இதற்கு நாமும் பலம் கொடுத்து விடக்கூடாது என்ற தீர்மானத்தின்மேலே நம் சொந்த அபிலாஷைகளையும், லக்ஷ்யங்களையும்கூட முடிந்த மட்டும் ஒதுக்கிவிட்டு, ஒரு கட்டுப்பாட்டிலே ஒட்டிக் கொண்டிருப்பதைத்தான் இப்போது ஆஸ்திகர்கள் என்று சொல்லிக் கொள்கிற எல்லாரும் தலை யாய கடனாகக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

ரொம்பவும் பழைய வழிக்கு விரோதமில்லாமலே நடுவில் உண்டான குல ஸம்பிரதாயங்களுக்கு மாறாகப் பக்தி பண்ண விரும்புகிறவர்கள் இஷ்ட தெய்வக் கொள்கைக்கு வைதிகா சாரம் இடம் தருகிறது என்பதோடு, தெய்வ பேதமில்லாத ஸமரஸ மனப்பான்மையே நம் ஸனாதன மதத்தின் தாத்பரியம் என்பதையும் நன்றாக மனஸில் வாங்கிக் கொண்டு விட்டால் எல்லாம் ஸரியாகிவிடும். இப்படிச் செய்து விட்டால் சிவ பக்தியுள்ள ஒரு வைஷ்ணவனுக்குத் திருமண்ணுக்குப் பதில் விபூதி இட்டுக் கொள்ளத் தோன்றாது. அந்தச் சாம்பலிலே வருகிற பரமேச்வரன் இந்த மண்ணிலும் வருவான் என்ற பக்குவம் வந்துவிடும். 'கேசவ நாராயண' என்று நாமத்தைப் போட்டுக் கொள்ளும்போது சிவ நாமாவைச் சொல்வதில் இவனுக்கு உண்டாகக் கூடிய ஆனந்தம் இல்லாவிட்டாலுங் கூட, இந்த நாமங்களைச் சொல்வதிலும் வெறுப்பு இருக்காது. வைஷ்ணவனாகப் பண்ண வேண்டியதையெல்லாம் பண்ணிக் கொண்டே அதிலேயே ஒரளவுக்குத் தன் ஈச்வரனை பாவித்துக் கொண்டு, அதற்கு அதிகமாகவும் தனியாகச் சிவனைப் பக்தி செய்வான். இவன் இப்படி விசால மனஸோடு இருந்தாலே குடும்பத்தாரும் பூஜையில் ஸாளக்ராமத்தோடு இவன் ஒரு சிவலிங்கத்தையும் சேர்த்துக் கொண்டால் ஆக்ஷேபிக்காமல் இருப்பார்கள். ஆக்ஷேபிக்கிறார்கள் என்றே வைத்துக் கொண் டாலும், அவர்களுடைய நம்பிக்கையை எதிர்த்துச் சண்டை போட வேண்டாம். பாவம், அவர்களுக்கு சிவனையும் தெரியாது; விஷ்ணுவையும் தெரியாது. அதனால் சிவனிடம் விரோத பாவம் என்றால்கூட, அது தானாக இவர்கள் ஏற்படுத் திக் கொண்டதல்ல. இதுதான் நம் குலாசாரம் என்று நினைத்து (அது தப்போ, ரைட்டோ அது வேறே விஷயம்; இப்படி நினைத்து) அந்த மரபுக்கு வித்யாஸமாகப் போகக் கூடாது என்ற பயபக்தியில்தான் விரோதம் கொண்டாடுகிறார்கள். அதை நாம் குலைக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு நல்ல படியாக வேண்டுமானால் எடுத்துச் சொல்லிப் பார்ப்போம். அந்த ஈச்வரனிடமே இதற்காகப் பிரார்த்தனை செய்வோம். நாம் சொல்லி இவர்கள் கன்வின்ஸ் ஆனபின்னுங்கூட, 'ஆனாலும் நம் அகத்தில் நம் ஜாதியில் இப்படி லிங்க பூஜை பண்ணுவதில்லையே' என்றால், இந்த ஸமூஹக் கட்டுப்பாட்டு உணர்ச்சியை நாம் மதித்து ஒப்புக் கொள்வோம். வீட்டுப்

Koviloor Digital Library

பூஜையில், இல்லாததைச் சேர்க்கக்கூட வேண்டாம். மானஸிகமாக சிவ ஸ்தோத்ரங்களைச் சொல்லிக் கொண்டு உபாஸனை செய்வோம்; சிவன் கோயிலுக்குப் போவோம்; அங்கு மனஸாற சிவ தர்சனம் பண்ணி நமஸ்காரம் செய்வோம்; சிவ ஸம்பந்தமான உபன்யாஸம், பாராயணம் இவற்றில் மனஸைக் கொடுத்து ஈடுபடுவோம். இதுவும்கூடக் கூடாது என்று அகத்துப் பெரியவர்கள், ஜாதிப் பெரியவர்கள் சொன்னால் கேட்க வேண்டுமென்பதில்லை; ஆனால் சண்டையும் போட வேண்டாம்.

வீட்டில் முருகன் உபாஸனை, உனக்கு அம்பாளிடம் பக்தி, அதனால் யாரோ பெரியவரை அழைத்து ஸ்ரீசக்ர பூஜை நடத்த வேண்டுமென்று ஆசையிருந்தால் முதலில் வீட்டிலேயே ஸுப்ரம்மண்யருக்கு ஷஷ்டி பூஜையோ கிருத்திகை விரதமோ மாவிளக்கோ காவடியோ என்ன செய்வார்களோ அதைச் செய்து விட்டு, அப்புறம் ஸ்ரீசக்ர பூஜைக்கு ஏற்பாடு பண்ணு.

நீ வைஷ்ணவன்; உனக்கு அத்வைதத்தில் பற்று இருக்கிறது; ஆசார்யாளுக்குக் கைங்கர்யம் பண்ண வேண்டுமென்றிருக்கிறது; அதனால் எனக்கு பிக்ஷை செய்து வைக்க வருகிறேன் என்றால் வா. தாராளமாக வா. ஆனால் அத்வைத மடத்துக்குப் பிக்ஷை பண்ணுவதற்கு முன்னாடி உனக்கென்று ஜன்மாப்படி ஏற்பட்டிருக்கிற ஜீயர் யாரோ அவருக்கு பிக்ஷை நடத்திவிட்டு அப்புறம் இங்கே வா.

குலாசாரத்தை 'மாக்ஸிமம்' அனுஸரி. அதற்கு அதிகமாக உன் ஸொந்த உள்ளனுபவத்துக்கும் மனப்பான்மைக்கும் அனுகூலமாக உள்ளதைச் செய். இப்படி அதிகமாகச் செய்வது குலாசாரத்தையும்விட, மூல வைதிக ஆசாரத்துக்கு ஸம்மதமானதாயிருக்க வேண்டுமே யன்றி குலாசாரத்தை விடவும் ஆதி வழியிலிருந்து விலகிப் போய் விட்ட சமீபகாலச் சீர்திருத்தங்களைச் சேர்ந்ததாயிருக்கக் கூடாது என்பது முக்கியம்.

'நடுவாந்தரத்தில் ஏற்பட்ட குலாசாரங்களைவிட இன்னும் க்ளோஸாக மூலமான ஸ்ம்ருதிகளின்படிச் செய்யத்தானே நாங்கள் ஆசைப்படுகிறோம்? இது எப்படித் தப்பு?' என்கிற வார்த்தில் ஒரு குறை இருக்கிறது. மூலமான ஸ்ம்ருதியிலேயேதான்

Koviloor Digital Library

'சிகாம் புண்டரம் ச ஸூத்ரம் ச ஸமயாசாரமேவ சாபூர்வை: ஆசரிதம் குர்யாத் அந்யதா பதிதோ பவேத்' என்றும் சொல்லியிருக்கிறது. அதாவது அந்த மூல ஸ்ம்ருதிகளே, 'நாங்கள் ஜெனரலாகத்தான் ரூல்களைக் கொடுத்திருக்கிறோம். இந்த அமைப்புக்குள்ளே அவரவரும் பர்டிகுலராக அவர்களுடைய குலாசாரப்படியுள்ள ரூல்களைத்தான் சிகை, ஸூத்ரம், நெற்றிக் கிடுவது, மதத்தின் மற்ற ஆசரணை ஆகியவற்றில் பின்பற்ற வேண்டும், என்று சொல்வதாக அர்த்தமாகிறது. எனவே குலாசர்ரத்துக்கு வித்யாஸமாகப் போயும் மூல ஸ்ம்ருதிக்கு க்ளோஸாகப் போவது என்பதை ஸ்ம்ருதியே ஒப்புக் கொள்வதாகத் தோன்றவில்லை. ஸ்ம்ருதி வழக்கையே பூர்ணமாகப் புத்துயிர் தந்து நிலைப்படுத்திய பகவத்பாதாளும், 'ப்ரச்னோத்தர ரத்ன மாலிகா'வில் 'உயிரைவிடப் பிரியமானதாக எதை ரக்ஷிக்க வேண்டும்?' என்ற கேள்விக்கு, 'குல தர்மத்தை' என்றே பதில் சொல்லியிருக்கிறார். வேத தர்மம், ஸ்மார்த்த (ஸ்ம்ருதி; வழி) தர்மம் என்னாமல் அவரவருடைய குலதர்மத்தையே சொல்லியிருக்கிறார்: 'ப்ராணாத் அபி கோ ரம்ய?' 'குல தர்ம:'

விதி விலக்கான மஹான்கள்

அதீத நிலையில் குலாசாரத்தை மீறிப்போன மஹான்களை நமக்கு மாடலாக நினைத்துக் கொண்டு விடக்கூடாது. அவர்களுடைய அஸாதாரண உள்ளனுபவத்தின் 'அதாரிடி'யிலேயே அவர்கள் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இப்படிச் செய்தார்கள். அப்படிப்பட்ட அனுபவம் நமக்கு வந்துவிட்டதாகப் பிரமை கொண்டு விடக்கூடாது.

ஸித்தாந்தம் பண்ணி வாதித்து ஜயிக்கத் தெரியாதவர்களும் இப்படி அதீத அனுபவத்தின்மேல் குலாசாரத்துக்கு வித்யாஸமாக பண்ணினதுண்டு. ரண சண்டிகையை உபாஸிக்கிற ராஜபுத்ரர்களில் இப்படித்தான் மீராபாய் கிருஷ்ணபக்தி

Koviloor Digital Library

என்று, அதுவும் பாதிவ்ரத்யத்துக்குக்கூட வித்யாஸம் மாதிரித் தெரியும் நாயிகா பாவத்தில் பண்ணிக் கொண்டிருந்தாள். இவள் பண்ணினது பக்தி வழியிலேயும் குலாசாரத்துக்கு வித்யாஸம்; பொது ஸமூஹத்தின் ஸ்த்ரீ தர்மத்துக்கும் வித்யா ஸம். பாரத தேசம் பூராவுக்குமே பாதிவ்ரத்யம் முக்யமென்றா லும், ராஜபுத்ர ஸ்திரீகள் அதிலே ரொம்பத் தீவிரமாகப் போனவர்கள். துருக்கர்களோடு யுத்தம் பண்ணி ராஜபுத்ர வீரர் கள் ரணபூமியில் மரணமடைந்த ஸமயங்களில் அவர்களுடைய பத்னிமார் கூட்டங் கூட்டமாக அப்படியே நெருப்பை மூட்டிக் கொண்டு அக்னிப் பிரவேசம் செய்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட தேசத்தில்தான் மீராபாய் புருஷன் அபிப்ராயத்துக்கு வித்யாஸமாகப் போனது மட்டுமில்லாமல், கிரிதரகோபால னுக்கே தான் பத்னி என்ற பாவத்தில் பரவசமாகப் பாடியிருக்கி றாள். அவளை விஷம்கூட ஒன்றும் பண்ணவில்லை; அவள் பாட்டுக்கு அதையும் சிரித்துக் கொண்டே சாப்பிட்டாள் என்று கேட்கிறோம். அப்படி நாமும் விஷத்தைச் சாப்பிட்டு அது நம்மையும் ஒன்றும் செய்யாது என்றால் நாமும் அவள் மாதிரிப் பண்ணலாம்! 'விஷம்கூட என்னை ஒன்றும் செய்யா தாக்கும்' என்று சாலெஞ்சாக அவள் அதைப் பானம் பண்ணவு மில்லை; தன்னை அது பாதிக்காமல் கிரிதரகோபாலன் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கவுமில்லை. தனக்கே தெரியாத ஓர் ஆவேசத்தின் மேலே இப்படி மீராபாயைப் போல ஆசாரத்துக்கு வேறேயாகப் போனவர்கள் நமக்கு மாடல் இல்லை.

நன்றாக ஸித்தாந்தங்களை அறிந்து தர்க்கம் பண்ணி நிலை நாட்டுகிற ஸாமர்த்தியத்தையும் இப்பேர்ப்பட்ட அதீத அனு பவத்தோடு பெற்றிருந்த சில மஹான்களும் குலாசாரத்துக்கு வேறேயாகப் போயிருக்கிறார்கள். பிற்காலத்தில் ஹரதத்த சிவாசாரியார் என்று சைவத்தில் உயர்ந்த ஸ்தானம் பெற்ற ஒருவர் கஞ்சனூர் என்ற ஊரில் வைஷ்ணவராகப் பிறந்தவர் தான். ஆனால் அவர் கொதிக்கிற மழுவைக் கையில் பிடித்துக் கொண்டு சிவ உத்கர்ஷத்தை (சிவமேன்மையை) ஸ்தாபித்து, சைவராக மாறியிருக்கிறார். திருமழிசையாழ்வார் என்கிறவர் சிவ வாக்கியர் என்றே பெயர் வைத்துக் கொண்டு சிவ பரமாகப் பாடின ஸித்தர்தான் என்றும், அப்புறம் பன்னிரண்டு

Koviloor Digital Library

ஆழ்வார்களிலேயே ஒருத்தராகிவிடுகிற அளவுக்குப் பெரிய விஷ்ணுபக்தராய்ப் போய்விட்டார் என்றும் கதை இருக்கிறது. இதெல்லாம் ஜெனரல் ரூல் இல்லை; எக்ஸெப்ஷன்தான். அது ரொம்பவும் அபூர்வமாகத்தான் ஏற்பட்டிருக்கிறது. இப்போது அதை நமக்கு எக்ஸாம்பிள் என்று எடுத்துக் கொண்டால் எக்ஸெப்ஷன்தான் ரூல் என்றாகிவிடும்!

குமாரிலபட்டர் இருந்தார்*. அவர் ஒரு ஸந்தர்ப்பத்தில் பௌத்தர்களோடேயே இருந்து அவர்கள் மாதிரியே வாழ வேண்டியிருந்தபோதுகூட அத்யாவசியமான (வைதிக) நித்ய கர்மாக்களை மட்டும் ரஹஸ்யமாகப் பண்ணிக் கொண்டிருந் தாராம்! கூன் பாண்டியன் சமணனாகி விட்டபோது அவனுடைய பத்னி மங்கையர்க்கரசி ரஹஸ்யமாகவே வஸ்திரத்துக் குள்ளே விபூதி இட்டுக் கொள்வாளாம்! முழுக்க நம்முடைய மதத்திலேயே அவர்கள் கன்விக்ஷன் உள்ளவர்களாயிருந்தாலும் force of circumstance-ல் (சூழ்நிலையின் நெரிசலில்) மதாந்தரத்தை அனுஸரிப்பவர்களைப் போல வெளியில் காட்டிக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் பிற்காலத்தில் இவர்களே ஹிந்து மதம் புது ஜீவனோடு எழும்புவதற்குக் காரணமாயிருந்திருக்கிறார்கள். நம் தேசத்தில் வடக்கே பௌத்தம் தலை சாய்வதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் குமாரிலபட்டர். அவர் குமாரஸ்வாமியின் அம்சம். அதே போலத் தென்தேசத்தில் ஜைனம் நலிந்து வைதிக மதம் புத்துயிர் பெறக் காரணமாயிருந்த ஸுப்ரமண்ய அவதாரந் தான் ஞானஸம்பந்தரென்றால், அந்த ஞானஸம்பந்தர் இப்படிப்பட்ட பெருமை கொள்வதற்குக் காரணமாக அவரை மதுரைக்கு வரவழைத்தது மங்கையர்க்கரசிதான். அவளை அறுபத்துமூன்று நாயன்மார்களிலேயே ஒன்றாகக் சேர்த்திருக் கிறது. அதாவது குமாரிலபட்டர், மங்கையர்க்கரசி ஆகியவர் களும் நம் லெவலுக்கு ரொம்பவும் மேலேயிருந்தவர்கள். ஆனாலும் குமாரிலபட்டர், குலாசாரத்தை விட்டுப் பௌத்தர் களின் ஆசாரத்தைக் கொஞ்சகாலம் அனுஸரித்தாரென்றால் அது அவர்களுடைய ஸித்தாந்தங்களை ஒன்றுவிடாமல் தெரிந்து கொண்டு, அப்புறம் அதற்குப் பதிலுக்குப் பதில்

---

* அருள் உரை 12-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள முருகனின் வடநாட்டு அவதாரம் என்ற உரையைப் பார்க்கவும்.

Koviloor Digital Library

சொல்லி, ஹிந்து மதத்தை – அதாவது குலாசாரத்தை – இன்னும் நன்றாக நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவே! நல்ல உத்தேசத்தோடேயே இப்படிச் செய்ததும்கூடப் பாபம் என்று நினைத்து, ஸுப்ரமண்ய அம்சமேயான அவ்வளவு பெரியவர் பிற்காலத்தில் பிராயச்சித்தமாக தம்மைச் சுற்றி உமியைக் கருக்கிக் கொண்டு அதிலேயே கொஞ்சங் கொஞ்ச மாகப் பிராணத் தியாகம் செய்தார். குலாசாரத்தை விட்டதால் பதிதனாவதற்குப் பதில் இப்படி கோரமரணம் ஏற்படுத்திக் கொள்வதே மேல் என்று அவர் காட்டினதுதான் நமக்குப் படிப்பினையே தவிர, நடுவிலே அதைவிட்டது அல்ல. மங்கையர்க்கரசி புருஷன் வழியைப் பத்னி மீறவே கூடாது என்பதற்காகத்தான் அவன் ஜைனனாகிவிட்டபோது, தானும் தம்முடைய குலாசாரத்தைத் தைரியமாக வெளிப்பட அனுஸரிக்காமலிருந்தது; தன் இஷ்டப்படி நடக்க வேண்டும் என்று அல்ல.

மதாபிமானிகளின் கடமை

இப்போது நாம் என்ன பண்ண வேண்டுமென்றால், ஹிந்து மதத்திலேயே உள்ள பிரிவுகளில் ஏற்பட்டிருக்கிற குலாசாரங் களில் நமக்குப் பிறப்பினால் எது அமைந்திருக்கிறதோ அதில் நிறைவு ஏற்படாமல் இதே வைதிக மரபில் இன்னொருவித மான ஆசாரத்தில்தான் நிறைவடைகிறோம் என்றாலுங்கூட, எப்படிக் குமாரிலபட்டரும் மங்கையர்க்கரசியும் வெளிப்பட அன்ய மதங்களை அனுஸரித்தாற் போலிருந்து கொண்டு, உள்ளுக்குள் ஸொந்த மதத்திலேயே பற்றோடிருந்தார்களோ, அப்படி, வெளிப்பட குலாசாரத்தையே பின்பற்றிக் கொண்டு மனஸுக்குள் மட்டும் நமக்கு இஷ்டமான உபாஸனையை வைத்துக் கொள்ளவே பிரயத்னம் செய்ய வேண்டும்.

Koviloor Digital Library
நம்முடைய உள்மனஸின் பற்றுதல் ஆழமானதாக, உண்மையானதாக இருந்தால் நிச்சயம் அந்த இரண்டு பேரையும் போல நாமே ஜயசாலிகளாகி தைரியமாய் நம் 'கன்விக்ஷன்'படி நடக்கிற நாள் வரும்.

'அதுவரை கன்விக்ஷன்படி தைரியமாய் நடக்கக் கூடாதா? இப்படி உள்ளொன்றும் புறமொன்றுமாக நடக்கும்படி உபதேசிப்பதற்கா நீங்கள் ஆச்சார்யன் என்று பேர் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இது மட்டும் மித்யாசாரமில்லையா?' என்றால்,

ஒன்றைத் தப்பு என்பது எதற்காக? ஸ்வய நலனுக்காகப் பண்ணினால்தானே? அல்லது ஒருத்தனைக் கெடுத்து இன்னொருத்தனுக்கு நன்மை பண்ணுவதுதானே தப்பு? இதிலே அந்த மாதிரித் தப்புகள் ஒன்றும் இல்லையே! 'ஒருத்தனையும் கெடுத்து விடக் கூடாது; ஏற்கெனவே ஸ்வாதந்திரியம் என்று சொல்லிக் கொண்டு குலாசாரங்களை விட்டுக் கெட்டுப் போய்க் கொண்டிருப்பவர்களுக்கு மதாபிமானம் உள்ள நாமும் வலுத் தந்துவிடக் கூடாது. எவனையும் நாம் கெடுத்துவிடக் கூடாது. நமக்குப் பிரியமானது போனாலும் போகட்டும்' என்கிற தியாகத்தின் மேல்தானே இப்படிச் செய்யச் சொல்கிறேன்? அதனால் தப்பு இல்லை.

அதனால், வைதிகாசாரங்களையே விட்டு மதாந்தரங்களுக்கு மாறினால்தான் தப்பு என்றும், வைதிகாசாரங்களிலேயே ஒரு ஸம்பிரதாயத்திலிருந்து இன்னொன்றுக்குப் போனால் தப்பில்லை என்றும் நினைக்காமல், முடிந்த மட்டும் அவரவரும் குலாசாரப்படியே நடக்கத்தான் பாடுபட வேண்டும். '(பிறப்பால் ஏற்பட்ட மதத்தை) விட்டவன் பதிதனாகிறான் என்பது இவனுக்குப் பொருந்துமா, விட்டதோடு நாஸ்திகனாகவோ இதர மதமொன்றுக்கோ போகாமல் வைதிகாசாரத்திலேயே இன்னொன்றுக்குத்தானே போகிறான்?' என்றால் இவனளவில் ஒன்றை விட்டுவிட்டு நல்ல வழியில் இன்னொன்றைப் பிடித்துக் கொள்கிறானென்றாலும், இந்த ஸ்வதந்திர யுகத்திலே மற்றவர்கள் இவனைப் பார்த்து (குலாசாரத்தை) விடுவதில் மட்டும் துணிச்சலடைந்து, இன்னொரு ஆசாரத்தில் போகாமல், தப்பு வழியிலல்லவா

Koviloor Digital Library

போவார்கள்? அதாவது இவன் மற்றவர்கள் பதிதர்களாகப் போகத் தூண்டுதல் கொடுத்து விடுகிறானல்லவா? இப்படிப் பண்ணினவனை மட்டும் பதிதனாகிற தோஷம் விடுமா?

'உலகத்தில் ஏற்கெனவே கட்டுவிட்டுப் போச்சு; அதனால் கெட்டுப் போச்சு; இதற்கு நாமும் உடந்தையாகவோ, ஊக்கம் தருபவராகவோ இருந்துவிடக் கூடாது' என்பதைத்தான் இன்றைக்கு மதாபிமானம் உள்ளவர்களெல்லாரும் எல்லா வற்றுக்கும்மேலான தர்மமாக, கடமையாக நினைக்க வேண்டும். அப்படி நினைத்து, நம் அந்தரங்கத்திலே இப்படி குலா சாரத்துக்கு வித்தியாஸமான ஒரு விச்வாஸத்தை உண்டாக்கி யிருக்கும் பகவானே அதை எப்படியாவது பூர்த்தி பண்ணி விடுவான் என்ற நம்பிக்கையோடுகூட, அவரவரும் தங்கள் குலாசாரப்படியே செய்து வந்தால் பகவான் நம் மூலம் உலகுக்கு க்ஷேமம் உண்டாக்கி, முடிவில் நமக்கும் நம் மனஸ் எப்படி நிறையுமோ அப்படிப்பட்ட நிறைவு உண்டாகும்படி அனுக்ரஹம் பண்ணுவான்!

ஆசார விஷயங்கள்: ஆசாரம் என்பதன் இலக்கணம்

ஸமயாசாரம், மதாசாரம் என்று சொல்லும்போது ஒரு மதத்தின் நெறி முழுவதையும் 'ஆசாரம்' என்பது குறிப்பிடு கிறது. ஆனால் பொதுவிலே ஒருத்தர் ஆசாரமாயிருக்கிறார் என்றால், மடி – விழுப்பு என்று இரண்டு சொல்லிக் கொண்டி ருக்கிறோமே (வார்த்தையிலாவது இன்றைக்கு வரையில் இருக் கிற 'மடி' அடியோடு மறந்து போய்விடக் கூடாதென்றுதான் இந்த உபன்னியாஸமெல்லாம் பண்ணுவது) அதிலே மடியா யிருப்பது என்றுதான் வைத்துக் கொண்டிருக்கிறோம். மடி, விழுப்பு பார்க்கிறதுதான் ஆசாரம்; சாஸ்திரத்தில் சொன்ன பிரகாரம் ஒருத்தர் சிகை வைத்துக் கொண்டிருக்கிறார், கச்சம்

Koviloor Digital Library
போட்டு வேஷ்டி கட்டிக் கொண்டிருக்கிறார், புண்ட்ர தாரணம் (நெற்றிக்கிடுதல்) பண்ணிக் கொண்டிருக்கிறார், நாள் நக்ஷத்ரம் பார்த்துக் காரியம் பண்ணுகிறார், க்ளப்புக்கு (ஹோட்டலுக்கு)ப் போவதில்லை, எவர்ஸில்வரில் சாப்பிடுவதில்லை என்றால் அவரை ஆசாரமாயிருக்கிறார், orthodox என்கிறோம்.

இப்படியாக ஒரு மதத்தின் எல்லா நெறிகளுமே அதன் ஆசாரம்தானென்றாலும், வெளி வாழ்க்கையில் அதன் கட்டுப் பாட்டுப்படி நடந்து கொண்டு, அதில் சொல்லியிருக்கிற வெளி யடையாளங்களான சின்னங்கள் முதலியவற்றை மேற்கொண்டு நடந்து காட்டுவதே குறிப்பாக ஆசாரம், ஆசாரம் என்று வழங் குகிறது.

ஆனால் ஆசாரம் என்பது முழுக்க வெளி விஷயந்தான் என்று நினைத்து விட்டால் அதுதப்பு. வெளி ஸமாசாரங் களாலேயே உள் ஸமாசாரங்களை, உள்ளத்தை உயர்த்திக் கொள்ள உதவுகிறதுதான் ஆசாரம்*. அதோடுகூட நேராக உள்ளத்தின் ஸமாசாரங்களையும், வாழ்க்கை நெறிகளையும்கூட ஆசார சாஸ்திரங்களிலே சொல்லியிருக்கிறது.

'ஆசாரம்' என்பதைத் தமிழிலே நேராக 'ஒழுக்கம்' என்று சொல்லி விடலாம். உயிரினும் ஓம்பப்படும் என்று திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கிறாரோ, அப்படி நம் பிராணனை விட உசந்ததாகக் கருதி எதை ரக்ஷிக்க வேண்டுமோ, அந்தத் தர்ம வழியே ஆசாரம். தர்மம் என்கிறது அகம், புறம் எல்லா வற்றிலும் எல்லா அம்சங்களையும் தழுவுகிற விஷயமல்லவா?

இங்கிலீஷில் 'Character' என்பதாக ஒருத்தனின் உள் ஸமாசாரமான குணத்தையும், 'Conduct' என்று அவனுடைய வெளி ஸமாசாரமான நடத்தையையும் சொல்கிறார்கள். ஆசாரம் என்பதும், ஒழுக்கம் என்பதும் காரெக்டர், கான்டக்ட் ஆகிய இரண்டையும் ஒன்றாக்கிச் சேர்த்துக் கொடுப்பது. இது வெறுமனே morality ethics என்று சொல்கிற இஹ. வாழ்க்கைக்

---

* அருள் உரை 9-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள உள்ளும் புறமும், சடங்குகள் என்ற உரைகளையும், 33-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள தர்மசாஸ்திரம் என்ற உரையில் சின்னங்கள் என்ற பிரிவையும் பார்க்கவும்.

Koviloor Digital Library
கான நன்னெறிகளாக மட்டுமில்லாமல் பர லோகத்துக்கும் உதவுவதான காரியங்களை, ஸம்ஸ்காரங்களை, சின்னங்களை, விதி நிஷேதங்களை (இன்ன செய்யலாம், இன்ன செய்யக் கூடாது என்பவற்றை)யும் சொல்கிறது.

புற விஷயம் மாதிரியிருந்தாலும் அக விஷயத்துக்கும் உபகாரம் பண்ணும் படியாகவும், இம்மைக்கு மட்டுமில்லாமல் மறுமைக்கும் உதவுவதாகவும் நம்முடைய ஆன்றோர்கள் வகுத்துத் தந்திருக்கிற முறையே 'ஆசாரம்!'

அடுத்த புத்தகத்தில்...

ஸமூக, தனி வாழ்க்கை நெறிகள் என்கிற தலைப்பின்கீழ்க் கட்டுரைகள் தொடர்கின்றன.

Koviloor Digital Library



Koviloor Digital Library



திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீச்வரர் கோயில்

Koviloor Digital Library



விகடன்
வெளியீடு

அருள் உரை

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி

சங்கராச்சாரிய ஸ்வாமிகளின்

அருள் உரை

48

விகடன்
வெளியீடு

Koviloor Digital Library

முதற்பதிப்பு: அக்டோபர், 1993

பின் அட்டை ஓவியம். சில்பி

விலை ரூ. 3

'தெய்வத்தின் குரல்' (வானதி பதிப்பகம்) மூன்றாம் பகுதியிலிருந்து தொகுக்கப் பட்டது.

ஆனந்த விகடன்,
757, அண்ணா சாலை,
சென்னை-600 002.

Koviloor Digital Library

ஸமூக, தனிவாழ்க்கை நெறிகள்



புறத்திலிருந்து அகத்துக்கு

'புறம்' என்று எடுத்துக் கொண்டால், ரொம்பவும் பிலஸாஃபிகலாக – வேதாந்தமாகப் போகிறபோது எல்லா வற்றுக்கும் புறத்தில், வெளியிலிருப்பது சரீரம். அன்னமய கோசம் என்று ஐந்து கோசங்களில் அதைத்தான் ஆத்மாவுக்கு ரொம்ப தூரத்தில் வைத்துச் சொல்லியிருக்கிறது. அது எப் படிப் போனால் என்ன என்று ரொம்பவும் உதாஸீனமாகத் தான் மஹா ஞானிகள் இருந்திருக்கிறார்கள். அனேக மஹான் களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம், மல மூத்ராதிகளைப் பூசிக் கொண்டு, புழுத்துப் போனதைத் தின்று கொண்டு ஸ்நானம் கிடையாது, பல் தேய்க்கிறதில்லை என்று, எங் கேயோ குப்பை கூளத்திலே கிடந்தார்கள் என்று! இதற்கெல் லாம் மாறாக ஒருத்தனின் சரீரசுத்தியை இப்படியிப்படி உண் டாக்கிக் கொள்ள வேண்டும், ஆஹாரம் இப்படியிப்படி சுத்த மாயிருக்கணும், அவன் வஸிக்கின்ற இடத்தில் இப்படியாகப் பட்ட சுத்தமான அம்சங்களெல்லாம் இருக்க வேண்டும் என் பதையெல்லாம், ரொம்பவும் 'புற'த்திலேயிருந்து கொண்டு ஆசார சாஸ்திரங்களில் நிறையச் சொல்லியிருக்கிறது. நாம் இருக்கிற நிலையில் இப்படிப் புறசுத்தியில் கண்டிப்பும் கறாரு மாக இருந்து ஆரம்பித்தால்தான், அப்புறம் என்றைக்கோ ஒரு நாள் அந்த ஞானிகளுடைய நிலைக்குப் போகலாம் என்பதற் காகவே, அதாவது முடிவிலே முழுக்க ஆத்ம லோகம் என்கிற அக வாழ்விலே சேர்கிறதை லக்ஷ்யமாகக் கொண்டே, சரீரம், வீடு, சுற்றுப்புறம் முதலான புற விஷயங்களின் சுத்தத்தி

Koviloor Digital Library

லிருந்து ஆரம்பித்து ஆசாரங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வெளிவிஷயங்களில் என்ன கட்டுப்பாடு வேண்டிக்கிடக்கிறது என்று நாம் இஷ்டப்படி பண்ணினால், எல்லாம் மனஸ் இழுத்துக் கொண்டு போகிறபடி போய், அதுவும் இல்லை, இதுவும் இல்லை என்றுதான் முடியும். ஆசாரம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை உண்டாக்கிவிட வில்லை என்று இந்த நாள் வேதாந்திகள் சொல்கிறது நிஜம்தான். அதாவது, உடனே நேர்பலனாக உண்டாக்கவில்லை என்பது நிஜம்தான். ஆனால் என்றைக்கோ ஒரு நாளாவது நாம் நிஜமான வேதாந்திகளாக ஆக வேண்டுமானால், அதற்கு இப்போது நமக்கு இருக்கிற சரீர-குடும்ப-ஸமூஹ அபிமானங்களில் ஆரம்பித்து இவற்றை எப்படி ஆசாரரீதியில் சுத்தப்படுத்திக் கொள்வது என்பதில் கவனம் செலுத்தி அப்படிப் பண்ணிக் கொண்டு போனால் தான் முடியும். ஆசாரமேயில்லாமல் ஆத்ம ஸம்பத்தை ஸம்பாதித்துக் கொள்வது என்பது எந்த ஒரு நாளுமே அந்த 'ஐடியல்' நிலைக்குப் போக முடியாமல் நம்மைக் கெடுப்பதில் தான் முடியும்.

'ஆசார ஹீநம் ந புநந்தி வேதா:'– அதாவது, ஆசாரமில்லாமல் எத்தனைதான் வேதத்தைப் படித்தாலும் அதனால் ஒருத்தனை வேதம் சுத்தனாக்கி விடாது என்று சொல்லியிருக்கிறது. எப்பேர்ப்பட்ட புண்ய தீர்த்தமானாலும் மண்டையோட்டிலே கொண்டு வந்தால் எப்படிப் பிரயோஜனப் படாதோ, எத்தனை நல்ல பசும் பாலானாலும் நாய்த்தோல் பையில் வைத்திருந்தால் எப்படிப் பானயோக்யமாகாதோ அப்படியே ஆசாரஹீனன் எவ்வளவு வேத சாஸ்திரங்களெல்லாம் படித்தவர்களாக இருந்தாலும் அவனிடமுள்ள வித்யை அவனுக்கும் உதவாமல் லோகத்துக்கும் உதவாமலே போகும் என்று சாஸ்திரத்திலிருக்கிறது. வேதத்தைப் பற்றி, உபநிஷத்தைப் பற்றி நன்றாகப் பிரஸங்கம் பண்ணுகிறார்கள். ரொம்ப ஆராய்ச்சி பண்ணிப் புஸ்தகங்கள் எழுதுகிறார்கள் என்பதால் அப்படிப்பட்டவர்கள் சுத்தர்கள் என்று ஆகி விடாது. தாங்கள் ஆசாரங்களை விட்டு விட்டதால் மற்றவர்களும் விட வேண்டும் என்று இவர்கள் சொல்வதற்கும் 'வால்யூ' கிடையாது. சுத்தர்கள் எப்படி வாழ்கிறார்களோ, தங்கள் வாழ்க்கை உதாரணத்தாலேயே என்ன உபதேசிக்கிறார்

Koviloor Digital Library

களோ அதற்குத்தான் மதிப்பு உண்டு. தலைமுறை தலைமுறையாக அனேகச் சுத்தர்கள் ஆசாரங்களை அனுஷ்டித்து வந்திருப்பதால்தான் அதற்கு ஸதாசாரம், சிஷ்டாசாரம் என்ற பெயர்கள் வந்திருக்கின்றன. ஸத்துக்கள் அனுஷ்டிப்பது ஸதாசாரம். ஸத்துக்கள் என்றால் நல்லவர்கள், உத்தமர்கள். சிஷ்டர்கள் என்றால் உசந்த குணமும் தோஷமில்லாத வாழ்க்கையும் உள்ளவர்கள்; 'சான்றோர்' 'மேலோர்' எனப்படுகிறவர்கள். அப்படிப்பட்டவர்கள் சாஸ்திரப்படியான ஆசாரங்களை நன்றாக அனுஸரித்துத்தான் வந்திருக்கிறார்கள். ஞானத்திலே போய் ஆத்ம சாக்ஷாத்காரம் பெறுவது, பக்தியினாலே ஈச்வரானுபவம் அடைவது என்ற இரண்டும் ஜீவனின் உள் குணத்தை மாற்றிக் கொள்வதாகவேயிருக்க, ஆசாரமெல்லாம் கர்மா, சின்னங்கள் முதலிய வெளி விஷயம் பற்றினதாயிருக்கிறது என்று சொல்பவர்கள் சொன்னாலும் இதை விட்டால் அதற்குப் போக வழியில்லை.★

★ அருள் உரை 23, 24 புத்தகங்களில் இடம்பெற்றுள்ள 'வேதம்' என்ற உரையிலுள்ள வேதமும் வேதாந்தமும் முரணானவையா? என்னும் உரையையும், நாற்பது ஸம்ஸ்காரங்கள் என்ற உரையிலுள்ள குணமும் காரியமும் என்னும் பிரிவும் இவ்விஷயமாகத் தெளிவு தரும்.

Koviloor Digital Library

ஆசாரத்தில் ஸாமான்ய தர்மங்கள்

வெளித் தூய்மையான 'சௌச'த்தையே ஆசாரம் என்பது முக்கியமாகக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. மடி – விழுப்புதான் ஆசாரத்தில் முக்கியமாயிருக்கிறது என்பதால் சௌசம் இதில் பிரதானம் என்பது வாஸ்தவந்தான். இந்த 'சௌசம்' ஐந்து ஸாமானிய தர்மங்களில் நாலாவதாக வருகிறது. எல்லா ஜாதியாருக்கும், ஸகல ஜனங்களுக்குமான பொது அறங்களை மனுஸ்மிருதி 'ஸாமான்ய தர்மங்கள்' என்ற ஐந்தாகச் சொல்லி, இவற்றில் முதலில் அஹிம்ஸை, அப்புறம் ஸத்யம் மூன்றாவதாக அஸ்தேயம் (திருடாமலிருப்பது, அதாவது பொருளாசை பிடித்தலையாமலிருப்பது) என்பவற்றையும், அப்புறம் 'சௌசம்' என்கிற தூய்மையையும் சொல்லிவிட்டு, ஐந்தாவதாக இந்த்ரிய நிக்ரஹத்தை (புலனடக்கத்தை) விதித்திருக்கிறது★. ஆசாரம் என்பது பெரும்பாலும் இதில் 'சௌச'த்தின் கீழ் வருவதாகவே தோன்றினாலும், சாஸ்திரங்களை ஆராய்ந்து ஆலோசித்துப் பார்த்தால் ஐந்து தர்மங்களையுமே ஆசாரம் என்பது தழுவுகிறது என்று தெரியும். எப்படியென்று பார்க்கலாம்.

ஆஹார சுத்தியைப் பற்றி ஆசாரத்தில் சொல்கிறபோது மாம்ஸ போஜனம் கூடாது என்கிறது. இதனால் ஸாமான்ய தர்மங்களில் முதலாவதான அஹிம்ஸையை ஆசாரமும் சொல்வதாக ஆகிறது. ஸத்யான் நாஸ்தி பரோ தர்ம: என்று தர்மங்களின் உச்சியில் ஸத்யத்தை வைத்திருப்பதால் ஸத்யமும் ஆசாரமாய் விடுகிறது. ஆசாரத்திலேயே ஸத்யமும் இருக்கிறது என்பதற்கு இன்னொன்றும் சொல்கிறேன். ராஜதண்டனைக்கு ஆளாகி ஒருத்தன் ஜெயிலுக்குப் போனால் அவன் தோஷியாகி

★ அருள் உரை 6வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள சாமானிய தருமங்கள்; அனைவருக்கும் பொதுவானவை என்ற உரையைப் பார்க்கவும்.

Koviloor Digital Library

விடுகிறான் (தோஷமுள்ளவனாகி விடுகிறான்): பிராயச்சித்தம் பண்ணிக் கொண்டாலொழிய அவனை ஸமூஹ ப்ரஷ்டம் செய்துவிட வேண்டுமென்பது ஓர் ஆசாரவிதி. தர்மராஜ்யம் நடந்துவரும் காலத்தில் – சாஸ்திர காலங்களில் அப்படித்தான் நடந்து வந்தது – வாஸ்தவமாகவே குற்றம் பண்ணினவன் தான் தண்டனை பெற்று ஜெயிலுக்குப் போவான்.

குற்றம் இரண்டு தினுஸு ஸிவில் – க்ரிமினல் என்று. ஸிவில் வியாஜ்யங்கள் என்பவை அனேகமாக ஏமாற்று, மோசடி முதலானவற்றைச் சேர்ந்தவைதான். அதாவது அஸத்யத்துக்காகத்தான் ஸிவில் வியாஜ்யங்களின் பேரில் ஒருத்தன் ஜெயிலுக்குப் போவது. இதனாலேயே, ஒருத்தன் ஆசார சாஸ்திரப்படி ஜெயிலுக்குப் போகாமலிருக்க வேண்டுமென்றால், அவன் ஸாமானிய தர்மங்களில் இன்னொன்றான ஸத்யத்தைக் கடைப்பிடித்துத்தான் ஆகவேண்டும். அனேகமாக இப்படி அஸத்யமாக ஏமாற்றுப் பண்ணுவது இன்னொருத்தனுடைய சொத்தை ஏப்பம் விடுவதற்காகத் தானிருக்கும். வாங்கின கடனைத் திருப்பித் தர்ராமலிருப்பது, பொய்ப் பத்திரம் எழுதி இன்னொருத்தன் பணத்துக்கு பாத்யதை கொண்டாடுவது, குத்தகைப் பணம் கட்டாமலிருப்பது ஆகிய இதெல்லாம் ஸாமானிய தர்மங்களில் மூன்றாவதாயிருக்கிற அஸ்தேயத்தின் கீழ் வந்து விடுகின்றன.

கிரிமினல் கேஸ்கள் – அடிதடி பண்ணிக் கொலை கொள்ளை பண்ணுவதற்காக ஜெயில் தண்டனை கொடுக்கின்றன. அடிதடி கொலை கூடாது என்பதால் அஹிம்ஸையையும் ஆசாரத்தில் implied-ஆக (உட்கிடையாக)க் கொண்டு வந்தாகி விடுகிறது. கொள்ளை, திருட்டு எல்லாம்தான் ஸ்தேயம். இவற்றைச் செய்யாதிருப்பது அஸ்தேயம். பெண்களை மானபங்கப்படுத்துவது, வியபசாரம் முதலானவையும் ஸிவிலாகவோ, கிரிமினலாகவோ குற்றங்களில் வருவதால், ஜெயிலுக்குப் போகக் கூடாது என்ற ஆசாரவிதியே ஐந்தாவது ஸாமான்ய தர்மமான இந்திரிய நிக்ரஹத்தையும் வலியுறுத்துவதாக ஆகிவிடுகிறது. இதுவும் தவிர (இந்திரிய) ஒழுக்கங் கெட்டவர் எந்த சாஸ்திர கர்மாவுக்குமே அனர்ஹர் (தகுதி இல்லாதவர்) என்று வியக்தமாகவே அவர்களை ஆசார

Koviloor Digital Library

முறையானது ஒதுக்கி வைத்திருக்கிறது.

இதே மாதிரி சௌச விதிகளோடு கூடவே ஸத்யம், தயை, தியாகம், லோப குணமில்லாமை, அஹிம்ஸை முதலானவற்றையும் நேரடியாகவே ஆசார நூல்கள் சிறப்பித்துப் பேசுகிற இடங்களுண்டு. இன்னம் அனேக இடங்களில், 'இன்ன ஆசாரத்தை அனுஷ்டிக்காதவன் வாக்குப் பிரமாணம் தவறினால் என்ன பாபமோ, ஆயிரம் பொய் சொன்னால் என்ன பாபமோ, ஜீவஹிம்ஸை பண்ணினால் என்ன பாபமோ, ஸ்வர்ணஸ்தேயம் (பொன்னைத் திருடுவது) பண்ணினால் என்ன பாபமோ, பரதார கமனம் பண்ணினால் என்ன பாபமோ, அப்பேர்ப்பட்ட பாபத்தை அனுபவிப்பான்' என்று சொல்லியிருக்கும். இங்கே சொன்ன பாப லிஸ்டைப் பார்த்தால் சௌசத்தின் கீழ் வருவதாகவே பெரும்பாலும் தோன்றுகிற ஆசாரமானது அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம், இந்திரிய நிக்ரஹம் ஆகிய மற்ற நாலு ஸாமானிய தர்மங்களையும், அவலம்பித்து விடுகிறது. (நிலைநாட்டிவிடுகிறது) என்பது தெரிகிறது.

வித்யாப்யாஸம் செய்கிறவனுக்கு அந்தக் காலம் பூராவும் பிரம்மசர்யத்தை விதித்து (அந்த ஆச்ரமத்துக்கே 'பிரம்மசர்ய ஆச்ரமம்' என்றுதான் பெயர் வைத்திருக்கிறது) அப்புறம் கல்யாணமான பின்னால் இன்னின்ன நாளில்தான் தம்பதிகள் ஸங்கமனம் செய்யலாம், பித்ரு தினம், விரதகாலம் போன்றவற்றில் கூடாது என்றெல்லாம் ஆசார நூல்கள் விதிப்பதால் இந்திரிய நிக்ரஹ விஷயத்தில் அவை ஸ்பெஷல் எம்ஃபஸிஸ் (தனியான அழுத்தம்) கொடுப்பது தெரியும்.

முடிவிலே இந்த ஆசாரம் எல்லாமே சித்த சுத்தியைத்தான் லக்ஷ்யமாகக் கொண்டவை. சித்தமலம் நீங்க வழி இந்திரியங்களை அழுக்கு எடுத்து ஒழுக்கத்தில் கொண்டு வருவதன்றி வேறில்லை. தன்னிஷ்டப்படி திரிகிற இந்திரியங்களை ஒரு நெறியில் அடக்கிக் கொண்டு வரவே ஆசாரம் என்பதால் இந்திரிய நிக்ரஹமும் அதுவும் ஒன்றேதான்.

இப்படியாக எல்லாத் தர்மங்களும் ஆசாரத்துக்குள் வந்து விடுகின்றன.

Koviloor Digital Library



தர்மத்துக்கும் ஆசாரத்துக்கும் தொடர்பு

இன்னொரு தினுஸாயும் சொல்வதுண்டு. அதாவது தர்மம் என்ற மருந்துக்கு ஆசாரம் பத்தியம் என்பார்கள். வியாதி தீர மருந்து மட்டும் சாப்பிட்டால் போதுமா? பத்தியமும் இருக்கணுமல்லவா? நல்ல ஜ்வரம் என்றால் மருந்து சாப் பிட்டுக் கொண்டே இன்னொரு பக்கம் பழையது சாப்பிட் டால் என்னவாகும்? மருந்தின் எஃபெக்ட் போய் விடுமல்லவா? அப்படித்தான் குணத்தையும் நடத்தையையும் பொறுத்த தர்ம மருந்தானது வெளித்தூய்மை, சின்னம் முதலானதைக் கொண்ட ஆசாரம் என்ற பத்தியமில்லாமல் பலிக்காது. வாஸ்தவத்தில் ஆசாரத்தின் சௌசம் வெளித்தூய்மை மட்டு மில்லாமல் உள்தூய்மைக்குமானதுதான். ஆனாலும் 'பாபுலர் கன்ஸெப்ஷ'னை (பஹுஜன அபிப்ராயத்தை)யொட்டி இப்படிச் சொன்னேன்.

தர்ம மருந்துக்கு ஆசாரம் எப்படிப் பத்தியம் என்று ஒரு திருஷ்டாந்தம் சொல்கிறேன்: பித்ரு தர்ப்பணம் பண்ண வேண்டியது எல்லா ஜாதியாருக்குமான தர்மம். மூதாதையரை ஸ்மரித்து வேதமந்திரங்களையோ, ச்லோக ரூபமான மந்திரங் களையோ சொல்லி எள்ளும் தண்ணீரும் இறைக்க வேண்டு மென்பது நம்முடைய பித்ருகடன் தீருவதற்கு மருந்து. இதைப் பண்ணும்போது ஸ்நானம் செய்து, வேஷ்டியைக் கச்சமாய் உடுத்துக் கொண்டு, தெற்கு முகமாகச் செய்ய வேண்டும். பூணூலை தோள் மாற்றிப் போட்டுக் கொண்டு செய்ய வேண் டும் என்றெல்லாம் சொல்கிற ஆசார விதிகள் பத்தியம். குளிக் காமல் உபவீதமாகப் பூணூலைப் போட்டுக் கொண்டு வடக்கு முகமாகத் தர்ப்பணம் பண்ணினால் பலனே கிடைக்காது.

'தர்மத்துக்கு ஆசாரம் அங்கம்', 'தர்மமே ஆசாரம்', 'ஆசாரத்திலிருந்துதான் தர்மம் பிறக்கிறது' (ஆசார; ப்ரபவோ

Koviloor Digital Library

தர்ம★:) என்றெல்லாம் சொல்லும்படியாக தர்மமும் ஆசாரமும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டிருக்கின்றன.

தர்மத்தை அனுஸரிப்பவர்களே ஸத்புருஷர்கள், சிஷ்டர்கள் எனப்படுகிறவர்கள். அதனால் ஆசாரத்தை ஸதாசாரம், சிஷ்டாசாரம் என்று சொல்கிறோம். ஆசாரமில்லாமலிருப்பது அநாசாரம்; ஆசாரத்துக்கு விரோதமாகப் பண்ணுவது துராசாரம். ஸஜ்ஜனங்கள் அனுஷ்டிப்பது ஸதாசாரம் என்கிறாற்போல் துர்ஜனங்கள் போகிற வழி துராசாரம் என்றும் சொல்லலாம்.

ஆசாரம் என்பதில் எல்லா ஸாமான்ய தர்மங்களும் அடக்கம் என்கிற மாதிரியே, இன்னம் அனேக ஸமாசாரங்களும் அதில் அடங்கியிருக்கின்றன. 'ஹெல்த்'துக்காக 'ஹைஜீனு'க்காக ஆன ஸுகாதார விஷயங்கள், வைத்ய சாஸ்திர ஸம்பந்தமான விஷயங்கள், ஸைகலாஜிகலான விஷயங்கள், இந்தக் கால ஸயன்ஸுக்கு ஏற்ற விஷயங்கள், 'மொராலிடி', அன்பு முதலானவற்றின் மீதான ஸமாசாரங்கள் எல்லாமே நம் ஆசாரங்களில் வந்துவிடுகின்றன. இது அத்தனையையும் ஆத்ம ஸம்பந்தமாக உசத்திக் கொடுப்பதுதான் அதன் சிறப்பு.

நமக்குப் புரிகிற ஸயன்ஸ், நமக்குப் பிடிக்கிற 'எதிக்ஸ்' (நன்னெறிக் கோட்பாடு) இவற்றுக்கு அனுஸரணையாயிருக்கிற ஆசாரங்களை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவற்றை 'ஸூப்பர்ஸ்டிஷன்' (மூடநம்பிக்கை) என்று தள்ளுவது தப்பு. நமக்குப் புரிகிறதும் பிடிக்கிறதும் நேருக்கு நேர் பலன் தருகிறவை. பல் தேய்க்கா விட்டால் துர்க்கந்தமாயிருக்கிறது. பல்லில் வியாதி வருகிறது என்று பிரத்யக்ஷமாகத் தெரிகிறது. மது பானம் பண்ணினால் புத்தி கெட்டுப் போகிறது, குடி மோஹத்தில் குடும்ப வாழ்க்கையிலே அனேக அனர்த்தங்கள் ஏற்படுகின்றன என்றெல்லாம் நமக்குப் பிரத்யக்ஷமாகத் தெரிகிறது. அதனால் பல் தேய்க்கணும், மதுபானம் பண்ணக் கூடாது என்றெல்லாம் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் ஆசாரங்களை ஒப்புக் கொள்கிறோம். ஆனால் எல்லா ஆசாரமுமே இப்படி நம் ப்ராக்டிகல் லைஃபில் (நடைமுறை

★ விஷ்ணு ஸஹஸ்ரநாம பலச்ருதி

Koviloor Digital Library
வாழ்க்கையில்) ப்ரூவ் ஆவதாக இருந்தால்தான் ஒப்புக் கொள் வோம் என்றால் அது தப்பு.

ஏனென்றால் த்ருஷ்ட பலன் என்பதாகப் பிரத்யக்ஷத்தில் பலனைக் கொடுக்கிறவற்றோடு, நேராகத் தெரியாமல் ஒவ் வொரு கார்யமும் அத்ருஷ்டமாகவும் புண்ய – பாபங்கள் என் றாகிப் பலன் தருகின்றன. (அத்ருஷ்டம் என்றால் இங்கே luck என்று அர்த்தமில்லை; அத்ருஷ்டம் என்றால் கண்ணுக்குத் தெரியாதது, அதாவது சிற்றறிவுக்குப் புரியாதது என்று அர்த்தம்) ஒரு காரியம் இந்த ஜன்மத்திலோ, ஜன்மாந்தரத் திலோ, அல்லது ஜன்மா இல்லாமலாக்கிப் பரமாத்மாவிடம் சேர்ப்பதிலோ கொடுக்கிற பலன்களையும் ஆசாரங்கள் சொல் கின்றன. இதற்கு 'அத்ருஷ்ட பலன்' என்று பெயர்.

ப்ராத: ஸ்நானம் ப்ரசம்ஸந்தி த்ருஷ்டாத்ருஷ்ட பலம் ஹிதத்

என்று சாஸ்திர வசனம். இங்கே இரண்டு விதமான பலன் களும் ப்ராத ஸ்நானத்தினால் விளைவதாகச் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. 'த்ருஷ்டபலன், அத்ருஷ்டபலன் இரண் டையும்: பிராத ஸ்நானம் கொடுக்கிறது என்று அதைப் புகழ் கிறார்கள்' என்று அர்த்தம்.

ஸூர்யோதயத்துக்கு முந்தைய மூன்றே முக்கால் நாழிகை (ஒரு நாழிகை என்பது 24 மினிட்)க்குப் பிராதக் காலம் என்று பேர். அருணோதயம் என்றும் சொல்லுவதுண்டு. அந்தக் காலத்தில் பச்சை ஜலத்தில் குளிப்பதற்கு பிராதஸ்நானம் என்று பெயர். ஆற்றில், குளத்தில் செய்தாலும் சரி, அகத்தில் மொண்டுவிட்டுக் கொண்டு செய்தாலும் சரி. தலைக்கும் ஜலம் விட்டுக் கொள்ளவேண்டும். (தலைக்கு தினமும் ஜலம் விட்டுக் கொள்வது ஸ்திரீகளுக்கு அவசியமில்லை. விரததினம், பித்ருதினம் தவிர மற்ற நாட்களில் அவர்கள் தலைக்கு மஞ்சள் ஜலம் புரோக்ஷித்துக் கொண்டாலே போதும்.) பொதுவாகத் தலையோடு கால் பச்சை ஜலத்தில் காலங்கார்த்தாலேயே குளித்துவிட வேண்டும். இதன் த்ருஷ்ட பலன், அதாவது பிரத்யக்ஷ விளைவு, முதலாவதாக தேஹ சுத்தி, உடம்பின் அழுக்குப் போகிறதென்று நேரே தெரிகிறது. அதோடு அந்த வேளையில் குளித்து விடுவதால் தூங்குமூஞ்சித்தனம், சோம்

Koviloor Digital Library
பல் எல்லாம் போய், உத்ஸாகமும் சுறுசுறுப்பும் உண்டாகின் றன. புத்தித் தெளிவும் ஏற்படுகிறது.இன்னம் மெடிகல் ஸயன்ஸ் படி சொல்லும் போது, இந்தப் பிராத ஸ்நானத்தினால் நரம்பு மண்டலமே உறுதியடைந்து, இப்போது 'நெர்வஸ் டிஸீஸ்' என்று பல ரூபத்தில் பரவி வருவதெல்லாம் க்ஷீணித்து விடும் என்கிறார்கள். அந்த வேளையில் ஸ்நானம் செய்வது உணர்ச்சி களையும் குளிரப் பண்ணி சமனமாக்குகிறதென்பது இதன் ஸைகலாஜிகல் எஃபெக்ட்.

ஆனால், இந்த ஹைஜீன், மெடிகல் வால்யூ, ஸைகாலஜி எல்லாவற்றையும்விட முக்யம் இந்தப் பிராதஸ்நானம் சாஸ்திர வத்தாக மந்திரத்துடனோ, கோவிந்த நாம பூர்வமாகவோ பண்ணப் பட்டால் அது வெளி அழுக்கைப் போக்குவதோடு, ஆத்மாவையும் சுத்தி செய்யப் பிரயோஜனப் படுகிறதென்பது தான். சரீர அழுக்குப் போகிறதும், மனஸிலே அப்போதைக்கு ஒரு குளிர்ச்சி ஏற்படுவதும் உடனே த்ருஷ்டமாகத் தெரிகிறது. 'நெர்வஸ் ஸிஸ்டம் ஸ்ட்ரெங்க்தன்' ஆவது போகப் போகத் தெரியும். ஆத்ம சுத்தி ரொம்ப நிதானமாகத்தான் தெரியும். பிராத ஸ்நானமே மந்திர பூர்வமாக, அல்லது பகவந் நாம பூர்வமாக விதிப்படிப் பண்ணப்படும்போது அதனால் நமக்கு ஏற்படுகிற புண்யத்தின் விளைவுகள், இதனால்தான் அது (பிராத ஸ்நானத்தின் புண்யத்தினால்தான் இந்த நலன் நமக்கு வாய்க்கிறது) என்று டைரக்டாகத் தெரியாமல் என்றைக்கோ தான் உண்டாகும். இந்த ஜன்மாவிலோ இந்த லோகத்திலோ கூட இல்லாமல் அது உண்டாகலாம். அந்த அத்ருஷ்ட பலன் தான் ஆசாரங்களின் லக்ஷ்யம். த்ருஷ்டத்தில் எத்தனை நன்மை கள் உண்டானாலும் அதெல்லாம் இரண்டாம் பக்ஷந்தான்.

இந்தக் காரியத்துக்கு இந்த விளைவு என்று டைரக்டாக நாம் கண்டுகொள்ள முடியாமலிருப்பவை அத்ருஷ்ட பலன்கள். அவை ஸாக்ஷாத் பரமேச்வரனின் சித்தப்படி நடக்கிற விளைவு கள். அவன் எல்லாவற்றையும் மூடிமறைத்து ஆட்டம் போடு கிறவன். இப்படி மாயை பண்ணுவதுதான் அவன் தொழில். அந்த மாயாவியே மஹா கருணையோடு மஹான்களாக, ரிஷி களாக இருக்கப்பட்டவர்களுக்குத் தன்னுடைய திவ்ய சித்தத் தைக் கொஞ்சம் திறந்து காட்டுகிறான். அதனால்தான் நமக்கு ரஹஸ்யமாக இருக்கிற உண்மைகள் அவர்களுக்குத் தெரிகின்

Koviloor Digital Library

றன. பரம கருணையோடு அவற்றை லோகமும் உஜ்ஜீவித்து விட்டுப் போகட்டும் என்று அவர்கள் சாஸ்திரங்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படித்தான் அத்ருஷ்ட பலனைத் தரு கிற ஸமாசாரங்களைப் பற்றி நமக்கு ஆசார விதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். இதில் நமக்குப் பிரத்யக்ஷ நிரூபணம் (practical proof) இல்லை, அல்லது இதற்கு Scientific basis (விஞ்ஞானரீதியான அடிப்படை) இல்லை, அல்லது இது நம்முடையSocial ideology-க்கு (ஸமூஹ வாழ்க்கைக் கொள்கைக்கு) ஒத்து வரவில்லை என்று சொல்லி அலக்ஷ்யம் செய்வது கொஞ்சங்கூட புத்திசாலித்தனமாகாது.

நம் புத்தியின் நேர் Proof-க்கு வராத விஷயங்களும் ஈச்வரனு டைய மஹா புத்தியில் இருக்க முடியும். அவற்றை அவனோடு அவனாகக் கலந்திருந்த மஹான்கள் அறிந்து நமக்குச் சொல்ல முடியும் என்பதில் பக்தியும் சிரத்தையும் இருக்க வேண்டியது அவசியம். ஆசாரமென்பது மெகானிகலாக ஏதோ ஒரு 'ரொடீனை' அனுஸரிப்பது மட்டுமில்லை. சரீர காரியத்தோடு இதில் மனஸின் பக்தி சிரத்தையும் கலக்க வேண்டியது ரொம்ப அவசியம். இல்லாது போனால் பலன் ஏற்படாது!

செயல்களை ஈச்வரபரமாக்குவது

இப்படி மனஸையும் காரியத்தின்போதே ஈச்வரனிடம், நேராகவே அவனிடம், அல்லது அவனது சிப்பந்திகளாக, அம்சங்களாக இருக்கிற அனேகத் தேவதைகளிடம் கலக்கும் படிப் பண்ணத்தான் மந்த்ரங்களைக் கொடுத்திருக்கிறது.

பிராத ஸ்நானத்தை இப்படி தேஹத்துக்காக மாத்திரமில்லா மல் ஆத்மார்த்தமானதாக ஆக்கிக் கொடுக்கும்போது, முதலில் அருகம் புல்லையும் கொஞ்சம் சுத்தமான ம்ருத்திகையையும் (மண்ணையும்) தலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அப் போது அந்த அருகம் புல்லையும் ஈச்வரசக்தியின் ஓர் அம்ச

Koviloor Digital Library

மான தேவதை என்று பக்தியோடு புரிந்து கொண்டு, அதை ஸ்துதித்து 'தூர்வாஸூக்தம்' என்கிற மந்திரங்களைச் சொல்ல வேண்டும். 'அல்பப் புல்' என்கிறோமே அதைக்கூட ஈச்வராம்சம் என்று வேதமே ஸ்தோத்திரிக்கும் ஸூக்தத்தைச் சொல்ல வேண்டும். 'மண்ணாங்கட்டி' என்று ரொம்ப மட்டமாகச் சொல்கிறோமே, அந்த மண்ணையும் இப்படியே ஸாக்ஷாத் நாராயண பத்னியான பூப்பிராட்டியாகப் புரிந்து கொண்டு 'ம்ருத்திகா ஸூக்தம்' சொல்லிப் புல்லோடு தலையில் வைத்துக் கொண்டு குளிக்க ஆரம்பிக்க வேண்டும்.

ஸ்நானம் செய்யும்போது சொல்ல 'அகமர்ஷண ஸூக்தம்' என்று ஒன்று இருக்கிறது. இங்கே தேஹத்தின் ஸ்நானமே ஆத்மாவின் அழுக்கையும் அலம்பிவிட மந்திரங்கள் இருக்கின் றன. ஆத்மாவின் அழுக்கு என்பது அதன்மேல் படிந்திருக்கிற நம் பாபங்கள். 'அகம்' என்றால் பாபம். தேய்த்து அப்புறப் படுத்துவது 'மார்ஷணம்'. உடம்பைத் தேய்த்து ஸ்நானம் பண்ணும் போதே இப்படிப் பாபத்தையும் தேய்த்துக் கழுவி விடுவதற்கு வேத 'அக மர்ஷண ஸூக்தம்.' வேத மந்திரங்கள் சொல்ல அதிகாரமில்லாதவர்கள், 'கோவிந்தா கோவிந்தா' என்று ஸ்நானம் செய்ய வேண்டும். 'கோவிந்தேதி ஸதா ஸ்நானம்' என்று இருக்கிறது. கோவிந்த நாமாவே ஆத்மாவுக் குப் புண்ய தீர்த்த ஸ்நானம்தான்.

கோவிந்த நாமாவே புண்ய தீர்த்தம் என்றதால் ஸ்நானமே பண்ணாமல் 'கோவிந்தா கோவிந்தா' என்று சொல்லிவிட்டு, விழுப்போடேயே சாப்பிட்டு விடலாம் என்று குதர்க்கம் பண்ணிக் கொள்ளக் கூடாது. வாஸ்தவத்தில் ஒரு ஜீவன் பண்ணியிருக்கிற ஏகப்பட்ட கர்மாக்களிலிருந்து அவன் தப்பித்து, தன் பாப மூட்டை பூராவையும் கரைக்க வேண்டு மானால் அதற்குச் சரீரத்தை சக்கையாகப் பிழிந்து ஸத்காரியங் களை ஏராளமாகப் பண்ணித்தான் ஆகவேண்டும். இதனால் தான் சாஸ்திரங்களில் நூறாயிரம் காரியங்களை, விதிகளைக் கொடுத்து இவனைக் கட்டிப் போட்டிருக்கிறது. இருந்தாலும் அதே பகவான் ஒரு ஜட்ஜாக மட்டும் ஸ்ட்ரிக்ட்டாக இல்லா மல், நமக்கு அம்மையும் அப்பனுமாக உள்ள காருணிகன் ஆனதால், நாம் சாஸ்திரப்படியே செய்ய மனப்பூர்வமாக ஸர்வப் பிரயத்னமும் பண்ணி அப்படியே கண்டிப்போடு

Koviloor Digital Library

ஆசார அனுஷ்டானங்களை விதி வழுவாமல் அப்யாஸம் செய்து வரும்போது, எங்கேயாவது நம்மால் கொஞ்சம் முடியாமல் போய்விட்டால் அப்போது – அப்போது மட்டும் தான் – இத்தனை கண்டிப்பான விதிமுறையோ கடினமான காரியமோ இல்லாமல், மனஸார அவனை ஸ்மரித்தாலே போதும், அவன் நாமாவைச் சொன்னாலே போதும், அவன் இவ்வளவு தூரம் பண்ணின குழந்தைகளை மன்னித்து விடலாம் என்று ஆசார, அனுஷ்டானங்களையும் தளர்த்தி அனுக்ரஹம் பண்ணுகிறான் என்று வழிகாட்டியிருக்கிறார்கள்.

இதை ஒரு சாக்காகக் காட்டி, 'எந்த ஆசாரமும் இல்லா மலிருப்பேன். 'ஹரே ராமா' என்று பஜனை பண்ணினால் போதும்' என்று இருந்தால் அப்படிப்பட்ட கட்டுப்படாத சோம்பேறிக்கு பகவான் ஏமாந்துபோய் அனுக்ரஹம் பண்ணி விட மாட்டான். நிஜமாகவே 'ஹரே ராமா' என்று அவனிடமே ஹ்ருதயத்தை அர்ப்பணம் பண்ணி, உருகத் தெரிந்துவிட்டால் அப்படிப்பட்டவனுக்கு எந்த ஆசாரமும், எந்த சாஸ்திரமும் வேண்டாம்தான். அப்படிப் பட்டவர்கள் ஒரு நாமாவைச் சொல்லியே எத்தனையோ அற்புதங்களைப் பண்ணியிருப்பதும் வாஸ்தவம். ஆனால் அந்த ஸ்திதியில் நாம் இருக்கிறோமா என்பது நமக்கே தெரியும்!

வேத மந்திரங்களின் வீர்யம் குறையாமல் அவற்றை ரக்ஷித்துத் தருகிற பொறுப்புப் பெற்றவர்களும், புத்திவேலை அதிகமுள்ளவர்களுமான ஜாதியாருக்குக் காரியமும் வேண்டும், ஆசாரக் கட்டுப்பாடும் அதிகம் வேண்டுமென்றுதான் சாஸ் திரத்தில் அவர்களுக்கு மந்திர பூர்வமாக இத்தனை அனுஷ் டானங்களை வைத்திருக்கிறது. மற்ற விதத்தில் தேஹத்தால் அனேகக் காரியங்களைச் செய்து ஸமூஹத்துக்கு உபகரித்து, இதன் மூலமே தங்கள் கர்மாவை அனுபவித்துத் தீர்த்துச் சித்த சுத்தி பெறுகிற இதர ஜாதிக்காரர்களுக்கு இத்தனை கடுமை யான ஆசாரமில்லை; மந்திரங்களுக்குப் பதில் அவர்கள் பகவந் நாமாவை அல்லது ஸ்தோத்ரங்களை, துதிப்பாடல்களைச் சொன்னாலே போதுமானது.

என்ன சொல்லிக் கொண்டிருந்தேனென்றால், த்ருஷ்டமான லௌகிக பலனோடு, அத்ருஷ்டமான ஆத்மார்த்த பலனையும்

Koviloor Digital Library

பெறவே சாஸ்திர ஆசாரங்கள். அவற்றில் த்ருஷ்டமாகத் தெரிவதை மட்டும் எடுத்துக் கொண்டு, அத்ருஷ்டத்தைத் தள்ளுவது பிசகு.



ஆசார சாஸ்திரங்களில் விஞ்ஞான நுணுக்கம்

ஸமீப காலமாக நம் ஆசாரங்களைப் பற்றி இதற்கு முந்திய தலைமுறைக்கு இருந்ததைவிடக் கொஞ்சம் கௌரவ புத்தி உண்டாயிருப்பதைப் பார்க்கிறேன். முன்னே இங்கிலீஷ் படித்தவர்களென்றால் நம் ஆசாரம் அவ்வளவுமே பேத்தல் என்று நினைப்பவர்களாயிருந்தார்கள். ஆனால் நான் கொஞ்ச நாளாக ஒரு வேடிக்கை பார்க்கிறேன் – ஸயன்ஸும் ஸ்பிரிசுவாலிடியும் (ஆத்மிகமும்) ஒன்றுக்கொன்று விரோதமானதுபோல் தோன்றினாலும், ஸயன்ஸ் அபிவிருத்தியாகிக் கொண்டு வருவதாலேயே, புதிசு புதிசாக டிஸ்கவரி செய்யும்போது, 'இதென்னடா ஆச்சர்யமாயிருக்கிறது! நாம் ரொம்பவும் அறிவிலே பின் தள்ளி நின்றவர்கள் என்று நினைத்த ஆதிகால இந்தியர்கள் இந்த விஞ்ஞான உண்மைகளை, நமக்கு இருக்கிற லாபரட்டரியும் இன்ஸ்ட்ருமென்டுகளும் இல்லாமலே எப்படியோ கண்டுபிடித்து அவர்களுடைய சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறதாகத் தெரிகிறதே' என்று அதிசயப்படுகிறார்கள்.

கொஞ்ச நாள் முந்தி (பத்திரிகைகளில்) பார்த்திருப்பீர்கள் ரஷ்யாக்காரன் கம்யூனிஸ்ட், நிரீச்வரவாதி. ஆனால் இங்கே நாம், 'இதென்ன ஹோமம் என்று சொல்லிக்கொண்டு வீட்டை எல்லாம் புகையாக்கிக் கொண்டு, கண்ணும் கரிக்கக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது?' என்றால், ரஷ்யா தேச ஸயன்டிஸ்ட்கள் வறட்டிப் புகையினால் அடாமிக் ரேடியேஷன் (அணுச் சிதைவின் கதிரியக்கம்) உள்பட்ப் பலவித பொல்யூஷன்களைப் போக்கிக்கொண்டு விடலாமென்று சொல்லி, நம்முடைய

Koviloor Digital Library

ஹோமத்தைப் புகழ்ந்திருக்கிறார்கள். இதே போல ஹோமத்தில் போடப்படும் பலவிதமான ஸமித்துக்களின் புகை பரவுவதும் கிருமி நாசினியாக (antiseptic) உதவுகிறது என்று முன்னே டாக்டர்கள் சொன்னதுண்டு. தர்ப்பை, துளஸி, வில்வம் என்றிப்படி நம் சாஸ்திர காரியம், பூஜை இவற்றில் பிரயோஜனமாகின்றவற்றுக்கெல்லாம் வைத்ய ரீதியிலோ, மற்ற ஸயன்ஸ்களின் ரீதியிலோ sound basis (அழுத்தமான அடிப்படை) இருக்கிறது என்கிறார்கள்.

கிரஹண காலத்தில் எல்லாவற்றிலும் தர்ப்பையைப் போட்டு வைக்க வேண்டுமென்றால் முன்னே பரிஹாஸம் செய்தார்கள். 'ஸூரியனைப் பாம்பு தின்கிறதாம். அதன் நாக்கை அறுப்பதற்கு தர்ப்பை போட்டிருக்கிறார்களாம்' என்று கேலி பண்ணினார்கள். ஆனால் இப்போதோ கிரஹண காலத்தில் அட்மாஸ்ஃபியரிலும், அதற்கும் மேலே இருக்கிற ஸ்ஃபியர்களிலுங்கூட அனேக Contamination (அசுத்தம்) radiation ஆகியன உண்டாவதாகவும், கர்ப்பத்திலிருக்கிற சிசுவைக்கூட அது பாதிப்பதாகவும், அதனால் 'கிரஹணத் தீட்டு' என்று அந்தக் காலத்தில் சாப்பிடாமல் இருக்கணும் என்று வைத்ததில் ரொம்ப அர்த்தமிருப்பதாகவும், இந்தப் பாதிப்பை Counteract பண்ணும் (எதிர்த்துப் போக்கும்) சக்தி தர்ப்பைக்கு , இருக்கிறதென்றும் எழுதுகிறார்கள்.

எல்லாருக்கும் எல்லா ஸயன்ஸையும் சொல்லிக் கொடுத்து விட்டால் ஒவ்வொருத்தனும் 'ஆடம் பாம்(ப்)' பண்ணி வைத்துக் கொள்வதில்தான் முடியும் என்றுதான், கெடுதல் வராமலிருப்பதற்கு நாம் பண்ண வேண்டியதை மட்டும் சொல்லி, அதன் காரணத்தை, 'ராஹுப் பாம்பு ஸூர்யனை முழுங்கிற்று' என்பது போலக் கதா ரூபமாகப் பாமர ஜனங்களுக்குச் சொன்னார்கள் என்று ஒரு கட்சி. இதைக்கூட நான் முழுக்க ஸரி என்று சொல்ல மாட்டேன். எல்லாருக்கும் விஞ்ஞான மர்மம் தெரிந்து விட்டால் அனர்த்தமாகும் என்று நினைத்தது வாஸ்தவம். ஆனால் அதற்காகத்தான் விஞ்ஞான உண்மைகளுக்குப் பதில் கதைகளை இட்டுக்கட்டிச் சொன்னார்களென்பது ஸரியில்லை. இம்மாதிரிக் கதைகளும் நிஜம் என்று தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். பகவானின் லீலையில், நமக்கு ஸாத்யமாகத் தோன்றாத என்னென்னவெல்லாம் நடக்குமோ? நமக்கு எப்படித் தெரியும்?

Koviloor Digital Library

தங்களுடைய 'லிமிடெட் ஸர்க்கிளை'த் தாண்டி 'நாலெட்ஜ்' (அறிவு) வெளியே பரவக் கூடாதென்ற vested interest (சுயநலக் கும்பலின் கொள்கை)தான் நம் பூர்விகர்கள் இம்மாதிரி ஸயன்ஸ் உண்மைகளைக் கூறாமல், கதையிலே போர்த்தி மூடி வைத்ததற்குக் காரணம் என்றும் சிலர் குற்றம் சொல்கிறார்கள். இது ரொம்பத் தப்பாகும். மனஸ் கட்டுப் படாதவர்களுக்கு அறிவை மட்டும் கொடுப்பது அனர்த்தத்தில் தான் முடியும். பெரும்பாலான ஜனங்கள் மனஸ் கட்டுப்படாத வர்களாகத்தான் இருப்பார்கள். ஸயன்ஸ் ஸகல ஜனங்களுக்கும் பரவி முன்னேறிக் கொண்டேயிருக்கும்போது, அந்த முன்னேற் றத்துக்கு எதிர் ratio-வில், (விகிதாசாரத்தில்) லோகத்தில் தர்மம் பின்னே போய்க் கொண்டேயிருப்பதை நாம் பிரத்யக்ஷ மாகப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்? இதை அனேக நூற்றாண்டுகளுக்கு முன்பே போஜன் 'ஸமராங்கண ஸூத்ர'த்தில் சொல்லியிருக்கிறார். அதிலே 'ஏரோப்ளேனைப்' பற்றிக்கூட 'வ்யோமயானம்' என்று சொல்லி, ஆனாலும் அதன் theoryஐக் கொஞ்சம் மாத்திரம் கொடுத்துவிட்டு, இதைச் செய்யும் Procedure-ஐ இங்கே விஸ்தாரம் பண்ணாததால் அது தெரியாததாக்கும் என்று நினைக்க வேண்டாம். நன்றாகத் தெரியும். ஆனாலும் புஸ்தகத்தில் எல்லாருக்கும் தெரியும்படி யாக எழுதி வைத்து விட்டால், அதனால் லோகத்துக்கு நன்மை யைவிடக் கெடுதியே ஜாஸ்தி உண்டாகும் என்றுதான் இங்கே சொல்லவில்லை' என்று காரணங் காட்டியிருக்கிறார்.

அவர் சொன்னதிலுள்ள உண்மையை நாம் கண்கூடாகப் பார்த்து விட்டோம்; ரண பூமியில் மட்டும் யுத்தம் என்றில்லா மல் நாடு நகரமெல்லாம் குண்டு போட்டு World War நடந்த தற்குக் காரணம் விமானப் படையெடுப்புத்தானே? ஹ்ருதயம் சுத்தியாவதற்கு முந்தி புத்திமட்டும் விருத்தியானால் அனர்த்தந் தான் என்பதை ஸமயாசாரங்கள் எடுபட்டுப்போய் ஸயன்ஸ் மட்டும் அபிவிருத்தியாகிக் கொண்டிருக்கிற இக்காலத்தில் நன்றாகப் பார்க்கிறோம். இதனால்தான் சுத்தர்களான நல்ல கல்ச்சருள்ளவர்களுக்கென்று மாத்திரம் நம் பூர்விகர்கள் அனேக விஷயங்களை வைத்து விட்டனர்.

ஸமீப காலமாக நம் சாஸ்திர விஷயங்களில் பல, ஸயன்ஸுக்கு ஒத்து வருகின்றனவென்று கண்டுகொண்டதில் படிப்பாளிகள் கொஞ்சம் அதனிடம் கௌரவபுத்தி காட்டத் தொடங்கியிருக்கிறார்களென்று சொன்னேன். ஸயன்ஸ்

Koviloor Digital Library

கொஞ்சம் விருத்தியாயிருந்தபோது கேலி செய்தார்கள். இப்போது அதிக வளர்ச்சி அடைந்தபின் சில அம்சங்களைக் கொண்டாட ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னம் ஸயன்ஸ் விருத்தியாக ஆக இன்னம் பல சாஸ்திரீய ஸமாசாரங்களுக்கும் Scientific basis இருப்பதாகக் கண்டுபிடிப்பார்கள்!

விஞ்ஞானத்துக்குக் கட்டுப்பட்டதல்ல

நான் என்ன சொல்கிறேனென்றால், இந்தவரைக்கும் இது ஸந்தோஷத்துக்குரியதுதான் என்றாலும், நம் ஆசார அனுஷ்டானங்கள் பூராவையும் ஸயன்ஸின் எல்லைக்குள் கொண்டு வந்து, அந்த அடிப்படையில் நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது ஸரியில்லை என்கிறேன். ஸயன்ஸுக்கோ, நம்முடைய ஸோஷல் ஐடியாலஜிக்கோ, வேறெதற்கோ சாஸ்திரம் agree-ஆக வேண்டும் (ஒத்துப்போக வேண்டும்) என்கிற எண்ணமே தப்பு என்பது என் அபிப்ராயம். சாஸ்திரத்தின் ஸத்யம் அதன் சொந்தப் பிரமாணத்திலேயே இருக்கிறது. அது ரிஷிகள் கொடுத்த Super-science (நம் விஞ்ஞானத்துக்கு அதீதமான உயர் விஞ்ஞானம்). பாக்கி எல்லாவற்றுக்கும் அது பிரமாணமே தவிர, அவற்றின் basis-ல் (அடிப்படையில்) இதை ஒப்புக் கொள்வதென்பது தலைகீழ்ப் பாடம். நம்முடைய சிற்றறிவில் தோன்றும் social concept-களை (ஸமூஹக் கருத்துகளை) நாம் சாஸ்திரப்படி மாற்றிக் கொள்ள வேண்டுமேயன்றி, சாஸ்திரம் நம்முடைய 'கான்ஸெப்டு'க்கு வளைந்து கொடுக்க வேண்டுமென்று நினைப்பது தப்பு!

சாஸ்திரத்திலே நிறைய ஸயன்ஸ் இருக்கிறது வாஸ்தவம். அதனாலேயே அது முழுக்க ஸயன்ஸுக்கு உடன் பட்டாகிவிட வேண்டும் என்று ஆகாது. முன்னே கேலி செய்த விஷயங்களில் பல இப்போது விஞ்ஞான ரீதியில் அர்த்தமுள்ளவை என்று தெரிவதாலேயே, இப்போது நாம் கேலி செய்கிறவையும்

Koviloor Digital Library

அர்த்தமுள்ளவையாகப் பிற்பாடு தெரிய வரலாம் என்று அறிகிற அடக்கம் நமக்கு வர வேண்டும். 'நமக்குத் தெரிந்த 'த்ருஷ்ட'த்தோடு, தெரியாத, தெரிய முடியாத 'அத்ருஷ்ட'மும் இருக்கிறது; அதிலேதான் நம் நிறைவிருக்கிறது; இந்த 'அத்ருஷ்ட'த்தைச் சொல்லும் சாஸ்திரங்களை அனுஸரித்து நடந்துதான் நம் பூர்விகர்கள் பக்தியிலும் ஞானத்திலும் நிறைந்து லோகமெல்லாம் புகழும்படியாக இருந்தார்கள்; அதை விட்டதிலிருந்துதான் நாம் விஞ்ஞானத்திலும் பொருளா தாரத்திலும் எத்தனையோ முன்னேறியும்கூடக் கொஞ்சமும் நிறைவேயில்லாமல் திரிந்து கொண்டு, லோகமும் நம்மை மட்டந்தட்டும் படியாக ஆகிக்கொண்டு வருகிறோம்' என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற எல்லாமே நிஜம் என்ற நம்பிக்கை பெற வேண்டும்.

நமக்குத் தெரிகிற ஸயன்ஸ், வைத்ய சாஸ்திரம் முதலானவற் றுக்காகத்தான் ஆசாரம் என்றால் சாஸ்திர விதிகளை இவற்றின் படி மாற்றிக் கொண்டால் என்ன என்ற எண்ணம் வரும். சாணி போட்டு மெழுகுவது அது anti-septic என்பதற்காக மட்டுந்தான் என்று வைத்துக் கொண்டு விட்டால், அப்புறம் நம் பூஜை மாடத்தையோ அல்லது யாகசாலையையோ ஏன் சாணிக்குப் பதில் பினாயில் அல்லது கார்பாலிக் ஆஸிட்போட்டு அலம்பக் கூடாது என்று கேட்கத் தோன்றும். மணையில் உட்கார்ந்து கொண்டுதான் வைதிகக் கர்மா பண்ணணும் என்பது, மந்திரத் தின் எலக்ட்ரிஸிடி நம்மை விட்டுப் போகப்படாது என்பதற் காக மட்டுமே என்று வைத்துக் கொண்டால் அப்புறம் மணைக்குப் பதில் ரப்பர் குஷனில் உட்கார்ந்து கொள்ளலாம். பவித்ரத்துக்குப் பதில் gloves போட்டுக் கொள்ளலாம் என்றெல் லாம் 'லாஜிக்'லாக ஒப்புக் கொள்ள வேண்டிவரும்.

இதைச் சொல்லும்போது எலக்ட்ரோ-மாக்னடிஸ தியரி உள்பட எல்லாம் நம் முன்னோர்களுக்குத் தெரிந்திருந்ததை நினைத்து ஆச்சர்யமாயிருக்கிறது. லோகம் முழுக்க எலக்ட்ரிஸிடி நிறைந்திருக்கிறது, மனுஷ்ய சரீரம், எண்ணம் இதுகளில்கூட எலக்ட்ரிக் கரெண்ட் ஓடிக் கொண்டிருக்கிறது என்று இப்போதுதான் நம் ஸயன்டிஸ்ட்கள் கண்டுபிடித்திருக் கிறார்களென்றால் இதை எத்தனையோ ஆயிரம் வருஷம்

Koviloor Digital Library

முந்தியே நம் சாஸ்திரக்காரர்கள் தெரிந்து வைத்துக் கொண்டு தான் நம்மிடம் சேர்கிற மின்ஸார சக்தி வெளியே போகாமல் bad conductor-களாலான (மின்சாரத்தைக் கடத்தாதவையான) வஸ்துக்கள், உபகரணங்கள் முதலியவற்றையும், மின்ஸார சக்தியைக் கிரஹித்துக் கொள்ளும் good conductor-களாலான (மின்சாரக் கடத்திகளாலான) உபகரணங்கள், பாத்திரங்கள் முதலியவற்றையும் சொல்லியிருக்கிறார்கள் உட்காருகிற மணை மாதிரியே யாகத்தில் ஹோமத்துக்குப் பிரயோஜனப்படுகிற கரண்டி bad conductor–ஆன மரத்தாலானதாகத்தான் இருக்க வேண்டும். மறுதிசையில் செப்புப் பாத்திரம், செப்பு விக்ரஹம், பட்டு வஸ்திரம் முதலியன good conductor-கள்.

'வாழாது வாழ்ந்தாலும் வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது' என்பார்கள். 'இதெல்லாம் சுத்த மூடநம்பிக்கை' என்று இருபது, முப்பது வருஷம் முந்திவரை சொல்லி வந்தார்கள். இப்போதோ, 'மனுஷ்ய சரீரத்தில் 'எலெக்ட்ரோ-மாக்னடிஸ வேவ்'களுக்கு மூலஸ்தானம் brain (மூளை)தான். உலகத்தை எடுத்துக் கொண்டால் அதன் 'மாக்னடிக் ஃபீல்டி'ன் மூலஸ் தானம் North pole (வடதுருவம்). ஆகையால் நம் தலையை வடக்குப் பக்கம் வைத்துப் படுத்துக் கொண்டால் மூளையின் சின்ன காந்த சக்தியும், த்ருவத்தின் பெரிய காந்த சக்தியும் ஒன்றுக் கொன்று 'க்ளாஷ்' ஆகி, மூளை பாதிப்புக்கு ஆளாகி விடும்' என்று ஸயின்டிஸ்ட்கள் சொல்கிறார்கள். அதே ஸமயம் ஜபம், தியானம் பண்ண வடக்குப் பார்த்து உட்காருவது நல்லதென்று சொல்லியிருக்கிறது. தூக்கத்தில் புத்தியும் மனஸும் நமக்கு வசப்படாமல், தன்னையும் மீறித் தூக்கம் நம்மை வசப் படுத்தி ஓய்ச்சலில் அடித்துப் போடுகிறது; அப்போது புத்தி களைத்துக் கிடக்கிறது; அல்லது நம் வசத்திலில்லாததால் கன்னா பின்னா என்று கனவுகளைக் கல்பித்துக் கொள்கிறது. இம்மாதிரி ஸமயத்தில் இந்தச் சின்ன மாக்னட்டை, லோகத்தின் பெரிய மாக்னட்டுக்கு நேரே பிடித்தால் தாறுமாறாய் விடும். ஆனால், ஜப, த்யான காலத்தில் நாம் மனஸை அப்படியே அடக்கி வசப்படுத்த முடியாதவர்களாயிருந்தாலுங்கூட, அப்படிப் பண்ண வேண்டும் என்ற லக்ஷ்யமாவது நமக்கு இருக்கிறது!

ஈச்வரன் விஞ்ஞானக் கருவிகளுக்கு த்ருஷ்டமாயுள்ள மின்ஸார காந்த சக்தியாய் மட்டுமில்லாமல், நம் லக்ஷ்யத்தைத் தெரிந்துகொண்டு அதற்கு அருள் செய்கிறவனாயும் இருப்ப

Koviloor Digital Library

தால் த்யான காலத்தில் அதே காந்த சக்தி நமக்கு நல்ல 'பவரை'க் கொடுக்கும்படிப் பண்ணுகிறான். ஷாக் அடிக்கிற எலெக்ட்ரிஸிடியைக் கொண்டே நாம் எத்தனையோ நல்லதைப் பெறவில்லையா? அந்த மாதிரி, பிராண சக்தி நம் தேஹத்திலுள்ள சக்கரங்கள் வழியே போகிறதிலும், சயன நிலை, த்யானத்தில் உட்காரும் நிலை ஆகியவற்றுக்குள் ரொம்ப வித்யாஸமுண்டு. அதுவும் தவிர, வடக்கே மேருவில் இருக்கிற யோகிகள், ஞானிகள் ஆகியோரின் அனுக்ரஹ wave-ஐயும் அந்தப் பக்கம் பார்த்து ஜபம் பண்ணும்போது சற்று ஸுலபமாக கிரஹிக்கலாம். இப்படி ஒருத்தரின் உள் தன்மை, அன்பு முதலானவை வெளியே பரவுவது, தந்தியும் ஃபோனும் இல்லாமலே மனஸுக்கு மனம் தொடர்பு கொள்கிற 'டெலிபதி' இவற்றையும் விஞ்ஞான பூர்வமாக ஒப்புக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

வடக்குப் பார்த்து ஒன்றைப் பண்ணுவது, இன்னொன்றைப் பண்ணாததற்கு இத்தனை அர்த்தமிருக்கிறது!

ஆனால் சாஸ்திரத்தில் எலெக்ட்ரோ மாக்னெடிஸத்தைப் பற்றிச் சொல்லாமல்தான் விட்டிருப்பார்கள். புராணத்தில் பார்த்தால், இதற்குக் கதையும் சொல்லியிருக்கும். வாழாது வாழ்ந்த எவனோ ஒருத்தன் வடக்கே தலைவைத்துக் கொண்டு படுத்திருந்தான், அதனால் அவனுடைய மேன்மையே படுத்துப் போச்சு என்றுதான் கதையில் இருக்குமே தவிர, விஞ்ஞான தத்வம் சொல்லியிருக்காது. முன்னேயே சொன்ன மாதிரி ஒரு சக்தி எத்தனையோ நல்லதற்கு பிரயோஜனப்படுகிறது என்றாலும் அதைக் குழந்தை கையில் கொடுக்கப்படாது என்கிற மாதிரி, விஞ்ஞானத் தத்வங்களையும் அதைப் பிரயோஜனப் படுத்தும் கார்யக் கிரமங்களையும் பொதுஜனங்களுக்குச் சொல்லக் கூடாது என்றேதான் இப்படிப் பண்ணியிருக்கிறது!

அந்தப் புராணக் கதையும் நிஜம் என்றே வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் ஆஸ்திகர் கட்சி. லோகத்துக்குத் தெரிகிற ஸயன்ஸும், (அதோடு) தத்வம், கதை புராணங்களும் ஸ்தாபிக்கிற (ஸயன்ஸுக்குத் தெரியாத) ஸத்யமும் எல்லாம் சேர்ந்ததுதான் சாஸ்திரம்.

முன்னே தெரியாதிருந்த உண்மைகள் ஸயன்ஸுக்கு இப்போது தினந்தினம் புதிசு புதிசாகத் தெரிகிறபோது, முன்னே பரிஹாஸம் பண்ணின அனேக ஆசாரங்களை அதுவே சிலா

Koviloor Digital Library

கிக்க ஆரம்பிக்கிறது. பல் தேய்க்காமல் bed-offee; வெள்ளைக்கார‌ன் மாதிரி நித்ய ஸ்நானமில்லாமலிருப்பது; எப்போது பார்த்தாலும் உடம்பை மூடி thick துணியில் ஸூட்டும் கோட்டும் போட்டுக் கொண்டிருப்பது இதெல்லாம் நம் நாட்டு சீதோஷ்ணம், அதையொட்டி ஏற்படும் ஜீர்ணசக்தி முதலியவற்றுக்குப் பொருந்தாதவை என்று படிப்பாளிகள் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் பண்ணினால் அழுக்கு, வியர்வை இத்யாதிகளால் வியாதிகள் வரும் என்கிறார்கள்.

ஆனால் வியாதி வராமலிருப்பதற்கு மட்டுமில்லை சாஸ்திரம்; கர்ம வியாதியைப் போகப் பண்ணுவதற்காகப் புண்ய மருந்தைத் தரவே அது இருக்கிறது என்பதை மறக்கவே கூடாது. ஆரோக்யம் முதலான காரணங்களுக்காகத்தான் ஆசாரம் என்றால், ஒரு ஆசாரம் அநாரோக்யத்தை உண்டு பண்ண ஹேது இருப்பதாகத் தோன்றினால் அதை விட்டுவிடத் தோன்றும். தொத்து நோயுள்ளவர் உள்படப் பலர் கசகசவென்று கூடும் இடங்களுக்குப போய் விட்டு வந்தால் ஸ்நானம் செய்வது ஆரோக்கிய ரீதியில் நல்லது என்பதை நினைத்தே ஸ்நான ஆசாரத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோமென்றால், இதற்கு விலக்காக ரதோத்ஸவத்தில் எத்தனை கூட்டத்தோடு இடித்துக்கொண்டு தேரிழுத்து விட்டுத் திரும்பினாலும் ஸ்நானம் பண்ணக் கூடாது என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது நம் ஹைஜீன் ஸயன்ஸோடு உதைத்துக் கொள்ளும். எத்தனை பாசி பிடித்திருந்தாலும் திருக்குளத்தில் ஸ்நானம் பண்ணணும், எத்தனை அழுக்கானாலும் ஒரு மஹானின் பாததீர்த்தத்தைப் புரோக்ஷணம் பண்ணிக்கணும், பாகவதர்கள் சாப்பிட்டு எழுந்த எச்சில் இலையில் விழுந்து புரளணும் என்பது போன்ற ஆசாரங்களை ஆரோக்யத்துக்காகவே ஆசாரம் என்றால் விட்டு விடும்படி ஆகும். அதனால், 'புண்யத்துக்குத்தான் ஆசாரம், அந்தப் புண்யம் நம் புத்திக்கும் ஸயன்ஸுக்கும் பிடிபடாதது' என்பதை நன்றாக மனஸில் வாங்கிக் கொள்ள வேண்டும்.

பிறத்தியாரை ரொம்பவும் தொட்டுக் கொள்ளாமலிருப்பது, செத்த வீட்டில் சாவுத் தீட்டு என்று எதுவுமே சாப்பிடாமலிருப்பது, தீட்டுக்காக ஸ்நானம் செய்து, துணிமணிகளைத் தோய்த்துப் போடுவது முதலியனவெல்லாம் வியாதித் தடுப்

Koviloor Digital Library

புக்கு எத்தனை உபகாரமானவை என்று டாக்டர் கிங், ஐ.எம்.எஸ். (ஐ.ஏ.எஸ். மாதிரி, ஆல் இண்டியா மெடிக்கல் ஸர்வீஸ் ஐ.எம்.எஸ். என்று இருந்தது. அதைச் சேர்ந்தவர் இவர்), ஸானிடரி கமிஷனராயிருந்தவர் ஏகமாகக் கொண்டாடி எழுதியதுண்டு.

அவர் நாளில் பௌதிகமான ஜீன்ஸ் (ஜீவ நுண்ணணு), பாக்டீரியா, வைரஸ் (விஷக்கிருமி) இதுகளைப் பற்றி மாத்திரம் தெரிந்ததைக் கொண்டே அவர் இப்படிக் கொண்டாடியிருக்கிறார். ஆனால் அதற்கப்புறம் ஸைகாலஜி, பாராஸைகாலஜியெல்லாம் ரொம்பவும் 'டெவலப்' ஆகி மனுஷனுக்கு மனுஷன் எண்ணம், குணம் இவற்றைப் பொறுத்துக்கூட வித்யாஸமான waves (அதிர்வலைகள்), aura (ஒளி வளையம்) ஆகியன இருப்பதாக ஏற்பட்டிருப்பதிலிருந்து, ஸமத்வம் என்ற பெயரில் எல்லாரையும் தொட்டுக் கொண்டும் தீட்டுப் பார்க்காமலும் பல பட்டடையாகக் குழப்பினால் அவரவர்களுடைய ப்ரத்யேகமான வளர்ச்சிக் கிரமம் பாதிக்கப்படும் என்று இன்னும் நன்றாகத் தெரிகிறது. ஒருத்தன் படுக்கையில், இன்னொருத்தன் படுத்துக் கொள்ளக் கூடாது, ஒருத்தன் வேஷ்டியை இன்னொருத்தன் கட்டிக் கொள்ளக் கூடாது, ஒருத்தனுடைய தீர்த்த பாத்திரத்தில் இன்னொருத்தான் குடிக்கக்கூடாது என்கிறதெல்லாம் இப்படி 'பெர்ஸனல் மாக்னடிஸ'த்தை (மனோசக்தியை)க் காப்பாற்றிக் கொள்வதற்குத் தான்!

மாதவிடாய் என்கிறோமே, அதில் பெண்களைத் தனித்து வைத்துத் தீட்டுச் சொல்வதில் பௌதிக அசுசி (தூய்மைக் குறைவு) ஒரு பங்கு என்றால், பௌதிகத்துக்குத் தெரியாத அசுசி இன்னொரு பங்கு. இது பாப-புண்ய விஷயம். இந்திரனின் பிரம்மஹத்திப் பாபத்தில் ஒரு பங்கு ஸ்திரீகளிடம் ரஜஸ்ஸாகப் போகிறது என்று சொல்லியிருக்கிறது. இது 'ஆரா', 'வேவ்'களில்கூடத் தெரியாது!

அவரவர் மனோசக்தியை வெளியே விடாமல் ரக்ஷித்துக் கொள்வது பற்றிய நவீன ஸயன்ஸ் கொள்கையைச் சொல்லும் போது ஒன்று நினைவு வருகிறது. கச்சம் போட்டுக் கட்டிக் கொள்வது என்று வைத்திருக்கிறதல்லவா? இதைப் பற்றி ஒருத்தர் எழுதியிருந்தார். வஸ்திரத்தின் நுனி வெளியே பார்க்க இருந்தால் இதை உடுத்திக் கொண்டிருப்பவரின் மனோசக்தி

Koviloor Digital Library

வேவ்'கள் வெளியே போய்விடுகிறதாம். கச்சமாக மடித்து உள்ளே சொருகிக் கொண்டு விடுவதால் இப்படி விரயமாவ தில்லை என்று சொல்லியிருந்தார். இதைத் தெரிந்து கொண்டு தான் துருக்கர்கள்கூட லுங்கியை ஓரம் வைத்துக் கட்டிக் கொள் கிறார்கள் போலிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

நாளுக்கு நாள் நமக்கு அனேக ஆசாரங்களின் உள்ளர்த்தம் ஸயன்ஸ்படி புரிந்துகொண்டு வருவதாலேயே இப்போது நமக் குப் புரியாத, இனி என்றைக்குமே ஸயன்ஸினால் புரிந்து கொள்ள முடியாத மற்ற எல்லா சாஸ்திர விதிகளையுங்கூட ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

'கங்கா, கங்கா என்று இந்த ஹிந்துக்கள் நமஸ்காரம் பண்ணுகிறார்களே, அப்படி இதில் என்னதான் இருக்கிற தென்று ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தால் எங்களுக்கு ஆச்சர்ய மாயிருந்தது. காலராக்காரன் ஒருத்தன் பிணத்தைக் கங்கையில் எங்கே இழுத்து விட்டிருந்ததோ அந்த இடத்திலிருந்தே ஜலத்தை எடுத்துப் பரிசோதனைப் பண்ணிப் பார்த்தோம். மாய மந்திரம் மாதிரி அந்த ஜலத்தில் ஒரு காலராக் கிருமிகூட இல்லை' என்று ரிஸர்ச் செய்தவர்கள் ரொம்ப வருஷம் முந்தி ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். ஸந்தோஷமான விஷயந் தான். ஆனாலும் நாம் 'கங்கா, கங்கா' என்று நமஸ்காரம் பண்ணுவது அவள் வியாதிநாசினி என்பதற்காக இல்லை, பாபநாசினி, ஸம்ஸார நாசினி என்பதற்காகத்தான். பாக்டீரியா – வைரஸ் மாதிரி பாப – புண்யமோ, ஸம்ஸாரம் – மோக்ஷம் – நரகம் இவையோ ஸயன்டிஸ்டின் 'தியரி'க்குள்ளும் 'டெஸ்ட் ட்யூப்'புக்குள்ளும் என்றைக்குமே வராது.

இதைப் புரிந்து கொண்டால், விஞ்ஞான ரீதியில் பரிஹா ரம் பண்ணிவிட்டதால் ஒரு வஸ்துவுக்கு தோஷம் போய்விட் டது என்று நினைக்க மாட்டோம். இதை எதற்குச் சொல்கிறே னென்றால் இப்போது எவர்ஸில்வர் என்று ஒன்று ரொம்ப நடமாடுகிறது. ஸ்வாமி தீபம் உள்பட, கலசமாக வைக்கிற குடம் உள்பட எல்லாம் அதில் வந்துவிட்டது. இத்தனை காலம், இரும்புப் பாத்திரம் உதவாது என்ற சாஸ்திர விதியை அனுஸரித்து வந்தவர்களும் இப்போது எவர்ஸில்வரை உப யோகிக்கிறார்கள். 'இரும்பு கூடாது என்றதற்குக் காரணம்

Koviloor Digital Library

அது துருப் பிடிக்கக் கூடும் என்பதுதான்; அதனால் அதில் ஆரோக்கிய ஹானி உண்டாகிற ஹேது உள்ளது என்கிறது தான். ஆனால் அந்த இரும்பை இப்படி எவர்ஸில்வராக 'ப்ராஸஸ்' பண்ணிவிட்டபின், அதில் துருப்பிடிப்பதற்கே யில்லை. அது health-hazard ஆகாது. இரும்பின் தோஷத்திற்குப் பரிஹாரம் பண்ணிவிட்டதால் அதை உபயோகிக்கலாம்' என்று சொல்கிறார்கள். துருவுக்காகத்தான் இரும்பு கூடாது என்று இவர்களாகவே அனுமானம் பண்ணிக் கொண்டு இப்படி எவர்ஸில்வரை சாஸ்திரோக்தமானதாக ஆக்கிவிட நினைக்கிறார்கள். ஆனால் சாஸ்திரம் இரும்பு கூடாது என்றது துருவுக்காக அல்ல; அல்லது துருவுக்காக மாத்திரம் அல்ல. அது பாபகரமானது, ஆஸுர (அசுரத்தனமான) சக்திகளையும், சனைச்சரன் மாதிரி உக்ர கிரஹங்களின் சக்தியையும் நம்மிடம் இழுத்து வரும் என்பதால்தான் கூடாது என்று சாஸ்திரம் வைத்திருக்கிறது. எவர்ஸில்வரிலும் இந்தத் தோஷம் போய்விடாது.

இதேமாதிரி, ஹோமத் திரவியங்கள் அட்மாஸ்ஃபியரிக் பொல்யூஷனைப் போக்குவதைவிட முக்யமாக, ஆஸுர சக்திகளைத் துரத்தித் திவ்ய சக்திகளைக் கொண்டு வருவதற்கே ஏற்பட்டவை. அதனால் வறட்டிக்கும், ஸமித்துக்கும் பதிலாக அவற்றைவிட வீரியத்தோடு ஏதாவது anti-pollution கெமிகலைக் கண்டுபிடித்தாலும் இவற்றைக் கொண்டு ஹோமம் பண்ணுவதற்கில்லை.

ஸைகலாஜிகலாக அனேக சாஸ்திர விதிகளை அப்ரிஷியேட் பண்ணலாம் என்கிறார்கள். பால், நெய், தயிர், சாணம், மூத்திரம் எல்லாவற்றாலும் நலன் விளைவிக்கும் பசுவை மாதாவாகப் பாவிப்பது Psychologically satisfying (மனோதத்வப்படி திருப்தி தருவது) என்கிறார்கள். அதுவும் வாஸ்தவந்தான் ஆனால் பசுவின் divinity (தெய்வத் தன்மை) 'ஸைகாலஜி'க்கு அப்பாற்பட்ட விஷயம்.

இந்த 'டிவினிடி'க்காகத்தான் அதற்கு முக்யமாகப் பூஜை. மற்ற தேசங்களில் உள்ளவர்கள் மாதிரிப் பால், நெய், தயிர் இவற்றின் பிரயோஜனத்தைத் தெரிந்து கொண்டது மட்டுமின்றி நம் பூர்விகர்கள் சாணி, பசு மூத்திரம் இவற்றின் சுத்தி செய்யும் சக்தியையும் தெரிந்துகொண்ட பெருமை ஒரு பக்க

Koviloor Digital Library

மிருக்கட்டும். ஆனால் இந்த ஐந்தையும் 'பஞ்சகவ்யம்' ('கோ' என்றால் பசு. 'கவ்யம்' என்றால் பசு ஸம்பந்தமுள்ளது. 'பஞ்ச கவ்யம்' என்பது பசு ஸம்பந்தப்பட்ட ஐந்து) என்று சேர்த்து ஒருத்தரைச் சாப்பிடச் சொல்லி அவரைச் சுத்தி பண்ணுகிற போது அது சரீர சுத்திக்காக (Physical purity-க்காக) மட்டு மில்லை; ஆத்மசுத்திக்காகவே! பாபத்தைப் போக்கிப் புண் யத்தை உண்டுபண்ணுகிற சக்தியும் பஞ்ச கவ்யத்துக்கு இருக் கிறது. மந்த்ர பூர்வமாக அதை ப்ராசனம் பண்ணுவதால் (உட் கொள்வதால்) இந்த சக்தி இன்னும் விருத்தியாகிறது. 'புண்யாஹ வாசனம்' என்று புண்ய ஸம்பந்தப்படுத்தித்தான் பஞ்சகவ்யத்தை வைத்திருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, மெடிகல் ஸயன்ஸ், ஸைகாலஜி எல்லாவற்றிலும் அதி ஸூக்ஷ்மமான விஷயங்களைத் தெரிந்து கொண்டிருந்த அந்தப் பூர்வ காலப் பெரியவர்கள் எந்த லாபரட்டரியும், இன்ஸ்ட்ருமெண்டும் இல்லாமல் இத்தனை ஞானமும் பெற்றார்கள் என்றால் அது எதனால்? ஈச்வரப் பிரஸாதமாக அவர்கள் பெற்ற மனோசக்தியால்தான். அவர்க ளுடைய தபஸையும் நியமத்தையும் பார்த்து பகவானே ஸயன்ஸுகளுக்குள் வராத அனேக விஷயங்களை அவர்களுக் குத் தெரியப் பண்ணியிருக்கிறான். அவனே அவர்கள் முன் பிரஸன்னமாகித் தெரியப் படுத்தியிருக்கலாம்; அல்லது அவர் களுக்கு Instinctive-ஆக (உள்ளுணர்ச்சியாக), அல்லது அதற்கும் மேலே intuitive-ஆக, (உள்ளார்ந்த ஸத்யதர்சன சக்தியே intuition என்பது) இந்த உண்மைகள் தெரியும்படிப் பண்ணியிருக்கலாம்.

இவற்றையும் பிரயோஜனப்படுத்தி அவர்கள் மேலே மேலே தபோ நியமங்களை அனுஷ்டித்து ஸித்தி பெற்றிருக்கி றார்கள். அவர்கள் ஸகல ஞானமும் பெற்றுச் சொன்னவற்றில் நவீன விஞ்ஞானம் ஆச்சரியப்படுகிற கருத்துகள், அதனால் ஒப்புக்கொள்ள முடியாத கருத்துகள் இரண்டுமே இருக்கின்றன; நம் அறிவுக்கு ஏற்றவை, ஏற்காமல் மூடக்கொள்கையாய்த் தோன்றுகிறவை இரண்டும் இருக்கின்றன. நம்முடைய அறிவு எத்தனையோ ஆராய்ச்சி பண்ணி எவ்வளவோ உபகரணங் களை வைத்துக் கொண்டு கண்டுபிடிப்பதை அந்தப் பெரியவர் கள் அனாயாஸமாகத் தெரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தே,

Koviloor Digital Library

நம் அறிவுச் சக்தியோடு ஈச்வர மர்மங்கள் முடிந்து விட வில்லை என்று அறிவு பெற வேண்டும். அந்த மர்மங்களைத் தெரிந்துகொண்டவர்கள் சொல்வதில் பலதை மூடநம்பிக்கை என்பதுதான் மூடத்தனம். இது நம்முடைய அல்ப அறிவிடம் நமக்கிருக்கிற மூடநம்பிக்கைதான் என்று தெளிவு பெற வேண்டும்!

ஆத்ம திருப்திக்கே ஆசாரம்

பசுவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். பசுவின் முகத்தில் மஞ்சள் குங்குமமிட்டு கொம்பிலே குஞ்சலம் கட்டி, கழுத்திலே மாலைகள் போட்டு மணிகள் கட்டினால் பார்க்க ரொம்ப அழகாகத் தானிருக்கிறது. நமக்குப் பல தினுஸில் உபகாரம் பண்ணும் பசுவைப் போற்றுவதில் Psychological Satisfaction இருப்பது போலவே, இப்படி அந்தக் கோமாதாவை அலங்காரம் பண்ணிப் பார்ப்பதில் artistic satisfaction (கலையுணர்வுத் திருப்தியு)ம் உண்டாகிறது. ஆனாலும் பசுவுக்கு அர்ச்சனை பண்ணுவது என்றால் அப்போது அதன் முகத்திலே பண்ணாமல் பிருஷ்ட பாகத்திலே (வால் புறத்திலே)தான் அர்ச்சிக்க வேண்டும். நமக்கு அது பிடிக்கிறதா, பிடிக்கவில்லையோ, இப்படிப் பண்ணுவதற்குக் காரணம் உண்டா, இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லை. இப்போது நமக்கு ஒவ்வொன்றாகக் காரணம் தெரிகிற அனேக ஆசார விதிகளை ஏற்படுத்தின ரிஷிகள், காரணமில்லாமலா, 'பசுவின் முகத்தில் பூஜை பண்ணாதே, பின்பக்கம் பண்ணு; அங்கேதான் லக்ஷ்மி வாஸம் பண்ணுகிறாள்' என்று சொல்வார்கள்? நம்பிப் பண்ண வேண்டும். அப்போது அங்கே வாஸம் பண்ணும் லக்ஷ்மி தெரிவாள்.

சைகலாஜிகலாவோ, வேறு விதங்களிலோ நம்மை 'ஸாடிஸ்ஃபை' பண்ணாவிட்டாலும் ஸரி, நாம் சாஸ்திரங்களுக்கு அடங்கி, அடி பணிந்து, அதன் பிரகாரம்தான் செய்ய

Koviloor Digital Library

வேண்டும். இந்த எல்லா ஸாடிஸ்ஃபாக்ஷன்களையும்விட ஆத்ம-ஸாடிஸ் ஃபாக்ஷனுக்காகத்தான் சாஸ்திராசாரங்கள் ஏற் பட்டிருக்கின்றன. அதுதான் எக்காலத்துக்குமான 'ஸாடிஸ்ஃபாக்ஷன்' என்ற 'ஸாடிஸ்ஃபாக்ஷ'னெல்லாம் அடுத்த நிமிஷமே பறந்து போய் 'டிஸ்ஸாடிஸ்ஃபாக்ஷனில்' கொண்டு விடுபவைதான். ஆத்மா நிறைந்து, திருப்தியாய், ஸாடிஸ்ஃபை ஆக வேண்டுமென்றால் பாபத்தைப் போக்கிக் கொண்டு, புண்யத்தை ஸம்பாதித்துக் கொண்டால்தான் முடியும். இதற் காக நம்முடைய மற்ற ஸாடிஸ்ஃபாக்ஷன்களைத் தியாகம் பண்ணிக் கஷ்டப்படவும் தயாராகத்தான் இருக்க வேண்டும்.

கோயிலுக்குப் போகிறோம். வழியிலே பிரஸவ ஆஸ்பத்திரி யில் ஸஹோதரிக்குப் பிள்ளை பிறந்திருக்கிறது. குழந்தையைப் பார்க்க ஆசையாய்த் தானிருக்கும். ஸஹோதரியும் ரொம்ப ஸந்தோஷப்படுவாள். ஸைகலாஜிகல் ஸாடிஸ்ஃபாக்ஷன், மனுஷ்யாபிமானம் இவற்றைக் கொண்டு பார்த்தால் பிரஸவ ஆஸ்பத்திரிக்குள் போகத்தான் வேண்டும். ஆனால் அங்கே போய் வந்தபின் ஸ்நானம் பண்ண முடிந்தால்தான் கோயிலுக் குப் போகலாம். ஸ்நானம் பண்ணாமல் பிரஸவத் தீட்டோடு கோயிலுக்குப் போகப்படாது. 'கோயிலில் விசேஷமாச்சே, போகத்தான் வேணும்' என்றால், இப்போது நமக்கு ஸ்நானம் பண்ண வசதி இல்லாவிட்டால், பிரஸவித்த ஸஹோதரியைப் பார்க்காமலேதான் போக வேண்டும் அந்தத் தியாகம் பண்ணத் தான் வேண்டும்.

சாஸ்திரம் மனுஷ்யாபிமானமில்லாதது என்று குற்றம் சொல்வது நியாயமில்லை. அப்படிச் சொன்னால் பிரஸவ ஆஸ்பத்திரியில் அமலாகிற வைத்ய சாஸ்திரத்தையும் குற்றம் சொல்லத்தான் வேண்டும். ஏன்? அங்கே ஆபரேஷன் தியேட்ட ரில் நம்மை உள்ளே விடுவார்களா? நமக்கு ரொம்பவும் பிரிய மான பந்துவுக்குப் பிராணாபத்தான ஆபரேஷன், அப்போது பக்கத்திலிருக்க வேண்டும். இரண்டு மணி – மூன்று மணி பெரிய ஆபரேஷன் நடக்கிறவரை இன்னது நடக்கிறது என்று தெரியாமல் வெளியிலே திக்குதிக்கென்று உட்கார்ந்திருக்க முடியாது என்றால் டாக்டர் ஒப்புக் கொள்வாரா? உடலின் க்ஷேமத்தைக் குறித்து டாக்டர் சொல்வதை ஒப்புக் கொண்டு, அவர் சொல்வது கடுமையாக இருந்தாலும் அவருடைய

Koviloor Digital Library

நல்லெண்ணத்தை மதித்து, அவரைத் திட்டாமல், தியேட்டருக்குள் போகாமலிருக்கிறோமென்றால், நம் 'ஸைகலாஜிகல் ஸாடிஸ்ஃபாக்ஷனை ஸாக்ரிஃபைஸ்' பண்ணுகிறோமென்றால், அதே ஆஸ்பத்திரிக்கு, பிற்பாடு ஸ்நானம் பண்ணும் வசதி இருந்தாலொழியப் போகக்கூடாது என்று உயிரின் க்ஷேமத்தைக் கருதி சாஸ்திரக்காரர் சொல்வதையும் திட்டாமல் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!

'மற்ற தேசங்களில் பிரஸவத்தீட்டு பார்க்கிறார்களா, பஹிஷ்டா (மாத விடாய்) விதிகளை அனுஸரிக்கிறார்களா? இன்னம் நம்முடைய மற்ற ஆசாரங்கள், ஸம்ஸ்காரங்கள் இதுகளைப் பின்பற்றுகிறார்களா?' என்று கேட்பதில் அர்த்தமில்லை. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில் இப்படியிருக்கிற மற்ற எல்லாத் தேசங்களும் ஆத்ம ஸம்பந்தமான ஞானத்திலும், அப்படிப்பட்ட ஞானத்தை ஸம்பாதித்துக் கொண்டவர்களிலும் நம் தேசத்தைவிட ரொம்பவும் பின் தங்கியிருந்து வந்திருக்கின்றன என்று அவர்களே ஒப்புக்கொள்வதுதான். நித்ய சிரேயஸ் வேண்டும், ஈச்வரனை அடைய வேண்டும், ஆத்மஞானம் பெற வேண்டும், என்றால், அந்தத் தேசம் – இந்தத் தேசம், அந்தக் காலம் – இந்தக் காலம் என்று கால, தேசங்களைச் சொல்லிக் கொண்டிருக்காமல் சாஸ்திரப் படி செய்தால்தான் ஸித்தி கிடைக்கும்.

அதுவும் தவிர லோகத்திலேயே இந்தப் பாரத தேசத்தைத் தான் ஈச்வரன் கர்மபூமியாக வைத்திருக்கிறான். ஒரு வீடு என்றால் அதில் சமையலறை, பூஜையறை, படுக்கையறை என்று வெவ்வேறாக இல்லையா? ஒரு ஃபாக்டரி என்றால் அதில் யந்திரசாலை, நிர்வாஹஸ்தர் ஆஃபீஸ், கான்டீன் என்று தனித்தனியாக இல்லையா? இவற்றில் ஒன்றில் செய்வதை இன்னொன்றில் செய்வார்களா? அப்படி, பகவான் லோகத்தில் வைதிக கர்மானுஷ்டானத்துக்காக பாரத பூமியைத்தான் வைத்திருப்பதால் இங்கே மாத்திரம் இத்தனை சாஸ்திரங்களும் ஆசாரங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இதிலே கடுமையாகத் தோன்றுவதும் நம்முடைய நித்ய சௌக்யத்தை உத்தேசித்துக் கருணையினால் சொன்னதுதான்.

நித்ய ஸௌக்யமான மறுமையின்பத்தோடு இம்மையின்பத்

Koviloor Digital Library

தையும் அது மறுமைக்கு பாதகமாக இல்லாதவரையில் சாஸ்தி ரங்கள் அளிக்கத்தான் செய்கின்றன. நோய் நொடியில்லாம லிருக்க வேண்டும். ஜனங்களெல்லாம் ஸௌஜன்யமாகக் கூடி வாழ வேண்டும். தப்புத் தண்டாக்களில் மாட்டிக் கொண்டு கஷ்டப்படக் கூடாது என்று இம்மைப் பயன்களைக் கருதியும் அனேக ஆசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பலர் நினைக்கிறபடி ஒரே நிர்தாக்ஷிண்யமாயில்லாமல், ஸைகலாஜிகலாகவும், மற்ற ரீதியிலும் அனேக இடங்களில் விட்டுக் கொடுத்தும் விதிமுறை கள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆசாரங்களில் பாகுபாடு: குறள் தீர்ப்பு

எல்லோருக்கும் இத்தனை ஆசாரங்களை வைக்காமல் பிராமண ஜாதிக்கு மாத்திரம் வைத்ததே இந்த ரீதியில்தான். இதைத்தான் புரிந்து கொள்ளாமல் பக்ஷபாதமென்று சிலர் சொல்கிறார்கள். சாஸ்திரங்களைச் செய்தவர்கள் பக்ஷபாதி களாக இருந்திருந்தால் தங்கள் ஜாதிக்கு மட்டும் விதிகளைக் குறைத்து 'லைஸென்ஸ்'தான் கொடுத்துக் கொண்டிருப்பார் களே தவிர, விதிகளை ஜாஸ்தியாக்கிக் கட்டிப் போட்டிருப் பார்களா?

தமிழ்நாட்டுக்கு தர்மத்தைச் சொன்னவர்களில் மூல புருஷ ராகச் சீர்திருத்தக்காரர்கள், பகுத்தறிவுக்காரர்கள் உள்பட ஸகல ராலும் ஒப்புக் கொள்ளப்படும் திருவள்ளுவர் என்ன அபிப் ராயப்படுகிறார்? எல்லாருக்கும் ஒரே ஆசாரம் என்றில்லாமல், தனித்தனிக் குலாசாரம் என்பது உண்டு; அது பிராமணனுக்கே அதிகம்; பிராமணனின் பிரம்மண்யமே அவனுடைய பிரத்யேக மான குலாசாரத்தால் ஏற்படுவதுதான் என்று அவர் தீர்மான மாக அபிப்ராயப்படுகிறார்.

ஒழுக்கம் என்பதே ஆசாரம்; அது உள்குணம், வெளி நடத்தை, வெளிச்சின்னம் எல்லாம் அடங்கியது என்று சொன்

Koviloor Digital Library
னேனல்லவா? இந்த ஆசாரத்தைப் பற்றியொழுகுவது பற்றி 'ஒழுக்கம் உடைமை' என்று திருக்குறளில் ஓர் அதிகாரம் (பத்துக் குறள்கள்) பண்ணியிருக்கிறார். அதை ஜெனரலாக, எல்லாருக்கும் 'அப்ளை' ஆவதாகத்தான் ஆரம்பித்துக் கொண்டு போகிறார். ஒழுக்கம்தான் மனுஷ்யனுக்கு உயர்வைத் தருவது; அதனால் பிராணனைவிட முக்யமானதாக ஒழுக்கத்தை, ஆசாரத்தை, ரக்ஷிக்க வேண்டும் என்று முதல் குறளில் சொல்கிறார்.* அப்புறம் (மூன்றாவது குறளில்) உயர்ந்த ஒழுக்கமுள்ளவனே உயர்குடி, அதாவது உயர் ஜாதிக்காரன்; ஒழுக்கம் கெட்டவன் தாழ்பிறப்புக்கராரன்** என்று அவர் சொல்வதைப் பார்த்தால் ஒருவனுடைய குணத்தையையும் நடத்தையையும் வைத்துத்தான் ஜாதியே தவிர, பிறப்பினாலே அல்ல என்ற இக்கால அபேத வாதம் மாதிரித் தோன்றுகிறது. ஆனால் இப்படியில்லை. என்று ஸ்பஷ்டமாகக் காட்டுகிற மாதிரியே அடுத்த குறளைப் பண்ணியிருக்கிறார்:

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்

'பார்ப்பான்' என்றால் பிராமணன், ஞானதிருஷ்டியால் ஸத்யத்தைத் தரிசனம் பண்ணுவதால் அவன் 'பார்க்கிறவன்' – 'பார்ப்பான்'. ரிஷிகளை seer (see-r) என்று இங்கிலீஷில் சொல்வதும் இதே அர்த்தம்தான். 'ஒத்து' என்று இங்கே சொல்லப்படுவது வேதம். ஓதப்படுவது – அத்யயனம் பண்ணப்படுவது – எதுவோ அது ஒத்து.

இந்த (இப்போது சொன்ன) குறளுக்கு என்ன அர்த்தமென்றால்: ஒரு பிராமணன் வேதத்தை மறந்து போய் விட்டால் கூடப் பரவாயில்லை; மறுபடியும் அத்யயனம் பண்ணிக் கற்றுக்கொண்டு விடலாம் – 'பார்ப்பான் ஒத்து மறப்பினும் ('மறுபடியும்' என்பது 'அண்டர்ஸ்டுட்') கொளல் ஆகும்' என்று Prose-order பண்ணிக் கொள்ள வேண்டும். அதாவது, வேதம் மறந்து போனாலும் மறுபடி கற்றுக் கொண்டு விட

---

* ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

** ஒழுக்கம் உடைமை குடிமை – இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

Koviloor Digital Library

ல்லாம். கற்றுக் கொளலாகும். ஆனால் அவன் ஒழுக்கத்திலிருந்து, அதாவது ஆசாரத்திலிருந்து வழுவிவிட்டால் அவனது பிராமண ஜன்மாவே கெட்டுப்போய்விடும், அதாவது வீணாகி விடும். 'ஒழுக்கம் குன்றப் பிறப்பு (அதாவது 'த்விஜன்ம விசேஷம்' என்கிற பிராமண குடிப்பெருமை) கெடும்' என்பது prose-order. நவீனர்கள், 'ஆசாரமே இருக்க வேண்டியதில்லை; Vedas, Upanishads என்று லெக்சர் பண்ணிவிட்டால் போதும்; அப்படிப் பண்ணும் எல்லாம் பிராமணர்தான்' என்கிறார்களென்றால், திருவள்ளுவரோ, 'பிராமணனுக்கு வேதமே மறந்து போய்விட்டால்கூடப் பாதகமில்லை; மறுபடி கற்றுக்கொண்டு விடலாம். ஆனால் அவன் மாத்திரம் ஆசாரஹீனனாக ஆனானோ, அதோடு அவனுடைய பிரம்மண்யமே போச்சு' என்கிறார்.

'ஆசார ஹீநம் ந புநந்தி வேதா:' என்ற சாஸ்திர அபிப்ராயத்தை அப்படியே echo பண்ணுகிறார் தமிழ்மறை என்ற குறளைக் கொடுத்த பெரியவர். 'எத்தனை வேதம் படித்திருந்தாலும் ஆசாரத்தை விட்டவன் வேதத்தினால் பலனடைய மாட்டான். ஒரு பக்ஷிக் குஞ்சுக்கு இறக்கை முளைத்தவுடன் அது அந்த நிமிஷம்வரை இருந்த கூட்டைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் பறந்து விடுவதைப்போல, ஆசார ஹீனன் படித்த வேத வேதாந்தமெல்லாம் அவன் சாகிறபோது அவனைப் புண்ய லோகத்தில் சேர்க்காமல், அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் போய்விடும் – என்றெல்லாம் தர்ம சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதைத்தான் திருவள்ளுவரும் ரத்னச் சுருக்கமாய்ச் சொல்லிருக்கிறார்.

ஒழுக்கத்தால்தான் ஒருத்தனுக்கு உயர்வு என்று ஜெனரலாகச் சொல்லிவிட்டு, உடனேயே இப்படி பிராமணனின் ஒழுக்கத்தை ஸ்பெஷலாகச் சொன்னதால் அவர் நம் கால அபேதவாதிகளில் ஒருத்தரில்லை என்று காட்டிக் கொண்டு விடுகிறார். மற்ற எல்லாரையும் விடப் பிராமணனுக்கு ஆசாரம் விசேஷமானது என்பதை ஒப்புக் கொண்டுதான் இங்கே தனியாக அவனைப் பற்றி மட்டும் சொல்கிறார்.

'பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' என்பதை இன்னொரு தினுஸிலும் அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். அதாவது,

Koviloor Digital Library
பிராமணன் தன்னுடைய பிறப்பொழுக்கமான, அதாவது பிராமணர்களுக்கு மாத்திரம் உரியனவான ஆசாரங்களில் குன்றிப்போனால் உலகமே கெட்டுப்போகும், கெடும் என்று அர்த்தம் பண்ணலாம். இன்னோரிடத்தில் ★ இவரே ஒரு தனி மனுஷ்யனுக்கு உண்டாகிற கெடுதலாகயில்லாமல், ஒரு தேசத் துக்கே ஏற்படும் க்ஷாமங்களைச் சொல்லும்போது 'அறுதொழி லோர் நூல் மறப்பர்' என்கிறார். அதாவது 'ஷட்கர்ம நிரதர் எனும் பிராமணர் வேதத்தை மறந்து போவார்கள்' என்கிறார். ஆனதால் பிராமணன் வேதாத்யயனத்தை விடுவதாலோ, வேறு தப்புப் பண்ணுவதாலோ அவனும், அவனுடைய ஜாதியும் மட்டுமின்றி லோகமே கெட்டுப் போகும் என்ற கருத்து உடையவர் திருவள்ளுவர் என்று தெரிகிறது.

எனவே இங்கேயும் 'கெடும்' என்பதை 'அவன் தன் அந்தணப் பிறப்புக்குரிய ஆசாரவொழுக்கத்தில் குன்றினால் உலகமே கெடும்' என்று அர்த்தம் செய்து கொள்ளலாம். அங்கே அறுதொழிலோர் மறைநூல் மறப்பதே உலகுக்குத் தீமை என்றவர் இங்கே, மறையை மறந்தால்கூடப் பரவா யில்லை, அந்தத் தீமையைவிடப் பெரிய ஹானி என்னவென் றால் அவன் குலாசாரத்தை பிறப்பொழுக்கத்தை விடுவதுதான் என்கிறார். வேதமே வேண்டாம், ஒழுக்கம் போதும் என்று சொல்கிற கோஷ்டியில் அவர் இல்லை. வேதம் போனால் லோகத்துக்குக் கஷ்டம் ஏற்படும் என்றே அபிப்ராயப்படு கிறவர். வேதத்தை memorise பண்ணி (மனப்பாடம் செய்து) புஸ்தகம் எழுதி, பிரஸங்கம் பண்ணிவிட்டால் போதும், ஆசாரம் வேண்டாம். என்ற கோஷ்டியிலும் இல்லை. இரண்டும் வேண்டாம் என்ற கோஷ்டியிலும் இல்லை. இரண்டும் வேண்டும் என்கிறார்.

இரண்டில் அத்யயனத்தை விடுவதைவிட ஆசாரத்தை விடுவதே பெரிய கஷ்டத்தைக் கொடுக்கும் என்கிறார். ஸரியாகப் பார்த்தால், அத்யயனத்தை அடியோடு விட்டுவிடு வதை அவர். கொஞ்சங்கூட ஒப்புக் கொள்ளாதவர் என்று தெரியும். தற்காலிகமாக மறந்துபோவதைத்தான் சொல்கிறார். 'மறப்பினும்' என்கிறாரே தவிர 'இழப்பினும்', 'விடினும்'

★ 'கொடுங்கோன்மை' என்ற அதிகாரத்தின் கடைசிக் குறள்.

Koviloor Digital Library

என்று சொல்லவில்லை. வேதத்தை விட்டே விட்டால் லோகத்துக்கு அனர்த்தம்தான். மறந்துபோன நிலையில்கூட, 'அது மறந்ததால் பரவாயில்லை, அந்த மறந்த நிலை அப்படியே நீடித்துவிட்டுப் போகட்டும்; பிராமணன் ஆசாரத்தோடே இருந்து விட்டால் அதுவே போதும்' என்கிறாரா? இல்லை. வேதத்தை மறந்தவன் அதை மறுபடியும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றே சொல்கிறார். 'மறப்பினும் ஒத்துக் கொளல் ஆகும்', அதாவது, மறுபடி கற்றுக் கொள்ள முடியும் என்கிறார். முடிகிற விஷயமென்றால் அப்படிப் பண்ண வேண்டுமென்பதே உள்ளர்த்தம், மறையை மறந்தவன், மறையை மறந்தாலும் குலாசாரத்தை மறவாமல் பின்பற்றிக் கொண்டு, பிறகு மறந்துபோன மறையையும் மீண்டும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பரம சாஸ்திரீயமாக, ஸனாதன நெறிப்படி திருவள்ளுவர் நினைத்து உபதேசம் பண்ணியிருக்கிறார்!

இதிலிருந்து, முதலில் சொன்னாரே, ஒருவனின் உயர்ந்த ஒழுக்கத்தை வைத்தே ஒருத்தனுக்குக் குடிமை – உயர்குடித் தன்மை என்றாரே, அதற்கும் ஸோஷலிஸமாக இல்லாமல் சாஸ்திரபூர்வமான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளலாம். எந்தக் குலமும், ஜாதியும் தனியாக உயர்ந்தது, தாழ்ந்தது என்று சாஸ்திரத்தில் இல்லை. பல லோக கார்யங்கள் ஸமூஹத்தில் விதரணையாகப் பங்கீடாக வேண்டும் என்ற உசந்த அபிப்ராயத்தில் உண்டான வர்ணாச்ரம ஏற்பாட்டில் எந்த ஜாதியும் எந்தக் குலமும் அதற்கான தொழிலை அனுசரித்து அதற்கென்று ஏற்பட்ட ஒழுக்கத்தைப் பின்பற்றினால் உசத்திதான்.

அப்படிப் பண்ணுகிறவன் உசந்தவன்தான். இதே அபிப்ராயத்தில்தான் திருவள்ளுவரும் இந்த (ஸோஷலிஸ ஸமத்வம் மாதிரித் தெரிகிற) குறளைப் பண்ணியிருக்கிறார். உண்மையில் அவர் என்ன mean பண்ணுகிறாரென்றால். ஒருவன் தன் குலத்துக்கான ஒழுக்கத்தோடு இருப்பதுதான் அந்தக் குலத்தில் அவனுக்கு உயர்வைத் தருகிறது. அந்த ஒழுக்கம் கெட்டவனானால் இழிபிறவியனாகி விடுகிறான்' என்பதே. இப்படி அர்த்தம் புரிந்து கொண்டால்தான், இதற்கு logical sequence ஆக (தர்க்கரீதியில் தொடரிழையாக) எல்லாருக்குமே அவரவர் ஆசாரம் முக்யமானாலும், பார்ப்பனனுக்கு அது மிகமிக முக்கியமானது, அவனுக்கே சிறப்பான ஆசாரங்கள் அதிகம்

Koviloor Digital Library

அமைந்துள்ளன என்ற அடிப்படையை ஒப்புக்கொண்டு,

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்

என்று குறள் பண்ணிக் கொண்டு போயிருப்பதன் பொருத்தத்தைப் புரிந்து கொண்டு ரஸிக்க முடியும்.

இப்படியே சொல்லிக் கொண்டு போய், ஒழுக்கம் என்பது பிரத்யக்ஷமான த்ருஷ்ட பலனைத் தருவது மட்டுமில்லை; அத்ருஷ்டமாக நல்லொழுக்கமே புண்யம் என்பதாகி, என்றோ ஒரு காலத்தில் நல்லதைத் தரும்; தீய ஒழுக்கம் பாபம் என்பதாகி எந்நாளும் கஷ்டத்தைத் தரும் என்ற வைதிகக் கருத்தை வெளியிடுகிறார்.★

ஆசாரமும் வர்ணாச்ரமங்களும்

ஸகல ஜனங்களுக்கும் இதுகள்தான் ரூல் என்று ஒரேவிதமான ஆசாரங்களை வைக்காமல், அவரவருக்கும் ஜன்மாப்படி குல வழக்காக வந்துள்ள தொழிலையொட்டியும், அவன் படிக்கிற பால்ய தசையிலிருக்கிறானா, கல்யாணம் பண்ணிக் கொண்டு குழந்தை குட்டி பெற்றுக்கொண்டு குடித்தனம் பண்ணும் ஸ்டேஜில் இருக்கிறானா, இதுகளை விட்டுவிடப் பக்குவமாகிற நிலையிலிருக்கிறானா, அதற்கும் மேலே பரமாத்மத் தியானம் தவிர வேறு வேண்டாம் என்கிற ஸ்திதிக்குப் போயிருக்கிறானா என்பதை யொட்டியுமே, ஒவ்வொரு தொழில், ஒவ்வொரு ஸ்டேஜுக்கும் ஏற்றதாக ஆசாரங்களை நம் சாஸ்திரங்கள் வித்யாஸப்படுத்திக் கொடுத்திருக்கின்றன. தொழிலையொட்டி ஏற்பட்டது வர்ண தர்மம்;

★ நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் – தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

Koviloor Digital Library
ஒருத்தர் எந்தத் தசையிலிருக்கிறாரென்பதையொட்டி ஏற்பட்டது ஆச்ரம தர்மம். இரண்டையும் சேர்த்து 'வர்ணாச்ரம'ங்களைப் பொறுத்து ஆசாரங்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறோம். இது invidious discrimination ஆக (பக்ஷ பாதகமாக)ப் பண்ணினதே அல்ல. அவனவனையும் அவனுடைய நிலையிலிருந்தே உயர்த்திக் கொண்டு போகவும், அதேசமயம் ஸமூஹம் பூராவையும் சீராக அபிவிருத்தி பண்ணிக் கொண்டு போகவுமே இப்படி, யாரைவிட அறிவிலும் பூததயையிலும் பெரியவர்கள் இல்லையோ அப்படிப்பட்ட ரிஷிகள், சாஸ்திரங்கள் மூலமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம் மதத்தின் யுகாந்தரமான — ஜீவசக்திக்கும் இதுவே உயிர் நிலையாயிருந்திருக்கிறது.*

உடம்பால் கடுமையாக உழைக்க வேண்டியவர்களுக்கு ஆசாரக் கட்டுப்பாடுகளையும் அதிகம் போட்டு இறுக்காமல், கொஞ்சம் ஸ்வதந்திரமாக விட்டு, பிராமணன் மாத்திரம் ஸௌக்யங்களைத் தியாகம் பண்ணி நிரம்ப ஆசாரக் கட்டுப்பாடுகளை அனுஸரித்து 'ஐடியல்' நிலையை முடிந்த மட்டும் வாழ்ந்துகாட்ட வேண்டுமென்று சாஸ்திரங்கள் வைத்திருக்கின்றன.

ஸமூஹத்தில் ஸகல வர்க்கத்தினருக்கும் 'ஐடியல்' தர்மங்களை வைத்தால் ஒருவரும் அதைப் பின்பற்றாத நிலைதான் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு நம் சாஸ்திரம் 'ரூல்'களை வித்தியாஸப்படுத்திக் கொடுத்திருக்கிறது. இதைக் கண்கூடாக மற்ற மதங்களின் விஷயத்தில் பார்க்கிறோம்.

யுத்தம் க்ஷத்ரிய தர்மமென்றும், அஹிம்ஸை பிராமண தர்மம் என்றும் வைத்த நம் மதஸ்தரைவிட, 'ஒரு கன்னத்தில் அடித்தால் இன்னொரு கன்னத்தையும் காட்டு' என்று எல்லாருக்கும் பொதுவாக வைத்தவரின் மதத்தைச் சேர்ந்தவர்கள்

---

*இது தொடர்பாக அருள் உரை 34-வது புத்தகத்தில் இடம்பெற்றுள்ள 'தருமங்களின் பாகுபாடு', 'வர்ண தர்மம்', 6-வது புத்தகத்தில் இடம்பெற்றுள்ள 'அஹிம்சை' முதலிய உரைகளையும், 26-வது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள 'வேதம்' என்ற உரையில் 'பிராமணரல்லாதார் விஷயம்' என்ற உட்பிரிவும், 34-வது புத்தகத்தில் இடம்பெற்றுள்ள 'நாற்பது ஸம்ஸ்காரங்கள்' என்ற உரையில் 'சிலருக்கு ஏன் இல்லை?' என்ற உட்பிரிவையும் பார்க்க.

Koviloor Digital Library
தான் ஜாஸ்தி யுத்தம் செய்து, தேசம் தேசமாக, கண்டம் கண்டமாகத் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பி, அணுகுண்டு வரையில் கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள். 'க்ரைஸ்ட், புத்தர் மாதிரி பிரேமையை, அஹிம்ஸையை நம் மூல புருஷர்கள் எங்கே சொன்னார்கள்?' என்று நாமே சொல்லிக் கொண்டிருந்தாலும், historical fact (சரித்திர உண்மை) நாம்தான் பரம ஸாத்விகர்களாக, சாந்தர்களாக, எல்லா மதஸ்தரையும் அரவணைத்துக் கொண்டு போகிறவர்களாக இருந்திருக்கிறோமென்பது.

இப்போதும் அந்த அணுகுண்டுக்காரர்களையே நாம் அஹிம்ஸா மார்க்கத்தால்தான் வெளியேற்றி ஸ்வதந்திரம் பெற்றதாகவும் பெருமையடித்துக் கொள்கிறோம். 'ஐடியலை' எல்லோருக்கும் ரூலாக வைக்காமல், குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் வைப்பதாலேயே அதை அவர்கள் தனிப்பெருமிதத்தோடு, கவனத்தோடு ரக்ஷிக்கிறார்கள். இப்படிச் சிலர் இருப்பதைப் பார்த்து இந்த உத்தம உதாரணத்தாலேயே அந்த ஐடியலைத் · தங்களுக்கு ரூலாகக் கொள்ளாதவர்களுங்கூட ஓரளவுக்கு அதைத் தாமாகவே எடுத்துக் கொண்டு பின்பற்றி, ஸமூஹம் முழுவதிலுமே அதன் 'ஸ்பிரிட்' பிரகாசிக்கும்படிப் பண்ணுகிறார்கள். இதனால்தான் மற்ற மத ஸமூஹங்களைவிட நம் ஸமூஹமே ஆதியிலிருந்து தர்ம வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாய் இருந்து வந்திருக்கிறது!

திருஷ்டாந்தமாக, ஐடியல் அஹிம்ஸையை ஸகலருக்கும் வைத்த புத்தரின் மதத்தில்தான் இன்றைக்கு ஹிந்துக்களைவிட ஜாஸ்தி 'நான்வெஜிடேரியன்'கள் இருக்கிறார்கள். ஹிந்து மதத்தில் பிராமணரைத் தவிர மற்றவர்களுக்கு மாம்ஸ போஜனம் கூடாதென்று ரூலே இல்லாமலிருந்தும் இங்கேதான் ஜாஸ்தி வெஜிடேரியன்கள் என்பதாக இருக்கிறது பௌத்த மதஸ்தர்களிலோ இன்று பிக்ஷுக்கள் உள்பட எல்லோருமே மாம்ஸம் சாப்பிடுபவர்களாக இருப்பதை அன்னிய தேசங்களில் பார்க்கிறோம்.

பலவிதமான தொழில்களில் ஈடுபட்டுள்ள எல்லாருக்கும் ஏகப்பட்ட ஆசாரங்களைக் கொடுத்துக் கஷ்டப்படுத்தக் கூடாது என்ற தாக்ஷிண்யத்தினாலேயே ஜாதி ஆசாரங்கள் என்று வித்யாஸமாகப் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள் என்று

Koviloor Digital Library

ஆரம்பித்தேன். திருக்குறளில் கொண்டு விட்டு விட்டது, நல்ல விஷயந்தான். திருவள்ளுவர் பரம வைதிகர் என்று தெரிந்து கொள்ள முடிந்தது!

நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழவு முதலான தொழிலைச் செய்கிறவனிடம், 'இத்தனை கவளத்துக்கு மேல் சாப்பிடாதே; அதுவும் இத்தனை நேரத்துக்கு முந்தியும் சாப்பிடாதே, இன்ன நேரத்துக்குப் பிந்தியும் சாப்பிடாதே; ஏகாதசியில் காயக் காயக் கிட; மூன்று வேளையும் குளி' என்றெல்லாம் பிராமண ஆசாரத்தைச் சொன்னால் அவன் எத்தனை கஷ்டப்படுவான்? இப்படி நல்லெண்ணத்தின் பேரில் சொன்னதையே, 'பிராமணனுக்கு மாத்திரம் நிறைய ஆசார மென்றால், அவன் மட்டும்தான் புண்ய லோகம் போகும்படி யாகப் பக்ஷபாதம் பண்ணியிருப்பதாகத்தான் அர்த்தம்' என்கிறார்கள்.

'அஹிம்ஸையானது சித்த சுத்திக்கு ரொம்பவும் உபகாரம் பண்ணுகிறது என்கிறீர்கள். ஆனால் பிராமணனுக்கு மட்டும் அஹிம்ஸை விதி கட்டாயமானது, மற்றவர்களுக்கு இல்லை என்கிறீர்கள். அப்படியானால் பிராமணன் மாத்திரம் சித்த சுத்தி பெற்றால் போதும் என்று பக்ஷபாதம் பண்ணினதாகத் தானே ஆகிறது? 'எருவுக்குத் தகுந்த பயிர்; உணவுக்குத் தகுந்த உயிர்' என்று சொல்லிவிட்டு, பிராமணனுக்கு மட்டும் அஹிம்ஸா மரக்கறி போஜனம், மற்றவர்களுக்கு மாம்ஸம் பரவாயில்லை என்றால், இது 'டிஸ்க்ரிமினேஷன்' இல்லாமல் வேறென்ன?' என்று கேட்கலாம்.

அஹிம்ஸா போஜனத்தால் ஸத்வகுண அபிவிருத்தி ஏற்படுவதைக் கொண்டு அதைச் சித்த சுத்திக்காகப் பொதுவில் விதித்திருக்கிறது. ஆனால் பகவானின் லீலையில் இந்த லோகத் திலேயே தர்ம ரக்ஷணார்த்தம் ராஜஸ, தாமஸ காரியங்கள்கூட நடக்க வேண்டியிருக்கிறது. தப்பு செய்கிறவனைத் தண்டிக்க வேண்டியிருக்கிறது. தர்மத்துக்காக யுத்தம் பண்ணிக் கொன்று குவிக்கவும் வேண்டுமென்றுதானே பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் பண்ணினார்? இது ராஜஸ குணம்தான். உழுவது, கொத்துவது, வெட்டுவது முதலான கார்யங்களை ஸமூஹ க்ஷேமத்துக்காகப் பண்ண வேண்டியிருக்கிறது. இப்படிக்

Koviloor Digital Library
கடுமையாக உழைப்பவர்கள் அடித்துப் போட்டாற்போல் தூங்கவேண்டும். இது தாமஸம்தான். ஆனாலும் லோக க்ஷேமார்த்தமாக ஏற்பட்ட இந்தக் கார்யங்களைச் செய்யும் படிப் பிறப்பினாலேயே ஈச்வராக்ஞை பெற்றிருப்பவர்கள் இந்த ராஜஸ, தாமஸங்களை மேற்கொள்வதால் அது அவர் களுக்கு தோஷமாகாது.

ஸமூஹத்துக்காகச் செய்வதால் அந்தத் தியாகத்தினாலேயே, செய்கின்ற கார்யம் புண்யமாகிறது. இவர்கள் ராஜஸ, தாமஸ குணத்துக்கு அனுகூலமான அசைவ போஜனம், பழையது மாதிரி ஆசார விரோதமான சாப்பாட்டு தினுசு முதலிய வற்றைச் சாப்பிடுவதிலுள்ள தோஷங்கூட அவர்களால் ஸமூஹத்துக்கு ஏற்படுகிற உபகார புண்யத்தில் அடிபட்டுப் போய்விடும்.

'எருவுக்குத் தகுந்த பயிர், உயிரும் பயிர் மாதிரிதான். அதனால் ஆஹார விஷயத்தில் ரொம்பக் கவனம் வேண்டும். உயிர் என்றால் சரீரம் மூச்சு விடுவது மட்டுமில்லை. மனுஷ்யனுக்கு மனஸில் உயர்வு இல்லாவிட்டால் அவன் உயிரிருந்தும் பிணம்தான். மனஸின் உயர்வுதான் ஜீவனுக்கு உயிர்நாடி' என்பதெல்லாம் ஸரிதான். ஆனால் மனஸின் உயர்வை சரீரத்தில் செலுத்தி ஸமூஹத்துக்கான பலதரப்பட்ட கார்யங்களையும் பண்ண வேண்டியிருக்கிறதே! ஒருத்தன் தர்ம ரக்ஷணத்துக்காகக் கத்தியைப் பிடித்துக் கொண்டு சண்டை போடவேண்டியிருக்கிறது. தர்மரக்ஷணை என்பது மனஸின் உயர்த்தி. அதுவே இவனுடைய கார்யத்தில் வருகிறபோது யுத்தம் என்று ஹிம்ஸை மாதிரி ஆக வேண்டியிருக்கிறது. ஆனால் இவன் ஜன ஸமூஹம் தர்மத்தில் அழிவடையாமல் காப்பாற்றுகிற உயர்ந்த நோக்கம் கொண்டவன். 'க்ஷதாத் கில த்ராயதே'★ – ஜன ஸமூஹம் துஷ்டர்களால் அழியாமல் காப் பாற்றுகிறான் அல்லவா? – அதனாலேயே க்ஷத்ரியன் என்று இவனுக்குப் பெயர். இந்த உயர்ந்த நோக்கம் இவனுக்கு இருப் பதால், இவனுக்கு யுத்தத்தில் உத்ஸாஹமும், நல்ல சரீரக் கட்டும் ஏற்படுவதற்காக மது, மாம்ஸாதிகளைச் சாப்பிட்டு விட்டுப் போகட்டும். அது அவன் சூழ்நிலையில் அவனுக்குரிய

★ காளிதாஸரின் 'ரகுவம்சம்' – 2.53.

Koviloor Digital Library

தொழிலால் அவன் பெறுகிற ஆத்ம வளர்ச்சியைக் கெடுக் காது. என்றிப்படி சாஸ்திரம் வைத்திருக்கிறது.

ஆனால் இப்படிப்பட்ட க்ஷத்ரியர்களிலும் ராஜரிஷிகள் என்று கொண்டாடும்படியாக அஹிம்ஸா தர்மம் முதலான எல்லாவற்றிலும் சிரேஷ்டர்களாகப் பலர் இருந்திருக்கிறார்கள். அஹிம்ஸை என்றவுடனேயே நினைவுக்கு வருகிற புத்தர், மஹாவீரர் இரண்டு பேருமே க்ஷத்ரியர்கள்தானே? புராண இதிகாஸங்களைப் பார்க்கும்போது அனேக ராஜாக்கள் விருத் தாப்பியத்தின்போது ராஜ்யத்தைப் புத்திரனிடம் ஒப்படைத்து விட்டு, காட்டுக்குப் போய் தபஸ் பண்ணினார்களென்று தெரிகிறது. அப்போது இவர்கள் சாக போஜனம்தான் பண்ணி யிருக்க வேண்டும். 'ஐடியல்' ஒன்று எல்லாருக்கும் விதியாயில் லாமல் ஒரு பிரிவுக்கு மட்டும் ரூலாக இருந்ததால், தானாகவே மற்றவர்களிடமும் பிரகாசித்ததுதான் இதற்குக் காரணம்.

தேசத்தில் பொருளாதார ஸுபிக்ஷம் ஏற்பட வேண்டாமா? இதற்குச் சிலபேர் வியாபாரம், வியவஸாயம், கோரக்ஷை (பசு வளர்ப்பு) செய்ய வேண்டும். வியாபாரத்துக்காகக் கடல் கடந்தும் போக வேண்டியிருக்கும். அப்போதுதான் பொரு ளாதார மேம்பாடு தேசத்துக்குக் கிடைக்கும். அருளை முக்ய மாகச் சொன்னாலும் பொருளையும் வேதமதம் மறக்கவில்லை. அதற்கு எவ்வளவு இடமோ அதைக் கொடுத்துத் தானிருக் கிறது. நாலு புருஷார்த்தத்திலேயே 'அர்த்தம்' இருக்கிறது; அறம், பொருள் என்கிறது அதுதான். லோக வாழ்க்கையை ஹிந்துமதம் அலக்ஷ்யப்படுத்துகிறது என்று சொல்வது நியாய மேயில்லாத குற்றச்சாட்டு!

நம் மதத்தில் பொருள் வளர்ச்சிக்கென்றே நாலு வர்ணத்தில் ஒன்றை வைத்திருக்கிறது. ஸமூஹத்தில் பொருள் வளர்ச்சியை உண்டாக்குவதான தர்மத்தைப் பண்ணும் இவனுக்கு வைச்யன் என்று பெயர். 'விச்' 'விச்வம்', 'வைச்யன்' எல்லாவற்றுக்கும் 'ரூட்' ஒன்றுதான். இவன் லோகம் பூராவும் போய்ப் பொருள் தேடி வர வேண்டியவன். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது இவனுக்கு வைத்த தர்மம். இவனுக்காகக் கடல் வாணி பத்தைப் பெருக்கித் தந்ததில் க்ஷத்ரியர்களான ராஜாக்களுக்கும் பெருமை ஏற்பட்டது. ஸமுத்ரத்தில் பல நாட்கள் போக

Koviloor Digital Library

வேண்டியவனை, பல தேசங்களுக்குப் போக வேண்டியவனை வெஜிடேரியனாகத்தான் இருக்க வேண்டுமென்றால் முடியுமா? இவனுடைய சூழ்நிலை, காரியம் இவற்றைப் பொறுத்து இவனுக்கும் சாக போஜனம்தான் என்று வைக்காமல் இவனால் ஸமூஹம் பெறுகிற உதவியிலே இவனுடைய மாம்ஸ போஜன தோஷம் போகட்டுமென்று generous ஆக இவனுக்கு 'ரூல்' போட்டிருக்கிறது. ஆனாலும் என்ன பார்க்கிறோம்? வைச்யர் களில் வடக்கே அனேக ராஜ்யங்களின் பனியாக்கள், தெலுங் கர்களான கோமுட்டிகள், தமிழ்நாட்டுச் செட்டிமார்களில் சுத்தசைவர்கள் ஆகியோர் வெஜிடேரியன்களாகவே இருக் கிறார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆதியில் பல தேசங்களுக் குப் போய் நன்றாகச் செல்வம் ஸம்பாதித்து வந்தபின் வைச்யர் களும் வயஸுக் காலத்தில் ஊரோடு ஸெட்டில் ஆனபோது, தாங்களாகப் பிரியப்பட்டு இங்கே ஐடியலாக பிராமணன் பின்பற்றிய அஹிம்ஸா போஜனத்தை ஏற்றுக் கொண்டிருந் திருக்கிறார்கள். இவர்கள் ராஜாக்களைப் போல் வ்ருத்தாப்யத் தில் காட்டுக்குப் போய்விடவில்லை. வீட்டிலேயேதான் இருந்து கொண்டிருந்தார்கள். அதனால் இவர்களுடனேயே வஸித்து வந்த இவர்களுடைய பின் தலைமுறையினருக்கும் இவர்களுடைய ஆஹார நியமம் இளவயஸு தொட்டே வந்திருக்கிறது. அதனால் அப்புறம் இவர்களுக்கு சைவபோஜ னமே பிறந்த நாள் தொட்டுக் குலவழக்காயிருக்கிறது.

இப்படியேதான் நாலாம் வர்ணத்திலும் உடல் வருந்தி உழைத்து ஸமூஹத்துக்கு உபகாரம் பண்ண வேண்டிய அவனுக்கு அவனுடைய சூழ்நிலையில் வெஜிடேரியனிஸத்தை வைக்காமல் விட்டிருக்கிறது. ஆனாலும் காலப்போக்கில் அந்த வர்ணத்தாரிலேயே பலர் உடம்பு வேலை செய்கிறவர்களாக இல்லாமல், வியாபாரம் வியவஸாயம் முதலியவற்றில் ஈடுபட்டு வளர்ச்சி அடைந்தபோது, தாங்களாகவே சைவ ஆஹாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வடக்கேயும் சரி, தெற்கேயும் தஞ்சாவூர் ஜில்லாவில் அனேக வேளாளர்கள், திருநெல்வேலியில் பிள்ளைமார் போன்றவர்களும் சரி, பிராமணன்கூடத் தோற்றுப் போய்விடுவான் என்கிற அளவுக் குப் பரம சுத்தமான மரக்கறி போஜனம், வ்ரதானுஷ்டானம்

Koviloor Digital Library

வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் 'ஆப்ஷன'லாகச் சிலருக்கு வெஜிடேரியனிஸத்தில் பிடித்தம் ஏற்படுவதற்குக் காரணம், நாலு வர்ணங்களில் பாக்கியுள்ள பிராமணனுக்கு அதைக் 'கம்பல்ஸரி'யாக வைத்திருப்பதுதான். இவன் வேதத்தை ஓதியும் ஓதுவித்தும் ரக்ஷிக்க வேண்டியவனாதலால் மந்திர சுத்தியை முன்னிட்டுப் புலால் உண்ணக் கூடாது என்று வைத்தார்கள். இவன் திரை கடல் ஓடியும் திரவியம் சேர்க்கவும் கூடாது என்று ரூல். இவனுக்குத் தரித்ரம்தான் சாஸ்திரம் விதித்திருப்பது. இவன் அன்னிய தேசங்களுக்குப் போகப்படாது. போனால் பிரஷ்டனாகி விடுவான். ஏன்? வேத ரக்ஷணத்தின் Purity கெட்டுப் போய்விடுகிற ஹேது உண்டாகிவிடும் என்பதால்தான். வெளி நாடுகளுக்குப் போனால் அவற்றின் பழக்க வழக்கங்கள் இவனுக்கு ஏற்பட்டுவிடும். ஸ்வதர்மமான பழக்கவழக்கம் போய்விடும். வெளிதேசத்துக்குப் போய்விட்டுத் திரும்பிவந்து, இப்படிப்பட்ட விதேசப் பழக்கங்களை ஸ்வஜாதி பந்துக்களிடம் கலந்து, அவர்களால் ஆகிற வேத ரக்ஷணையைக் கெடுத்துவிடப் போகிறானே என்றுதான் பிரஷ்டம் பண்ணச் சொன்னது.

இவனுக்குக் கம்பல்ஸரியாக வைத்த அனேக ஆசாரங்களும் வ்ரதானுஷ்டானங்களும் மற்றவர்களையும் ஆகர்ஷித்து அவர்கள் ஒரு ஸ்டேஜுக்குப் பிற்பாடு பிரியப்பட்டு தாங்களும் அவற்றை adopt பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படியே (அதாவது, வர்ணப் பாகுபாடு போலவே) தான் பிராமணனுக்கான ஆச்ரம விபாகமும். பால்ய தசையில் இருக்கிறவனைப் பட்டினி கிடக்கச் சொல்லலாமா என்று பிரம்மச்சாரிக்கு ஆஹாரத்தின் அளவில் கட்டுப்பாடு பண்ணாமல் விட்டிருக்கிறது. அளவில்தான் – Quantity-யில் தான்; Quality-யில் இல்லை. அவனும் சுத்த வெஜிடேரியன் ஆஹாரந்தான் சாப்பிட வேண்டும். ஆனாலும் வ்ரதம், உபவாஸம் என்றில்லாமல் நிறையச் சாப்பிடலாம். இவன் செய்ய வேண்டிய வித்யாப்யாஸத்தையும் குருகுல வாஸத்தையும் பொறுத்து இவனுக்கென்று தர்மங்கள். கிருஹஸ்தனுக்கென்று பல தர்மங்கள். அதற்கு வேறாக ஸன்னியாஸிக்கு

Koviloor Digital Library

ரூல்கள். குழந்தை குட்டிகளைக் காப்பாற்றுவது, பத்தினியின் கற்பை ரக்ஷிப்பது, குடும்பத்தின் மானத்தைக் காப்பாற்றுவது எல்லாமும் க்ருஹஸ்தனின் கடமையில் வரும்.

ஸமூஹத்துக்கு ஆற்ற வேண்டியதாகவும் இவனுக்குப் பல பொறுப்புகள் இருக்கின்றன. உத்யோகம், சொத்து முதலியன இல்லாத ஸன்னியாஸிகளையும் இவன்தான் ஆதரிக்கிறான். இப்படி மற்றவர்களின் ரக்ஷணையைச் செய்யும்போது அவர் களுக்காக fight பண்ணவும் (போராடவும்) ஸந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அதனால்தான் இவனுக்கு அஹிம்ஸையை 'ஸ்ட்ரிக்ட்' ஆக வைக்கவில்லை. அஹிம்ஸா போஜனத்தைச் சொல்லியிருந்தாலும், துஷ்டர்களைத் தண்டிப்பது, பூச்சி பொட்டுகளை அடிப்பது ஆகியவையெல்லாம் கிருஹஸ் தனுக்கு அனுமதித்திருக்கிறது. லோகம் நன்றாக இருக்க இவன் யாகம் பண்ண வேண்டியவனாயிருப்பதால் அதில் பலியையும் அனுமதித்திருக்கிறது.

ஸன்னியாஸி விஷயம் வேறு. அவனுக்குப் பெண்டாட்டி, பிள்ளைக்குட்டி இல்லை. ஸமூஹ விசாரமும் இல்லை. லோகம் எப்படிப் போனாலும் அதைப்பற்றி இவனுக்குப் பொறுப்பு ஒன்றுமில்லை. பரமாத்ம சிந்தனையாகவே இவன் இருப் பதால், பிரேம ஸ்வரூபமான அந்தப் பரமாத்மாவின் அருள் தன்னால் இவன் வழியே ஸர்வஜனங்களுக்கும் பாய்ந்து நல்லது செய்ய வேண்டுமே தவிர, இவனாகக் கார்யத்தில் இறங்கி ஸமூஹத்துக்கு எதுவும் செய்ய வேண்டுமென்பதில்லை. இவன் பரமாத்மாவை அடைகிறதேதான் ஸமூஹத்துக்கும் செய்கிற உபகாரம். அதனால் இவனுக்கு துஷ்ட சிக்ஷணம், யாகம் ஆகிய எதையும் கடமையாகக் கொடுக்கவில்லை. பரிபூர்ண அஹிம்ஸா தர்மமே இவனுடைய தர்மம் என்று வைத்திருக்கிறது. ஹிந்து மதத்தின்படி ஒரு தினுஸிலும் ஹிம்ஸைக்குக் காரணமாக இல்லாமல், ஓர் இலையைக்கூடக் கிள்ளக்கூடாது' என்கிற அளவுக்குத் தீவிரமாக அஹிம்ஸைக்கு அதிகாரியாக வைத்திருப்பது ஸன்னியாஸியைத்தான்.

இப்படி வர்ணமென்றும் ஆச்ரமமென்றும் தர்மங்களைப் பிரித்துக் கொண்டதால்தான் மற்ற எந்த மதஸ்தர்களாலும் முடியாத மிக மிக உயர்ந்த கொள்கைகளை நம் மதஸ்தர்களில்

Koviloor Digital Library
ஏராளமானவர்கள் அனாதிகாலம் தொட்டு அழியாமல் காப் பாற்றி வந்திருக்கிறார்கள். மற்ற மத புருஷர்களின் உபதேசத் தையே இன்றைக்கு இருக்கிற நம்மவர்கள் எடுத்துக் கொண்டு, ஆனால் அவர்களைப்போல் ஆத்ம ஸம்பந்தமாகவும் இல்லாமல், பெரும்பாலும் அரசியல் நோக்கத்திலேயே, 'எல்லாரும் ஒன்றுதான், எல்லாரும் எல்லாக் காரியங்களையும் செய்யலாம்' என்று ஆரம்பித்து ஒவ்வொரு உயர்ந்த கொள்கை யாக விட்டுவிடும்படிப் பண்ணி, தர்மத்தில் குழப்பம் உண்டாக்கி வருகிறார்கள்.

'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்பதிலே இப்படி அதிகார பேதம் பண்ணி எவனோ ஒருத்தனுக்குப் பரம உத்தம தர்மத்தை விதியாக வைக்கிற தாத்பரியம் அடங்கியிருக்கிறது. அத்தனை பேரும் நல்லவனாகத்தானிருக்க வேண்டுமென்றால் முடியாது. ஒரு நல்லவன் இருந்தாலே அவனை உத்தேசித்து அத்தனை பேருக்கும் மழை பெய்து விடுகிறது என்று பழமொழி சொன்னார்கள். ஸமூஹத்தில் ஒரு பிரிவு உத்தம தர்மத்தை அனுஷ்டித்தாலே போதும், அதன் பலன் அத்தனை பிரிவுகளை யும் சேர்ந்துவிடும். சிலருடைய அனுஷ்டானத்தாலேயே ஸகலருக்கும் தர்ம மழை, அன்பு மழை, ஆண்டவனுடைய அருள் மழை கிடைத்து விடும்படியாக வர்ணாச்ரம விபாகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அவனவன் எந்தக் கர்மத்திலிருக்கிறானோ அதற்கேற்ப அவனவன் தர்மம், ஆசரணைகள் இருக்கும். ஒவ்வொருத்தனும் தன்னுடைய கர்மத்தை மனஸில் காமம், க்ரோதம் அதிகம் இல்லாமல், அதாவது ஆசை த்வேஷம் அதிகமில்லாமல் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் முதலில் வெளிப் பார்வைக்கு ஹிம்ஸை முதலானவை ஸ்வதர்மமாக இருக் கிறவனுக்குக்கூடப் போகப்போக அஹிம்ஸை முதலான தர்மங் களில், உயர்ந்த பண்புகளில், உயர்ந்த கொள்கைகளில் தானாகப் பிடிப்பு உண்டாகி அவற்றை அனுஸரிக்கத் தொடங்கி விடுவான். பிரத்யக்ஷமாக நம் தேசத்தில் இப்படி நடந்து வந்திருப்பதைப் பார்க்கிறோம்.

கீதாதி சாஸ்திரங்களில், 'மனுஷ்யனாய்ப் பிறந்தவர்கள்

Koviloor Digital Library

நத்தமது கர்மாவில் கண்ணும் கருத்துமாயிருந்தே உயர்ந்த ஸித்தியை அடைகிறார்கள்; தன்னியல்பாகப் பக்குவமாகி இதைவிட உயர்ந்த தர்மத்துக்குப் போக வேண்டுமேயொழிய, பிறரது தர்மம் எத்தனை உசத்தியானதாய்த் தோன்றினாலும் அபக்குவ நிலையில் அதற்குப் போவதால் ச்ரேயஸ்' வந்து விடாது; ஸ்வதர்மத்தில்தான் ச்ரேயஸ்; ஸ்வதர்மத்தைப் பண்ணியே செத்துப் போனாலும்கூட அதுதான் ச்ரேயஸ் என்றெல்லாந்தான் சொல்லியிருக்கிறது.

ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:।
(கீதை 18.45)

ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்।
(கீதை 18.47; 3.35)

ஸ்வதர்மே நிதநம் ச்ரேய:
(கீதை 3.35)

இப்படியாக அதிகார பேதப்படி நாலு வர்ணத்தையும், நாலு ஆச்ரமத்தையும் ஒட்டி ஏற்பட்டிருக்கும் வித்யாஸமான தர்மங்களைத்தான் பின்பற்ற வேண்டுமே தவிர, எல்லாருக்கும் ஒன்றுதான் தர்மம் என்று பண்ணப்படாது என்பதிலேயே நம் சாஸ்திரங்கள் உறுதியாயிருக்கின்றன.

மேல் பார்வைக்கு, இப்படிப் பண்ணின ஹிந்து சாஸ்திரக் காரர்கள் கருணையில்லாதவர்கள் என்றும், எல்லோருக்கும் ஒரே தர்மத்தைச் சொன்ன புத்தர், ஜீஸஸ் போன்றவர்கள்தான் கருணையுள்ளவர்கள் என்றும் தோன்றினாலும், நடைமுறை யில் பார்த்தால், அவர்கள் அத்தனை பேருக்கும் வைத்த உத்தம தர்மங்களைப் பண்ணுகிறவர்கள் நம்முடைய ஹிந்து மதத்தில் தான் கணிசமாக இருக்கிறார்களே தவிர, அவர்களுடைய சொந்த மதஸ்தர்களில் மிகப் பெரும்பாலோர் இவற்றைக் கழித்துக் கட்டியிருப்பதையே பார்க்கிறோம். பலனைப் பார்த் தால், லோகத்துக்கு உண்டான நலனைப் பார்த்தால் நம்முடைய சாஸ்திரங்களைச் செய்த ரிஷிகளையும் மனு முதலான பெரியவர்களையுந்தான் கருணையுள்ளவர்களென்று சொல்ல வேண்டும்!

Koviloor Digital Library

அதிகார பேதமின்மையின் தோஷங்கள்

அதிகார பேதம் பண்ணி வைக்காதவர்கள்தான் தங்கள் மதஸ்தர்களுக்கு அனேக தோஷம் ஏற்படுவதற்கு இடம் கொடுத்து விட்டிருக்கிறார்கள். எப்படியென்று சொல்கிறேன். முதலாவது தோஷம், ஸகல ஸாமானிய ஜனங்களாலும் இந்தக் கடுமையான நெறிகளைப் பின்பற்ற முடியாததில் அவர்கள் இவற்றிலிருந்து விலகிப் போவதால் தங்களுடைய மதக்கொள் கையை விட்ட தோஷத்துக்கு ஆளாகிறார்கள்.

இப்போது அஹிம்ஸையை உதாரணம் சொன்னேனே, அதுமாதிரி இன்னொன்றும் சொல்கிறேன். ஸத்யத்துக்குக்கூட (அதிகாரி பேதமில்லாவிட்டாலும்) ஸந்தர்ப்ப பேதம் இருப் பதை நம் சாஸ்திரங்கள் அங்கீகரிக்கின்றன. ஸத்யத்தைச் சொல் வதே ஒரு நிரபராதிக்குக் கெடுதலை உண்டாக்குமானால் அப்போது வாக்கு ஸத்யத்தைவிட, பூதஹிதத்தைச் செய்யும் பிரேமைதான் பெரிய ஸத்யம் என்பது நம் சாஸ்திரம். திருஷ்டாந்தமாக, பத்துப் போக்கிரிகள் ஒரு பெண்ணைத் துரத்திக் கொண்டு வந்து, அவள் நம் வீட்டில் ஒளிந்து கொண் டிருக்கும்போது, அவர்கள் நம்மிடம் 'அந்தப் பெண் எங்கே போனாள் தெரியுமா?' என்று கேட்டால், அந்த ஸந்தர்ப்பத்தில் 'தெரியாது' என்று சொல்வதுதான் ஸரி என்பது நம் மதக் கோட்பாடு. எல்லாரும் எப்போதும் நிஜமே பேச வேண்டும் என்று 'சொல்லும் மதங்களிலிருப்பவர்கள் இம்மாதிரி ஸமயத் தில் அந்தப் பெண்ணைக் காட்டிக் கொடுத்துவிடும்படியாகவே ஆகும். இல்லாவிட்டால் மதக் கொள்கையை மீறின பாவம் வந்துவிடும்!

'டிப்ளமஸி' என்பதற்காக ராஜாங்கத்தார் அனேக உண்மை களை மறைக்கும்படியாகவும், மாற்றிச் சொல்லும்படியாகவும் ஏற்படுவதுண்டு. இப்படிச் செய்யா விட்டால் தேசத்துக்கு

Koviloor Digital Library
ஹானி உண்டாகும்; அல்லது சட்டத்தை நடத்துவதற்கு அவசியமான ஸர்க்கார் என்ற அமைப்பிலேயே விரிசல் ஏற்பட்டுவிடும். காந்தி மாதிரியானவர்கள் இதெல்லாம்கூடத் தப்பு என்று சொன்னாலும், அப்புறம் நமக்கு ஸ்வதந்திரம் வந்த பிற்பாடு, சில விஷயங்களிலாவது 'காந்தீயன் ஸத்யம்' ஒப்புக் கொள்ளாத 'டிப்ளமஸியை' அனுஸரிக்கும்படிதான் ஆகியிருக்கிறது!

அடுத்த புத்தகத்தில்...

ஸமூக, தனி வாழ்க்கை நெறிகள் என்கிற தலைப்பின்கீழ்க் கட்டுரைகள் தொடர்கின்றன.

Koviloor Digital Library

Koviloor Digital Library



சமயபுரம் மகாமாரியம்மன் சன்னிதி